

# சங்க காலம்

சங்கம் என்ற சொல்லுக்கு கழகம் என்று பொருள்.

- தமிழக வரலாற்றில் சங்க இலக்கியங்கள் எழுதப்பட்ட காலமே சங்க காலம் எனப்படுகிறது.
- சங்க காலம் **தமிழக வரலாற்றின் பொற்காலம்** எனப்படுகிறது. 3-ம் நூற்றாண்டிற்கு முந்தைய காலமே சங்க காலம் ஆகும்.
- சங்க இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், தொல்லியல் சான்றுகள் மற்றும் அயல்நாட்டவரின் குறிப்புகள் போன்றவை சங்க காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாகும்.
- தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகியன சங்க இலக்கியங்களாகும். இவற்றில் தொல்காப்பியம் மிகவும் தொன்மை யானதாகும்.
- அசோகரின் பாறைக் கல்வெட்டுகள் மற்றும் காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டு தமிழக அரசுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.
- பழங்காலத் தமிழ் பிராமி எழுத்துக்களைப் பற்றி அறிந்துக் கொள்ள கழுகுமலைக் கல்வெட்டுகள் பயன்படுகின்றன.
- திருக்கோவிலூர் கல்வெட்டு குறுகிய மன்னர்களைப் பற்றியும் கபிலரின் துயரமான முடிவைப் பற்றிக் கூறுகிறது.
- புகலூருக்கு அருகிலுள்ள ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டுச் சேர மன்னர்களைப் பற்றி கூறுகிறது.
- திருப்பரங்குன்றத்து கல்வெட்டுகள் சமணத் துறவிகளுக்கு கற்படுக்கைகள் கொடையாக வழங்கப்பட்டதைக் கூறுகின்றன.
- திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல் லூரில் **ராபர்ட் புரூஸ் பூட்** என்பவர் அகழாய்வுகளை மேற்கொண்டு இரும்பு, வெண்கலம் மற்றும் தங்கத் தினாலான பல பொருட்களைக் கண்டறிந்தார்.
- புதுச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்ற இடத்தில் **துப்ரேல்** மற்றும்

**மார்டின் மர்வீலர்** ஆகியோர் அகழ்வாராய்வுச் செய்தனர். அப்போது ரோமானிய மண்பாண்டங்கள், நாணயங்கள், கண்ணாடிக்குவளைகள், இரத்தினங்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன.

- சங்கக் காலத் தமிழகத்திற்கும் ரோமானியப் பேரரசிற்கும் இடையே நிலவிய வாணிகத் தொடர்புகளை இவை உறுதிப்படுத்துகின்றன.
- காவிரிப் பூம்பட்டினத்திற்கு அருகில் கீழையூர் என்ற இடத்தில் சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த “புத்த விகாரம்” ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சங்ககாலத் தமிழ் மன்னர்கள் **தங்கம்** மற்றும் **வெள்ளி** நாணயங்களை வெளியிட்டனர். தங்கம் மற்றும் வெள்ளியினாலான ரோமானிய நாணயங்களும் தமிழகத்தின் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- கிரேக்க எழுத்தாளரான மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்ற நூல் தமிழ் அரசுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
- ஸ்ட்ராபோ, பிளினி, தாலமி, யுவான் சுவாங் போன்ற ஆசிரியர்களும் சங்க காலத்தைப் பற்றிய பல அரிய தகவல்களை அளித்துள்ளனர்.
- இலங்கை நூல்களான மகாவம்சம், தீபவம்சம் ஆகியன சங்க காலத்தை நிர்ணயிக்கப் பயன்படுகின்றன.
- சங்க காலத்தில் "சங்கம்" என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. கூடல், அவை, மன்றம் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மதுரையானது தமிழ் வளர்க்கப் பயன்பட்டதால் "தமிழ் கெழு கூடல்" என்று 58வது புறப்பாட்டு குறிப்பிடுகின்றது.
- சங்க காலத்தில் முதற்சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்ததாகக் கூறப் படுகிறது. முதற்சங்கம் தென் மதுரையிலும், இடைச்சங்கம் கபாடபுரத்திலும் செயல்பட்டதாக காலப்போக்கில் அப்பகுதிகள் இந்துமாக் கடலில் மூழ்கி விட்டதாகவும் கருதப்படுகிறது.
- பாண்டிய மன்னர் முடத்திருமாறன் மதுரையில் மூன்றாம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினார். இதுவே கடைச் சங்கம் எனப்படுகிறது. நாம் அறியும் சங்க காலம் இதுவேயாகும். நமக்கு கிடைத்துள்ள சங்க இலக்கியங்கள் இக்காலத்திலேயே படைக்கப்பட்டன.
- மூன்று சங்கங்கள் இருந்ததாக இறையனார்அகப்பொருளுக்குஉரை எழுதிய நக்கீரனார் தெரிவிக்கின்றார். மூன்று சங்கங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு:

| குறிப்பு | தலைச்சங்கம் | இடைச்சங்கம் | கடைச்சங்கம் |
|---|---|---|---|
| சங்கம் இருந்த இடம் | கடல் கொண்ட தென் மதுரை | கபாடபுரம் | தற்கால மதுரை |
| சங்கம் நிலவிய ஆண்டுகள் | 4440 | 3700 | 1850 |
| சங்கத்தில் இருந்த புலவர்கள் | அகத்தியனார், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த முருகவேள், முரிஞ்சியூர், முடிநாகராயர், நதியின் கிழவன் | அகத்தியனார், தொல் காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறு பாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை | சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுரை அரனார், பெருங்கன்றூர் கிழார், இளந்திரு மாறன், மதுரை ஆசிரியர், நல் லந்துவனார், மதுரை மருதன் இளநாகனார், கணக்காயர் மகனார், நக்கீரனார் |
| புலவர்களின் எண்ணிக்கை | 4449 | 3700 | 449 |
| பாடிய புலவர்களின் எண்ணிக்கை | 549 | 59 | 49 |
| பாடப்பட்ட நூல்கள் | பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரயாவிரை | கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை, அகவல் | நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை |
| சங்கம் பேணிய அரசர்கள் | காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை | வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திரு மாறன் வரை | முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை |

| | | | |
|---|---|---|---|
| சங்கம் பேணிய அரசர்களின் எண்ணிக்கை | 89 | 59 | 49 |
| கவியரங்கு ஏறிய புலவர் எண்ணிக்கை | 7 | 5 | 3 |
| அவர்கள் பயன்படுத்திய இலக்கண நூல் | அகத்தியம் | அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் | அகத்தியம், தொல் காப்பியம் |

## சங்க கால அரசுகள்

சங்க காலத்தில் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழகத்தில் சிறப்புடன் ஆட்சி செய்தனர். இவர்களைத் தவிர பல குறுநில மன்னர்களும் சங்க காலத்தில் இருந்தனர்.

### 1. சேர அரசு:

- சங்க காலச் சேர நாடு தற்கால கேரளப் பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது.
- இவர்களில் தலைநகரம் **வஞ்சி,** துறைமுகம் **தொண்டி** என்பதாகும். சேரர்களின் கொடியில் **வில் அம்பு** சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அவர்கள் பனம் பூ மாலையை சூடுவர்.
- சங்ககாலச் சேரர்கள் வானவர், வில்லவர், மலையர் என்று பல பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்டனர்.
- சங்க காலச் சேர அரசில் முதலாவதாக உதியன் சேரலாதன் மரபும் இரண்டாவதாக இரும்பொறை மரபும் சேர நாட்டை ஆட்சி புரிந்தன.
- சங்க காலச் சேர மன்னர்களில் தலை சிறந்தவர் **செங்குட்டுவன்** ஆவார். “பதிற்றுப்பத்தும் அகநானூறும்” செங் குட்டுவனைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

பதிற்றுப்பத்தின் முதல் பத்தின் பாட்டுடைத் தலைவன் உதியஞ்சேரல், இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் நெடுஞ்சேரலாதன்.

3-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் – பல் யானை செல்கழு குட்டுவன்

4-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் – கண்ணி நாண்முடிச் சேரன்

5-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் – செங்குட்டுவன்

6-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் – ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்

7-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் – செல்வ கடுங்கோ வாழியாதன்

8-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் – பெருஞ்சேரல் இரும்பொறை

9-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் - இளஞ்சேரல் இரும்பொறை

10-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் - மாந்தரஞ்சேரல் இரும்பொறை

- செங்குட்டுவனுடைய போர் வெற்றி களைப் பற்றி சிலப்பதிகாரம் கூறுகிறது.
- **செங்குட்டுவன்** இமயம் வரை படையெடுத்துச் சென்று இமயத்தில் விற்கொடியை நாட்டினார். பின்னர் அங்கிருந்து கற்களைக் கொண்டு வந்து கண்ணகிக்கு நினைவுச் சின்னம் அமைத்து தமிழகத்தில் பத்தினி **வழிபாட்டு முறையை** அறிமுகப்படுத்தினார்.
- செங்குட்டுவனின் இளவலான **இளங்கோவடிகள்** சிலப்பதிகாரத்தை இயற்றினார். சேரலாதன் பெரும் சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை ஆகியோர் புகழ்மிக்க சேர மன்னர்களாவர்.

| **மன்னன்** | **பட்டப்பெயர்** |
|---|---|
| சேரன் | - கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் |
| உதியஞ்சேரல் | - பெருஞ்சோற்று தியன் (பாரதப் போரில் உணவு அளித்ததால்) |
| நெடுஞ்சேரலாதன் | - இமயவரம்பன், ஆதிராஜன் |

## 2. சோழ அரசு

- சங்ககாலச் சோழ நாடு தற்போதைய தஞ்சை திருச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது.
- சோழ நாடு காவிரி நாடு, சூழ்நாடு, நீர்நாடு மற்றும் புனல் நாடு என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டது.
- சங்க காலச் சோழர்களின் தலைநகரம் **உறையூர்,** துறைமுக நகரமான **காவிரிப்பூம்பட்டினம்** சோழர்களின் இரண்டாவது தலைநகரமாகவும் விளங்கியது. சோழர்களின் சின்னமாக புலி விளங்கியது. இவர்கள் அத்தி பூ மாலையை சூடுவர்.
- **கிள்ளி வளவன், சென்னி, சோழன்** ஆகிய பெயர்களைத் தாங்கிய சோழ மன்னர்களைப் பற்றி சங்க இலக் கியங்கள் குறிப்பிடுகின்றன.
- சங்க காலச் சோழர்களின் கரிகாலன் புகழ்மிக்கவனாக விளங்கினான். **கரிகாலன்** காவிரியின் குருக்கே கல்லணையைக் கட்டியதுடன் **புகார் நகரத்தை இரண்டாவது தலைநகரமாகவும்** அறிவித்தான். சங்க காலத்தில் புகார் நகரம் சிறந்த வாணிப நகரமாகத் திகழ்ந்தது.
- கரிகால் வளவன் பெருநராற்றுப் படைக்கும், பட்டினப் பாலைக்கும் பாட்டுடைத் தலைவன், இமயத்தில் புலிக்கொடி நட்டவன். "வெண்ணி" என்னும் ஊரில் நிகழ்ந்த போரில் சேரன் பெருஞ்சேரலாதனையும், பாண்டிய மன்னன் மற்றும் பதினோரு வேளிரையம் ஒருங்க தோல்வியுறச் செய்தவன்.
- சங்க காலச் சோழர் ஆட்சி **கோச்செங்கணான்** காலத்தோடு முடிவுக்கு வந்தது.

- "திருப்போர்" இடத்தில் நடந்த பேரில் கோச்செங்கணான் சேரன் கணைக்கால் இரும்பொறை தோற்கடித்து சிறைப்பிடித்தான். பொய்கையார் என்னும் புலவர் இரும்பாறையை களவழி நாற்பது நூலைப் பாடி சோழனை மகிழ்வித்து சிறை மீட்டார். இப்போர் "கழுமலம்" என்ற இடத்தில் நடந்ததாக இந்நூல் தெரிவிக்கிறது.

### 3. பாண்டிய அரசு

- சங்க கால பாண்டிய அரசு மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது.
- **மதுரை** பாண்டியர்களின் தலை நகரமாகவும், **கொற்கை** துறைமுக நகரமாகவும் விளங்கின. **மீன்** பாண்டி-யர்களின் சின்னமாக விளங்கியது. இவர்கள் வேப்பம் பூ மாலையை சூடுவர்.
- பாண்டிய மன்னர்கள் **மாறன், வழுதி, செழியன்** போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர். பாண்டியர்கள் தமிழைப் போற்றி வளர்த்ததால், **தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் தலைநகரமாக மதுரை** விளங்கியது எனவும் கூறலாம்.
- முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் பல வேள்விகளைச் செய்ததால் **"பல்யாக சாலை"** என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.
- **பூதப்பாண்டியன்** என்ற மன்னன் சிறந்த வீரனாகவும் வள்ளலாகவும் விளங்கினான். அவனது மனைவி **பெருங்கோப்பெண்டு** சிறந்த பெண்பாற் புலவராவார்.
- **ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்** என்ற மன்னனே கோவலனுக்கு தவறாக தண்டனை வழங்கியவன்,
- தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன், தலையாலங்கானம் என்ற இடத்தில் சேர, சோழ மற்றும் குறுநில மன்னர்களில் கூட்டுப் படைகளை முறியடித்தான்.
- இவனே மதுரைக் காஞ்சிக்கும், நெடுநெல்வாடைக்கும் பாட்டுடைத் தலைவன்.
- சங்க காலப் பாண்டிய மன்னர்களுள் காலத்தால் மிகவும் முற்பட்டவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்பவன் இவனுடைய அரசவையில் தான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது.

### குறுநில மன்னர்கள்:

- மூவேந்தர்களைத் தவிர தமிழகத்தில் பல குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந்தனர். அவர்கள் வேளிர் என்று அழைக்கப்பட்டனர்.
- வேளிர்களில் மிகச் சிறந்தவர்களான **பாரி, காரி, ஓரி, ஆய், நள்ளி, எழினி, பேகன்** ஆகியோர் கடையேழு வள்ளல்கள் ஆவர்.

| மன்னர்கள் | ஆண்ட பகுதி | சிறப்பு |
|---|---|---|
| பாரி | பறம்பு மலை | முல்லைக்கு தேர் கொடுத்தான் |
| காரி | திருக்கோவிலூர் பகுதி | இரவலர்க்கு குதிரை |
| ஓரி | கொல்லி மலைப் பகுதி | கூத்தர்க்கு நாடு கொடுத்தான் |
| நள்ளி | தொட்டி மலைப்பகுதி | இல்லறத்திற்கு பொருள் கொடுத்தான் |
| பேகன் | பழனி மலைப்பகுதி | மயிலுக்கு போர்வை தந்தான் |
| ஆய் | பொதிகை மலைப்பகுதி | ஊர் கொடுத்தான் |
| அதியமான் | தகடூர் பகுதி | ஔவையாருக்கு நெல்லிக் கனியைக் கொடுத்தான். |

## சங்க கால ஆட்சி முறை

- சங்க காலத்தில் **மன்னராட்சி முறை** வழக்கத்தில் இருந்தது. மன்னன் வேந்தன், கோ, இறை என்றும் அழைக்கப்பட்டான்.
- வாரிசுரிமை முறை பின்பற்றப்பட்டது. தந்தைக்குப் பிறகு மூத்த மகனே ஆட்சிக்கு வரும் உரிமையைப் பெற்றிருந்தான்,
- கரிகாலன், மனுநீதிச் சோழன், பொற்கைப் பாண்டியன் போன்ற சங்க கால மன்னர்கள் நீதி வழுவாத ஆட்சியை நடத்தினர்.
- நிர்வாகத்தில் அரசனுக்கு உதவியாக **ஐம்பெருங்குழு, எண்பேராயம்** என்ற இரு குழுக்கள் செயல்பட்டன.
- மன்னரது படையில் காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை மற்றும் தேர்ப்படை என்ற நான்கு பிரிவுகள் இருந்தன.
- நிலவரியும் வணிக வரியும் அரசின் முக்கிய வருவாயாக இருந்தன. உற்பத்தியில் ஆறின் ஒரு பங்கு (1/6) நிலவரியாக வசூலிக்கப்பட்டது.
- சங்க காலத்தில் அரசுகள் ஒவ்வொன்றும் பல பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவை

மண்டலம் ⟶ நாடு ⟶ வளநாடு ⟶ கூற்றம்

- கிராமங்கள் மூத்தோர் அடங்கிய அவைகளால் நிர்வகிக்கப்பட்டது. அத்தகைய அவைகள் **மன்றம், பொதியில், அவை அம்பலம்** என்றெல்லாம் அழைக்கப்பட்டனர்.

## சங்க கால மக்களின் சமூக பொருளாதார நிலை

### சமூக வாழ்க்கை:

சங்க காலத்தில் தமிழர்கள் தங்களுக்கென பொது மொழியையும், பண்பாட்டையும் பின்பற்றினாலும், ஐந்து வேறுபட்ட இயற்கையான நிலப்பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவற்றை திணைகள் என்று அழைத்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைப்படும்.

**1. குறிஞ்சி:**

- குறிஞ்சித்திணை என்பது மலைப் பகுதியைக் குறிக்கும் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் **வேட்டுவர்** மற்றும் குறவர் என்று அழைக்கப்பட்டனர்.
- வேட்டையாடுதல் இவர்களது முக்கியத் தொழிலாகும்.
- தேன் எடுத்தல், காய் கனிகளைப் பயிரிடுதல் போன்ற தொழில்களையும் இவர்கள் மேற்கொண்டனர்.
- குறிஞ்சி நில மக்கள் **முருகன்** அல்லது **சேயோன்** என்ற கடவுகளை வணங்கினர்.

**2. முல்லை:**

- காடு அதைச் சார்ந்த பசும் புல்வெளி களும் முல்லை நிலப்பகுதியாகும்.
- இங்கு வாழ்ந்த மக்கள் மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டனர்.
- இவர்கள் **ஆயர்** அல்லது **கோவலர்** என்று அழைக்கப்பட்டனர்.
- முல்லை நில மக்கள் **திருமால்** அல்லது **மாயோன்** என்ற கடவுளை வணங்கினர்.

**3. மருதம் :**

- வளம் மிக்க நிலப்பகுதியே மருதம் எனப்பட்டது.
- இங்கு வாழ்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டதால் அவர்கள் வேளாளர் என்று அழைக்கப்பட்டனர்.
- மழைக் கடவுளான இந்திரன் மருதநில மக்களின் கடவுளாகும்.

**4. நெய்தல் :**

- கடல் சார்ந்த பகுதியே நெய்தல் நிலம் எனப்பட்டது.
- இங்கு வாழ்ந்த மக்கள் **பரதவர்** அல்லது **மீனவர்** எனப்பட்டனர்.
- மீன் பிடித்தல் இவர்களது முக்கிய தொழிலாகும். இவர்கள் கடற் பயணங் களிலும் ஈடுபட்டனர்.
- இப்பகுதியில் வாழ்ந்த உமணர்கள் உப்பை உற்பத்தி செய்து விற்றனர்.
- கடல் தெய்வமான வருணனை நெய்தல் நில மக்கள் வழிபட்டனர்.

**5. பாலை :**

- பாலைத் திணை என்பது பாலை வனத்தைக் குறிப்பதாகும். ஆனால் தமிழகத்தில் பாலைவனம் இல்லை. எனவே வான்மழை பொய்த்து வறட்சி ஏற்பட்டால் அப்பகுதியை பாலையாகக் கருதினர். என்பதை,

**“முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்**
**பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்.”**

என்ற சிலப்பதிகாரப் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

- இங்கு வாழ்ந்த மக்கள் மறவர் அல்லது கள்வர் எனப்பட்டனர்.
- வீரமிக்க இவர்கள் வறுமையின் காரணமாக களவுத் தொழிலை மேற் கொண்டனர்.
- **கொற்றவை** அல்லது **காளியை** பாலைநில மக்கள் வழிபட்டனர்.

பொருள் இலக்கணம், அகப்பொருள், புறப்பொருள் என்று இருவகைப்படும். அகப்பொருள் என்பது ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் இடையில் ஏற்படும்

காதல் உணர்ச்சியைப் பற்றிக் கூறுவதாகும். புறப்பொருள் என்பது வீரம், போர், வெற்றி, கொடை, நிலையாமை முதலிய புறப்பொருள்களைக் கூறுவதாகும்.

## அகப்பொருள் இலக்கணம்

ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதல் உணர்வை மையமாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணம் அமைந்துள்ளது. இதில் தலைவியின் தோழியும் அகப்பொருள் பாடல்களில் முக்கிய இடம் வகிக்கும் ஒரு பாத்திரம் ஆவாள். காதல் பற்றி பாடும்போது தலைவன் தலைவி என்று பொதுவாகப் பாடுவார்களே தவிர ஒருவருடைய இயற்பெயரைச் சுட்டிப் பாடுவதில்லை. காதல் உணர்ச்சி எல்லோருக்கும் பொது என்பதால் தனி ஒருவருடைய பெயரைச் சுட்டிப்பாடு வதில்லை. அகப்பொருள் பாடல்கள் நாடகப் பாங்கிலான தன்மைக் கொண்டிருக்கும். எல்லாப் பாடல்களும் தலைவன், தலைவி, தோழி முதலியவர்களின் யாராவது ஒருவர் கூறுகூதாக அமைந்திருக்கும். ஒரே பாடலில் இருவர் மூவர் உரையாடுவது போல இருக்காது. ஒவ்வொரு பாடலுக்கும் திணை, துறை கூறப்பட்டிருக்கும். திணை, நிலம் சார்ந்த ஒழுக்கத்தைக் குறிக்கும். துறை என்பது பாடப்பெற்ற சூழலைக் குறிக்கும். அகப்பொருள் இலக்கணம் திணை அடிப்படையில் அமைந்ததாகும். அகப்பொருள் திணைகள் ஐந்து அவை:

1. குறிஞ்சித் திணை
2. முல்லைத் திணை
3. மருதத் திணை
4. நெய்தல் திணை
5. பாலைத் திணை

இந்த ஐந்து திணைகளுக்கும் உரிய அகப்பொருள்இலக்கணம்மூன்றுவகைப்படும். அவை.

1. முதற்பொருள்
2. கருப்பொருள்
3. உரிப்பொருள் ஆகியன ஆகும்.

## முதற்பொருள்

நிலம், பொழுது ஆகிய இரண்டு முதற்பொருள் எனப்படும். உலகில் உள்ள உயிர்கள் தோன்றுவதற்கும், இயங்குவதற்கும் ஆதாரமாக உள்ளதால் இவற்றை முதற்பொருள் என்பர்.

## நிலம்

ஒவ்வொரு திணைக்கும், உரிய நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்து திணைகளுக்கும் உரிய நிலங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| பாலை | பாலை நிலமும் பாலை நிலம் சார்ந்த இடமும் |

தமிழ்நாட்டில் உள்ள நிலப்பகுதி இவ்வாறு ஐந்து திணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## பொழுது

பொழுதுஎன்பதுகாலம்என்றுபொருள்படும். பொழுது சிறு பொழுது, பெரும்பொழுது என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## சிறுபொழுது

சிறுபொழுது என்பது ஒரு நாளின் காலப் பிரிவுகள் ஆகும். சிறுபொழுது பின்வருமாறு அமையும்

| | | |
|---|---|---|
| வைகறை | - | விடியற்காலம் |
| காலை | - | காலைநேரம் |
| நண்பகல் | - | உச்சி வெயில் நேரம் |
| எற்பாடு | - | சூரியன் மறையும் நேரம் |
| மாலை | - | முன்னிரவு நேரம் |
| யாமம் | - | நள்ளிரவு நேரம் |

சிறுபொழுது ஆறும் ஒரு நாளின் ஆறு கூறுகளாக இருப்பதை அறியலாம்.

### பெரும்பொழுது

பெரும்பொழுது என்பது ஓர் ஆண்டின் காலப்பிரிவு ஆகும். ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களையும் ஆறு பிரிவுகளாகப் பிரிப்பர். இது நீண்ட காலப் பிரிவாக இருப்பதால் பெரும்பொழுது எனப்படுகிறது. ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களும் பின்வருமாறு ஆறு பெரும் பொழுதுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| சித்திரை, வைகாசி | - | இளவேனில் காலம் |
| ஆனி, ஆடி | - | முதுவேனில் காலம் |
| ஆவணி, புரட்டாசி | - | கார் காலம் |
| ஐப்பசி, கார்த்திகை | - | குளிர்காலம் |
| மார்கழி, தை | - | முன்பனிக் காலம் |
| மாசி, பங்குனி | - | பின்பனிக் காலம் |

சிறுபொழுது, பெரும்பொழுது ஆகியவற்றை இவை இந்தத் திணைகளுக்கு உரியவை என்று பிரித்து வைத்துள்ளனர்.

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக் காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறுகாலமும் | வைகறை |
| நெய்தல் | ஆறுகாலமும் | எற்பாடு |
| பாலை | முதுவேனில், பின்பனி | நண்பகல் |

ஒவ்வொரு நிலத்திற்கும் மேலே குறிப்பிட்ட காலங்கள் சிறந்தனவாக இருக்கும் என்பதால் இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது.

### கருப்பொருள்

நிலமும் பொழுதும் ஆகிய இரண்டு முதற்பொருள்கள் அத்திணையில் உள்ள சூழலைத் தீர்மானிக்கின்றன. இவற்றின் காரணமாக ஒவ்வொரு திணையிலும் சூழல் வேறுபட்டுள்ளது. ஒவ்வொரு திணையிலும் வாழும் மக்கள், அவர்களின் தொழில் உணவு, பொழுதுபோக்கு, அந்த நிலத்தில் உள்ள மரங்கள், பறவைகள், விலங்குகள், நீர்நிலை முதலியவற்றைக் கருப்பொருள் என்கின்றனர். கருப்பொருள், பாடல்களில் பின்னணியாகச் செயல்படுகின்றது. அனைத்து திணைக்கும் உரிய கருப்பொருள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| தலைவர் | பொருப்பன் வெற்பன் கொடிச்சி | குரும்பொறை தோன்றல் கிழத்தி | ஊரன் கிழ்நன் மனைவி | சேர்ப்பன் புலம்பன் நுளைச்சி | விடலைமீளி எயிற்றி |
| மக்கள் | குறவர் குறத்தியர் | ஆயர் ஆய்ச்சியர் | உழவர் உழதத்தியர் | பரதவர் பரத்தியர் | மறவர் மறத்தியர் |
| பறவை | கிளிமயில் | காட்டுக்கோழி | நாரை அன்னம் | கடல் காகம் | பருந்து, கழுகு |
| விலங்கு | புலி, யானை | மான், முயல் | எருமை நீர்நாய் | சுறா | செந்நாய் |
| ஊர்நீர் நிலை | சிறுகுடி அருவி சுனை | பாடி, குறுஞ் சுனை | பேரூர், ஆறு | பாக்கம் உவர் நீர்க்கேணி | குறும்பு, கூவல் |
| பூ | வேங்கை குறிஞ்சி | முல்லை பிடவம் | தாமரை கழுநீர் | நெய்தல் முண்டகம் | குராமரா |
| மரம் | தேக்கு அகில் | கொன்றை காயா | காஞ்சி மருதம் | புன்னை ஞாழல் | ஊழிஞை பாலை |
| உணவு | மலை நெல் தினை | வரகு, சாமை, முதிரை | செந்நெல் வெண்ணெல் | மீன் | வழிப்பறி உணவு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட் பறை | மணமுழவு | மீன் கோட்பறை | பகைத்துடி |
| யாழ் | குறிஞ்சியாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | சாதாரி | மருதம் | செவ்வழி | பஞ்சுரம் |
| தொழில் | தேன் எடுத்தல் வெறியாடல் | மேய்த்தல், ஏறுதழுவுதல் | நெல் அரிதல், விழா எடுத்தல் | மீன் பிடித்தல், கடலாடுதல் | வெஞ்சமம் சூறையாடல் |

### உரிப்பொருள்

ஒவ்வொரு திணைக்கும் உரிய பொருளை உரிப்பொருள் என்பர். உரிப்பொருள் திணைக்கும் உரிய முக்கிய உணர்ச்சியைக் குறிக்கிறது. ஐந்து திணைகளுக்கும் உரிப்பொருள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | புணர்தல் | தலைவனும் தலைவியும் ஒன்று சேர்தல் |
| முல்லை | இருத்தல் | தலைவி, பிரிவைப் பொறுத்துக் கொள்ளுதல் |
| மருதம் | ஊடல் | தலைவனிடம் தலைவி பிணக்குக் கொள்ளுதல் |
| நெய்தல் | இரங்கல் | தலைவி பிரிவுக் காலத்தில் வருந்துதல் |
| பாலை | பிரிவு | தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல் |


இவ்வாறு எல்லாத் திணைக்கும் முதல் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் சொல்லப்பட்டிருக்கின்றன. திணை, நிலத்தை அடிப்படையாகக் கொண்டது. மற்றபடி உள்ள காலம், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவை அந்தந்த நிலங்களுக்குச் சிறப்பாக அமையக் கூடியவை ஆகும். எல்லா நிலங்களுக்கும் சிறுபொழுது, பெரும்பொழுது ஆகியவை பொதுவானவையே. ஆயினும் ஒவ்வொரு திணைக்கும் உரியதாகச் சொல்லப்பட்டவை. அந்தந்தத் திணைக்குச் சிறப்பானவை ஆகும். பறவைகளும், விலங்குகளும், மரங்களும், பூக்களும் மற்ற நிலங்களிலும் இருக்கக் கூடும். எனினும், அந்தந்த நிலங்களுக்கு அவை சிறப்பு வாய்ந்தவை என்பதால் ஒரு திணைக்கு உரியதாக அவை சொல்லப்பட்டுள்ளன.

உரிப்பொருள்களும் அவ்வாறே சிறப்புக் கருதிச் சொல்லப்பட்டுள்ளன. அகப்பொருள் இலக்கணம் களவு, கற்பு என்று இரண்டு கூறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தலைவன், தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் பிறர் காணாதவாறு சந்தித்துக் காதல் கொள்ளுவது களவு எனப்படும். திருமணத்திற்குப் பின் உள்ள காதல் வாழ்க்கை கற்பு எனப்படும். களவிலும், கற்பிலும் தலைவன் தலைவி இவர்களின் உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்று விரிவாக இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. பொருள் இலக்கண அமைப்பைப் பின்வருமாறு காட்டலாம்.

அகப்பொருள் திணைகள் ஐந்துடன் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் சேர்த்துச் சொல்லுவது உண்டு. கைக்கிளை என்பது ஆண், பெண் ஆகிய இருவரில் ஒருவர் மட்டுமே காதல் கொள்ளும் ஒருபக்கக் காதல் ஆகும். பெருந்திணை என்பது பொருந்தாத காதல் ஒழுக்கம் ஆகும். கைக்கிளை, பெருந்திணை இரண்டையும் அகப்புறத்திணை என்றும் கூறுவர். கைக்கிளை பெருந்திணை இரண்டையும் புறப்பொருள் திணைகளாகவும் குறிப்பிடுவர்.

### 2.12 புறப்பொருள் இலக்கணம்

புறப்பொருள் என்பது வீரம், போர், தூது, வெற்றி, கொடை, நிலையாமை முதலியவற்றைக் கூறுவது ஆகும். ஒரு குறிப்பிட்ட அரசனையோ வள்ளலையோ




குறுநில மன்னனையோ பெயரைச் சுட்டி அவனுடைய வீரம், வெற்றி, கொடை அறிவுரை சொல்லுவது போலவோ யாரையும் சுட்டிக் கூறாமலோ புறப்பொருள் பாடல் அமைவதும் உண்டு. அகப்பொருள் பாடல் போலவே புறப்பொருள் பாடல்களும் திணை, துறை அடிப்படையில் அமைந்துள்ளன. ஆனால் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்ற இலக்கணங்கள் புறப்பொருளுக்கு இல்லை. புறப்பொருள் திணைகள் போரை அடிப்படையாகக் கொண்டவை. போர் செய்யச் செல்லும் அரசனும் படைகளும் போரிடும் முறைக்கு ஏற்ப வெவ்வேறு பூக்களை அணிந்து சென்று போரிடுவர். அவர்கள் அணிந்து செல்லும் பூக்களின் பெயர்களே திணைகளுக்குப் பெயர்களாக அமைந்துள்ளன. பின்வரும் புறத்திணைகள் யாவும் பூக்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டவையே.

## புறப்பொருள் திணைகள்

வெட்சித்திணை
கரந்தைத் திணை
வஞ்சித் திணை
காஞ்சித் திணை
நொச்சித் திணை
உழிஞைத் திணை
தும்பைத் திணை
வாகைத் திணை

ஆகியவை புறப்பொருள் திணைகள் ஆகும். இந்த எட்டுத் திணைகளும் போரை அடிப்படையாக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திணை களுக்கான விளக்கமும் பிற திணைகளான

பாடாண் திணை
பொதுவியல்
கைக்கிளை
பெருந்திணை

ஆகியவற்றின் விளக்கமும் பின்வருமாறு:

## வெட்சித்திணை:

பழைய காலத்தில் பகை அரசனிடம் போர் செய்ய நினைக்கும் ஒருவன் போரின் முதல் கட்டமாகப் பகை அரசனது பசுக் கூட்டங்களைக் கவர்ந்து செல்வான். இது வெட்சித் திணை எனப்படும். வெட்சி வீரன் வெட்சிப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

## கரந்தைத் திணை

பகை அரசன் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை அவற்றிற்கு உரியவன் மீட்டுவரச் செய்யும் போர் கரந்தைத் திணை எனப்படும். கரந்தை வீரன் கரந்தைப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

### காஞ்சித் திணை

நாட்டை விரிவாக்கும் நோக்கோடு வேந்தன் போர் தொடுக்கும் செயல்களைத் தொல்காப்பியம் வஞ்சித்திணை எனக் குறிப்பிடுகிறது. இது அகத்திணையில் ஒன்றான முல்லைத் திணையின் புறம் எனக் குறிப்பிடப்பிடுகிறது. வஞ்சித்திணை என்பது, அடங்காத மண்ணாசையினாலோ அல்லது தன்னை மதியாத பகையரசின் செருக்கை அடக்கவோ ஒரு மன்னன் மற்றொருவன் மேல் போர் தொடுப்பது ஆகும். போர்த்தொடுத்துச் செல்பவர் வஞ்சிப் பூவை சூடிச் சென்றதால் இத்திணைக்கு அப்பெயர் வந்தது. வஞ்சி என்பது ஒரு கொடி வகை.

### காஞ்சித் திணை

படை எடுத்து வரும் பகை அரசனைத் தடுத்துத் தன் நாட்டைக் காக்க நினைக்கும் அரசன் போருக்குச் செல்லுதல் காஞ்சித் திணை எனப்படும். காஞ்சி வீரன் காஞ்சிப் பூச் சூடி போருக்குச் செல்வான்.

### நொச்சித் திணை

பகை அரசன் படை எடுத்து வந்து கோட்டை மதிலைச் சூழ்ந்து கொண்ட போது, தன்னுடைய கோட்டையைக் காத்துக் கொள்ள அரசன் போர் செய்தல் நொச்சித் திணை எனப்படும். நொச்சி வீரன் நொச்சிப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

### உழிஞைத் திணை

பகை அரசனுடைய கோட்டையை வெல்லக் கருதிய அரசன் தன் படைகளோடு மதிலைச் சுற்றி முற்றுமை இடுதல் உழிஞைத்திணை எனப்படும். உழிஞை வீரன் உழிஞைப்பூச் சூடி, போருக்கு செல்வான்.

### தும்பைத் திணை

பகை அரசர்கள் இருவரும் போர்க் களத்தில் எதிர் எதிர் நின்று போரிடுதல் தும்பைத் திணை எனப்படும். தும்பை வீரன் தும்பைப்பூச் சூடி, போருக்குச் செல்வான். இந்தத் திணைகளுடன் வாகைத் திணை, பாடாண் திணை, பொதுவியல் திணை ஆகிய மூன்று புறத்திணைகளும் உள்ளன. இவற்றையும் சேர்த்து, பத்துப் புறத்திணைகள் என்று கூறுவர். கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் சேர்த்து, பன்னிரண்டு புறத்திணை என்று கூறுவர்.

### வாகைத்திணை

போரில் வெற்றி பெற்ற அரசனைப் புகழ்ந்து பாடுதல் வாகைத்திணை எனப்படும். வெற்றி பெற்றவர்கள் வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவார்கள்.

### பாடாண் திணை

இதுவரை சொன்ன புறத்திணைகள் போர் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை. பாடாண் திணையில் கொடை, கடவுள் வாழ்த்து, அரசனை வாழ்த்துதல் முதலியவை இடம் பெறும். பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பற்றி கூறுவது.

### பொதுவியல் திணை

போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடுதல், போரில் இறந்த வீரர்களின் மனைவியர்இரங்கல்,நிலையாமைமுதலியவை பொதுவியல் திணையில் இடம்பெரும். பொதுவான கருத்துகளை கூறுவது.

### கைக்கிளைத் திணை

தன்னை விரும்பாத ஒரு பெண்ணிடம் ஒருவன் காதல் கொள்வது கைக்கிளைத் திணை எனப்படும். இதை ஒருதலைக்காதல் என்று கூறுவர்.

### பெருந்திணை

தன்னை விட வயதில் மிகவும் மூத்த பெண் ஒருத்தியிடம் ஒருவன் காதல் கொள்வது பெருந்திணை எனப்படும். இதைப் பொருந்தாக் காதல் என்று கூறுவர். கைக்கிளை, பெருந்திணை என்னும் இவ்விரண்டுதிணைகளையும் அகப்பொருள் திணையாகவும் கூறுவர்.

### சமூகப் பிரிவுகள்:

- சங்க காலத்தின் தொடக்கத்தில், வேத காலத்தில் இருந்ததைப் போன்ற சாதிப் பிரிவுகள் தமிழகத்தில் காணப்பட வில்லை.
- சங்க கால சமுதாயத்தில் **அந்தணர், அரசர், வைசியர், வேளாளர்** என்ற நான்கு பிரிவுகள் இருந்ததாக **தொல் காப்பியம்** கூறுகிறது.

### மகளிர்நிலை :

- சங்க காலத்தில் பெண்கள் மிகவும் சிறப்பாக மதிக்கப்பட்டனர். **கற்பு** அவர்களது சிறப்புக் குணமாகக் கருதப் பட்டது.
- பெண்கள் தங்களது வாழ்க்கைத் துணையைதேர்ந்தெடுக்கும்உரிமையைப் பெற்றிருந்தனர்.
- மறுமணம் செய்து கொள்ளும் உரிமை மற்றும் சொத்துரிமையை சங்க கால மகளிர் பெற்றிருக்கவில்லை.
- சங்க காலத்தில் பெண் கல்வி வலியுறுத்தப்பட்டது.
- **ஔவையார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார்** போன்றோர் சங்க கால பெண்பாற் புலவர்களாவர்.
- பெண்களுக்கு திருமணத்தின் போது வதுவை நன்மனம் என்ற நீராட்டும் சடங்கு செய்யப்பட்டது.
- காதலித்த பெண்ணை மணக்க வாய்க்காத ஆண் மகன்களிடம் மடலேறும் முறை காணப்பட்டது. பெண்கள் மடலேறுவதில்லை.

*திருமங்கையாழ்வார் பாடலில் தலைவி ஒருத்தி பிரிவாற்றிமையால் மடலூரத் துணிந்தாள் என்று பாடுகிறார்.*

- பெண்கள் தம் காதுகளை தொங்க தொங்க வளர்க்கும் போது அணிந்து கொள்ளும் காதணிக்கு **குதம்பை** என்றும், வளர்த்த காதில் அணியும் காதணிக்கு **கடிப்பினை** என்றும் பெயர். "கொடுமணம்" என்ற ஊரில் செய்யப்பட்ட பொன்னணிகள் மக்களால் பெரிதும் பாராட்டப் பெற்றன.

### இறைவழிபாடு

- சங்க கால மக்கள், ஐந்து கடவுள் களை வழிபட்டுடன் தங்களது மூதாதை யரையும் வழிப்பட்டனர். அவர்களது நினைவாக **நடுகல்** என்றழைக்கப்பட்ட நினைவுக் கற்களை எழுப்பினார். குறிப்பாக போரில் உயிர் நீத்த வீரர்களின் நினைவாக நடுகல் எழுப்பி வழிபட்டனர்.
- சூரியன், சந்திரன், பூமி, ஆறுகள், மலைகள் போன்ற இயற்கை சக்திகளையும் சங்க கால மக்கள் வழிபட்டனர். சங்க காலத்தில் **வேப்ப மரம்** புனித மானதாகக் கருதப்பட்டது.
- சங்க கால மக்கள் கார்த்திகை, ஓணம், இந்திர விழா போன்ற விழாக்களை கொண்டாடினர். புகார் நகரில் ஆண்டுதோறும் இந்திர விழா நடைபெற்றது.

## பொருளாதார நிலை

- சங்க காலத்தில் வேளாண்மை மக்களின் முக்கியத் தொழிலாகும். நெல் முக்கிய பயிராகும். நூல் நாற்றம், ஆடை நெய்தல் போன்றவை இதர முக்கியத் தொழில்களாகும்.
- பருத்தியாடைகள் “உறையூர்” மற்றும் “மதுரையில்” பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. “கலிங்கம்” என்ற சொல் மெல்லிய ஆடைகளைக் குறிக்கும்.
- சங்க காலத்தின் தொடக்கத்தில் பண்ட மாற்று முறை வழக்கத்திலிருந்து உப்பு முக்கிய வணிகப் பொருளாகும். உப்பு வணிகர்கள் ஊர் ஊராகச் சென்று உப்பை விற்றனர்.
- நகரங்களில் **நாளங்காடி** மற்றும் **அல்லங்காடி** எனப்பட்ட பகல்நேர மற்றும் மாலை நேரக் கடைகள் நிறுவப்பட்டன. புகார் நகரில் அத்தகைய கடைகள் இருந்ததாக பட்டினபாலை குறிப்பிடுகிறது.
- சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தமிழகம் கிரேக்க உரோமானியருடன் வாணிக உறவை மேற் கொண்டது.
- சங்க இலக்கியங்கள் கிரேக்க – ரோமானியரை யவனர்கள் என்று குறிப்பிடுகின்றன.
- கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் முதன் முதலில் தமிழகத்துடன் வர்த்தகம் மேற்கொண்டனர்.
- மக்கள் குடியிருந்த குடிசைகளுக்கு குரம்பை என்று பெயர். மாடி வீடுகளுக்கு "வேயா மாடங்கள்" என்று பெயர். அரண்மனையைச் சுற்றி ஒரு வெற்று வெளி இருக்கும் அதற்கும் செண்டுவெளி என்று பெயர்.

## சங்ககால ஏற்றுமதி

- சங்க கால தமிழகத்திலிருந்து மிளகு, கிராம்பு, ஏலக்காய், இஞ்சி, சந்தனம், மலர்கள், வாசனைத் திரவியம், அகில், தந்தம், முத்து, பவளம், மூலிகைச் செடிகள், வாழைப்பழம் அரிசி உயர்ந்த ஆடைகள், மற்றும் மஸ்லின் துணி வகைகள் போன்ற பொருட்கள் கிரேக்க – உரோமானிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

## இறக்குமதி :

- இனிக்கும் மது வகைகள், தங்க நாணயங்கள் மற்றும் அணி கலன்கள், கண்ணாடி, செம்பு போன்ற பொருட்களும் குதிரையும் இறக்குமதி செய்யப்பட்டன.
- புதுச்சேரி (அரிக்கமேடு), கமரா (புகார்), சொப்தமா (மரக்காணம்), பொறையார், கொற்கை, குமரி ஆகியன கிழக்கு கடற்கரையில் இருந்த முக்கியத் துறை முகங்களாகும்.
- மேற்கு கடற்கரையில் முசிறி மற்றும் தொண்டி (பொன்னானி) என்ற இரு சிறப்பு வாய்ந்த துறைமுகங்கள் இருந்தன.
- கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் சேர, சோழ அரசுகளோடு பாண்டிய அரசும் முடிவுக்கு வந்தது. அடுத்த மூன்று நூற்றாண்டுக் காலம் தமிழகம் களப்பிரர்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாகியது.



# சங்கம் மருவிய காலம்

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் சங்க காலம் முடிவுக்கு வந்தது. சங்க காலத்தின் இறுதிப் பகுதியை சங்கம் மருவிய காலம் என்று கூறுகிறோம்.

- பதினென் கீழ் கணக்கு நூல்கள் மற்றும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களாகும்.
- கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரை களப்பிரர்கள் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்தினர். களப்பிரர்கள் முதலில் பௌத்தரராகவும் பின்பு சமணர்களாகவும் சார்புற்றிருந்தனர்.
- களப்பிரர்களைப் பற்றி அறிய நிறைய சான்றுகள் இல்லாததால், அவர்களது காலம் “இருண்ட காலம்” என்று அழைக்கப்படுகிறது.
- **தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்கலம், பெரிய புராணம்** ஆகிய நூல்கள் களப்பிரர்களைப் பற்றி குறிப்பிடுகினறன.
- வேள்விக்குடி மற்றும் தளவாய்புரம் செப்பேடுகளும், திருப்புகலூர் கல்வெட்டு மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள வைகுந்த பெருமாள் கோயில் கல்வெட்டு போன்றவை களப்பிரர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாகும்.
- அச்சுத களப்பாளன் என்ற களப்பிர மன்னர் உறையூரை தலைநகராகக் கொண்டு தமிழகத்தை ஆண்டான் என்று யாப்பெருங்கலம் குறிப்பிடுகிறது.
- களப்பிரர் காலத்தில், தமிழகத்தில் **வடமொழியும் பிராகிருதமும்** அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் **வட்டெழுத்து** என்ற புதிய வரிவடிவம் வளர்ச்சி பெற்றது.
- களப்பிரர் காலத்தில் **நிகண்டுகள்** இயற்றப்பட்டன. மேலும் சீவக சிந்தாமணி, குண்டலகேசி போன்ற காப்பியங்களும் களப்பிரர் காலத்தில் தோன்றின.

- களப்பிரர் காலத்தில் புத்த, சமண சமயங்கள் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன. சமணர்கள் அருகனைக் கடவுளாக வழிபட்டனர்.
- புத்த சமய கல்விக் கூடங்கள் **கடிகை** என்று அழைக்கப்பட்டது. **புத்த தத்தர், புத்த கோஷர், போதி தர்மர்** போன்ற புத்த சமய அறிஞர்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர். புத்ததத்தர் என்ற பௌத்த அறிஞர் 'விநிய விநிச்சயம்' என்னும் நூலை எழுதினார்.
- திருப்பாதிரிப்புலியூரில் சமணப் பள்ளி ஒன்று செயல்பட்டது. **சர்வநந்தி, வஜ்ரநந்தி** ஆகியோர் களப்பிரர் காலத்தில் வாழ்ந்த சமண சமய அறிஞர்களாவர்.
- மதுரையில் பூச்சியநாதர் என்பவரின் மாணவரான வச்சிரநந்தி என்ற சமண முனிவர் தமிழ்ச்சங்கம் ஒன்றைத் தோற்றுவித்து அதன் மூலம் சமண சமயம் இலக்கியங்களைத் தமிழில் பெருக்கி அதற்கு வளமூட்டினார்.
- கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய மன்னர் **கடுங்கோன்** தென் தமிழ்நாட்டை களப்பிரர்களிமிடருந்து மீட்டான்
- அதே சமத்தில் களப்பிரர்களிடமிருந்து தொண்டை மண்டலத்தையும் சோழ மண்டலத்தையும் பல்லவ அரசன் **சிம்ம விஷ்ணு** கைப்பற்றினான். இவ்வாறாக தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி முடிவுக்கு வந்தது.



# பல்லவர்கள்

## வரலாற்றுச் சான்றுகள்

### பட்டயச் சான்றுகள்

தமிழ்நாட்டில் முதல் முதலில் செப்புப் பட்டயங்களைக் கொடுத்தவர்கள் பல்லவர்களேயாவர். இப்பட்டயங்கள் மூன்று வகைப்படும்.

1. பிராகிருதப் பட்டயங்கள்
2. சமஸ்கிருதப் பட்டயங்கள்
3. சமஸ்கிருத – தமிழ் பட்டயங்கள்.

**பிராகிருதப் பட்டயச் சான்றுகளில் பிரதானமானவை:**

- சிவஸ்கந்தவர்மனின் பட்டயங்கள்; சாருதேவியின் பிரிட்டிஷ் அருங்காட்சியப் பட்டயங்கள், குமார விஷ்ணு –வின் சேந்தலூர்ப் பட்டயங்கள்.

**சமஸ்கிருதப் பட்டயங்களில் குறிப்பிடத்தக்கவை:**

- விஜயஸ்கந்தவர்மனின் ஓங்கோடு பட்டயங்கள்; யுவமகாராஜன் விஷ்ணு கோபனின் உருபல்வே பட்டயங்கள்; சிங்கராய கொண்டான் பட்டயங்கள்; விஷ்ணுகோபவர்மனின் கூரம் பட்டயங்கள்; முதலாம் நந்திவர்மனின் உதயேந்திரம் பட்டயம்; வேசந்தா பட்டயங்கள்; ஓங்கோடு பட்டயங்கள்; மங்கதூரா பட்டயங்கள்.

**சமஸ்கிருத தமிழ் பட்டயங்களில் பிரபலமானவை:**

- முதலாம் பரமேஸ்வரவர்மனின் கூரம் பட்டயங்கள், இரண்டாம் நந்திவர்மனின் காசிக்குடி, கொற்றங்குடி, உதயேந்திரம் பட்டயங்கள், மூன்றாம் நந்திவர்மனின் வேலூர்பாளையம் பட்டயங்கள்; நிருபதுங்கவர்மனின் பாகூர் பட்டயங்கள் இப்பட்டயங்கள் சமஸ்கிருதம், தமிழ் கலந்த கிரந்தப் பட்டயங்களாகும்.

### கல்வெட்டுச் சான்றுகள்

- பட்டயச் சான்றுகளைப் போன்றே கல்வெட்டுப் பொறிப்புகளும் பல்லவரது தோற்றம் மற்றும் பல்லவ மன்னர்களைப் பற்றித் தெரிந்துக் கொள்ளப் பயன்படுகின்றன. கல்வெட்டுச் சான்றுகளில் குறிப்பிடத்தக்கவை.
- அமராவதி சமஸ்கிருத கல்வெட்டு, ராஜசிம்மனது வயலூர் தூண் கல்வெட்டுகள், கங்கர், சாளுக்கியர்,

பாண்டியர், ராஷ்டிரை கூடர் கல் வெட்டுகள், சந்திர குப்தரது அலகாபாத் தூண் கல்வெட்டு, ஜுனாகத் கல்வெட்டு, இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு, சிம்மவர்மனின் மஞ்சி கல்லுக் கல்வெட்டுகள், சயாம் கல்வெட்டு, தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் மாமல்ல புரம், மாமண்டூர், தளவானூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

## இலக்கியச் சான்றுகள்

- பெரியபுராணம்; பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தம், திருமங்கை ஆழ்வாரின் பரமேஸ்வர விண்ணகரப் பதிகம் நியாயப் பிரவேசம்; பாரவியின் கிரதார் ஜுனியம், தண்டியின் அவந்தி சுந்தரி சதாசாரம், மகாவம்சம்; யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள்.
- பல்லவர்களின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவர்கள் பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சாதவாகனர்களின் கீழ் ஆட்சி அலுவலர்களாக இருந்தவர்கள் என்றும், தொண்டை மண்டலத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் கூறுவர்.
- கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவர்கள் தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி செய்தனர்.
- பல்லவ மரபை, முற்காலப் பல்லவர், இடைக்கால பல்லவர் மற்றும் பிற்கால பல்லவர் என பிரித்து கூறுவர்.
- **முற்காலப் பல்லவர்கள்** கி.பி. 250 முதல் கி.பி. 350 வரை ஆட்சி செய்தனர். சிவஸ்கந்தவர்மன், விஜயஸ் கந்தவர்மன் ஆகியோர் இம்மரபில் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்கள் பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்.
- **இடைக்கால பல்லவர்கள்** கி.பி. 350 முதல் கி.பி. 550 வரை ஆட்சி புரிந்தனர். இம்மரபில் விஷ்ணுகோபன் குறிப்பிடத்தக்கவராவார். இவர்கள் வடமொழியில் பட்டயங்களை வெளி யிட்டனர்.
- **பிற்காலப் பல்லவர்கள்** கி.பி. 350 முதல் கி.பி. 550 வரை ஆட்சி புரிந்தனர். இம்மரபில் விஷ்ணுகோபன் குறிப்பிடத்தக்கவராவார். இவர்கள் வடமொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்.
- பிற்காலப் பல்லவர்கள் கி.பி. 575 முதல் ஒன்பதாம் நூற்றாண்டில் அவர்கள் வீழ்ச்சியடையும் வரை ஆட்சி புரிந்தனர்.
- இவர்கள் **வடமொழி, தமிழ்மொழி** ஆகிய இரண்டு மொழிகளிலும் பட்டயங்களை வெளியிட்டனர்.
- **சிம்ம விஷ்ணுவின்** தலைமையில் பல்லவர்கள், களப்பிரர்களை தோற் கடித்து வடதமிழ்நாடாகிய தொண்டை மண்டலத்தில் தமது ஆட்சியை நிறுவினர். பல்லவர்களின் தலைநகரம் **காஞ்சிபுரம்** ஆகும்.

- சிம்ம விஷ்ணு காலம் முதல் பிற்கால பல்லவர்களின் வரலாறு துவங்குகிறது.
- சிம்ம விஷ்ணு களப்பிரர்களை வென்று தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆட்சியை நிறுவினர்.
- பல்லவ அரசை ஒரு பேரரசாக மாற்றிய பெருமை சிம்ம விஷ்ணுவையேச் சாரும்.
- சிம்ம விஷ்ணுவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களில் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்ம வர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

## முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.600-630)

- இவர் சிம்மவிஷ்ணுவின் மகன் ஆவார். இவரது காலத்தில் சாளுக்கியர்களோடு பகைமை ஏற்பட்டது.
- சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி. பல்லவ நாட்டின் மீது போர் தொடுத்தார். மகேந்திரவர்மனைத் தோற்கடித்து பல்லவ நாட்டிலுள்ள வடபகுதிகளை கைப்பற்றினார்.
- இவர் **“மத்தவிலாச பிரகசனம்”** என்ற நகைச்சுவை நாடக நூலை வடமொழியில் இயற்றினார்.
- தொடக்கத்தில் சமணராக இருந்த இவர் திருநாவுக்கரசரால் சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டார்.
- இவரது காலத்தைச் சேர்ந்த சமண சமய ஓவியங்கள் சித்தன்ன வாசலில் காணப்படுகிறது.
- மகேந்திரவர்மனின் இசை ஆர்வத்தை **குடுமியான்மலை இசைக் கல்வெட்டு** மூலம் அறியலாம்.
- **பரிவதினி** (Parivadhini) என்ற வீணை வாசிப்பில் இவர் வல்லவராக விளங்கினார்.
- **இவரே குடைவரைக் கோயில்களை அறிமுகப்படுத்தியவராவார்.**
- மண்டகப்பட்டு, மாமண்டூர், மகேந்திர வாடி, வல்லம், பல்லாவரம் தளவானூர், திருச்சி, திருக்கழுகுன்றம் ஆகிய இடங்களில் இவரது குடைவரைக் கோயில்களைக் காணலாம்.
- இவர்மகேந்திரமங்கலம், மகேந்திரவாடி என்ற இரண்டு நகரங்களை நிறுவினார்.

## பட்டப்பெயர்கள்

- சித்திரகாரப்புலி (ஓவியர்க்கு புலி), விசித்தரசித்தன், மத்தவிலாசன் (இன்பம் விரும்புபவன்), சத்ரு மல்லன், கலகப் பிரியன், சங்கீரண ஜதி, குணபரன், சத்யசந்தன், சேத்தகாரி (கோயில்களை கட்டுபவன்), போத்தரையன்.

## முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668)

- இவர் முதலாம் மகேந்திரவர்மனின் மகன் ஆவார்.
- இவரது காலத்தில் சீனப்பயணி **யுவான் சுவாங்** (கி.பி. 640) காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார்.
- மாமல்லபுரம் என்ற புதிய நகரை உருவாக்கி அங்கு ஒற்றைக்கல் ரதங்கள் மற்றும் குடைவரைக் கோயில் மண்டபங்களை அமைத்தார்.

- இரண்டாம் புலிகேசியை கொன்று வாதாபியை வென்றதால் **வாதாபி கொண்டான்** என புகழப்பட்டார்.

### பட்டப்பெயர்கள்

- மாமல்லன், வாதாபி கொண்டான், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, வாத்ய வித்யாதரன்.

### முதலாம் பரமேஸ்வரன் (கி.பி. 670 - 680)

- சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனுடன் ஏற்பட்ட போரில் காஞ்சியை பற்றி சாளுக்கியர்கள் உறையூரை முற்றுகையிட்டனர் (கி.பி.674)
- பின்வாங்கிய பரமேஸ்வரன் படையுடன் வந்து விளிந்தை போரில் சாளுக்கியரை தோற்கடித்தான்.
- பின்னர் சங்க நாட்டின் மீது படையெடுத்து சென்று பல்லவர்கள் தோல்வியுற்று திரும்பினர்.
- 'நெல்மண்' என்ற இடத்தில் பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்செழியனிடம் தோல்வியுற்றார்.

### இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி. 691 - 728)

- இரண்டாம் நரசிம்மவர்மன் **இராஜ சிம்மன்** என்று அழைக்கப் பட்டார்.
- இவர் மாமல்லபுரத்தில் **கடற்கரைக் கோயில்** மற்றும் **காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோயில்** ஆகிய வற்றைக் கட்டினார். இவை இரண்டும் மணற்பாறைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டதாகும்.
- புகழ்மிக்க வடமொழி அறிஞர் **தண்டி** இவரது அவையில் இருந்தார். அவர் **"தண்டியலங்காரம்"** என்ற சமஸ்கிருத இலக்கண நூலை இயற்றினார்.
- இவரது ஆட்சியில் கடல் வாணிபம் செழிந்திருந்தது.

### பட்டப்பெயர்கள்

- ஆகமப்பிரியன், சங்கரபக்தன், இராஜ சிம்மன்.

### இரண்டாம் பரமேஸ்வரவர்மன் (கி.பி. 728 - 731)

- இரண்டாம் நரசிம்மவர்னின் மகனான இரண்டாம் பரமேஸ்வரவர்மன் கி.பி. 728-ல் ஆட்சியில் அமர்ந்தார்.
- சாளுக்கிய மன்னர் இரண்டாம் விக்கிர மாதித்தனால் போரில் தோற்கடிக்கப் பட்டார்.
- கங்கர்களோடு நடைபெற்ற போரில் பரமேஸ்வரவர்மன் கொல்லப்பட்டார்.
- இவரது மரணத்திற்கு பிறகு இவரின் மகன்கள் ஆட்சிக்கு வராத காரணத்தினால், சிம்மவிஷ்ணுவால் தொடங்கப்பட்ட பிற்கால பல்லவ மரபு முடிவடைந்தது.

### இரண்டாம் நந்திவர்மன் (கி.பி.731-796)

- இரண்டாம் பரமேஸ்வரனின் இறப்பிற்குப் பிறகு சிம்மவிஷ்ணுவின் தம்பியும் இரண்யவர்மனின் மகனுமான இரண்டாம் நந்திவர்மன் பல்லவ அரசராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இரண்டாம் நந்திவர்மன் விஷ்ணுபக்தர் ஆவார்.

- இவர் காஞ்சியில் **வைகுண்ட பெருமாள் கோயிலை** கட்டினார். திருமங்கை ஆழ்வார் இவரின் சம காலத்தவராவார்.

## மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 847-870)

- பல்லவ மன்னர்களில் குறிப்பிடத்தக்க மற்றொரு மன்னர் மூன்றாம் நந்தி வர்மன் ஆவார்.
- இவர் தெள்ளாறு என்னுமிடத்தில் நடைபெற்ற பெரும் போரில் பாண்டிய மன்னர் "ஸ்ரீவல்லபனை" வென்றார். எனவே இவரை **தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்** என **நந்திக் கலம்பகம்** புகழ்கிறது.

## பட்டப் பெயர்கள்

- காவிரிநாடன், கழல் நந்தி, தெள்ளாறு எறிந்த நந்திவர்மன், கடற்படை அவனி நாராயணன்.

## பல்லவ அரசின் முடிவு

- இராஜசிம்மனுக்கு பிறகு வீமவர்மனின் வழித்தோன்றல்களான நந்திவர்மன், நிருபதுங்கன், "அபராஜிதன்" போன்ற பல்லவ மன்னர்கள் தொண்டை மண்டலத்தை ஆண்டனர்.
- சோழர்களின் எழுச்சியினால் பல்லவ அரசு தனது செல்வாக்கை இழந்தது.
- கி.பி. **895** –ல் **திருப்புறம்பியம்** போரில் பல்லவர்கள் வெற்றி பெற்றனர். பின்னர் விஜயாலய சோழனின் மகனான **ஆதித்த சோழன்** கடைசி பல்லவ மன்னன் அபராஜிதனை வென்று காஞ்சிப்பகுதியைக் கைப்பற்றினான். அத்துடன் பல்லவப் பேரரசு முடிவுக்கு வந்தது.

## பல்லவ ஆட்சிமுறை

- பல்லவப் பேரரசானது மண்டலம் கோட்டம், நாடு, ஊர் என பல ஆட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- பல்லவப் பேரரசின் மிகப்பெரிய ஆட்சிப்பிரிவு **மண்டலம்** அல்லது ராஷ்டிரம் எனப்படும். இது இளவரசனின் கட்டுப்பாட்டில் தன்னாட்சி பெற்று விளங்கியது.
- மண்டலங்கள் பல விஷயங்களாகவும் (கோட்டங்களாகவும்), விஷயங்கள் பல நாடுகளாகவும், நாடுகள் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டன.
- பல்லவ ஆட்சி முறையின் மிகச்சிறிய ஆட்சிப்பிரிவு **ஊர்** அல்லது **கிராமம்** என்பதாகும்.
- நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம் ஆகும். கிராமத்தை நிர்வகிக்க **"ஊர் அவை"** இருந்தது.
- மைய அரசின் தலைவராக மன்னர் விளங்கினார். மன்னருக்கு உதவியாக அமைச்சர்களும், செயலர்களும் இருந்தனர்.
- பல்லவ அரசின் அமைச்சர்கள் **அமாத்தியர்கள்** எனப்பட்டனர். அவர்களுக்கு உத்தமசீலன், பிரம்ம ராஜன், பேரரையன் போன்ற விருது களும் கொடுக்கப்பட்டன.
- பல்லவ அரசில் மூன்று வகையான நீதிமன்றங்கள் இருந்தன. உச்ச நீதிமன்றம் தர்மசேனா எனப்பட்டது. இதற்கு அரசனே தலைமை வகித்தார்.

- நகரத்திலிருந்து நீதிமன்றங்கள் **அதிகரணங்கள்** என்றும், கிராம நீதிமன்றங்கள் **கரணங்கள்** என்றும் அழைக்கப்பட்டன.
- நிலவரியே அரசின் முக்கிய வருவாயாக இருந்தது. இது தவிர வேறு பல வரிகளும் வசூலிக்கப்பட்டன. இவை **காணம், இறை,** என்று அழைக்கப்பட்டன.
- அரசாங்க கருவூலகத்தை **குமரன் பண்டாரம்** என்ற அதிகாரி நிர்வகித்து வந்தார்.
- பல்லவர்கள் ஆட்சி காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் சிறந்து விளங்கின. சோழர்களின் கிராம ஆட்சி முறைக்கு பல்லவர்கள் வழிகாட்டியாக விளங்கினர்.

## சமூக நிலை

- பல்லவர்கள் காலத்தில்தான் பக்தி இயக்கம் தோன்றி வளர்ந்தது.
- பல்லவர் கால சமுதாயம் பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது.
- பிராமணர்கள் **அக்ரஹாரம்** எனப்பட்ட தனிப்பகுதிகளில் வாழ்ந்தனர். பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலக் கொடைகள் **பிரம்மதேயங்கள்** என்று பெயர்.
- கோயில்களுக்கு கொடையாக வழங்கப் பட்ட நிலங்களுக்கு **தேவதானம்** என்று பெயர்.
- சூத்திரர்களை பல்லவர் கால இலக்கியங்கள் புலையர் என்றும், சண்டாளர் என்றும் குறிப்பிடுகின்றனர்.
- பல்லவர் கால சமுதாயத்தில் ஆடல் மகளிர் தனிப் பிரிவாகக் காணப்பட்டனர்.

## பொருளாதார நிலை

- தலைநகராமான காஞ்சிபுரம் முக்கிய வணிக நகரமாகவும் திகழ்ந்தது, வணிகர் சங்கம் மணி கிராமம் என்று அழைக்கப்பட்டது. அயல் நாட்டு வணிகர்கள் நானாதேசிகள் என்று அழைக்கப்பட்டனர்.
- நிலங்கள் **உழவு, நிவர்த்தனம்** அல்லது **பட்டிகா, ஹாலா** என்னும் அளவுகளால் அளக்கப்பட்டன. **கலப்பை** என்பதும் ஓர் அளவு கோலாகும்.
- பல்லவர் காலத்திலும் அரிசியே முக்கிய உணவாகும்.
- தங்கத்தின் எடையை **கழஞ்சு, மஞ்சாடி** என்று குறிப்பிட்டனர்.
- முதலாம் மகேந்திரவர்மன் மாமண்டூரில் அமைத்த ஏரியின் பெயர் **சித்ர மேக தடாகம்** என்பதாகும்.

## கலை மற்றும் கட்டடக் கலை

- பல்லவர்களே பாறைக் கட்டக்கலையை தமிழகத்தில் அறிமுகம் செய்தவராவர்.
- பல்லவர்களின் கட்டடக்கலை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் பாணிக் கோயில்கள் என்று கூறுவர்.
- ஒற்றைக்கல் ரதங்களும், மண்டபங் களும், மாமல்லன் பாணிக் கோயில்கள் எனப்படுகின்றன.மாமல்லபுரத்தில்உள்ள ஒற்றைக்கல் ரதங்கள் தற்காலத்தில் **பஞ்ச பாண்டவ ரதங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

- மாமல்லன் பணி சிற்பங்களில் மிகவும் சிறப்பானது **திறந்த வெளிக் கலைக்கூடம்** என்று அழைக்கப்படும் பாறைச் சிற்பமாகும்.
- இராஜசிம்மன் காலத்தில் கட்டுமானக் கோயில்கள் அமைக்கும் வழக்கம் தொடங்கியது.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் மற்றும் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் ஆகிய இரண்டும் கட்டுமானக் கோயில் களின் தொடக்க நிலையாகும்.
- காஞ்சிபுரத்திலுள்ள வைகுண்ட பெருமாள் கோயில் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் கட்டப்பட்டது. இது நந்திவர்ம பாணி என்று அழைக்கப்படுகிறது.
- மாமண்டூர் மற்றும் குடுமியான்மலை இசைக் கல்வெட்டுகள் பல்லவர்கள் இசைக்கு அளித்த சிறப்பிடத்தை உணர்த்துகின்றன.
- முதலாம் மகேந்திரவர்மன் மற்றும் முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோர் இசையில் வல்லவர்களாக இருந்தனர்.
- சித்திகாரப்புலி என்று போற்றப்பட்ட முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தட்சிண சித்திரம் என்ற ஓவியக்கலை விளக்கநூல் தொகுக்கப்பட்டது.

## கல்வி மற்றும் இலக்கிய நிலை

- பல்லவர் காலத்தில் **வடமொழிக் கல்விக்கு** முன்னுரிமை அளிக்கப் பட்டாலும் தமிழ்மொழியையும் போற்றி வளர்த்தனர்.
- காஞ்சிபுரத்திலிருந்த **புத்த கடிகை** ஒரு சிறந்த கல்வி மையமாகும். மேலும் இக்கல்வி மையம் வடமொழிக் கல்விக்கும் பெயர் பெற்று விளங்கியது. யுவான் **சுவாங், தர்மபாலர் போன்ற அறிஞர்கள் இங்கு கல்வி பயின்றனர்.**
- முதலாம்மகேந்திரவர்மன்**பிரகாசனம்** மற்றும் **பாகவத வியூகம்** ஆகிய வடமொழி நூல்களை இயற்றினார்.
- **தண்டி** என்பவர் **காவிய தரிசனம்** மற்றும் **அவந்தி சுந்தரி கதாசாரம்** ஆகிய நூல்களை இயற்றினார்.
- பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்திபாடல்களை தமிழிலேயே இயற்றினார்.
- நாயன்மார்களின் பாடல் தொகுப்பு **திருமுறை** என்றும் ஆழ்வார்களின் பாடல் தொகுப்பு **திவ்ய பிரபந்தம்** என்றும் அழைக்கப்படுகிறது.
- பாரவி என்பவர் **கிருதார்சுனியம்** என்ற நூலை எழுதினார்.
- பல்லவர் காலத்தில் வாழ்ந்த கல்லாடனார் **கல்லாடம்** என்ற இலக்கண நூலையும், பெருந்தேவனார் **பாரத வெண்பா** என்ற நூலையும் இயற்றினார்.
- **நந்திக்கலம்பகம்** என்ற நூலும் பல்லவர் காலத்தில் எழுதப்பட்டதாகும்.
- பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி நெறியைப் பரப்பினார்கள்.
- நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர். அவர்களில் திருநாவுக்கரசர் திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

- காரைக்கால் அம்மையார் 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார்.
- ஆழ்வார்கள் மொத்தம் பன்னிருவர் அவர்களில் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசை ஆழ்வார் ஆகிய நால்வரும் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள்.
- பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் **திருப்பாவை** மற்றும் **நாச்சியார் திருமொழி** ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.



# பாண்டியப் பேரரசு

அன்றைய காலகட்டத்தில் பரந்திருந்த பாண்டியப் பேரரசானது இன்றைய மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களும், திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதி மற்றும் திருவாங்கூரில் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.

மெகஸ்தனிஸ், பிளினி போன்ற கிரேக்க எழுத்தாளர்களின் நூல்களிலும், சமஸ்கிருத இலக்கண அறிஞர் வரலாற்றாளர் வாசஃப் ஆகிய வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளில் பாண்டியரின் வரலாற்றுச் செய்திகளைச் காணலாம்

- பாண்டியர்களின் வரலாற்று காலம் **மூன்று** கால கட்டங்களாக வகைப் படுத்தப்படுகிறது. அவை,

1. முற்காலப் பாண்டியர்கள்
2. முதலாம் பாண்டியப் பேரரசு
3. இரண்டாம் பாண்டியப் பேரரசு

## முற்காலப் பாண்டியர்கள்

- முற்காலப் பாண்டியர்கள் தமிழை வளர்க்க தமிழ்ச்சங்கம் அமைத்து பெருமை பெற்றவர்களாவர்.
- பாண்டியர்களின் தலைநகரம் மதுரை ஆகும். அவர்களது சின்னம் மீன் ஆகும்.
- தமிழகத்தை களப்பிரர்கள் கைப்பறிய போது முற்காலப் பாண்டியர் ஆட்சியானது முடிவுக்கு வந்தது.

## முதலாம் பாண்டியப் பேரரசு

- கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய மன்னன் **கடுங்கோன்** களப்பிரர்களை வென்று பாண்டியர் ஆட்சியை மீண்டும் நிறுவினர். இவர் ஏற்படுத்திய பேரரசு **முதலாம் பாண்டியப் பேரரசு** என்று அழைக்கப்பட்டது.
- கடுங்கோனுக்கு பிறகு அவரது மகன் மாறவர்மன் அவனி சூளாமணி பட்டத்திற்கு வந்தார். இவருக்கு **சடையவர்மன்** என்ற பட்டப் பெயரும் உண்டு. இவரை **“உண்மையின் தோழன்”** என்று செப்பேடுகள் கூறுகின்றன.
- அடுத்து ஆட்சிக்கு வந்த செழியன் சேந்தன் **“வானவன்”** என்று அழைக்கப்பட்டார், இவருக்கு

**செங்கோற்சேந்தன், வேந்தர் வேந்தன்** என்ற பட்டப் பெயர்களும் உண்டு.

- முதல் பாண்டியப் பேரரசின் தலைசிறந்த அரசனாகக் கருதப் படுபவர் **மாறவர்மன் அரிகேசரி.** பராங்குசன், நெய்வேலி வென்ற நெடுமாறன் ஆகியன இவரது பட்டப் பெயர்களாகும்.
- மாறவர்மன் அரிகேசரி சைவ சமய வரலாற்றின் **கூன் பாண்டியன்** என்றும் **நின்றசீர் நெடுமாறன்** என்றும் அழைக்கப்பட்டார்.
- முதலாம் பாண்டியப் பேரரசின் கடைசி அரசனான **வீரபாண்டியன்** (கி.பி. 946-996) ஆதித்த சோழனால் தோற்கடிக்கப்பட்டான். அத்துடன் முதலாம் பாண்டியப் பேரரசு முடிவுக்கு வந்தது.

## இரண்டாம் பாண்டியப் பேரரசு

- பல்லவர்கள் மற்றும் சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு **கி.பி. 1190 முதல் கி.பி. 1310** வரை தமிழகத்தை ஆண்ட பாண்டியர்கள் இரண்டாம் பாண்டியர்கள் என்று அழைக்கப் படுகின்றனர்.
- இரண்டாம் பாண்டியர்களின் நிர்வாகத்தைக் குறித்தும், குலசேகரப் பாண்டியனைப் பற்றியும் புதுக்கோட்டையிலுள்ள மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகள் கூறுகின்றன.
- திருவந்திபுரம் கல்வெட்டுகள் பாண்டியர் களின் போர் முறைகள் பற்றியும், ஸ்ரீரங்கம் கல்வெட்டுகள் பாண்டிய மன்னர்களின் போர் வெற்றிகளைப் பற்றியும் கூறுகின்றன.
- திருநெல்வேலி கல்வெட்டுகளில் பாண்டிய மன்னர்களின் பெயர்களும், அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர்களும் காணப்படுகின்றன.
- பாண்டிய மன்னர்களின் நிர்வாகம் மற்றும் போர் வெற்றிகள் குறித்து வேள்விக்குடி செப்பேடுகள், சீவரமங் கலம் செப்பேடுகள், தளவாய்புரம் செப்பேடுகள் மற்றும் சின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன.
- கி.பி. 13-ம் நூற்றாண்டில் பாண்டியர்கள் மெல்ல, சோழரின் தலைமையிலிருந்து விடுபட்டு தங்களது தனியரசை நிறுவினர். இந்நிலையில் விக்கிரம பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. சோழ வேந்தன் மூன்றாம் குலோத்துங்கனின் ஆதரவோடு விக்கரம பாண்டியன் ஆட்சியைப் பிடித்தார்.

## முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் (கி.பி. 1190 - கி.பி. 1216)

- முதலாம் ஜடாவர்ம குலசேகர பாண்டியன் தமது தந்தை விக்கிரம பாண்டியனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இவரின் **மெய்க்கீர்த்தி** ஒரு சிறந்த வரலாற்றுச் சான்றாகும்.

- இவர் 1030 பிரம்மதேயங்கள் அடங்கிய **ராஜ கம்பீர சதுர்வேதி காலத்தை** உருவாக்கியதால் **"ராஜகம்பீரர்"** எனும் பெயர் பெற்றார்.

## முதலாம் மாறவர்மன் சுந்தரப் பாண்டியன் (கி.பி.1216 - கி.பி. 1238)

- இவர் ஜடாவர்மன் குலசேகர பாண்டியனின் சகோதரர் ஆவார். இவர் கலியுக ராமன், அதிசயப் பாண்டிய தேவர் போன்ற பல பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தார்.
- இவர் **கி.பி.1219-ல்** மூன்றாம் குலோத்துங்க சோழனை போரிட்டு வென்றார். எனினும் ஹொய்சாளர்கள் சோழர்களுக்கு ஆதரவாக செயல் பட்டதால் தான் வென்ற சோழ நாட்டை குலோத்துங்கனிடமே கொடுத்தார். இதனால் **"சோனாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன்"** என்று புகழப்பட்டார்.
- இவர் காலத்தில் வெளியிட்ட நாணயங் களில் **"சோனாடு கொண்டான்"** என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பிறகு இரண்டாம் ஜடாவர்மன் குலசேகரன் சில காலம் ஆட்சி புரிந்தார்.

## இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1238 - கி.பி.1253)

- இவர் சோழ மன்னன் மூன்றாம் இராஜேந்திரனைத் தோற்கடித்தார்.

## முதலாம் ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் (கி.பி. 1253 - க.பி. 1268)

- இவர் ஈழம், கொங்கு நாடு, வல்லம் மற்றும் சோழ அரசர்களை வெற்றி கொண்டதால் **திரிபுவன சக்கர வர்த்தி** மற்றும் **எம்மண்டலமும் கொண்டருளிய பாண்டியன்** ஆகிய பட்டப் பெயர்களை பெற்றார்.
- இவர் காலத்தில் பாண்டிய அரசு பாண்டியப் பேரரசாக மாறியது.
- இவர் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கும், ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கநாதர் கோயிலுக்கும் பொன் தகட்டால் கூரை வேய்ந்தார்.
- இதனால் பொன்வேய்ந்த பெருமாள் எனும் பட்டம் பெற்றார்.
- இவர் மகாராஜாதிராஜா, ஸ்ரீபரமேஸ்வரன் என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்டார்.

## முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268 - கி.பி.1308)

- இவர் முதலாம் ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியனின் மகனாவார்.
- இவரது ஆட்சியின் போது தான் வெனிஸ் நாட்டுப் பயணி **மார்க்கோ போலோ** தமிழகம் வந்தார்.
- இவர் சேர நாட்டிலுள்ள கொல்லம் என்ற பகுதியை வென்றதால் **"கொல் லம் கொண்ட பாண்டியன்"** என்று பெயர் பெற்றார்.
- இவர் இலங்கையின் மீது படையெடுத்து **சுபகிரி** கோட்டையில் இருந்த பெருஞ்செல்வத்தையும், நினைவுச்

சின்னமான **புத்தரின் பற்களையும்** மதுரைக்கு கொண்டுவந்தார்.

- **இவர் திருநெல்வேலி நெல்லையார் கோயிலின் சுற்றுச்சுவரைக் கட்டினார்.** இவருக்குப் பின் பட்டத்து இளவரசர்களுக்கிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போர் பாண்டிய அரசு மீது முஸ்லீம் அரசர்கள் படையெடுப்பதற்கு வழிவகுத்தது.

## பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி

- முதலாம் மாறவர்மன் குலசேகரனின் மகன்களான சுந்தர பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையில் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் பாண்டிய நாடு பிளவுப்பட்டது.
- சுந்தரபாண்டியன், டெல்லியை ஆண்ட **அலாவுதீன் கில்ஜியின்** உதவியை நாடினார். சுந்தர பாண்டியனின் கோரிக்கையை ஏற்று கி.பி. 1311-ல் அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி **மாலிக்காபூர்** தமிழகத்தின் மீது படையெடுத்து சுந்தர பாண்டியனுக்கு ஆட்சியை மீட்டுத் தந்தார்.
- கில்ஜி மரபினருக்குப்பின் வந்த **துக்ளக் மரபினர்** தங்களின் ஆதிக்கத்தை தென்னிந்தியாவிலும் விரிவுப்படுத்தினார்கள். பாண்டிய பேரரசை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்கள்.
- பின்னர் துக்ளக் மரபினர் வீழ்ச்சி யடைந்த காரணத்தினால் மதுரை சுல் தான்கள் தனியே மதுரையை ஆளத் தொடங்கினார்கள்.
- மதுரையை சுல்தான்களின் எழுச்சி யினால் முழுமையாக பாண்டிய பேரரசு வீழ்ச்சியடைந்தது.

## பாண்டியர் கால ஆட்சி முறை

- பாண்டிய நாடு முழுவதும் பாண்டிய மண்டலம் எனப்பட்டது. மண்டலமானது பல வள நாடுகளாகவும், வளநாடு பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டது.
- மன்னர் தமக்கு உதவியாக **அரையர்கள்** எனப்பட்ட அமைச்சர் களையும், படைத்தளபதியையும் நியமித்துக் கொண்டார்.
- வரியைப் பெறுவதற்கு கணக்குகளை சரிபார்க்கவும் சிறப்பு அதிகாரிகளை பணியமர்த்தினார்.
- அறநிலை, நீர்நிலை, நாணயம், வரித்தண்டல் மற்றும் நீதிவாரியங்கள் என்ற ஐந்து வாரியங்கள், ஒவ்வொரு கிராமத்தையும் நிர்வகித்தன.
- வேளாண்மை மற்றும் வாணிபம் மக்களின் முக்கிய தொழில்களாக இருந்தன. வேளாண்தொழில் செய்வோர் **“பூமி புத்திரர்கள்”** எனப்பட்டனர்.
- அடிமைகள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.
- பாண்டிய நாடு முத்துக்குளிக்கும் தொழிலில் சிறந்து விளங்கியது.
- பாண்டிய நாட்டு முத்துக்கள் வெளிநாட்டு சந்தைகளில் விரும்பி வாங்கப்பட்டன.

- **கொற்கை, தொண்டி** ஆகியன சிறந்த துறைமுகங்களாக விளங்கின.
- திருவாசகம், மாணிக்க வாசகரால் எழுதப்பட்டது. ஆண்டாள் திருப் பாவையும், நம்மாழ்வார் திருப்பல லாண்டையும், வில்லிபுத்தூரார் மகாபாரதத்தையும், அதிவீரராம பாண்டியன் நைடதம் என்னும் நூலையும் எழுதினர். சேயூர் முருகன் உலா மற்றும் இரத்தினகிரி உலா ஆகிய நூல்களை ஸ்ரீகவிராயர் எழுதினார்.
- கோயில் கட்டடக் கலையில் கருவறை, விமானம், பிரகாரம், கோபுரம் ஆகிய கட்டுமானப் பணிகளில் பாண்டியர் களின் கலைப்பாங்கு தனித்துவம் பெற்றது.
- பாண்டியர்கள் ஐம்பதுக்கும் மேற் பட்ட குடைவரைக் கோயில்களை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை, திருச்சிராப்பள்ளி, குன்றக்குடி, சித்தன்னவாசல் ஆகிய வற்றைக் கூறலாம்.
- கோயில்பட்டி, திருப்பத்தூர், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கட்டுமானக் கோயில்கள் பாண்டியர் காலத்தவையாகும்.
- குலசேகர பாண்டியன் என்ற மன்னன் தனது ஆட்சிக்குப்பட்ட இடங்களில் உள்ள எல்லா கோயில்களிலும், அர்த்த மண்டபம், மணி மண்டபம், சன்னதிகள் ஆகியவற்றை கட்டித்தந்துள்ளார்.
- கற்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் கற்றளிகள் எனப்பட்டன. இவை கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற மூன்று முக்கியப் பிரிவு களாகக் கட்டப்பட்டிருந்தன.
- கோபுரங்கள், பிரகாரங்கள், விமானங்கள், கற்ப கிரகங்கள் போன்றவை பாண்டியர் கால கோயில் மற்றும் கட்டடக் கலையின் தனிச்சிறப்புகளாகும்.
- மதுரை மீனாட்சி கோயிலும், ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலும் பாண்டியர் கால கட்டடக்கலையின் மிக உன்னத நிலையினை எடுத்துக்காட்டுகின்றன.
- ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்து சுவரோவியத்தை **சித்தன்னவாசல்** குடைவரையில் காணலாம். அதில் வரையப்பட்டுள்ள தாமரைப் பூக்கள், துள்ளும் மீன்கள், நீராடும் யானைகள் போன்ற ஓவியங்கள் அழகு வாய்ந்தவை.
- பாண்டியரது சிற்பங்கள் கழுகுமலை, திருப்பரங்குன்றம், திருமலைபுரம், நார்த்தாமலை, குன்றக்குடி ஆகிய இடங்களில் காணலாம்.
- பாண்டிய அரண்மனையில் நக்கீரர் முதன்மை தமிழ்ப்புலவராக விளங்கினார். மதுரை மாநகரம் **தமிழ்க் கூடல்** என்று போற்றப்பட்டது.

- பாண்டியர்கள் வடமொழி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் போற்றி வளர்த்தனர்.
- உயர்கல்வி நிறுவனங்கள் **சாலைகள்** என்று அழைக்கப்பட்டன.
- திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னர் மாறவர்மன் அரிகேசரியின் சமகாலத்தவர் ஆவார்.
- தென்காசியை ஆண்டுவந்த பாண்டிய மன்னர் அதி வீரராம பாண்டியன் **நைடதம்** என்ற நூலை இயற்றியுள்ளார்.



# சோழப் பேரரசு

## வரலாற்று ஆதாரங்கள்:

**கல்வெட்டு சான்றுகள்:**

- கல்வெட்டுகள் தமிழ் மற்றும் வட மொழியில் உள்ளன.
- மன்னர்களின் கொடைகள் மற்றும் வீரம் பற்றி கூறுகின்றன.
- முதலாம் பராந்தகனின் உத்திரமேரூர் கல்வெட்டு, முதலாம் ராஜராஜனின் தஞ்சாவூர் கல்வெட்டு, வீர ராஜேந்திரனின் திருக்கூடல், கன்னியாகுமரி கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

### செப்பேட்டுச் சான்றுகள்:

திருவாலாங்காட்டுச் செப்பேடுகள் மற்றும் கரந்தைச் செப்பேடுகள், முதலாம் குலோத் துங்கச் சோழனின் வேடன் செப்பேடுகள் வரலாற்று தகவல்களை தடுக்கின்றன.

### இலக்கியச் சான்றுகள்

சேக்கிழார் – பெரியபுராணம்
ஜெயங்கொண்டார் – கலிங்கத்துபரணி
ஒட்டக்கூத்தர் – மூவருலா
குலோத்துங்கன் – பிள்ளைத்தமிழ்
அமிர்தசாகரன் – யாப்பெருங்கலக்காரிகை
புத்தமித்திரன் – வீரசோழியம் போன்ற நூல்கள் சோழர் வரலாற்றை அறிய உதவுகின்றன.

### சோழப் பேரரசு:

**முற்கால சோழர்கள்:**

- மகாபாரதம், அசோகரின் கல் வெட்டுகள், மெகஸ்தனிஸ் மற்றும் தாலமி ஆகியோரது குறிப்புகள் போன்றவற்றில் சோழர்களைப் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.
- சங்க காலத்தில் சோழர்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகியபகுதிகளை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகரமாக **உறையூர்** விளங்கியது. சோழர்களது இலச்சினையாக 'புலி' உருவம்இடம் பெற்றது.
- முற்காலச் சோழர்களில் கரிகாலச் சோழன் புகழ்பெற்றவர் ஆவார் இவர் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.

- முற்காலச் சோழர்கள் தமது இறுதிக் காலத்தில் உறையூரை மட்டுமே ஆட்சி செய்யுமளவில் சிற்றரசர்காளாயினர்.
- பல்லவர்கள் ஆட்சி வீழ்ச்சியுற்ற போது சோழ அரசு மறுபடியும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

## பிற்கால சோழர்கள்

- பிற்கால சோழ அரசை உருவாக்கியவர் **விஜயாலாயச் சோழன்** ஆவார். இவர் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி கி.பி. 850-ல் அதை சோழ நாட்டின் தலைநகராக்கினார். இதுவே பிற்காலச் சோழர்கள் ஆட்சியமைக்க அடித்தளமாக அமைந்தது.
- பிற்கால சோழ மன்னர்கள் கி.பி.850 முதல் கி.பி. 1279 வரை சுமார் 430 ஆண்டு ஆட்சி பரிந்தனர்.
- பிற்காலத்தில் இச்சோழ மரபினர் தென்னிந்தியாவின் பெரும் பகுதியையும், இலங்கை, கடாரம் (சுமத்ரா, மலேசிய பகுதிகள்) ஆகியப் பகுதிகளையம் வென்றதால், இவர்கள் **பேரரசு சோழர்கள்** எனப்பட்டனர்.
- விஜயாலய சோழனின் மகன் **முதலாம் ஆதித்த சோழன்** (கி.பி. 871-907) கடைசி பல்லவ மன்னன் **அபராஜிதனை** தோற்கடித்து தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினார். மேலும் கொங்கு நாட்டையும் தனது இராஜ்ஜியத்துடன் இணைத்துக் கொண்டார்.

## முதலாம் பராந்தகன் (கி.பி. 907 - கி.பி. 955)

- உத்திரமேரூர் கல்வெட்டுகள் இவரைப் பற்றிய நிறைய தகவல்களைத் தருகின்றன.
- ஆதித்த சோழனின் மகன் முதலாம் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, அதன் தலைநகரான மதுரையை வென்றதால் **"மதுரையும் ஈழமும் கொண்டான்"** என்ற பட்டம் பெற்றார்.
- இவர் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலுக்கு பொன்னால் கூறை வேய்ந்தார். இதனால் **'பொன்வேய்ந்த சோழன்'** என்று அழைக்கப்பட்டார்.
- புகழ்பெற்ற தக்கோலம் போரில் இராஷ்டிர கூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணனிடம் தோற்று, கி.பி. 955-ல் மரணமடைந்தார்.
- முதலாம் பராந்தகனுக் பிறகு கண்டராதித்தியன் (கி.பி. 949-957), அரிஞ்சயன் (கி.பி. 956-857), இரண்டாம் பராந்தகன் எனப்பட்ட சுந்தரசோழன் (கி.பி. 956 - 973), ஆதித்தன் (கி.பி.956 - 966) மற்றும் உத்தமசோழன் (கி.பி.965 -985) ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

## பட்டப்பெயர்கள்

- மதுரை கொண்டான், மதுரையும் ஈழமும் கொண்டான், பொன்வேய்ந்த சோழன்.

## முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி. 985 - கி.பி. 1014):

- திருவாலாங்காடு செப்பேடுகள் இவரைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. இவர் சோழர் குலத்தின் வலிமை மிக்க மன்னராவார்.
- இவர் இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தாவை வென்று அனுராத புரத்தையும் இலங்கையின் வட பகுதியையும் கைபற்றினார்.
- புலனருவா நகரைப் புதிய தலை நகராக்கினார். அங்கு ஒரு சிவன் கோயிலையும் கட்டினார்.
- முந்நீர் பழந்தீவுகள் எனப்பட்ட ம ாலத் தீவுகளையும் வென்றார், இவர் காலத்தில் சோழப்பேரரசின் பரப்பு தென்னிந்தியாவையும் கடந்து பரந்து விரிந்திருந்தது.
- இவர் சேரமன்னன் பாஸ்கரவர்மனை காந்தளூர் சாலை (திருவனந்தபுரம்) என்னுமிடத்தில் வென்றார்.
- இவர் கல்யாணியை ஆண்ட சத்ய சரயாவிடமிருந்து வேங்கியைக் கைப்பற்றி சக்திவர்மனுக்கு அளித்தார்.
- இவர் தமது மகள் குந்தவையை சக்திவர்மனின் (கீழை / வெங்கி சாளுக்கியர்) சகோதரர் விமலாதித்தனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.
- கங்கவாடி, தடிகைபாடி, நொளம்பாடி ஆகிய மைசூரின் பகுதிகளையும், ரெய்ச்சூர் தோஆப் பகுதியையும் வென்றார்.
- இவர் தமது ஆட்சிக் காலத்தில் நில அளவை முறையை அறிமுகப் படுத்தினார்.
- இவர் நாகப்பட்டினத்தில் புத்த மடாலயம் கட்ட அனுமதியளித்ததோடு, ஆணை மங்கலம் எனும் கிராமத்தையும் புத்த மடாலயத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.
- இவர் சைவ சமயத்தைப் பின்பற்றினார். இவரது காலத்தில் தான் தேவாரம் தொகுக்கப்பட்டது.
- இவர் கி.பி.1010-ஆம் ஆண்டு தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினார்.
- இவர் கி.பி.1014-ல் இயற்கை எய்தினார்.

## முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1014 - கி.பி. 1044):

- இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழனைப் பற்றி திருவாலங்காடு செப்பேடுகள் மற்றும் கரந்தை செப்பேடுகள் பல தகவல் களைத் தருகின்றன.
- இவர் இடைதுறைநாடு (ரெய்ச்சூர் தோஆப்) வனவாசி (கம்பர் தலைநகர்), கொள்ளிப்பாக்கை (ஹைராாத் பகுதி), மண்ணைக்கடக்கம் (மால்கெட்) ஆகிய இடங்களை வென்றார்.
- ஈழமண்டலம் எனப்பட்ட இலங்கை முழுவதையும் கைப்பற்றினார்.
- பாண்டியர், சேரர். மேலைச்சாளுக்கியர் ஆகியோரையும் தோற்கடித்தார்.

- ஸ்ரீவிஜயம், கடாரம், மலேசியா தீபகற்பம் மற்றும் நிக்கோபார் தீவுகளைச் சார்ந்த பகுதிகள் ஆகிய இடங்களை, கடல் கடந்து போரிட்டு வென்றது இவரது மிகச்சிறந்த செயலாகும்.
- இராஜேந்திரன் காலத்தில் சோழப் பேரரசானது புகழின் உச்சநிலையை எய்தியது.
- இவர் வங்காள அரசன் முதலாம் மகிபாலனைத் தோற்கடித்து கங்கை யிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகிலுள்ள **சோழகங்கம்** என்ற ஏரியில் கலந்தார்.
- முதலாம் இராஜேந்திரன் தமது வட இந்திய படையெடுப்பின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் **கங்கை கொண்ட சோழபுரம்** என்ற நகரை நிர்மாணித்தார். அங்கு ராஜேஸ்வர ஆலயத்தையும் எழுப்பினார்.
- இவர் தலைநகரை தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினார்.
- இவர் தமது மகள் **அம்மங்கா தேவியை** வெங்கியைச் சேர்ந்த சாளுக்கிய இளவரசன் இராஜ ராஜனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

## பட்டப் பெயர்கள்

- மும்முடிச் சோழன், அருண்மொழி, இராஜகேசரி, காந்தளூர் சாலை கலமருந்தருளியவன், ஜெயங் கொண்டான் மற்றும் சிவபாத சேகரன், கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், முடிகொண்டான், பண்டித சோழன், உத்தம சோழன்.

## முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1120 - கி.பி.1170)

- குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், விக்கிரம சோழன் உலா ஆகிய நூல்கள் குலோத்துங்கனின் நிர்வாகம், இராணுவ வெற்றிகள் பற்றி விளக்குகின்றன.
- முதலாம் குலோத்துங்க சோழன் அம்மங்காதேவியின்மகனாவார்.
- இவர் வெங்கியை ஆண்ட சாளுக்கிய மரபைச் சேர்ந்தவர். பின்னர் சோழ நாட்டுக்கு மன்னரானார்.
- இவர் சோழ நாட்டுடன் வெங்கியை இணைத்து, சாளுக்கிய சோழமரபைத் தோற்றுவித்தார்.
- மேலைச் சாளுக்கிய மன்னர் விக்கிர மாதித்தனை தோற்கடித்து கலிங்கத்தைக் கைப்பற்றினார்.
- இவர் காலத்தில் இலங்கை சோழப் பேரரசிலிருந்து விடுதலை பெற்றது.
- ஸ்ரீவிஜயம் என்ற நாட்டுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்ததால் கி.பி. 1077-ல் அங்கு வணிகக் குழுவினரையும் அனுப்பி வைத்தார்.
- இவர் சீன அரசவைக்கு தூதுவரை அனுப்பினார்.
- இவர் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சுங்க வரி உட்பட பலவிதமான வரிகளை நீக்கியதால், சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பட்டப் பெயரைப் பெற்றார்.
- சோழப் பேரரசு இவர் காலத்தில் புத்துயிர் பெற்றது. இவர் ஒட்டக்கூத்தர்,

சேக்கிழார், கம்பர், புகழேந்தி ஆகிய புலவர்களை ஆதரித்தார்.

### பட்டப் பெயர்கள்

- சுங்கம் தவிர்த்த சோழன், நிலமளந்த பெருமாள், திருநீற்றுச் சோழன்.

### மூன்றாம் குலோத்துங்க சோழன்

- இரண்டாம் குலோத்துங்கன் **கிருமிகண்ட சோழன்** என்று அழைக்கப்பட்டார்.
- சோழநாட்டை ஆண்ட கடைசி சிறந்த அரசன் **மூன்றாம் குலோத்துங்கன்** ஆவார். இவர் கி.பி. 1205-ல் மதுரையைக் கைப்பற்றி **"சோழபாண்டியன்"** என்று பட்டம் சூட்டிக் கொண்டார்.
- சோழ மன்னன் மூன்றாம் இராஜேந்திரன் (கி.பி. 1246 - 1279) காலத்தில் சோழப் பேரரசு சிதைவுறத் தொடங்கியது.
- காடவராயன் போன்ற குறுகிய மன்னர்கள் எழுச்சி, பாண்டிய நாட்டு எழுச்சி ஆகியவை சோழ அரசை நிலைகுலையச் செய்தது.
- பாண்டிய மன்னன் இரண்டாம் ஜடாவர்ம சுந்தரப்பாண்டியன் சோழ நாட்டின் கடைசி அரசனான **மூன்றாம் இராஜேந்திரனை** வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினார். அத்துடன் சோழப்பேரரசு முடிவுக்கு வந்தது.

### பட்டப் பெயர்கள்

- யானை மேல் துஞ்சிய சோழன் - இராஜாதித்தியன் - இரண்டாம் பராந்தகன்

### சோழ ஆட்சி முறை

- சோழர்களின் நிர்வாகம் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு கூறுகிறது.
- சோழப் பேரரசு 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாகாணங்கள் மண்டலங்கள் என்றும் அதன் தலைவர்கள் ஆளுநர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- சோழநாட்டின் நிர்வாக அடிப்படை அலகு **'ஊர்'** என்பதாகும். பல ஊர்கள் சேர்ந்தவை **வளநாடு** என்றும், பல வளநாடுகள் சேர்ந்தது **மண்டலம்** என்றும், மண்டலங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்ததாக **சோழநாடு** விளங்கியது.
- கிராமங்கள் சோழர் நிர்வாகத்தின் கடைசி அங்கமாக விளங்கின.
- **கிராம சுயாட்சி** என்பது சோழர் நிர்வாகத்தின் ஒரு சிறப்பு அம்சமாகும்.
- பெருந்தனம், சிறுதனம் என்று அழைக்கப்பட்ட அதிகார வர்க்கம் ஆட்சிக்கு பொறுப்பு வகித்தன.
- சோழ அரசின் முக்கிய வருவாய் நிலவரியாகும். இது விளைச்சலில் ஆறில் ஒரு பங்காக (1/6) இருந்தது.
- நிலவருவாய்த்துறை **புறவு வரித்திணைக் களம்** என்று அழைக்கப் பட்டது.
- சோழர்களின் கப்பற்படை தென்னிந்தியாவிலேயே வலிமை மிக்கதாக இருந்தது. இதனால் வங்காளவிரிகுடா **சோழர்களின் ஏரிபோல** விளங்கியது.

- **"நாடு"** என்பது சோழர்களின் நிர்வாகத்தில்ஒருமுக்கியப்பிரிவுஆகும். இதன் தலைவர்கள் **நாட்டார்கள்** என்று அழைக்கப்பட்டனர்.
- முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சேர்ந்த உத்திரமேரூர் கல்வெட்டு, கிராம நிர்வாகத்தைப் பற்றியும் **குடவோலை** முறையைப் பற்றியும் விரிவாக விளக்குகிறது.
- கிராம நிர்வாகத்தை கிராம சபை என்ற நிர்வாகக் குழு கவனித்து வந்தது. கிராம சபை உறுப்பினர்கள் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- கிராம குடியிருப்பு பகுதிகள் **"ஊர் நத்தம்"** என்றும், பிராமணர்கள் குடியிருந்தபகுதி**சதுர்வேதிமங்கலம்** என்றும் அழைக்கப்பட்டன.
- கிராம நிர்வாகத்தினை வாரியங்களின் துணையுடன் கிராம நிர்வாகக் குழுக்கள் சிறப்பாக செய்தன. இவ்வாரியத்தின் உறுப்பினர்கள் **வாரியப் பெருமக்கள்** என்று அழைக்கப்பட்டனர்.
- ஏரி வாரியம், தோட்ட வாரியம், பஞ்ச வாரியம், பொன் வாரியம், புறவு வரி வாரியம் ஆகியவை குறிப்பிடத் தகுந்தன ஆகும்.
- வாரிய எண்ணிக்கையும், உறுப்பினர் எண்ணிக்கையும் கிராமங்களுக்கேற்ப மாறுப்பட்டது.
- சோழர்களின் கிராம நிர்வாகத்தில் மிகவும் சிறந்த அம்சமாகக் **குடவோலை** முறை கருதப்படுகிறது.
- நிர்வாக வசதிக்காக ஒவ்வொரு கிராமமும் 30 பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பிரதிநிதி குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### சமுதாய நிலை

- சமுதாயம் வர்ணாசிரமக் கொள்கையின் அடிப்படையில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- கரிகாலன் காலத்தில் **வலங்கை, இடங்கை** ஆகிய சமுதாயப் பிரிவுகள் இருந்தன. வலங்கை பிரிவில் 98 சாதிகளும், இடங்கை பிரிவில் 98 சாதிகளும் இருந்தன.
- அடிமை முறை மற்றும் அடிமை வியாபாரம் பற்றி கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- யானைப்படை, குதிரைப்படை, காலாட் படை, கப்பற்படை ஆகிய பிரிவுகளைக் கொண்ட நிலையான படையை பெற்றிருந்தனர்.
- அரசரின் **தனிப்படை கைக்கோளப் பெரும்படை** எனப்பட்டது அரசரைப்பாதுகாக்கும் சிறப்புக் காவல் வீரர்களுக்கு வேலைக்காரர் எனப்பட்டனர்.

- இராணுவ முகாம்கள் **கடங்கள்** என்று அழைக்கப்பட்டன.
- அரசி **செம்பியன் மகாதேவியும், குந்தவை அரசியும்** கோயில்களின் காப்பளராக விளங்கினர்.
- பெண்கள் **“சிறுபாடு”** என்னும் சிறுசேமிப்பு பழக்கத்தை மேற் கொண்டிருந்தனர்.
- மகாபலிபுரம், காவிரி பூம்பட்டினம், சேலையூர், கொற்கை ஆகிய சோழத் துறைமுகங்கள் மூலம் அயல்நாட்டு வாணிபம் நடைபெற்றது.
- யானைகள், ஏலக்காய், பருத்தி மற்றும் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. **அரேபிய குதிரைகள்** இறக்குமதி செய்யப்பட்டன.
- சோழஅரசர்கள்பொன்,வெள்ளி,செப்பு நாணயங்களை வெளியிட்டனர்.
- **தேவதாசி முறை** சோழர் காலத்தில் தான் தோன்றி வளர்ந்தது.
- திராவிடப்பாணி கட்டடக்கலை சோழர் காலத்தில் ஏற்றம் பெற்றது.
- ஆரம்ப காலத்தில் சோழர்கள் செங்கற்கோயில்களையும் பிற்காலத்தில் கற்கோயில்களையும் கட்டினர்
- சோழர்காலக் கோயில்களின் தனிச் சிறப்பு அதன் விமானமாகும்.
- இராஜராஜசோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயில், **தமிழகத்திலேயே மிக அகலமான மற்றும் உயரமான விமானம்** கொண்ட கோயிலாகும்.
- **முதலாம் குலோத்துங்கன், கும்ப கோணத்தில் சூரியக் கடவுளுக்காக ஒரு கோயிலைக் கட்டினார். தென்னிந்திய வரலாற்றில் சூரியனுக்காக கட்டப்பட்ட முதல் கோயில் இதுவாகும்.**
- இரண்டாம் இராஜராஜன் தராசுரத்தில் ஜராவதீஸ்வரர் கோயிலைக் கட்டினார்.
- விஜயாலயன், நார்த்தாமலையில் (புதுக் கோடை மாவட்டம்) சோழீஸ்வரம் என்ற கோயிலைக் கட்டினார். இக்கோயில் முற்கால சோழர்களின் கட்டடக் கலைக்கு ஒரு நல்ல உதாரண மாகும்.
- சோழர்கால ஓவியக் கலை வளர்ச்சிக்கு முதலாம் இராஜராஜனும் ராஜேந்திரனும் அதிக பங்காற்றினர்.
- சோழர்களது சுவரோவியங்களை தஞ்சாவூர், திருமயம், காஞ்சி கைலாசநாதர் கோயில், நார்த்தா மலை ஆகிய இடங்களில் காணலாம்.
- சோழர் காலத்தில் இசைக்கலை நன்கு வளர்ச்சியற்றது. இசையில் 23 பண்கள் உபயோகிக்கப்பட்டன.
- இன்றைய கர்நாடக இசைக்கு சோழர்காலத்தில்தான் அடித்தளமிடப் பட்டது. இதே நாட்களில்தான் பரத நாட்டியம் என்னும் ஆடற்கலையும் தோன்றியது.

- சோழர்காலத்தில்கதகளி, பரதநாட்டியம் ஆகிய இருவகை நடனங்கள் போற்றி மதிக்கப்பட்டன.
- சிவ பெருமானே கரனவகை நடனத்திற்கு உதாரண நாயகராகக் கருதப்பட்டார்.
- நடராஜபெருமானின் கரன வகை நடனத்திற்கு உதாரண நாயகராக் கருதப்பட்டார்.
- நடராஜப்பெருமானின் நாட்டியக் கோல சிலைகள் சிதம்பரம் நடராஜர் கோயிலும், கும்பகோணம் சாரங்கபாணி கோயிலும் காணப்படுகின்றன.
- தஞ்சையிலுள்ள **பிரகதீஸ்வரர் கோயிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள கோயிலும்** சோழர்கால கலாச்சார நினைவுச் சின்னங்களாக யுனெஸ்கோ நிறுவனத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.



# மதுரை சுல்தானியம்

மதுரை சுல்தானியம் அல்லது மாபார் சுல்தானியம், பதினான்காம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்ட ஒரு சிற்றரசாகும்.

- பாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைந்தப் பின் நடைபெற்ற இஸ்லாமிய படையெடுப்புகளால் தோன்றிய இந்த சுல்தானியம், பின்னர் விஜயநகரப் பேரரசின் படையெடுப்புகளால் அழிக்கப் பட்டது.
- இதுவே தமிழகத்தில் தொடர்ச்சியாக ஆட்சிபுரிந்த ஒரே இஸ்லாமிய அரசு ஆகும்.
- **மாலிக்காபூர்** தென்னிந்தியாவின் மீது படையெடுத்து, இராமேஸ்வரம் வரை வந்து வெற்றி கண்டார். இதற்கு பின்பு **குஸ்ருகான்** கி.பி. 1318-ல்பாண்டியர் அரசின் மீது படையெடுத்தான்.
- பின்னர் கியாசுதீன் துக்ளக்கின் மகன் **உலூக்கான்** என்பவன் கி.பி. 1323-ல் **பராக்கிராம பாண்டியனைத்** தோற்கடித்து மதுரையை டெல்லி சுல்தானியத்தின் பகுதியாக அறிவித்தான்.
- பாண்டியநாடு, **மாபார்** என்ற பெயருடன் டெல்லி சுல்தானியத்தின் ஐந்து தென்னிந்திய பிரதேசங்களில் (மாபார், தேவகிரி, டிலிங்க், கம்பிலி, துவாரசமுத்திரம்) ஒன்றாகிறது. இதுவே மதுரை சுல்தானியம் என அழைக்கப்பட்டது.
- 1325-ம் ஆண்டு உலூக் கான் **முகமது பின் துக்ளக்** என்ற பெயருடன் டெல்லி சுல்தானாக முடிசூடினார்.
- டெல்லி சுல்தான் முகமது பின் துக்ளக் கி.பி. 1327-ல் மதுரையில் ஆளுநராக **சையது ஜலாலுதின் அஷன் ஷா** என்பவரை நியமித்தார்.
- 1335-ல் முகமது பின் துக்ளக்கிற்கு எதிராக ஏற்பட்ட கலகத்தில், அஷன்ஷா தன்னை சுதந்திர மன்னராக அறிவித்துக் கொண்டார்.
- இவ்வாறாக **1335-ல் மதுரையின் தல் சுல்தான் என்ற பெருமையுடன் ஜலாலுதீன் அஷன் ஷா ஆட்சி**செய்ய ஆரம்பித்தார்.

- ஜலாலுதின் மகளை மொராக்கோ நாட்டின் வரலாற்றாளர் **இபின் பதூதா** மணந்திருந்தார்.
- 1340-ஆம் ஆண்டு ஜலாலுதீன் அவருடைய பிரபு (சிற்றரசர்) ஒருவரால் கொலை செய்யப்பட்டார்.
- அஷன் ஷாவை தொடர்ந்து அலாவுத்தீன் உதாஜி, சுல்தான் குத்புதீன், கியாசுதீன் என பல சுல் தான்கள் ஆட்சி செய்தனர்.
- கி.பி. 1371-ல் விஜய நகரப் பேரரசின் தளபதி குமார கம்பணன், மதுரை சுல்தான் பக்ருதீன்முபாராக் ஷாவைத் தோற்கடித்து மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தான்.
- குமார கம்பணரின் மனைவி **கங்காதேவி** எழுதிய **மதுராவிஜயம்** என்ற நூலில் இப்படையெடுப்பு விவரிக்கப்பட்டுள்ளது.
- பின்பு திறமையற்ற ஆட்சியாளர்களின் ஆட்சியால் மதுரை சுல்தானியம் வீழ்ச்சி அடைந்தது.
- மதுரையின் கடைசி சுல்தானான **சிக்கந்தர் ஷாவை கி.பி.1378-ல் இரண்டாம் புக்கர் என்ற விஜய நகர மன்னர் வென்றார்.**
- இதன் மூலம் மதுரை சுல்தானியத்தின் ஆட்சி முடிவுற்றது. மதுரை விஜயநகர் பேரரசின் கீழ் வந்தது.

# ஐரோப்பியர்கள் வருகை

- இந்தியா பண்டைக்காலம் தொட்டே மேலை நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. இத்தொடர்பு அலெக்ஸாண்டர் வருகையில் மேலும் வலுவடைந்தது. அயல்நாட்டினர் முக்கியமாக இரண்டு வழிகள் மூலம் இந்தியாவிற்குள் நுழைய இயலும். ஒன்று மிகப்பிரபலமான வடமேற்கு எல்லையிலுள்ள தரைவழி மற்றொன்று கடல்வழி.
- இடைக்காலத்தில் ஐரோப்பா, இந்தியா மற்றும் தென் கிழக்கு ஆசியா ஆகியவற்றிற்கு இடையே வாணிபம் பல்வேறு வழித்தடங்களில் நடைபெற்றது. அவற்றில் மூன்று வழித்தடங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவையாவன : ஆபகானிஸ்தான், மத்திய ஆசியா வரையிலும் : பாரசீகம் (ஈரான்) மற்றும் சிரியா வழியாக மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள அலெக்ஸாண்டிரியா வரையிலும் : அரபிக்கடல், பாரசீக வளைகுடா மற்றும் செங்கடல் வழியாக கடல் மார்க்கம் ஆகிய மூன்று முக்கிய வழித்தடங்கள் வழியாக வியாபாரம் நடை பெற்றது.
- பட்டுவழித்தடம் (Silk route) என்றழைக்கப்பட்ட முதல் வழித்தடத்தை கி.பி. 1453 ம் ஆண்டு ஆட்டோமானியதுருக்கியர்கள் காண்ஸ்டாண்டி நோபிள் (இஸ்தான்புல்) நகரத்தை கைப்பற்றி வாணிபம் நடைபெறாமல் தடை விதித்தனர். அரேபியர்கள் படையெடுப்பின் விளைவாக மற்ற இரண்டு வழித்தடங்களும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் தடைப்பட்டன.
- ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் வாணிபம் கொள்ளை லாபம் தரக்கூடியதாகவே அமைந்திருந்தது.
- குறிப்பாக இந்தியப் பொருட்களான பட்டு, மிளகு மற்றும் இஞ்சி போன்ற நறுமணப்பொருட்கள், மஸ்லின் கைத்தறி ஆடைகளுக்கு ஐரோப்பிய நாடுகளில், நல்ல தேவை காணப்பட்டது. இந்தியாவிலிருந்து மிளகு, மிளகாய், பட்டை, இஞ்சி, தேங்காய், சர்க்கரை, சாயப்பொருட்கள் போன்றவை ஐரோப்பிய நாடுகளுக்கு

ஏற்றுமதியாயின. இந்த இரு பகுதிகளுக்குமான வாணிபத்தில், ஆசிய பகுதி வாணிபத்தை அரேபிய வியாபாரிகள் மற்றும் மாலுமிகளும், மத்தியதரைக்கடல் மற்றும் ஐரோப்பிய பகுதி வாணிபத்தை இத்தாலியினர் கொண்டாடி வியாபாரம் செய்து வந்தனர். இவர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலை வாணிபத்தில் கலந்து கொள்ள அனுமதிக்க வில்லை.


- ❖ கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றப்பட்டதாலும், மற்றவர்களின் வியாபார தனியுரிமையினாலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் வியாபாரிகளும் இந்தியா மற்றும் இந்தோனேசியாவில் உள்ள வாசனைப்பொருட்கள் தீவுகளுக்கும் புதிய மற்றும் பாதுகாப்பான கடல்வழியை கண்டறிய முதலில் முயன்றனர். மேலும் இதன்மூலம் அரேபிய, வெனிடியர்களின் வியாபார தனியுரிமையை உடைத்து, துருக்கியர்களின் எதிர்ப்பை மீறி, கிழக்கு பகுதியுடன் நேரடி, வாணிபத் தொடர்பை ஏற்படுத்த விரும்பினர்.
- ❖ இதற்காக முதன்முதலில் புவியியல் கண்டுபிடிப்பு கடல்வழி கண்டறியவும் இறங்கியவர்கள் போர்ச்சுக்கீசியர்கள் மற்றும் ஸ்பெயின் நாட்டவர்கள். கி.பி. 1487 - ம் ஆண்டு போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த **பார்த்தலோமியோ டயஸ்** என்பவர் முதன் முதலில் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையை வந்தடைந்தார். அச்சமயத்தில் அங்கு புயல் அதிகமாக வீசியதால் ஆப்பிரிக்காவின் தென் கோடி முனைக்கு "புயல் முனை" (Cyclone Point) என்று பெயரிட்டார். இதனை கடந்து சென்றால் புதிய பகுதிகளை காணலாம் என நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இதனால் புயல்முனை "நன்னம்பிக்கை முனை" (Cape of Good hope) என அழைக்கப்பட்டது.
- ❖ அதே போல் கி.பி. 1492ல் ஸ்பெயினைச் சேர்ந்த கொலம்பஸ் இந்தியாவை அடைய திட்டமிட்டு அதற்கு பதிலாக அமெரிக்காவில் கரை இறங்கினார். பிறகு கி.பி. 1498ல் போர்ச்சுக்கலைச் சேர்ந்த வாஸ்கோடகாமா இந்தியாவை கடல்வழி மூலம் முதன்முதலாக அடைந்தார்.
- ❖ போர்ச்சுகலை தொடர்ந்து டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோர் இந்தியாவிற்கு வந்து, பல வியாபாரக்கிடங்குகளை அமைத்து வாணிபத்தை வளர்த்தனர்.

- இறுதியில் அந்த நாடுகளுக்குள் ஏற்பட்ட வியாபாரப் போட்டியில் இங்கிலாந்து மற்ற நாடுகளை விரட்டியடித்து தனது வாணிபத்தை நிலையாக்கியதுடன் தன் ஆட்சியையும் நிலை நாட்டியது.

**i. வாஸ்கோடகாமா**

**(Vasco-da-cama 1498):**

- கி.பி. 1487 ல் பார்த்தலோமியோ டயஸ் மேற்கொண்ட பயணத்தை தொடர்ந்து, போர்ச்சுக்கீசிய மாலுமியான வாஸ்கோடகாமா




**1. போர்ச்சுக்கீசியர்கள்:**

- இந்தியாவிற்கு புதிய கடல்வழி கண்டுபிடிக்கும் முயற்சியில் முதலில் இறங்கியவர்கள் போர்ச்சுக் கீசியர்கள் ஆவர்.
- போர்ச்சுக்கீசிய மன்னரான இளவரசர் ஹென்றி மாலுமிகளுக்கு பயிற்சி அளிக்க அறிவியல் முறையில் அமைந்த பள்ளி ஒன்றை தொடங்கினார். இவருக்கு கடல் பயணத்தின் மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக மாலுமி ஹென்றி என்று போற்றப்பட்டார்.

நன்னம்பிக்கை முனையை கடந்து மே-27 கி.பி. 1498 ஆம் ஆண்டு இந்தியாவின் மேற்கு கடற்கரையில்


Vasco da Gama

அமைந்துள்ள கோழிக்கோடு (கள்ளிக்கோட்டை) வந்தடைந்தார். கோழிக்கூடு **இந்து அரசர் சாமொரின்** அவரை வரவேற்று

உபசரித்தார். முகமதியர்களின் எதிர்ப்பிற்கிடையே சாமரின் அரசருடன் நட்பு கொண்டு, வாணிபம் செய்ய அனுமதி பெற்று, வெற்றிகரமாக திரும்பிச் சென்றார். வாஸ்கோடகாமா தனது பயணத்திற்கு ஆன செலவை விட 60 மடங்குகள் இலாபம் தரக்கூடிய பொருட்கள் நிரம்பிய கப்பலை போர்ச்சுக்கலுக்கு கொண்டு சென்றார் என வரலாறு குறிப்பிடுகின்றது.

❖ மீண்டும் 1501 ல் வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு விஜயம் செய்தார். மூன்று முறை இந்தியாவிற்கு வந்து கள்ளிக்கோட்டை, கொச்சின் கண்ணணூர் ஆகிய இடங்களை போர்ச்சுகீசிய குடியிருப்பு தலங்களாக மாற்றி வியாபாரத்தில் ஈடுபட்டார்.

❖ இந்தியாவிற்கு புது கடல் வழி கண்டறிந்து உலக வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்திய வாஸ்கோடகாமா கேரளாவில் இயற்கை எய்தினார்.

❖ அவரது சமாதி கொச்சின் கோட்டையில் அமைந்துள்ளது.

**ii. பெட்ரோ அல்வரஸ் கேப்ரல் (Pedro Alvarcs Cabral 1500):**

❖ வாஸ்கோடகாமா திரும்பிய பின்னர், பெட்ரோ அல்வரஸ் கேப்ரல் என்பவர் தலைமையில் போர்ச்சுக்கீசியர்கள் 1500 செப்டம்பர் 13 - ல் கள்ளிக்கோட்டையை அடைந்தனர். கேப்ரால், சாமொரின் அரசருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை தோல்வியை தழுவியது. கலவரத்தினால் போர்ச்சுக்கீசியர்கள் பலர் இறந்தனர்.

❖ இவருடைய பயணத்தின் இரண்டு முக்கியத்துவம். ஒன்று, கள்ளிக்கோட்டையை விட நல்ல துறைமுகமான கொச்சியை கண்டறிந்தது. அடுத்தது, இந்திய அரசியல் நிலையை அறிந்து கொண்டது ஆகும்.

**iii. பிரான்ஸிஸ்கோ - டி - அல்மெய்டா (Francisco - de-Almeida (1505-1509):**

❖ கி.பி. 1505ல் போர்ச்சுக்கீசிய இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பித்தது.

❖ கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் அனுப்பப்படுவதும், அவர்களில் பலர் கொல்லப்படுதுமாக இருந்ததால் நிரந்தரமாக ஒரு வைசிராயை (ஆளுநர்) மூன்று வருட காலத்திற்கு இந்தியாவிற்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது.

❖ அதன்படி முதல் வைசிராயாக அனுப்பப்பட்டவரே பிரான்ஸிஸ் கோ-டி-அல்மெய்டா.

❖ ஒரு பெரிய கடற்படையை உருவாக்கினால் அன்றி இந்தியாவில் தம் ஆதிக்கத்தை ஏற்படுத்த முடியாது என எண்ணி, கடற்படையை வலிமை பெறச் செய்து அரபிக் கடலிலும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் போர்ச்சுக் கீசியர்களின் செல்வாக்கை வலிமை பெறச் செய்தார். இதற்காக இவர் அறிமுகப்படுத்திய கொள்கை **நீலநீர்க்கொள்கை (Blue Water Policy)** ஆகும். அரேபிய வியாபாரிகளை வெற்றி கொண்டு போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கத்தை நிலை நாட்டினார்.

❖ கி.பி 1509 ஆம் ஆண்டு அல்மெய்டா எகிப்தியர்களால் கொல்லப்பட்டார்.

### iv. அல்போன்ஸா - டி- அல்புகர்க் (Alfonso - de - Albuguerque 1509-1515):

❖ போர்ச்சுகீசியரின் இரண்டாவது ஆளுநராக அல்புகர்க் 1509 நவம்பர் 5ல் பதவியேற்றார். கோவாவை 1510ல் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினார். இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்தை உண்மையாக நிலை நாட்டியவர் என போற்றப் படுகின்றார்.

❖ 1511ல் மலாக்காவை கைப்பற்றினார். 1513ல் ஏடனைக் கைப்பற்றினார். இந்தோ னேசியாவின் வாசனைப்பொருள் (நறுமண) தீவுகளிலும் மேலாண்மை நிலைநாட்டப்பட்டது. பிறகு 1515 ஆம் ஆண்டு. பாரசீக வளைகுடாவில் ஆர்மஸ் (Ormuz) தீவில் துறைமுகம் ஒன்றை கட்டி மேலாண்மையை நிலை நாட்டினார்.

❖ விஜயநகர பேரரசுடன் தனது உறவை பலப்படுத்திக் கொண்டார். சிறந்த நிர்வாகியான இவர், இந்துக்களோடு சுமூகமான உறவை ஏற்படுத்தினார். பெர்சியாவுடன் ராஜதந்திர உறவு கொண்டார். போர்ச்சுக்கீசியர்கள் இந்தியப் பெண்களை திருமணம் செய்வதை ஊக்குவித்து பல இடங்களில் குடியேற்றத்தை அமைத்தார். கல்வி வளர்ச்சிக்காக பல பள்ளிகளை திறந்தார். இவருடைய கொள்கைகளில் காணப்பட்ட குறைபாடு என்னவென்றால் முகமதியர்களை வெறுப்புடன் நடத்தி செல்வாக்கை இழந்தார். 1515 -டிசம்பர் 15ல் கோவாவில் இறந்தார்.

❖ **இவர் ஆட்சியில் சதி ஒழிக்கப்பட்டது எனவே வில்லியம்**

**பெண்டிங்கின் முன்னோடி** என அழைக்கப்படுகிறார்.

**v. நினோடா குன்கா**

**(Nino -da-Cunha 1529-38):**

- போர்ச்சுக்கீசியர்களின் தலைமையிடத்தை கி.பி. 1530ல் கொச்சினிலிருந்து கோவாவிற்கு மாற்றினார். கி.பி. 1535 ல் குஜராத் பகதூர்ஷா விடமிருந்து டையூ மற்றும் பஸீன் பகுதிகளை கைப்பற்றினார்.

**vi. போர்ச்சுக்கீசிய ஆட்சியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்:**

- போர்ச்சுக்கீசியர்கள் கி.பி 1559 ல் டாமனை பெற்றனர். கி.பி. 1631 ல் ஷாஜகான் ஆட்சிக்காலத்தில் ஹூக்ளி பகுதியை இழந்தனர்.
- கி.பி. 1661 ல் போர்ச்சுக்கீசியர்கள் தங்கள் குடியிருப்பு பகுதியான பம்பாயை, தங்கள் அரசரின் மகள் கேத்தரின் மற்றும் பிரிட்டிஷ் அரசர் இரண்டாம் சார்லஸ் ஆகியோரின் திருமணத்திற்கு சீதனமாக (வரதட்சணை) வழங்கினார்.
- மார்டின் அல்போன்சா - டி - சௌசா (1542 - 45) உடன் புகழ்பெற்ற புனிதர் பிரான்சிஸ் கோ சேவியர் இந்தியா வந்தார்.
- இறுதியாக ஏறக்குறைய அனைத்து பகுதிகளையும் இழந்தனர். மராத்தியரிடம் கி.பி. 1739ல் சால்செட் மற்றும் பஸீன் பகுதிகளை இழந்தனர். இந்தியாவில் கோவா, டையூ மற்றும் டாமன் ஆகிய பகுதிகளே கி.பி. 1961 வரை போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கத்தில் இருந்தனர்.
- போர்ச்சுக்கீசியர்கள் மற்றும் சூரத் வியாபாரிகளின் எதிர்ப்பினால் தான் முதலில் முகலாய பேரரசர் ஜஹாங்கீர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் தூதர் கேப்டன் ஹாக்கின்ஸிற்கு அனுமதி மறுத்தார்.
- போர்ச்சுக்கீசியர்கள் மட்டும் இந்தியாவுடன் நூறு ஆண்டுகள் வாணிபம் மேற்கொண்டனர். பிரேசிலை கண்டறிந்தவர்கள் போர்ச்சுக்கீசியர்கள் ஆவார்.
- பெட்ரோ அல்வரஸ் கேப்ரலுக்கு பிறகு வந்த எஸ்டவாட கோவா, கொச்சின், கண்ணனூர் ஆகிய இடங்களில் பண்டக சாலைகளை நிறுவி விட்டுச் சென்றார்.

**vii. போர்ச்சுக்கீசியரின் குடியிருப்பு அல்லது வாணிபத் தலங்கள்:**

- கோழிக்கோடு, கொச்சின், கண்ணனூர், கோவா, டையூ, டாமன், பம்பாய், சால்செட், பஸீன், ஹூக்ளி, மதராஸிக்கு அருகில் சாந்தோம், ஆர்மஸ், மலாக்கா.

**viii.போர்ச்சுக்கீசியர்களின் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து ஒழியக் காரணங்கள்:**

- அல்போன்சா - டி - அல்புகர்க்குக்குப் பின் வந்தவர்கள் திறமையற்ற வைசிராய்கள்.
- ஊழல் நிறைந்த நிர்வாகம்.
- மத வெறி - கிறிஸ்தவ மத மாற்றம்.
- ஒழுக்கக்குறைவு.
- பிரேசில் கண்டுபிடிப்பு போர்ச்சுக்கீசியர்களை மேற்குப்பக்கம் திருப்பியது.
- முஸ்லீம்களிடையே பகைமை.
- பம்பாய் இழக்கப்படுதல் - முக்கிய துறைமுகம் இழப்பு.
- பிற ஐரோப்பிய நாடுகள் வருகை - டச்சு, பிரிட்டிஷ், பிரெஞ்சு வாணிபப்போட்டியில் ஆதிக்கத்தை நிலை நாட்ட முடியவில்லை.
- இந்திய சுதேச அரசர்களின் எதிர்ப்பு.
- 1580 ல் ஸ்பெயினுடன் போர்ச்சுகல் இணைப்பு - இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட ஸ்பானிய அலுவலர்கள் திறமையற்றவர்கள் அவர்கள் தங்கள் நாட்டின் நலனிற்காக போர்ச்சுக்கீசியரை புறக்கணித்தனர்.
- போர்ச்சுக்கீசியர்கள், விஜயநகரப் பேரரசுடன் மட்டுமே உறவு கொண்டிருந்தனர். ஆனால் விஜயநகர பேரரசு கி.பி. 1565-ம் ஆண்டு நடைபெற்ற தலைக்கோட்டை போருக்குப்பிறகு வீழ்ச்சியுறத் தொடங்கியது. இது போர்ச்சுக்கீசியர்களின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.
- இந்தியாவுடன் கடல் வாணிபத்தில் முதன் முதலில் கலந்து கொண்ட போர்ச்சுக்கீசியர்கள் 1961 வரை இந்தியாவுடன் தொடர்பு கொண்டனர். இந்தியாவில் ஒரு பேரரசை ஏற்படுத்த முடியாமல் போயிற்று. இறுதியாக இந்தியப் பிரதமர் நேருவின் சமாதானக் கொள்கைக்கு ஒரு சோதனையாகவே காணப்பட்டனர். சுமூகமாக அவர்களை அனுப்ப எடுத்த முயற்சி தோல்வியடைந்து போரில் முடிந்தது.
- 1961 டிசம்பர் 18ல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நாள் போரில் கோவா, டையூ, டாமன் ஆகிய எஞ்சியிருந்த போர்ச்சுக்கீசிய பகுதிகள் இந்திய யூனியனில் இணைக்கப்பட்டது. சுமார் 480 ஆண்டுகாலம் இந்தியாவோடு போர்ச்சுக் கீசியர்கள் தொடர்பு கொண்டு இந்திய வாணிப வளர்ச்சியிலும், கலை, கல்வி, பண்பாடு வளர்ச்சியிலும் பங்கெடுத்துக் கொண்டனர்.

**இந்தியாவுக்கு வருகை புரிந்த முக்கிய போர்ச்சுக்கீசியர்கள் :**

- வாஸ்கோடகாமா -1948
- அல்வரேஸ் கேட்ரல் - 1500
- லோபோ சோரஸ் - 1503
- பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா -செப்டம்பர் 1505
- அல்புகர்க்கு - 1509
- ஜோடி கேஸ்ட்ரோ - 1545

## 2. டச்சுக்காரர்கள் (The Dutch):

- ஐரோப்பாவில் ஹாலந்து மற்றும் நெதர்லாந்து நாட்டவர்களே டச்சுக்காரர்கள் என்றழைக்கப் பட்டனர்.
- ஸ்பெயின் நாட்டிடமிருந்து அதிக உயிர் சேதத்துடன் விடுதலை அடைந்த டச்சுக்காரர்கள் தங்களுடைய வியாபாரத்தை சுதந்திரமாக விரிவாக்க விழைந்தார்கள்.
- டச்சுப் பாராளுமன்றம் கி.பி. 1602 மார்ச் 20ல் நெதர்லாந்தின் ஐக்கிய கிழக்கிந்திய வாணிகக் குழுவிற்கு கிழக்கில் 21 ஆண்டுகளுக்கு வாணிபம் செய்வதற்கு சாசனம் ஒன்றை அளித்தது.
- அந்த சாசனம் போரிடுதல், சமாதானம் செய்தல், நாடுகளைப் பிடித்தல், கோட்டைகளைக் கட்டுதல் ஆகியவைகளைச் செய்வதற்கு கம்பெனிக்கு அதிகாரம் அளித்தது.
- அந்த கம்பெனி ஏராளமான பணத்தை பெற்றிருந்தது மட்டுமின்றி அரசரோடு மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது. அவர்கள் இந்தியாவை விட நறுமண தீவுகள் மீதும் மலேயாவிலும் கவனம் செலுத்தினர்.
- டச்சுக்காரர்களின் முதல் வாணிபத்தலம் மசூலிப்பட்டிணம் (1605) பிறகு கி.பி. 1610ல் புலிகட் (பழவேற்காடு) என்னுமிடத்தில் வாணிபத்தலத்தை நிறுவி, அங்கு கோட்டை ஒன்றை கட்டினர். கி.பி. 1690 வரை அதுவே டச்சுக்காரர் களின் தலைமையிடமாக திகழ்ந்தது.
- பிறகு நாகப்பட்டினம் தலைமையிடமாக மாறியது. கி.பி. 1658ல் போர்ச்சுக்கீசியரிடமிருந்து இலங்கையை கைப்பற்றினர்.

### i. அம்பாய்னா படுகொலை:

- கி.பி. 1623ல் அம்பாய்னா உள்ள நாடு என்னுமிடத்தில் வியாபார போட்டிக்காக டச்சுக்காரர்கள் ஆங்கிலேய வியாபாரிகளை படுகொலை செய்ததே அம்பாய்னா படுகொலை என்றழைக்கப படுகின்றது.
- வாசனைப் பொருட்கள் மட்டுமல்லாது பட்டுத்துணிகள்,

அரிசி, கஞ்சா, கருநீலம், நெசவு பொருட்கள் முதலியவற்றை ஆங்கிலேயர்களுடன் போட்டி போட முடியாமல் இறுதியில் 1759ல் நடைபெற்ற **பெதேரா போருக்கு** (Battle of Bedera) பிறகு தோல்வியுற்று வாணிப மையங்களை ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறினர்.

**ii. பண்டக சாலைகள் (Factories)**

**ஆண்டுகள் வரிசைப்படி:**

- ஜகார்த்தா (1619) அம்பாயினா (- 1623)
- மலாக்கா (1641) சூரத் (1616) காரைக்கால்(1645)
- பிம்லி பட்டிணம் (1641), சிஞ்சுரா (1653)(வங்காளம்)
- காஸிம்பஜார் (1658), பாராநாகூர் (1658)
- பாலாசூர் (1658),கொச்சி (1663)
- பாட்னா, நாகப்பட்டினம், மசூலிப்பட்டிணம் (1605)
- பழவேற்காடு (1610), புரோச், காம்பே, அகமதாபாத் (குஜராத்) ஆக்ரா (உத்திரப்பிரதேசம்)

**iii.இந்தியாவில் டச்சுக்காரர்களின் தோல்விக்கான காரணங்கள்:**

- டச்சுக்காரர்களுடன் தொடர்பு கொண்ட சில ஐரோப்பியப் போர்களின் விளைவாக அவர்களின் வலிமை இந்தியாவில் குன்றியது.
- தாய்நாட்டில் ஏற்பட்ட மோசமான பொருளாதாரநிலை.
- ஆங்கிலேய பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்க போட்டி.
- டச்சுக்காரர்களின் கடற்படை வலுவின்மை.
- டச்சுக்காரர்கள் வாணிபத்தில் சிறந்து விளங்கினர். ஆனால் மக்களுக்கு நலம் தரும் ஆட்சி அமைக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கவில்லை.

**3. ஆங்கிலேயர்கள்**

**(The English East India Company)**

- போர்ச்சுகல், ஹாலந்து போன்ற ஐரோப்பிய நாட்டினர்.
- இந்தியாவுடன் வியாபாரம் செய்து பொருளீட்டுவதைக் கண்ட ஆங்கிலேயர்களும் இந்தியாவுடன் வாணிபம் செய்து பொருளீட்ட ஆர்வம் கொண்டனர்.
- கி.பி. 1588 ஆம் ஆண்டு உலகின் மிகப்பெரிய ஸ்பானிய போர்க்கப்பலான **ஸ்பானிய ஆர்மடாவை** (உடைக்க முடியாத கப்பற்படை) வென்றது.

ஊக்கத்தையும் துணிவையும் கொடுத்தது. கி.பி. 1599 ல் 100 வியாபாரிகள் ஒன்று சேர்ந்து (Merchant of Adventurers)

ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியை உருவாக்கி மேயோ பிரபுவின் தலைமையில் கிழக்கில் வாணிபம் செய்யும் உரிமையை தரும்படி **முதலாம் எலிசபெத்** அரசியிடம் முறையிட்டனர்.

- ❖ அதை பரிசீலித்த அரசி 1600 - டிசம்பர் 31-ஆம் தேதி கிழக்கில் 15 ஆண்டுகளுக்கு வியாபாரம் செய்யும் உரிமையை கிழக்கிந்திய கம்பெனிக்கு கொடுக்கும் ஒரு பட்டயத்தை வழங்கினார்.
- ❖ ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஏற்படுத்தப்படுவதற்கு முன்பே **ஜான் மில்டென்ஹால்** என்ற ஆங்கிலேய வியாபாரி கி.பி. 1599ல் நிலப்பகுதி வழியாக வியாபாரம் செய்ய அனுமதி கேட்டு இந்தியா வந்தடைந்தார்.
- ❖ கி.பி. 1608 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் கொடுத்த வியாபாரம் செய்யக் கோரிய அனுமதி கடிதத்துடன் **கேப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ்** என்ற ஆங்கிலேய தூதர், சூரத்தில் பண்டக சாலைகள் ஏற்படுத்த அனுமதி கேட்டு முகலாய பேரரசர் ஜஹாங்கீர் அரசவைக்கு வருகை புரிந்தார். போர்ச்சுக்கீசியர்கள் மற்றும் சூரத் வியாபாரிகளின் எதிர்ப்பால் ஜஹாங்கீர் ஹாக்கின்ஸிற்கு அனுமதி மறுத்தார். இந்த சூழ்நிலையில் கி.பி. 1611ல் ஆங்கிலேயர்கள் **மசூலிப்பட்டிணத்தில் தங்களது முதல் வாணிபத் தலத்தை நிறுவினர்.**
- ❖ கி.பி. 1612ல் பிரிட்டிஷ் தளபதி பெஸ்ட் என்பவர் போர்ச்சுக்கீசியர்களை சூரத்திற்கு அருகிலுள்ள ஸ்வாலி என்ற இடத்தில் தோற்கடித்தார். இதனால் ஆங்கிலேயரின் புகழ் உயர்ந்தது. முகலாயப் பேரரசர் ஜஹாங்கீருடன் பேசி வாணிப உரிமைகளைப் பெறும் பொருட்டு அரசர் முதலாம் ஜேம்ஸ், **சர் தாமஸ் ரோ** என்பவரை தூதராக அனுப்பினார். அவர் 1615ல் இந்தியா வந்து சேர்ந்தார். பல வணிக உரிமைகளை பெற்றார். இதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர்கள் சூரத், ஆக்ரா,புரோச் அகமதாபாத் ஆகிய இடங்களில் பண்டக சாலைகளை ஏற்படுத்தினர்.
- ❖ கி.பி. 1639 ம் ஆண்டு பிரான்சிஸ் டே என்ற ஆங்கிலேய அதிகாரி, விஜயநகர பேரரசின் பிரதி நிதியான சந்திரகிரி அரசரிடமிருந்து ஒரு நிலப்பகுதியை விலைக்கு வாங்கி தற்கால சென்னையை நிறுவினார். இங்கு கி.பி. 1640ல் புனித ஜார்ஜ்

கோட்டை கட்டப்பட்டது. கி.பி. 1668ல் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி பம்பாய் பகுதியை இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸிடமிருந்து ஆண்டுக்கு 10 பவுண்டுகளுக்கு வாடகைக்கு பெற்றது.

❖ கி.பி. 1633ஆம் ஆண்டு கிழக்கிந்தியாவில் ஒரிசாவில் முதல் வாணிபத்தலம் ஏற்படுத்தப்பட்டது. கி.பி 1690ல் ஜாப் சார்னாக் என்ற ஆங்கிலேய அதிகாரி சுதநிதி பகுதியில் ஒரு வாணிபத்தலத்தை ஏற்படுத்தினார்.

❖ 1698ல் மூன்று ஜமீன்தாரி கிராமங்களை **சுதநிதி, கோவிந்த் பூர், களிகத்தா** கோட்டை இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியத்தின் நினைவாக தற்போதைய கல்கத்தா பகுதியில் நிறுவினார். இந்த மூன்று கிராமங்கள் தான் கல்கத்தா நகரமாக உருவெடுத்தது. சர் சார்லஸ் அயர் என்பவர் கோட்டையின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

❖ கி.பி. 1717ல் ஜான் சர்மன் (John Surman) என்ற ஆங்கிலேய அதிகாரி முகலாய பேரரசர் பரூக்ஷியரிடமிருந்து வியாபார சலுகைகள் சாசனங்களை (Royal firman) பெற்றார். இந்த சாசனம், இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் மாக்ன கார்ட்டா (மகாசாசனம்) (Magna Carta) என்று அழைக்கப்படுகின்றது

**ஆங்கிலேயரின் வாணிபத்தலங்கள்:**

❖ மசூலிப்பட்டினம், மதராஸ், கொல்கத்தா, ஹூக்ளி (1651) சூரத், அகமதாபாத், புரோச், ஆக்ரா.

**4. டேனியர்கள்:**

❖ டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்கள் டேனியர்கள் என்றழைக்கப்பட்டனர்.

❖ மற்ற ஐரோப்பியர்கள் இந்தியாவில் வியாபாரம் செய்ததைக்கண்டு கி.பி. 1620ல் இவர்கள் இந்தியா வந்தனர்.

❖ கி.பி. 1620- ம் ஆண்டு தரங்கம் பாடியிலும் கி.பி 1676 - ம் ஆண்டு வங்காளத்திலுள்ள சீராம்பூர் என்ற இடத்திலும் வாணிப மையங்களை ஏற்படுத்தினர்.

❖ **சீராம்பூர் டேனியர்களின் தலைமையிடமாக திகழ்ந்தது.** வாணிபம் செய்வதை விட கிறிஸ்துவ மதத்தை பரப்புவது இவர்களின் தலையாய நோக்கமாக இருந்தது.

❖ ஆனால் இவர்களால் நிலையாக இந்தியாவில் காலூன்ற முடியவில்லை. இறுதியாக 1845-ல்

தங்கள் வாணிபத்தலங்களை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறினர்.

**வாணிபத்தலங்கள்:**
தரங்கம்பாடி, சீராம்பூர்

## 5. பிரெஞ்சுக்காரர்கள் (French):

- ❖ இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் கடைசியாக வந்தவர்கள் பிரெஞ்சுக்காரர்கள்.
- ❖ கி.பி 1664-ல் பிரெஞ்சு அரசர் பதினான்காம் லூயி மன்னரின் காலத்தில், அவருடைய நிதி அமைச்சர் கால்பர்ட் என்பவரின் முயற்சியால் தான் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி ஏற்படுத்தப்பட்டது.
- ❖ மற்ற நான்கு கம்பெனிகள் போல் அல்லாமல் இது ஒரு அரசாங்க கம்பெனி ஆகும்.

**இந்தியாவின் முக்கிய பிரெஞ்சு ஆளுநர்கள் :**
- ✓ பிரான்கோயில் மார்டின் (1706 ல் இறந்தார்)
- ✓ செவாலிசர் ஹிபர்ட் (1708 - 1713 ,1715- 1718)
- ✓ லினாயர்(1721-23,1726- 1735)
- ✓ பேனாய்ட்
- ✓ டுமாஷ்
- ✓ டியூப்ளே

**இந்தியாவில் பிரெஞ்சு பண்டக சாலை (Factories):**

- ❖ இந்தியாவில் முதலாவது பிரெஞ்சி பண்டக சாலை கி.பி 1668ல் பிரான்சிஸ் கரோன் என்பவரால் சூரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1672ல் சாந்தோம் பிடிக்கப்பட்டது. கி.பி 1669 ல் மசூலிப்பட்டிணத்திலும், சந்திர நாகூர் என்ற இடத்திலும் பண்டக சாலைகள் அமைக்கப்பட்டது.
- ❖ 1672 ல் கரோன் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டு பிரான்சிஸ் மார்டின் என்பவர் அனுப்பப்பட்டார்.
- ❖ அவர் கி.பி. 1674 ல் பீஜப்பூர் சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்ட வலிக்கொண்டபுரம் ஆளுநர் ஷெர்கான் லோடியிடமிருந்து பாண்டிச்சேரியை பெற்றார். இது பிரெஞ்சுக்காரர்களின் தலைமையிடமாக திகழ்ந்தது. 1740 முதல் ஆங்கில வியாபார கம்பெனிக்கும் பிரெஞ்சு வியாபார கம்பெனிக்கும் இடையே இந்தியாவில் போர் ஏற்பட்டது.
- ❖ கி.பி. 1742ல் டியூப்ளே பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்றார். கர்நாடகப் போர்களின் இறுதியில் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் முடிவடைந்தது.

**இந்தியாவின் முக்கிய பிரெஞ்சு குடியிருப்புகள் :**
- ✓ சூரத் 1667
- ✓ மசூலிப்பட்டினம் - 1669
- ✓ பாண்டிச்சேரி - 1673
- ✓ சந்திர நாகூர்
- ✓ பலசூர்
- ✓ காசிம் பஜார்

**மற்ற பண்டக சாலைகள்:**

- ❖ சந்திரநாகூர் (1690), மாஹி (1725) காரைக்கால் (1739) மொரிசியஸ் மற்றும் ரியூனியன் தீவுகள்

| கம்பெனி | நிறுவப்பட்ட ஆண்டு | தலைமையகம் |
|---|---|---|
| **போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனி** | கி.பி. 1498 | கொச்சின் (1510), கோவா (1530 - 1961) |
| **டச்சு கிழக்கிந்திய கம்பெனி** | கி.பி. 1602 | கிழக்குக் கடற்கரை மண்டலம் புலிகட் (1690) வங்காளம் - ஹீக்ளி (1655) |
| **ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி** | கி.பி. 1600 | மேற்கு கடற்கரை : சூரத் (1608 - 87) பம்பாய் (1687 லிருந்து)<br>கிழக்குக் கடற்கரை (கோரமண்டல்)<br>வங்காளம் : மதராஸின் கீழ் (1700 வரை) கல்கத்தா (1700 லிருந்து) |
| **டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி** | கி.பி. 1616 | சீராம்பூர் (வங்காளம்) (1676-1845) |
| **பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி** | கி.பி. 1664 | சூரத் (1668 - 1673) பாண்டிச்சேரி (1673 - 1754) |

# பிற்கால மொகலாயர்கள்

- பாபரால் உருவாக்கப்பட்டு அக்பரால் நிலைநிறுத்தப்பட்ட மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி ஔரங்கசீப் ஆட்சியிலிருந்து ஆரம்பிக்கின்றது. ஔரங்கசீப் ஆட்சிக்கு வந்த பிறகு பலவீனமான பிற்கால மொகலாய அரசர்களால் நாதிர்ஷா மற்றும் அகமது ஷா அப்தலியின் படையெடுப்புகளாலும் மொகலாய சாம்ராஜ்ஜியம் முழுவதுமாக அழிவுற்றது.
- கி.பி 1707ல் ஔரங்கசீப்பின் மறைவிற்கு பிறகு அவரது புலவர்களான காபூலின் கவர்னர் முகமது முசாம், குஜராத்தின் கவர்னரான அசாம், பீஜப்பூரின் கவர்னர் காம் பக்ஷ் ஆகியோர்களிடேயே ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில், 65 வயதான காபூலின் கவர்னரான முகமது முசாம் வெற்றி பெற்று முகலாய பேரரசர் ஆனார்.

### i. முதலாம் பகதூர் ஷா (கி.பி 1707 - 12):

- இயற்பெயர் - முகமது முசாம் ஆகும். முதலாம் ஷா ஆலம் என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டு அரியணையில் அமர்ந்தார். மற்ற இந்து அரசர்களிடம் அமைதிப் போக்கை பின்பற்றியதால் ஷா பேகபெர் என்று அழைக்கப்படுகிறார்.
- ஔரங்கசீப் அறிமுகப்படுத்திய குறுகிய மனப்பான்மையுள்ள திட்டங்களை கைவிட்டார். ஆம்பாரைச் சேர்ந்த ராஜா ஜெய் சிங் மற்றும் மார்வாரைச் சேர்ந்த அஜித்சிங் ஆகியோரிடம் அவர்களது பகுதிகள் திரும்ப ஒப்படைத்தார்.
- மராத்திய அரசர் சாம்பாஜியின் மகனான இளவரசர் ஷாகுவை சிறையிலிருந்து விடுதலை செய்தார்.
- மராத்தியர்களுக்கு தக்காணத்தில் சர்தேஷ்முகியை வழங்கினார். ஆனால் சௌத் வழங்கப்படவில்லை ஷாகுவை மராத்திய அரசராக அங்கீகரிக்க வில்லை.
- இவருடைய ஆட்சிக் காலத்தில் தான் மராத்திய இளவரசர் ஷாகுவிற்கு, சாம்பாஜியின் சகோதரன் ராஜாராமின் மனைவியான தாராபாய்க்குமிடையே 1707 ல் கெட்போர் என்ற உள்நாட்டுப் போர் நடைபெற்றது. இதில் ஷாகு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. சீக்கியர்களை சமாதானப் படுத்த சீக்கிய குருவான குரு கோவிந்த சிங்கிற்கு உயர்

மான்சப் வழங்கினார். ஆனால் கோவிந்த சிங் இறப்பிற்கு பிறகு பந்தா பகதூர் தலைமையில் அடக்கி அவர்களுடைய பகுதியை கட்டுக்குள் கொண்டு வந்தார். கி.பி. 1711ல் பந்தா பகதூரை தோற்கடித்து, குரு கோவிந்த சிங்கால் கட்டப்பட்ட லோகார் கோட்டையை கைப்பற்றினார். ஆனால் 1712ல் சீக்கியர்கள் மீண்டும் லோகார் கோட்டையை போரிட்டு மீட்டுக் கொண்டனர். ஈந்தேலா அரசர் சித்தார்சல் உடன் நட்புறவு மேற்கொண்டார்.

❖ பந்தேல அரசர் சித்தர்சல் மற்றும் ஜத் அரசர் சுரமான் உடன் இணைந்து **பந்தா பகதூரை** எதிர்த்தார். கி.பி. 1712 ல் அவரது இறப்பு மேலும் ஒரு உள்நாட்டுப் போருக்கு காரணமாக அமைந்தது.

### ii. ஜகந்தர் ஷா (கி.பி. 1712 -13):

❖ முதலாம் பகதூர் ஷாவின் மறைவிற்குப் பிறகு அவரின் மூன்று வாரிசுக்களுக்கிடையே ஏற்ற வாரிசுரிமைப் போரில், மிகவும் திறமை குறைந்த **ஜகந்தர் ஷா** வெற்றி பெற்றார்.

❖ இதற்கு காரணம் ஜூல் பிகர்கான் என்ற பலம் வாய்ந்த முகலாய அமைச்சரின் உதவியே ஆகும்.

❖ ஜில்பிகர்கான் உண்மையான அமைச்சராக திகழ்ந்தார் முகலாய அரசவையிலுள்ள ஈரானி அமைப்பின் தலைவரே ஜீல்பிகர்கான் ஆவார். மேலும் லான் குன்வர் என்ற ஜகர்தர் ஷாவின் மனைவியின் ஆதிக்கம் ஆட்சியிலும் இருந்தது. ஔரங்கசீப்பின் குறுகிய நோக்க திட்டங்கள் கைவிடப்பட்டன. **முஸ்லீம்கள் அல்லாதோர் மீது விதிக்கப்பட்ட ஜிஸியா வரியை ஜூல்பிகர்கான் நீக்கினார்.**

**ஜிஸியா**

❖ **கி.பி 1206ல் குத்புதீன் ஐபக்கால் அறிமுகப்படுத்தப்பட்டது.** ஆனால் 1564ல் அக்பரால் நீக்கப்பட்டது. 1678 ல் ஔரங்கசீப்பால் மறு அறிமுகப்படுத்தபட்டது.

❖ ஆம்பரின் ஜெய்சிங், மிர்சா ராஜா சவாய் என்ற பட்டத்துடன் மால்வா பகுதி கவர்னராக நியமிக்கப்பட்டார்.

❖ மார்வாரின் அஜித்சிங் மாகாராஜா பட்டத்துடன் குஜராத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

❖ ஜீல்பிகர்கான் தனது தக்காண அதிகாரி தௌலத்கான் மூலம் மராத்திய அரசர் ஷாகுவுடன் கி.பி. 1711ல் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து, மராத்தியர்களுக்கு தக்காணத்தின் **சௌத்** மற்றும் **சர்தேஷ்முகியை** வழங்கினார் ஜீல்பிகர்கான், சீக்கியர்கள் மற்றும் பந்தா பகதுருடன் விரோதப் போக்கு

நடவடிக்கையை மேற்கொண்டார். ஆனால் ஜத்தின் சுரமான் மற்றும் பந்தேலாவின் சத்தார்சல் அரசர்களுடன் நட்புறவையே மேற்கொண்டார். **இஜாரா அல்லது வருவாய் - விவசாயம் முறையை அறிமுகப்படுத்தினார்.** அதாவது தோடார்மால் நிலவரி முறைப்படி குறிப்பிட்ட அளவில் வரி வசூல் செய்யாமல் அரசாங்கம் வருவாய் - விவசாயிகள் மற்றும் இடைத்தரகர் களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டது.

- ❖ அவர்கள் விவசாயிகளிடம் விரும்பும் அளவிற்கு ஏராளமாக வரி வசூல் செய்ததால், விவசாயிகள் அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்டனர்.
- ❖ இது ஜுல்பிகர்கானின் ஆட்சியின் மிகப்பெரிய குறைபாடாகும். இறுதியில் அரசவைப் பெரியோர்களின் சதியினால் **ஜகந்தர்ஷா,** ஜீல்பிகர் கானை தனது வாஜிர் பதவியிலிருந்து நீக்கினார்.
- ❖ ஜனவரி 1713ல் **ஜகந்தர் ஷா** தனது ஒன்று விட்ட சகோதரர் பருக்சியாரால் ஆக்ராவில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

### iii. பருக்சியர் (கி.பி 1713 - 19) (Farruk Siyar):

- ❖ பருக்சியர் அரியணையில் அமர உதவியவர்கள் வரலாற்றில் "அரசனை உருவாக்குபவர்கள்" என்றழைக்கப்பட்ட சையது சகோதாரர்கள் (அப்துல்லா கான் சையது மற்றும் ஹூசைன் அலி கான் பராஷா சையது) ஆவர். பருக்சியர், அப்துல்லாகானை தனது வாஜிர் ஆகவும், ஹூசைன் அலியை தனது மீர் பக்ஷி ஆகவும் நியமித்துக் கொண்டார். நிஜாம் -உல் - முல்க் என்றழைக்கப்பட்ட **சின் குலிக்கான்** தக்காணத்தின் மாகாண கவர்னராக நியமிக்கப்பட்டார்.
- ❖ சையது சகோதர்களே ஆட்சியில் அதிகாரம் செலுத்தி வந்தனர். சையது சகோதர்களுக்கும், அரசருக்கும் மோதல் ஏற்படவே கி.பி. 1719ல் அரசரை பதவியிலிருந்து இறக்கி, கொன்றனர் சையது சகோதரர்கள்.

### iv. ரஃபி உத் -தாராஸ்ஜத் (Rafi -Ud-Darasjat)

### (28- பிப்ரவரி - 4 ஜூன் கி.பி. 1719):

- ❖ மொகலாய பேரரசர்களில் மிகக்குறுகிய காலம் ஆட்சி செய்த இவர் காசநோயினால் இறந்தார்.

### v. ரஃபி - உத் - தௌலா

### (ஜூன் 6 - செப்டம்பர் 17 கி.பி. 1719):

- ❖ இரண்டாம் ஷாஜகான் என்றழைக்கப்பட்ட இவர் வயிற்றுப்போக்கு நோயினால் பலவீனமடைந்து இறந்தார்.

### vi. முகமது - ஷா (கி.பி - 1719 - 1748):

- ❖ சையது சகோதர்களினால் கி.பி. 1719ல் 18 வயது நிரம்பிய முகமது ஷா முகலாய பேரரசராக அரியணையில் அமர்ந்தார்.
- ❖ உண்மையான அமைச்சர்களாக சையது சகோதரர்கள் திகழ்ந்தனர்.
- ❖ மற்ற இந்திய அரசர்களான மார்வாரின் அஜித்சிங், ஆம்பரின் ஜெய் சிங், சுரமான் மற்றும் ஜத் பிரிவினர் ஆகியோரிடையே நல்லுறவு கொண்டனர் சையது சகோதரர்கள் மராத்திய அரசர் ஷாகுவுடன் உடன் படிக்கை செய்து கொண்டு சுயராஜ்யம் மற்றும் தக்காணத்தின் ஆறு மாகாணங்களின் சௌத் மற்றும் சர்தேஷ்முகியை வழங்கினர். கி.பி 1720ல் ஹூசைன் அலி கொல்லப்பட்டார்.
- ❖ அப்துல்லா கான் அக்ரா அருகில் தோற்கடிக்கப்பட்டார். இதற்குப் பிறகு முகமது ஷா சுதந்திரமாக ஆட்சி செய்ய ஆரம்பித்தார்.
- ❖ கி.பி. 1722 நிஜாம் -உல் - முல்க்கை தனது வாஜிர் ஆக முகமது ஷா நியமித்துக்கொண்டார்.
- ❖ முகமது ஷாவின் ஆட்சியில் அதிருப்தி கொண்டு பதவியிலிருந்து விலகி நிஜாம் -உல்-முல்க் கி.பி. 1724ல் ஹைதராபாத் சுதேச அரசை ஏற்படுத்தினார். இதே போல் முர்சித் குலிகான் என்ற முகலாய அதிகாரி வங்காள சுதேச அரசை ஏற்படுத்தினார்.
- ❖ முகமது ஷாவின் ஆட்சிக்காலத்தில் **பாரசீகத்தின் நெப்போலியனான நாதிர்ஷா** சாதத்கானின் உதவியால் இந்தியாவிற்கு படையெடுத்து வந்தார்.
- ❖ முகமது ஷாவின் படைகளுக்கும், நாதிர் ஷா வின் படைகளுக்குமிடையே பிப்ரவரி 13, 1739ல் கர்னல் (ஹரியானா) என்னுமிடத்தில் நடைபெற்ற கர்னல் போரில் நாதிர்ஷா வெற்றி பெற்று, முகமது ஷாவை கைதியாக்கி டெல்லியை சூரையாடினார். அரச கருவூலம் காலியாக்கப்பட்டது. கொள்ளையடிக்கப்பட்ட தோராய பணமதிப்பு 70 கோடிகளாகும்.
- ❖ இதைக் கொண்டு தனது நாட்டில் நாதிர்ஷா மூன்று ஆண்டுகள் வரி வசூலிக்காமல் நல்லாட்சி செய்தார் என்று கூறப்படுகிறது.
- ❖ சிந்து நதிக்கு மேற்கே உள்ள இந்திய பகுதியை நாதிர்ஷாவிடம் இழந்தது முகலாயப் பேரரசு இந்தியாவிலிருந்து செல்லும் போது நாதிர்ஷா, புகழ்பெற்ற **கோஹினூர் வைரத்தையும்,** முகலாய பேரரசர் ஷாஜகானின் **மயில் சிம்மாசனத்தையும்** எடுத்துச் சென்றார்.

- இதனால் முகலாய பேரரசின் நிதி நிலைமை மேலும் சீர் கெட்டது. மகிழ்ச்சியை விரும்பும் அரசரான முகமது ஷா ஆண்டு தோறும் இந்துக்களின் பண்டிகையான ஹோலியை கொண்டாடினார். இதனால் இவர் முகமது ஷா **ரங்கீலா** என அழைக்கப்பட்டார். கி.பி. 1748ல் முகமது ஷா இறந்தார்.

**vii. அகமது ஷா (கி.பி. 1748 - 1754):**

- முகமது ஷாவின் இறப்பிற்கு பிறகு அகமது ஷா முகலாய பேரரசராக பதவியேற்றுக்கொண்டார்.
- இவருடைய காலத்தில் தான் நாதிர் ஷாவின் படைத்தளபதியும், ஆப்கானிய அரசரான **அமகது ஷா அப்தலி கி.பி. 1748 ல் முதன்முறையாக இந்தியாவிற்கு படையெடுத்து வந்தார்.**
- முகலாயர்கள் பஞ்சாப் மற்றும் முல்தான் பகுதிகளை இழந்தனர். தனது வாஜிர் இமாத் - உல் - முல்க் என்பவரால் குருடாக்கப்பட்டார்.

**viii.இரண்டாம் ஆலம்கீர் (1754 - 59):**

- அகமது ஷாவின் வாஜிரான இமாத் - உல் - முல்கின் துணை கொண்டு அரியணையில் அமர்ந்தார்.
- ஜுன் 23ல் ஆலம்கீர் IIக்கும் இமாத் - உல் - முல்க்கிற்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின இறுதியில் கி.பி. 1759ல் இரண்டாம் ஆலம்கீர் தனது வாஜிரான இமாத் - உல் - முல்க் ஆல் கொல்லப்பட்டார்.
- இரண்டாம் ஆலம்கீரின் ஆட்சி காலத்தில் தான் கி.பி. 1757ல் வங்காளத்தில் பிளாசி என்னுமிடத்தில் சிராஜ் - உத் - தௌலாவின் வங்காள இராணுவத்தினருக்கும், இராபர்ட் கிளைவின் பிரிட்டிஷ் இராணுவத்தினருக்குமிடையே நடைபெற்ற பிளாசிப் போரில் இராபர்ட் கிளைவ் வெற்றி பெற்றார்.
- அகமது ஷா அப்தலி டெல்லியை கைப்பற்றினார் 1750ல் மராத்தியர்களும் டெல்லியின் சில பகுதிகளை சூரையாடினர்.

**இரண்டாம் ஷா ஆலம் 1759 -1806**

- இயற்பெயர் - அலிகாகர் ஆகும். இவர் கி.பி. 1759ல் முகலாய பேரரசாக பதவியேற்றார்.
- பதவியேற்ற ஆரம்பத்தில் தனது வாஜிருக்கு உயிருக்கு பயந்து தலைநகரை விட்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார். இவருடைய காலத்தில் கி.பி 1761ல் பானிபட் (ஹரியானா) என்னுமிடத்தில் ஆப்கானிய அரசர் அகமது ஷா அப்தலிக்கும், மராத்திய படைகளுக்கும் சதாசிவராவ் தலைமையில் பாலாஜி பாஜிராவ்

பேஷ்வா காலத்தில் இடையே மூன்றாவது பானிபட் போர் நடைபெற்றது. கி.பி. 1758ல் மராத்தியர்கள் டெல்லி மற்றும் லாகூரை கைப்பற்றி அகமது ஷா அப்தலியின் மகன் மற்றும் வைசிராயான தைமூர்ஷாவை வெளியேற்றினர். இதற்கு பழிவாங்கவே 1761ல் அகமது ஷா அப்தலி படையெடுத்து வந்தார். இந்த மூன்றாவது பானிபட் போரில் அகமது ஷா அப்தலி வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

- ❖ அக்டோபர் 22, 1764ல் வங்காளத்தில் பக்சார் என்னுமிடத்தில் ஹெக்டர் மன்றோ என்பவர் தலைமையில் பிரிட்டிஷ் படைகள் ஒரு பக்கமும், மூன்று முகலாயப் கூட்டுப் படைகளான டெல்லியில் ஷா ஆலம், அயோத்தியின் சுஜா - உத் - தௌலா மற்றும் வங்காளத்தின் மீர்காசிம் ஆகியவைகளின் கூட்டுப்படைகள் மறுபக்கமும் நின்று போரிடும் பக்சார் போர் இவருடைய காலத்தில் நடைபெற்றதாகும். இப்போரில் பிரிட்டிஷார் அபார வெற்றியடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
- ❖ கி.பி. 1803ல் டெல்லி பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டு இரண்டாம் **ஷா ஆலம் ஆங்கிலேயரிடம் பென்சன்** பெற்ற முதல் முகலாய பேரரசரானார்.

### ix .இரண்டாம் அக்பர் (கி.பி. 1806 - 1837):

- ❖ இரண்டாம் ஷா ஆலத்திற்கு பிறகு இரண்டாம் அக்பர் பெயரளவில் மட்டும் முகலாய அரசராக மதிக்கப்பட்டார்.
- ❖ ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் வேண்டுகோளுக்கிணங்க தனது முகலாய பதவிகள் மற்றும் பட்டங்களை துறந்தார்.
- ❖ இரண்டாம் அக்பர் கி.பி. 1835ல் முகலாய நாணயங்களை புழக்கத்தில் விடுவது தடை செய்யப்பட்டது.
- ❖ இவர் **"ராஜா" என்னும் பட்டத்தை ராம் மோகனுக்கு வழங்கி,** லண்டன் சென்று தனது பென்சன் தொகையை உயர்த்தும் படி வேண்டுமாறு கேட்டுக் கொண்டார்.

### x. இரண்டாம் பகதூர் ஷா (Bahadur Shah 1837 - 62):

- ❖ **கடைசி முகலாயப் பேரரசராக கருதப்பட்டார்.**
- ❖ 1857 பெரும்புரட்சியில் இந்தியாவின் பேரரசராக அறிவிக்கப்பட்டார்.
- ❖ புரட்சி பிரிட்டிஷாரால் அடக்கப்பட்ட பிறகு கி.பி. 1858 ல் ரங்கூன் (பர்மா)

நாடு கடத்தப்பட்டு கி.பி.1862ல் இறந்தார்.

**xi. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்:**

- ஔரங்கசீப்பின் குறுகிய நோக்கமுடைய கொள்கைகள் உதாரணம் ஜிஸியா வரி, இந்து கோவில்கள் பாதிப்பு.
- பலம் இழந்த பிற்கால முகலாயப் பேரரசர்கள்.
- முகலாய அரசவையின் கொள்கைகள்.
- இந்திய அரசர்களுடன் நட்புறவு இல்லாமை.
- முகலாய அமைச்சர்களின் பதவி ஆசைகள்
- வாரிசுரிமைப் போர்கள்
- அந்நியப் படையெடுப்புகள் (நாதிர்ஷா மற்றும் அகமது ஷா அப்தலி படையெடுப்புகள்)
- மராத்தியர்களின் எழுச்சி.
- மதச்சீர்திருத்த வாதிகளின் தாக்கம்.
- சுதேச பேரரசுக்கள் எழுச்சி (ஹைதராபாத், வங்காளம், அயோத்தி)
- இராணுவ பலமின்மை

# பேஷ்வாக்களின் கீழ் மராத்தியர்கள்

- தக்காணம் மற்றும் மஹாராஷ்டிரா மலைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மராத்தியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- மராத்தியர்களின் தலை சிறந்த நிர்வாகியாக சத்ரபதி சிவாஜி (முதலாம் சிவாஜி) கி.பி. 1620 - 80 காணப்பட்டார்.
- நிர்வாகத்தில் தனக்கு உதவி செய்ய 8 நபர்களைக்கொண்ட அஷ்டப் பிரதான் என்னும் அமைச்சரவை ஒன்றை உருவாக்கினார்.

அவை,

1. பீஷ்வா (அ) பேஷ்வா - பிரதம அமைச்சர்.
2. மந்திரி- காலமுறை அமைச்சா
3. சச்சிவா- உள்துறை அமைச்சர்.
4. சுமந்த்- வெளியுறவு அமைச்சர்.
5. சேனாதிபதி -இராணுவ அமைச்சர்.
6. அமத்தியா- நிதி அமைச்சர்.
7. பண்டிட்ராவ் - சமயத்தலைவர்
8. நியாயதீஷ்- நீதித்துறை

- மேற்கண்ட 8 அமைச்சர்களின் பேஷ்வா என்னும் பிரதம அமைச்சர் மிக முக்கியமான பதவி ஆகும். சிவாஜியின் மரணத்தை தொடர்ந்து அவரது மூத்த மகன் சாம்பாஜி (கி.பி. 1680 - 89) பொறுப்பேற்றது. ஔரங்கசீப்பிடம் கிளர்ச்சி, கலகம் செய்த அவருடைய மகனான அக்பருக்கு, சாம்பாஜி புகலிடம் அளித்தார்.
- இதனால் கோபமுற்ற ஔரங்கசீப் சாம்பாஜி மீது படையெடுத்தார். கி.பி. 1689ல் சங்கமேஸ்வர் என்னுமிடத்தில் சங்கமேஸ்வர் போர் நடைபெற்றது.
- ஔரங்கசீப் வெற்றிபெற்று பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டாவை கைப்பற்றிய பிறகு சாம்பாஜி மற்றும் அவரது மகனான ஷாகுவை கைது செய்து டெல்லி சிறையிலடைத்தார்.
- சாம்பாஜி சிறையிலே கொல்லப்பட்டார்.
- சாம்பாஜிக்குப்பிறகு அவரது சகோதரரான ராஜாராம் (கி.பி. 1689 - 1750) மராத்திய பேரரசராகப் பொறுப்பேற்றார்.
- கி.பி. 1760 ஆம் ஆண்டு ராஜாராமின் மரணத்தைத் தொடர்ந்து, அவரது மனைவி தாராபாய் தனது சிறுவயது மகனான இரண்டாம் சிவாஜியை

மன்னராக்கி நிர்வாகத்தைத் தானே மேற்கொண்டார்.

- முகலாய மன்னர் ஔரங்கசீப்பின் மரணத்திற்குப் பிறகு முதலாம் பகதூர் ஷா பொறுப்பேற்றார். இவர் சிறையிலிருந்த ஷாகுவை விடுதலை செய்தார்.
- இதனால் சதாரா பகுதியிலிருந்த ஷாகுவிற்கும், கோல்காப்பூரிலிருந்த தாராபாய்க்குமிடையே கி.பி. 1767ல் உள்நாட்டுப்போர் (கெட் போர்) ஏற்பட்டது. பாலாஜி விஸ்வநாத் என்ற கொங்கன் பிராமணரின் துணையால் தாராபாய் தோற்கடிக்கப்பட்டு ஷாகு வெற்றி பெற்றார்.
- எனவே ஷாகு, பாலாஜி விஸ்வநாத்தை தனது பேஷ்வாவாக நியமித்துக் கொண்டார்.
- சிவாஜியின் வழித்தோன்றல்கள் திறமை குறைந்தவர்களாக காணப்பட்டதால் பேஷ்வாக்கள் மராத்திய பேரரசின் ஆட்சியாளரானார்.
- இவர்கள் உண்மையாகவும் திறமையாகவும் ஆட்சி செய்தனர்.

### i. பேஷ்வா பாலாஜி விஸ்வநாத் (கி.பி. 1713 - 1720)

- மராத்திய மன்னர் ஷாகுவின் ஆட்சிக்காலத்தில் பேஷ்வாவாக நியமிக்கப்பட்டார். முகலாய அமைச்சரான ஜீல்பிகர்கானிடம் தக்காணத்தில் சௌத் மற்றும் சர்தேஷ்முகி போன்ற வரிகளை மராத்தியர்கள் வசூலித்துக்கொள்ள முறையிட்டார்.
- சையது சகோதர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டதால், சிவாஜி காலத்திலிருந்த அனைத்து மராத்திய பகுதிகளும் ஷாகுவிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. மற்றும் தக்காணத்தில் 6 மாகாணங்களின் சௌத் மற்றும் சர்தேஷ்முகி ஆகிய வரிகள் வசூலித்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.
- இதற்கு கைமாறுதலாக தக்காணத்தில் மற்ற முகலாய பகுதிகளை பாதுகாக்க ஒப்புக்கொண்டனர்.
- மேலும் கி.பி. 1719ல் முகலாயப் பேரரசர் பருக்சியரை பதவியிலிருந்து இறக்குவதற்கு உதவியாக பாலாஜி விஸ்வநாத் தலைமையில் மராத்தியப்படை சென்று, அவரை பதவியிலிருந்து வெளியேற்றியது.
- சத்ரபதி சிவாஜிக்குப் பிறகு மராத்திய பேரரசின் பெருமையை மீண்டும் புதுப்பித்தார். கி.பி. 1720ல் இவர் மரணமடைந்தார்.

### ii. பேஷ்வா முதலாம் பாஜிராவ் (கி.பி. 1720 - 1740):

- பாலாஜி விஸ்வநாத் மறைவிற்கு பிறகு 20 வயதே நிரம்பிய அவரது மகன்

முதலாம் பாஜிராவ் பேஷ்வாவாகப் பொறுப்பேற்றார். **பேஷ்வாக்களில் தலை சிறந்தவராக போற்றப் படுகின்றார்.**

- சிவாஜிக்குப் பிறகு கொரில்லா போர்முறையில் சிறந்தவராக கருதப்படுகின்றார்.
- மராத்திய பேரரசை வடக்குப் பகுதியில் விரிவுபடுத்த விரும்பினார். இவருடைய ஆட்சி காலத்தில் தான் கெய்க்வர்த்துகள், ஹோல்கர்கள், சிந்தியாக்கள் மற்றும் போன்ஸ்லேக்கள் ஆகிய மராத்திய சர்தார் குடும்பங்கள் ஆதிக்கம் பெற்றன. இவர் முற்போக்கு கொள்கையை கடைப்பிடித்தார்.
- ஹைதராபாத் நிஜாமை அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திடச் செய்தார். போர்ச்சுக்கீசியர் களிடமிருந்து சால்செட், பஸீன், தானா போன்ற இடங்களை கைப்பற்றினார். கி.பி. 1733ல் ஜன்ஜிராவின் சிதிக்களுடன் போரிட்டு விரட்டினார்.
- ஏப்ரல் 1740ல் முதலாம் பாஜிராவ் இறந்தார் இவரது காலத்தில் மராத்தியப் பேரரசு வலிமை மிக்கதாக திகழ்ந்தது.

### iii. பாலாஜி பாஜிராவ் (1740 -1761):

- நானா சாகிப் என்றழைக்கப்பட்ட முதலாம் பாஜிராவின் 18 வயது மகனான பாலாஜி பாஜிராவ் கி.பி. 1740 ல் பேஷ்வாக பொறுப்பேற்றார். மராத்தியர்களின் தலைமையிடத்தை பூனாவிற்கு மாற்றினார். இவருடைய காலத்தில் தான் ஷாகு கி.பி. 1749ல் மரணமடைந்தார். கி.பி. 1757ல் ஒரிசாப்பகுதியை வங்காள நவாப்பிடமிருந்து கைப்பற்றினார்.
- கி.பி. 1760ல் ஹைதராபாத் நிஜாமை உட்கீர் என்னுமிடத்தில் தோற்கடித்தார். தனது உறவினரான சதாசிவராவ் என்பவரின் வழிகாட்டுதலின் பேரில் கி.பி. 1758ல் மராத்திய பேரரசின் பெருமையையும், புகழையும் உச்ச நிலைக்கு கொண்டு சென்றார்.
- பஞ்சாபைக் கைப்பற்றி ஆப்கானிய அரசரான அகமது ஷா அப்தாலியின் மகனும் வைசிராயுமான தைமூர் ஷாவை வெளியேற்றிக் கோட்டையில் மராத்தியக்கொடியை பறக்க விட்டார். கி.பி. 1752ல் முகலாயப் பேரரசர் அகமது ஷாவின் வாஜிராக இமாத் - உல் - முல்க் வர மராத்தியர்கள் உதவினர்.
- தனது மகனான தைமூர் ஷாவை பஞ்சாபை விட்டு வெளியேற்றியதால் கோபமுற்ற ஆப்கானிய அரசரான அகமது ஷா அப்தலி, ரோஹில்கண்டு அரசர் நாஜிப் - உத் தௌலா மற்றும் அயோத்தி நவாப்

சுஜா - உத்தௌலா ஆகியோரின் உதவியோடு இந்தியா மீது படையெடுப்பு மேற்கொண்டார்.

- ❖ மராத்தியப்படையின் பெயரளவில் தலைவராக பேஷ்வாவின் மகனான விஸ்வாஸ்ராவும், உண்மைத் தலைவராக இப்ராஹிம் கான் கார்டி செயல்பட்டார்.
- ❖ இரு படைகளும் ஜனவரி 14, கி.பி. 1761ல் பானிபட் என்னுமிடத்தில் சந்தித்து போரிட்டன. இது வரலாற்றில் மூன்றாவது பானிபட் போர் என்றழைக்கப்படுகின்றது.
- ❖ போரில் கலந்து கொண்ட அனைத்து மராத்தியர்களும் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.
- ❖ இதனையறிந்த பேஷ்வா நானாசாகிப் அதிர்ச்சியுற்று பலவீனமடைந்து நோயுற்று ஜூன் 1761ல் இறந்து போனார்.
- ❖ இந்தப்போர் மராத்தியர்களுக்கு பேரிழப்பை வழங்கி, மராத்தியப் பேரரசு வீழ்ச்சியுறக் காரணமாக இருந்தது.

**iv. நானா சாகிப்பிற்கு பிறகு பேஷ்வாக்கள்:**

- ❖ கி.பி. 1761ல் 17 வயது மாதவராவ் பேஷ்வாவாகப் பொறுப்பேற்றார். இவர் சிறந்த போர்வீரர். ஹைதராபாத் நிஜாமை தோற்கடித்தார்.
- ❖ மைசூரின் ஹைதர் அலியை தம்மிடம் வரி கட்டச் செய்தார்.
- ❖ கி.பி. 1771ல் முகலாயப் பேரரசரான இரண்டாம் ஷா ஆலத்தை கொண்டு வந்து தங்களிடம் பென்சன் பெறும் நபராக்கினார்.
- ❖ வட இந்தியாவை கட்டுக்குள் கொண்டு வந்தார். கி.பி. 1772ல் காச நோயினால் இறந்தார்.
- ❖ பூனாவில் மீண்டும் பேஷ்வா பதவிக்காக வாரிசுரிமைப் போர் நடைபெற தொடங்கியது.
- ❖ பேஷ்வா பாலாஜி பாஜி ராவின் இளைய சகோதரரான ரகுநாத ராவிற்கும், பேஷ்வா மாதவராவினுடைய இளைய சகோதரரான நாராயணராவிற்கும் இடையே மோதல் நடைபெற்றது.
- ❖ கி.பி. 1773ல் நாராயணராவ் கொல்லப்பட்டார். இவருக்குப்பிறகு இவரது மகன் சவாய் மாதவ ராவ் பேஷ்வா ஆனார். இதனால் கோபமுற்ற ரகுநாத ராவ் பிரிட்டிஷாருடன் இணைந்து போரிடவே, அது முதல் ஆங்கிலேய மராத்தியப் போரில் முடிந்தது. இதனால் பூனாவில் சவாய் மாதவராவின் ஆதரவாளர்கள் நானா பட்நாவிஸ் தலைமையிலும், மாதவராவ் தலைமையில் இவரது ஆதரவாளர்களும் மோதலில்

ஈடுபட்டனர். கி.பி. 1795ல் சவாய் மாதவராவ் இறந்தார்.

- மராத்தியர்களில் மராத்திய சர்தார்கள் என்றழைக்கப்பட்ட **பரோடாவைச் சேர்ந்த ஹெய்க்வர்துகள், நாக்பூரைச்சேர்ந்த போன்ஸ்லேக்கள், இந்தூரைச் சேர்ந்த ஹோல்கர்கள்** மற்றும் **குவாலியரைச் சேர்ந்த சிந்தியாக்கள்** ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.
- மேலும் வடபகுதியில் மகாத்ஜி சிந்தியா என்ற மராத்திய அரசர் திறமை வாய்ந்தவராவார். இவர் கி.பி. 1784ல் இரண்டாம் ஷா ஆலத்தை கட்டுப்படுத்தினார். ஐரோப்பிய முறையிலான இராணுவப்படையை கொண்டிருந்தார். இவர் நானாபட்னிஷ் மற்றும் இந்தூர் ஹோல்கர்களையும் எதிர்த்தார். கி.பி. 1794ல் மரணமடைந்தார்.
- சவாய் மாதவராவின் இறப்பிற்கு பிறகு ரகுநாதராவின் மகனும், மிகவும் வலுவிலக்க இரண்டாம் பாஜிராவ் பேஷ்வாவாகப் பொறுப்பேற்றார்.
- வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார். இவரே மராத்தியர்களின் கடைசி பேஷ்வா ஆவார். பிரிட்டிஷார் பேஷ்வா பதவியை ஒழித்தனர்.

**V. மராத்தியர்களின் தோல்விக்கான காரணங்கள்:**

- மராத்தியர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கை மற்றும் கொள்ளை யடித்தல். மராத்தியர்கள் மராத்திய சர்தார்களின் ஆதரவை இழந்தனர்.
- இராஜபுத்திரர்கள், ஜாத்துக்கள் சீக்கியர்கள் மற்றும் மற்ற இந்திய குறுநில அரசர்களை மராத்தியர்கள் வெறுத்து போரிட்டனர்.
- ஒழுக்கக் குறைவு
- பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், வாணிபம் மற்றும் தொழிற்சாலைகளை முன்னேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
- அகமது ஷா அப்தலியின் படையெடுப்பு. மராத்திய இராணுவத்தின் பலவீனமானத்தன்மை.
- திறமையற்ற பேஷ்வாக்கள்
- உள்நாட்டு வாரிசுரிமைப் போர்கள்.
- பேஷ்வாக்களின் கைப்பாவையாக மராத்திய அரசர்கள் மாற்றப்படுதல்.
- அதிக நிலவரி

# சுதேசப் பேரரசுகள்

- ❖ முகலாயப்பேரரசில் அரசாங்கம் பல்வேறு மாகாணங்கள் அல்லது சபாக்களாகப் பிரிக்கப்பட்டு, கவர்னர் அல்லது சுபேதார் மூலம் ஆளப்பட்டு வந்தது.
- ❖ கவர்னர் இல்லாத மாகாணங்களில் இரு வகை அதிகாரிகள் முறையே திவான் - நிதி நிர்வாகம், நிஜாம் - இராணுவ நிர்வாகம் மூலம் ஆட்சி நடத்தப்பட்டது.
- ❖ பதினெட்டாவது நூற்றாண்டில், திறமையற்ற பிற்கால முகலாயர்களின் காலத்தில் அவர்களின் பலவீனத்தைப்பயன்படுத்தி, கவர்னர்களும் மற்றும் முகலாய அதிகாரிகளும் மத்திய முகலாய அரசரிடமிருந்து இணைப்பை துண்டித்து தனிச்சுதந்திர சுதேசப் பேரரசுகளை ஏற்படுத்தினர்.
- ❖ அதில் குறிப்பாக வங்காளம், அயோத்தி மற்றும் ஹைதராபாத் சுதேச பேரரசுகள் "வாரிசு சுதேச அரசுகள்" (Succession States) ஆக முகலாயப் பேரரசிடமிருந்து உருவானவையாகும்.

## 1. வங்காளம்: முர்சித்குலிகான் (1717 -27) (Murshid Quli Khan):

- ❖ வங்காள சுதேசப் பேரரசை ஏற்படுத்தியவர் முர்சித் குலிகான் என்னும் வங்காளத்தின் முகலாய சுபேதார் ஆவார்.
- ❖ இவர் கி.பி. 1700ல் வங்காளத்தின் திவான், பிறகு கி.பி. 1713 ல் நயிப் சுபேதார் (துணை கவர்னர்) மற்றும் கி.பி. 1717ல் சுபேதாராக (கவர்னராக) முகலாயப் பேரரசர் பருக்சியரால் நியமிக்கப்பட்டார். பருக்சியரின் பலவீனத்தைப் பயன்படுத்தி தானாக முயன்று கி.பி. 1717ல் வங்காளத்தின் அரசராக (நவாப்) ஆனார்.
- ❖ மற்றும் கி.பி. 1719ல் ஒரிசாவின் நிர்வாகப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டார்.
- ❖ தனது வங்காள அரசின் தலைநகரை டாக்காவிலிருந்து முர்சிதாபாத்திற்கு மாற்றினார்.
- ❖ வருவாய் விவசாயத்தை (Revenue Farming) அறிமுகம் செய்தார். சீத்தாராம் ரே, உதய நாராயணன்,

குலாம் முகமது, சுஜாத்கான் மற்றும் நஜத்கான் போன்ற ஜமீன்தார்களின் கலகங்களை அடக்கி, அவர்களுக்கு ராம்ஜீவனை வழங்கினார்.

❖ கி.பி. 1727ல் குலிகான் இறந்தார்.

**i. சுஜா -உ-தீன் (1727 - 39) (Shuja - ud - din):**

❖ முர்சித் குலிகான் இறப்பிற்குப் பிறகு அவருடைய மருமகன் சுஜா உதீன் வங்காள நவாப்பாக பொறுப்பேற்றார்.

❖ முகலாயப் பேரரசர் முகமது ஷா ரங்கீலாவினால் பீகாரின் கவர்னராக நியமிக்கப்பட்ட சுஜா - உ -தீன், வங்காளம், பீகார் மற்றும் ஒரிசாவின் நவாப்பாக திகழ்ந்தார்.

❖ கி.பி. 1739ல் மரணமடைந்தார்.

**ii. சர்பாரஜ்கான் (1739 - 40) (Sarfaraz Khan):**

❖ சுஜா - உதீனுக்குப்பிறகு வங்காளத்தின் நவாப்பாக பொறுப்பேற்ற சர்ஃபரஸ்கானை, அலிவர்திகான் என்பவர் கொன்று விட்டு வங்காளத்தின் நவாப்பாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

**iii. அலி வர்திகான் (Alivardikhan 1740 - 56):**

❖ கி.பி. 1740 ல் நடைபெற்ற கரியா போருக்குப்பிறகு அலிவர்திகான், சர்ஃபரஸ்கானை வெற்றி கொண்டு வங்காளத்தின் நவாப்பாக பொறுப்பேற்றார்.

❖ முகலாய பேரரசர் முகமது ஷா ரங்கீலாவிற்கு இலஞ்சம் வழங்கி அவரிடமிருந்து அனுமதி பட்டயம் பெற்றார். ஆங்கிலேயர்கள் கல்கத்தாவிலும், பிரெஞ்சுக்காரர்கள் சந்திரநாகூரிலும் கோட்டைகள் கட்டுவதை தடை செய்தார்.

❖ கி.பி. 1746ல் முகலாய பேரரசருக்கு வரி செலுத்த மறுத்தார்.

❖ கி.பி. 1751ல் மராத்தியர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒரிசாவின் பகுதிகளை இழந்தார். இறுதியில் கி.பி. 1756ல் கொல்லப்பட்டார்.

**iv. சிராஜ் - உத் - தௌலா (Siraj - ud - Daula 1756 - 57):**

❖ அலிவர்திகானுக்குப் பிறகு சிராஜ் - உத் - தௌலா வங்காளத்தின் நவாப்பாக பொறுப்பேற்றார்.

❖ ஆங்கிலேயர்கள் கல்கத்தா பகுதியில் தங்களது வாணிபத்தலங் களை சுற்றி கோட்டைகளை கட்டி பலப்படுத்தக்கூடாது என்று அறிவித்தார்.

❖ ஆனால் அதை ஆங்கிலேயர்கள் பின்பற்ற மறுக்கவே கோபமுற்ற நவாப் ஜூன் 4, 1756ல் காசிம்பஜாரையும், ஜூன் 15, 1756ல்

கல்கத்தா வாணிபத்தலங்களையும் கைப்பற்றி அங்கிருந்த 146 ஆங்கிலேயர்களையும் ஒரு சிறிய அறையில்அடைத்தார்.

- ஆங்கிலேயர் ஹால்வெல்லின் கருத்துப்படி 23 பேர் மட்டுமே பிழைத்ததாகவும், 123 பேர் மூச்சுத்தினறி இறந்தனர் என்கிறார்.
- **ஜூன் 20, 1756ல் நடைபெற்ற இச்சம்பவமே இருட்டறைத்துயரச்சம்பவம் (Black Hole Tragedy or Episode)** என்றழைக்கப்படுகின்றது.
- இதனால் ஆத்திரமடைந்த மதராஸ் கவர்னர் இராபர்ட் கிளைவ் கல்கத்தாவிற்கு விரைந்து சிராஜ் - உத் - தௌலா மீது படையெடுத்தார். இருபடைகளும் **ஜூன் 23, 1757ல் பாகீரதி ஆற்றங்கரையிலுள்ள பிளாசி என்னுமிடத்தில் மோதின.**
- இதற்கு முன்பே வங்காள ராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து சரி செய்து போரில் கலந்து கொள்ளாமல் செய்து விட்டனர் ஆங்கிலேயர்கள்.
- அவர்களில் மீர்ஜாபர் தலைமை ராணுவதளபதி (மீர் பக்ஷி), மானிக்சந்த் - கல்கத்தா அமின்சந்த் - சீக்கிய செல்வந்த வியாபாரி, ஜகத் செத் - வங்காள செல்வந்தர் மற்றும் ராய் துர்லாப், காதிம்கான் போன்றவர்கள் ஆங்கிலேயருடன் ரகசியமாக லஞ்சம் பெற்று உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் ஆவர்.
- வரலாற்று சிறப்பு மிக்க இப்போர் பிளாசிப் போர் என்றழைக்கப்படுகிறது.
- வங்காள நவாப் தோற்கடிக்கப்பட்டார்.
- தப்பிச்சென்ற வங்காள நவாப்பை, மீர் ஜாபர் மகன் மிரான் தலைமையிலான சிறு படை கைது செய்து கொலை செய்தது.
- மீர்ஜாபர் வங்காளத்தின் நவாப் ஆனார்.

**v. மீர் ஜாபர் (Mir Jafar கி.பி. 1757 - 60):**

- இராபர்ட் கிளைவின் ஜேக்கல் **(தந்திர நரி)** என்று அழைக்கப்படுகிறார்.
- இவர் ஆங்கிலேயருக்கு வங்காளம், பீகார் மற்றும் ஒரிஸா பகுதியில் இலவச வாணிபம் செய்ய அனுமதி வழங்கினார்.
- 24 ஜமீன்தாரி பர்கானாக்களை ஆங்கிலேயருக்கு வழங்கினார். இவருடைய ஆட்சி காலத்தில் தான் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பொருளாதாரத்தை சுரண்டி கொள்ளையடித்து பிரிட்டன் கொண்டு செல்ல ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் நல்லுறவு கொண்டிருந்த மீர்ஜாபர், இறுதியில் பகைமை கொண்டு இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்ட முடிவு கொண்டார்.

❖ டச்சுக்காரர்களை வைத்து ஆங்கிலேயரை விரட்ட எடுத்த முயற்சி நவம்பர் 25 கி.பி. 1759ல் இருவருக்கும் நடைபெற்ற பெதாரா போரில்(Battle of Bedara) டச்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டு, ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். மீர்ஜாபர் வங்காள நவாப் பதவிலியிலிருந்து இறக்கப்பட்டு மீர்காசிம் நவாப் ஆக்கப்பட்டார்.

**vi. மீர்காசிம் (Mir Qasim 1760 - 64):**

❖ மீர் ஜாபரின் மருமகனான மீர்காசிம், ஆங்கிலேயருக்கு சிட்டகாங், மதினாப்பூர் மற்றும் பர்துவானின் ஜமீன்தாரி அனுமதியை ஆங்கிலேயருக்கு வழங்கினார்.

❖ கி.பி. 1762ல் தனது தலைநகரை முர்சிதாபாத்திலிருந்து மோங்கியர்க்கு மாற்றினார்.

❖ ஆங்கிலேயர்கள் **தஸ்தாக்ஸ்** என்றழைக்கப்பட்ட இலவச வழிகளை தவறுதலாக பயன்படுத்துவதை தடை செய்தார்.

❖ ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுபட விரும்பிய மீர்காசிமை ஆங்கிலேயர்கள் போரிட்டு தாக்கினர். **அக்டோபர் 22, 1764ல்** பக்சார் என்னுமிடத்தில் மேஜர் ஹெக்டர் மன்றோ தலைமையில் ஆங்கிலேய படைகளும், மூன்று கூட்டணியான (மீர்காசிம், அயோத்தியின் சுஜா - உத் - தௌலா மற்றும் டெல்லியின் இரண்டாம் ஷா ஆலம்) ஆகியோர் இணைந்து மோதிக்கொண்டனர்.

❖ இந்த கூட்டணியை ஹெக்டர் மன்றோ தோற்கடித்து போரில் அபார வெற்றியடைந்தார்.

❖ வரலாற்று சிறப்பு மிக்க இப்போர் பக்சார் போர் என்றழைக்கப்படுகின்றது.

**vii. மீர்ஜாபர் (1765):**

❖ பக்சார் போருக்குப் பிறகு சில மாதங்கள் மீர்ஜாபர் வங்காளத்தின் நவாபாக இருந்தார்.

❖ கி.பி. 1765ல் இறந்தார்.

**viii. நிஜாம் - உத் - தௌலா (Nijam - ud - daula கி.பி. 1765 - 72)**

❖ மீர்ஜாபர் இறப்பிற்கு பிறகு அவரது மகன் நிஜாம் - உத் - தௌலா வங்காள நவாபாக பொறுப்பேற்றார்.

❖ ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இரட்டை ஆட்சியின் போது நவாபாக இருந்தார். வங்காள நிர்வாகத்தை நேரடியாக எடுத்துக் கொண்ட பிறகு, ஆங்கிலேயரிடம்

பென்சன் தொகை பெறும் நபராக மாறினார்.

- ❖ இவர் வங்காளத்தின் கடைசி நவாப் ஆவார்.

**2. அயோத்தி:**

**i. சாதத் கான் புர்கான் உல் முல்க் (1722 - 39)**

**(Saadat Khan Burhan - ul - mulk) :**

- ❖ முகலாயப் பேரரசர் முகமது ஷாவினால் அயோத்தியின் கவர்னராக நியமிக்கப்பட்ட சாதத்கான் கி.பி. 1722ல் அயோத்தி சுதேச பேரரசை நிறுவினார். ஜாகிர்தாரி நிலவரிமுறையை தொடர்ந்தார்.
- ❖ கி.பி. 1723ல் புதிய நிலவரிமுறையை அறிமுகப்படுத்தினார். கி.பி. 1739ல் தற்கொலை செய்து கொண்டார்.

**ii. சாப்தார் ஜங்**

**(Safdar Jung கி.பி. 1739 -54):**

- ❖ சாதத்கானை தொடர்ந்து அவரது உறவினரான சப்தார் ஜங் அயோத்தி நவாபாக பொறுப்பேற்றார்.
- ❖ கி.பி. 1748ல் முகலாய பேரரசின் வாஜிராக நியமிக்கப்பட்டார். அலகாபாத் மாகாணமும் சப்தார் ஜங்கின் கட்டுப்பாட்டில் வந்தது.
- ❖ கி.பி. 1748 க்கு பிறகு நவாப் வாஜீர் என்றழைக்கப்பட்டார். மராத்தியர்கள் மற்றும் இராஜபுத்திரர்களுடன் நல்லுறவு கொண்டார்.

**iii. சுஜா - உத் - தௌலா (கி.பி. 1754 -75):**

- ❖ சப்தார் ஜங்கிற்கு பிறகு அயோத்தி நவாப் ஆனார். ஆங்கிலேயர்களுக்கு எதிரான பக்சார் போரில் கலந்து கொண்டார். இதனால் அலகாபாத் மற்றும் காரா போன்ற பகுதிகளை இழந்தார்.
- ❖ வாரன் ஹேஸ்டிங்ஸ் உடன் பனாரஸ் உடன்படிக்கை செய்து கொண்டார். பிரிட்டிஷாருடன் இணைந்து ரோஹில்லாக்களை தோற்கடித்து கி.பி. 1774ல் ரோஹில்கண்ட் பகுதியை அயோத்தியுடன் இணைத்துக்கொண்டார் சுஜா - உத் - தௌலா.

**iv. ஆசாப் - உத் - தௌலா (Asaf - ud - daula 1775 -97):**

- ❖ ஆங்கிலேயருடன் கி.பி. 1775ல் பைசாபாத் உடன்படிக்கை செய்து கொண்டார்.
- ❖ இவருக்கு பிறகு அயோத்தியின் நவாப்புகளாக வாஜிர் அலி சாதத்கான், சாதத் அலி மற்றும் வாஜித் அலிஷா ஆகியோர் இருந்தனர்.
- ❖ நவம்பர் 1801ல் சாதத் அலி வெல்லெஸ்லி பிரபுவின்

துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்.

- ❖ இறுதியாக வாஜித் அலி ஷாவின் ஆட்சி காலத்தில்தான் நல்லாட்சி இன்மை காரணத்திற்காக பிப்ரவரி 1856 ல் அயோத்தி டல்ஹௌசி பிரபுவால் பிரிட்டிஷ் உடன் இணைக்கப்பட்டது. வாஜித் அலிஷா பென்சன் வழங்கப்பட்டு கல்கத்தாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.
- ❖ இவரே அயோத்தியின் கடைசி நவாப் ஆவார்.

**3. ஹைதராபாத் (Hyderabad):**

**i. நிஜாம் - உல் - முல்க் ஆசப் ஜா (கி.பி. 1724 - 48):**

- ❖ கி.பி. 1724ல் ஹைதராபாத் சுதேசப் பேரரசை நிறுவியவர் நிஜாம் - உல் - முல்க் ஆவார்.
- ❖ இவருடைய இயற்பெயர் சின்குலிச்கான் ஆகும். ஆனால் பருக்சியர் இவருக்கு கான் - ஐ-தூரன் என்ற பட்டத்தையும், நிஜாம் - உல் - முல்க் என்ற பட்டத்தையும் வழங்கி சிறப்பித்தார்.
- ❖ ஔரங்கசீப்பிற்கு பிறகு இருந்த அமைச்சர்களின் சிறந்து விளங்கியவர்களில் இவரும் ஒருவரே. சையது சகோதரர்களை தூக்கியெறிய இவரும் ஒரு காரணமாகும். இதனால் தக்காணத்தில் வைசிராயாக நியமிக்கப்பட்டார்.
- ❖ கர்நாடகப் பகுதியும் தக்காணத்தில் ஒரு சுபாவாகும். ஹைதராபாத் நிஜாமின் கீழ் துணை கவர்னரால் ஆளப்பட்டு கீழ் துணை கர்நாடக நவாப் என்ற ஆளுநரால் சுதந்திர ஆட்சி செய்யப்பட்டது.

**ii. நாஜிர் ஜங்(Nazir Jung 1748 - 50):**

- ❖ நிஜாம் உல் முல்கிற்கு பிறகு அவரது உறவினரான நாஜிர் ஜங்க் ஹைதராபாத்தின் நிஜாம் ஆனார்.
- ❖ முஜாபர் ஜங்க் என்ற மற்றொரு உறவினரால் நாஜிர் ஜங்க் தோற்கடிக்கப்பட்டார்.
- ❖ இந்த நிஜாம் வாரிசுரிமைப் போர், இரண்டாவது கர்நாடகப் போருக்கான ஒரு காரணமாகும்.

**iii. முஜாபர் ஜங்**

**(Muzaffar Jung 1750 - 51):**

- ❖ பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் ஹைதராபாத் நிஜாம் ஆன முஜாபர் ஜங்கின் ஆட்சி அவருடைய திடீர் இறப்பினால் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது.

**iv. சலாபாத் ஜங்**

**(Salabat Jung கி.பி. 1751 - 60):**

- ❖ பிரெஞ்சுக்காரர்களின் உதவியினால் அரியணையில் அமர்ந்தார் சலாபாத் ஜங்.

- இவருக்குப் பிறகு நிஜாம்கள் முறையே நிஜாம் அலி (1760 1803), சிக்கந்தர் ஜா நாஜிர் - உத் - தௌலா (1829 57), அப்ஜால் - உத் - தௌலா மகாபத் அலி கான் (1869 - 1911) மற்றும் ஒசாமன் அலி கான் (1911 - 49) ஆவார்.
- **நிஜாம் அலி கி.பி. 1798ல் வெல்லெஸ்லியின் துணைப் படைத்திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் இந்திய அரசராவார்.** ஹைதராபாத் நிஜாம்கள் கலை, இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தை ஆதரித்தனர்.
- அவர்கள் ஹைதராபாத்தில் சாலார் ஜங் மியூசியத்தையும் சௌ மஹல்லா அரண்மனையையும் கட்டினர்.
- இறுதிவரை பிரிட்டிஷார் ஹைதராபாத் பகுதியை இணைக்கவில்லை.
- இந்தியா இறுதியாக செப்டம்பர் 1948ல் சர்தார் வல்லபாய் படேலின் முயற்சியால் **ஆபரேசன் போலோ** மூலம் இராணுவத்தைக் கொண்டு ஹைதராபாத் பகுதியை இந்திய யூனியனில் இணைத்தது.

## 4. கர்நாடகப் பகுதி (Carnatic)

- முகலாய தக்காணத்தில் சுபாக்களில் ஒன்றான கர்நாடகம், ஹைதராபாத் நிஜாமின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி கர்நாடு நவாப் என்பவரால் சுதேசமாக ஆளப்பட்டது.

### i. சாதுதுல்லாகான் (Saadutullah Khan):

- கர்நாடகப்பகுதியின் துணை கவர்னரான சாதத்துல்லா கான் கி.பி. 1720ல் கர்நாடக சுதேச அரசை ஏற்படுத்தினார். அதன் தலைநகரம் ஆற்காடாகும்.

### ii. பிற கர்நாடக நவாப்புக்கள்:

- சாதுதுல்லாகானுக்கு பிறகு அவரது உறவினரான தோஸ்த் அலி நவாப் ஆனார்.
- கி.பி. 1740ல் மராத்தியர்களால் தோஸ்த் அலி கொல்லப்பட்ட பிறகு அவரது மகன் சாப்தார் அலி கர்நாடக நவாப் அல்லது ஆற்காடு நவாப் ஆனார்.
- சாப்தார் அலி தனது உறவினர்களால் கொல்லப்பட்ட நிகழ்வு, ஹைதராபாத் நிஜாம் ஆற்காடு விவகாரத்தில் தலையிட வழிவகை செய்தது.
- கி.பி. 1743ல் ஹைதராபாத்தில் தலையிட வழிவகை செய்தது. கி.பி. 1743ல் ஹைதராபாத் நிஜாம், அன்வருதீன் என்பவரை ஆற்காடு நவாப்பாக நியமித்தார்.
- கி.பி. 1749ல் பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் அன்வருதீனை கொலை செய்து விட்டு சந்தாசாகிப் என்பவர் ஆற்காடு நவாப் ஆனார்.

❖ பிறகு பிரிட்டிஷாரின் ஆதரவாளர்களால் சந்தாசாகிப்பும் கொலை செய்யப்பட்டு, கி.பி. 1752ல் அன்வருதீனினுடைய மகன் முகமது அலி ஆற்காடு நவாப் ஆனார்.

❖ இறுதியாக கி.பி. 1801ல் கர்நாடு பகுதி வெல்லெஸ்லி பிரபுவால் இணைக்கப்பட்டு கடைசி ஆற்காடு நவாப் பென்சன் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

**5. மைசூர் (Mysore):**

❖ மைசூர், விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதி ஆகும்.

❖ கி.பி. 1565ல் நடைபெற்ற தலைக்கோட்டை போருக்கு பிறகு பாமினி பேரரசின் வெற்றியினால் விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கியது. விஜயநகரப் பேரரசர் இரண்டாம் வேங்கடாவிடம் (Venkata -II) அனுமதி பெற்று, மைசூரின் கவர்னர் ராஜா உடையார் கி.பி. 1613ல் மைசூர் சுதேச அரசை ஏற்படுத்தினார்.

❖ இவருக்குப் பிறகு கி.பி. 1731 மற்றும் 1734 க்கு இடைப்பட்ட காலங்களில் இரண்டு சகோதரர்கள் முறையே தேவராஜா (தல்வாய் அல்லது ராணுவ தளபதி) மற்றும் நானராஜா (சர்வாதிகாரி அல்லது நிதித்துறை தலைவர்) ஆகியோர் ஆட்சி செய்தனர்.

**i. ஹைதர் அலி (Haider Ali 1761 - 82):**

❖ மைசூர் பகுதியில் ஒரு சாதாரண போர் வீரராக வாழ்க்கையை துவங்கி, போர்த்தளபதியாக உயர்ந்து, பின் பௌஜ்தாராக திண்டுக்கல் பகுதியில் பொறுப்பேற்றார்.

❖ கி.பி. 1766ல் கேரளாவில் படையெடுப்பு மேற்கொண்டு கோழிக்கூட்டு சாமரின் பகுதிகள் உட்பட கொச்சின் வரை வட கேரளாவை இணைத்தார்.

❖ கி.பி. 1759ல் மைசூரின் தலைநகரமான சீரங்கப் பட்டிணத்தை மராத்தியரிடமிருந்து பாதுகாத்தார்.

❖ இதனால் நஞ்சராஜாவால் ஃபதே ஹைதர் பகதூர் (அறிவு திறமைவாய்ந்த வெற்றிபெறும் சிங்கம்) என்ற பட்டத்தைப் பெற்றார்.

❖ கலகம் செய்த திண்டுக்கல் பாளையக்காரர்களை ஒடுக்கினார். பிரெஞ்சுக்காரர்களின் உதவி கொண்டு பின்பு கி.பி. 1761ல் நாஞ்சராஜாவை தோற்கடித்து மைசூரின் அரசரானார். கி.பி. 1755ல் நவீன ஆயுதக்கிடங்கை திண்டுக்கல்லில் ஏற்படுத்தினார்.

❖ பித்னூர், சுண்டா. சேரா, கனரா மற்றும் மலபார் பகுதிகளை கைப்பற்றினார்.

பிரெஞ்சுக்காரர்களுடன் கூட்டணி அமைத்து செயல்பட்டதால் முதல் ஆங்கிலேய மைசூர் போரில் (1767 - 69) ல் அபார வெற்றியடைந்து ஏப்ரல் 1769ல் ஆங்கிலேயரை மதராஸ் உடன்படிக்கையில் கையெழுத்திடச் செய்தார்.

- ❖ இவர் இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போரின் போது டிசம்பர் 7, 1782ல் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தார்.

**ii. திப்பு சுல்தான்**

**(Tipu Sultan 1782 - 99):**

- ❖ ஹைதர் அலியை தொடர்ந்து அவரது மகன் திப்புசுல்தான் அரசராக பொறுப்பேற்றார்.
- ❖ புதிய காலண்டர், புதிய நாணயங்கள், புதிய எடைமுறைகளை அறிமுகம் செய்தார்.
- ❖ சிறந்த போர் வீரர் மற்றும் சிந்தனையாளர் பிரெஞ்சுப் புரட்சியில் ஆர்வம் காட்டினார்.
- ❖ சீரங்கப்பட்டிணத்தில் விடுதலை மரத்தை நட்டார்.
- ❖ ஜக்கோபியன் கிளப்பில் (Jacobian Club) உறுப்பினரானார்.
- ❖ கி.பி. 1769க்கு பிறகு நவீன கப்பற்படையை ஏற்படுத்த முயன்றார்.
- ❖ பிரிட்டிஷ்க்கு எதிராக, மூன்றாவது ஆங்கிலேய மைசூர் போர் மற்றும் நான்காவது ஆங்கிலேய மைசூர் போர் ஆகியவற்றை மேற்கொண்டார். மற்ற மதத்தாரை மதித்து சமமாக நடத்தினார்.
- ❖ ஸ்ரீருங்கேரி கோவிலில் சாரதா பெண் கடவுள் உருவம் அமைக்க நிதி உதவி செய்தார்.
- ❖ பிரான்ஸ், துருக்கி, ஈரான், பெகு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் வெளியுறவு தூதராக மற்றும் வாணிப உறவை ஏற்படுத்தினார் மேலும் சீனா போன்ற நாடுகளுடன் வாணிபம் செய்தார்.
- ❖ "வாழ்நாள் முழுவதும் செம்மறியாய் வாழ்வதைவிட ஒரு நாள் சிங்கமாக வாழ வேண்டும் " என்று கூறிய திப்பு சுல்தான் நான்காம் ஆங்கிலேய மைசூர் போரின் (1799) முடிவில் சீரங்கப்பட்டிணத்தின் நுழைவாயில் அருகே கொல்லப்பட்டார்.
- ❖ இவருடைய மாளிகைக்கு மிக அருகிலே தான் புகழ்மிக்க ஸ்ரீரங்கநாதர் கோவில் அமைந்துள்ளது.

**6. கேரளா (Kerala)**

- ❖ பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கேரளா பல்வேறு ராஜாக்களால் பிரிக்கப்பட்டு தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டன.
- ❖ அதில் முக்கியமான நான்கு பகுதிகளாவன, சாமரின் அரசரின்

கீழ், கோழிக்கோடு, கிராக்கல், கொச்சின் மற்றும் திருவிதாங்கூர் ஆகும்.

- கி.பி. 1729க்கு பிறகு திருவிதாங்கூர் அரசு, அரசர் மார்த்தாண்டவர்மன் காலத்தில் சிறந்து விளங்கியது. இவர் மற்ற சிறு அரசர்களை தோற்கடித்து திருவிதாங்கூரை சிறப்பாக ஆட்சி செய்தார்.
- நவீன மேற்கத்திய முறையிலான ஆயுத கிடங்கை ஏற்படுத்தினார். திருவிதாங்கூர் அரசின் எல்லையை கன்னியாகுமரியிலிருந்து கொச்சின் வரை விரிவுபடுத்தினார். கி.பி. 1763 க்கு பிறகு கொச்சின், திருவிதாங்கூர் மற்றும் கோழிக்கோடு ஆகியவற்றை பல்வேறு அரசர்கள் படையெடுத்து கைப்பற்றிக் கொண்டனர்.
- குறிப்பாக கி.பி. 1766ல் மைசூரின் ஹைதர் அலி கேரளாவில் படையெடுப்பு மேற்கொண்டு கோழிக்கூடு உட்பட கொச்சின் வரை வட கேரளாவை இணைத்துக் கொண்டார்.
- திருவிதாங்கூர் சமஸ்தானம் தவிர மற்றப் பகுதிகள் ஐரோப்பியர்களால் இணைத்துக் கொள்ளப்பட்டன. அதிலும் ஆங்கிலேயர்களே முடிவில் அப்பகுதிகளை எடுத்து நிர்வகித்தனர்.

### 7. இராஜபுத்திர பகுதிகள் (The Rajput States)

- முகலாயர்களின் பலவீனமான ஆட்சியினால் தனித்து சுதந்திரமாக செயல்பட விரும்பிய இராஜபுத்திர அரசர்கள் தத்தம் பகுதிகளை மத்திய கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து ஆட்சி செய்ய தொடங்கினர். பதினெட்டாம் நூற்றாண்டின் சிறந்து விளங்கிய ராஜபுத்திர அரசர் ஆம்பர் பகுதியின் ராஜா சவாய் ஜெய் சிங் ஆவார்.
- ஜெய்ப்பூர் மாநகரத்தை ஏற்படுத்தினார். சிறந்த வானவியல் நிபுணர் (Astronomer) டெல்லி, ஜெய்ப்பூர், வாரணாசி மற்றும் மதுரா பகுதிகளில் இவருடைய வானவியல் கண்டுபிடிப்புகளை காணமுடிகிறது.
- ஜெய்ப்பூரில் சுமார் 40 ஆண்டு காலம் ஆட்சி செய்தார். அறிவியல் மற்றும் கலை ஆகியவற்றை கற்றுக்கொள்ளும் சிறந்த இடமாக ஜெய்ப்பூரை மாற்றினார்.

### 8. ஜாட்டுகள் (The Jats)

- டெல்லி, ஆக்ரா மற்றும் மதுரா வை சுற்றி வாழ்ந்த விவசாய பிரிவினர்கள் ஜாட்டுகள் என்றழைக்கப்பட்டனர்.
- ஜாட்டுகளின் ஆதிக்கம் சூரஜ் மால் என்ற அரசரின் ஆட்சிக்காலத்தில் (1756 - 63) சிறந்து விளங்கியது. இவர் ஜாட்டுகள் ஆட்சியின்

எல்லையை மேற்கில் ஆக்ராவின் சுபாவிலிருந்து கிழக்கில் கங்கை வரையிலும், வடக்கில் டெல்லி சுபாவிலிருந்து தெற்கில் சம்பல் பகுதி வரையிலும்விரிவுபடுத்தினார்.

- மேலும் ஆக்ரா, மதுரா, மீரட் மற்றும் அலிகாரின் பல மாவட்டங்களையும் தம் அரசுடன் இணைத்திருந்தார்.
- முகலாய நிலவரி முறையை போல் ஜட்டுகளின் பகுதியில் நிலவரி முறையை அறிமுகப்படுத்த முயன்றார்.
- கி.பி. 1763ல் அவரது இறப்பிற்கு பிறகு பல்வேறு ஜமீன்தார்கள் கைப்பற்றி ஜாட்டுகள் பகுதிகளை தனித்தனியே ஆட்சி செய்தனர்.

**9. பங்காஷ் பதான்கள் மற்றும் ரோஹில்லாக்கள்**

**(Bangash Pathans and Rohelas)**

- முகமது கான் பங்காஷ் என்ற ஆப்கானியர், பருக்ஷியர் மற்றும் முகமது ஷாவின் ஆட்சிக்காலத்தில், அலிகாருக்கும் கான்பூருக்கும் இடைப்பட்ட பகுதியான பருக்காஃபாத் (Farrukhabad) என்னுமிடத்தில் பதான்களின் ஆட்சியை நிறுவினார்.
- நாதிர்ஷாவின் படையெடுப்பினால் பதான்களின் ஆட்சி நிலைகுலைந்த பிறகு, அலி முகமது கான் என்பவர் இமய மலைத்தொடர்களின் அடிப்பகுதியில் ரோஹில்கண்ட் பகுதியை அரசாக நிறுவினார்.
- தெற்கே கங்காவிற்கும், வடக்கே ஹுமாயூன் மலைகளுக்கிடைப்பட்ட பகுதியான ரோஹில்கண்டின் தலைநகரம் முதலில் பரெய்லியின் ஆலோன் ஆகவும் பின்பு ராம்பூர் ஆகவும் மாற்றப்பட்டது. ரோஹில்லாக்கள் அடிக்கடி அயோத்தி, டெல்லி மற்றும் ஜட்டுகளிடம் போரிட்டு கொண்டிருந்தனர்.

**10. பஞ்சாப் (Punjab)**

**சீக்கியர்கள் (The Sikhsim)**

**i. குரு நானக்**

**(கி.பி. 1469 - 1539 - Guru Nanak):**

- பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஜட் விவசாயிகள் மற்றும் பஞ்சாபின் தாழ்ந்த இனத்தவர்களிடையே, ஒரு அமைப்பான சீக்கிய மதத்தை ஏற்படுத்தியவர் குருநானக் ஆவார்.
- தல்வாண்டியில் பிறந்த முதல் சீக்கிய குருவான இவர் நானக் பந்த் அமைப்பை ஏற்படுத்தினார்.
- இவர் இப்ராஹிம் லோடி மற்றும் பாபரின் சமகாலத்தை சேர்ந்தவராவார்.

**ii. குரு அங்கத் (Guru Angad கி.பி. 1539 - 52):**

❖ பஞ்சாபி மொழிக்கு குருமுகி எழுத்து வடிவத்தை கண்டறிந்தவர் இவரேயாவார்.

**iii. குரு அமர்தாஸ் (Guru Amardas - கி.பி. 1552 - 74):**

❖ சீக்கிய பேரரசை 22 மன்ஜிஸ்களாக பிரித்து ஒவ்வொரு மன்ஜிஸ்ம் ஒரு சீக்கியரால் நிர்வகிக்கப்பட்டது. முகலாய பேரரசர் அக்பர் இவரை சந்திக்க வருகை புரிந்தார்.

**iv. குரு ராம்தாஸ் (Guru Ramdas - கி.பி. 1575 -81):**

❖ அமிர்தசரஸ் மாநகரத்தை ஏற்படுத்தினார். டேங்க் (சாரோவர்) அமைப்பை ஏற்படுத்தி அதன் பகுதியில் ஹர்மாந்திர் ஷாஹிபின் அமைப்பை கட்டினார்.

❖ சீக்கிய குரு பதவியை பாரம்பரியமாக ஆக்கினார்.

**v. குரு அர்ஜீன் தேவ்**

**(Guru Arjun Dev - கி.பி. 1581 - 1606):**

❖ ஆதிகிராந்தை (Adi Granth) தொகுத்தவர் இவரே ஆவார்.

❖ அமிர்தசரஸை கட்டி முடித்தார் மற்றும் தாரான் (Raran), கர்தார்பூர் (Kartarpur) ஆகிய மாநகரங்களை ஏற்படுத்திய இவர் ஜஹாங்கீரால் தூக்கிலிடப்பட்டார்.

**vi. குரு ஹர்கோவிந்த ராய் (Guru Har Goving Rai கி.பி 1606 - 45):**

❖ சீக்கியர்களை போராடும் வீரர்கள் (Warrior Class) வகுப்பாக மாற்றிய ஹர்கோவிந்த் சங்கிரமா என்னுமிடத்தில் முகலாய ராணுவத்தை தோற்கடித்தார்.

❖ அமர்தசரஸில் கோட்டையை கட்டி, பொற்கோவிலில் அகால் தக்ட் (Akal Takhqt) அமைப்பை கட்டினார். பாத்ஷா (Padshah) பட்டத்தை ஏற்றுக்கொண்ட ஹர்கோவிந்த் காஷ்மீரில் கிராத்பூர் மாநகரத்தை உருவாக்கினார்.

**vii. குரு ஹர்ராய்**

**(Guru Har Rai - கி.பி. 1645 -61):**

❖ ஔரங்கசீப்பின் சகோதரரான தாரா ஷிகோ உடன் சந்திப்பு மேற்கொண்டார்.

**viii. குரு ஹர் கிஷான்**

**(Guru Har Kishan - கி.பி. 1661 -64):**

❖ டெஹ்ராடூனில் சீக்கிய குருக்களுக்கு தனி அவை அல்லது இருப்பிடம் ராமராயரால் ஏற்படுத்தப்பட்டது.

**ix. குரு தேஜ் பகதூர்**

**(Guru Tej Bahadur கி.பி. 1664 -75):**

❖ டெல்லியில் ஔரங்கசீப்பால் தூக்கிலிடப்பட்ட இவரின் கல்லறைக்கான இடத்தை இவரது சகோதரி கஞ்ச் குருத்து வாரா

(Ganj Gurudwara) தேர்ந்தெடுத்தார்.

### x. குரு கோபிந்த சிங் (Guru Gobind Singh -1675 - 1708):

- பாட்னாவில் பிறந்த 10வது குருவான கோபிந்த சிங் கி.பி. 1699ல் அறுவடைநாள் அன்று சீக்கிய போராட்ட படையான கால்சா படையை ஏற்படுத்தினார்.
- அனந்தபூரில் சீக்கிய கூட்டமைப்பை கூட்டினார். 5 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அழிவில்லா புனித நீரை ஏற்றுக் கொண்டனர்.
- சீக்கியர்களை எப்பொழுதும் ஐந்தை கொண்டிருக்க வேண்டுமென்றார்.
- அதாவது கேஷ் (Kesh), கிரிபன் (Kripan), கச்சா (Kachcha), கங்கா (Kanga) மற்றும் காரா (Kara) ஆகியவனவாகும்.
- தாஸ்வீன் பாத்ஷா கா கிரந்தை (Dasween Padshah Ka Granth) தொகுத்த இவர் கி.பி. 1708ல் ஒரு பதானால் கொல்லப்பட்டார்.
- இவருடைய இறப்பிற்கு பிறகு சீக்கிய குருக்கள் பதவி ஒழிக்கப்பட்டது.
- பந்தா பகதூர் சிங் தலைமையில் சீக்கியர்கள் எழுச்சியுற்றனர். முகலாயர்களுடன் 8 ஆண்டுகள் மோதலை கொண்டிருந்தனர்.
- கி.பி. 1715ல் பந்தா பகதூர் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.
- இதற்கு பிறகு சீக்கிய பகுதிகள் 12 மிஸில் (கூட்டமைப்புக்கள்) ஆக பிரிக்கப்பட்டு ஆளப்பட்டன.

### xi. மகாராஜா ரஞ்சித் சிங் (1792 - 1839):

- கி.பி. 1780 ல் குஜ்ரன்வாலா என்னுமிடத்தில் சுகர்சாகிய மிஸிலின் தலைவருக்கு மகனாகப் பிறந்த ரஞ்சித்சிங், பஞ்சாபில் சீக்கிய அரசை ஏற்படுத்தினார். கி.பி. 1799ல் லாகூரை கைப்பற்றி தலைநகரமாக மாற்றினார்.
- கி.பி. 1802ல் அமிர்தசரஸ், லூதியானா, கங்ரா, முல்தான், காஷ்மீர் மற்றும் பெஷாவரை கைப்பற்றினார்.
- ஆங்கிலேயருடன் ஏப்ரல் 25, 1809ல் அமிர்தசரஸ் உடன்படிக்கை செய்து கொண்டார்.
- கி.பி. 1831ல் வில்லியம் பெண்டிங் பிரபுவும், ரஞ்சித்சிங்கும் சந்தித்து கொண்டனர்.
- கி.பி. 1838 ல் ரஞ்சித்சிங், இந்திய கவர்னர் ஜெனரல் ஆக்லாண்ட் மற்றும் ஆப்கானிய அரசர் ஷா சுஜா ஆகியோர் மூவர் உடன்படிக்கை (Tripartite Treaty) செய்து கொண்டனர்.
- ஷா சுஜா ஆப்கானிய அரசரானத்திற்கு பிறகு முதல் ஆப்கானிய போர் (1838 42) ஏற்படவே, ரஞ்சித்சிங் தனது

பகுதியில் பிரிட்டிஷ் படைகள் ஆப்கான் செல்ல தடை விதித்தார்.

- ரஞ்சித்சிங்கிற்கு பிறகு காரக்சிங் (1839 - 40), நௌநிதால் சிங், ஷெர் சிங் (1841 - 43), தலீப் சிங் (1840 - 49) ஆகியோர் பஞ்சாபை ஆட்சி செய்தனர்.
- தலீப் சிங்கின் ஆட்சி காலத்தில் 1849ல் பஞ்சாப் டல்ஹௌசி பிரபுவால் பிரிட்டிஷ் உடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

# பிரிட்டிஷாரின் பேரரசு விரிவுக்கொள்கை

## 1. கர்நாடகப் போர்கள் (Carnatic Wars)

- கிழக்கு கடற்கரைக்கும் அதைச் சார்ந்த பகுதிகளான மதராஸ் மற்றும் பாண்டிச்சேரி பகுதிகளை ஐரோப்பியர்கள் கர்நாடகம் (Carnatic) என்று அழைத்தனர்.
- இந்தப் பகுதிகளில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர் களும் பல வாணிப ஸ்தலங்களை ஏற்படுத்தியிருந்தார்கள்.
- தங்கள் வாணிப வளர்ச்சியை விரும்பிய இருவருமே கர்நாடக சுதேச அரசர்களின் நட்பை நாடினர்.
- இதனால் சுதேச அரசர்களின் அரசியலிலும், போர்களிலும் தலையிட வேண்டிய தாயிற்று.
- அப்படி தலையிட்டதன் விளைவாக பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர் ஏற்பட்டது.
- இவை ஆங்கிலேய பிரெஞ்சுப் போர்கள் அல்லது கர்நாடக போர்கள் என்றழைக்கப்பட்டன.
- மொத்தம் நடைபெற்ற மூன்று போர்களின் முடிவில் பிரெஞ்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இந்தியாவில் ஆட்சி செலுத்த பிரெஞ்சுக்காரர்களை விட ஆங்கிலேயர்களே தகுதியுடையவர்கள் என்பது தெளிவாகியது.
- கர்நாடகப் போர்கள் இந்திய வரலாற்றில் புகழ் பெற்றவையாகும்.

### i. முதல் கர்நாடகப் போர் (First Carnatic War - கி.பி 1746 -48):

**காரணங்கள்:**

- ஆஸ்திரியாவில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரின் பிரதிபலிப்பே முதல் கர்நாடகப் போராகும்.
- கி.பி. 1740 ல் ஆஸ்திரிய பேரரசர் ஆறாம் சார்லஸ் இறந்தவுடன் பிரஷ்யாவின் அரசரான மகா பிரடரிக், பேரரசரின் தனிக்கட்டளையை மீறி ஆஸ்திரிய அரசியான மரிய தெரஸாவுடன் போர் தொடுத்தார்.
- இப்போரில் இங்கிலாந்து ஆஸ்திரியாவுக்கு ஆதரவாகவும், பிரான்ஸ் பிரஷ்யா பக்கமும் நின்று போர் புரிந்தன.
- இந்தியாவில் ஆங்கிலேய - பிரெஞ்சு கம்பெனிகளுக் கிடையிலான வியாபார போட்டி.

- ❖ நடுநிலையை மேற்கொள்ள வேண்டிய ஆற்காடு பகுதியை தலைமையிடமாக கொண்ட கர்நாடக நவாப் அரசியல் தந்திரத்துடன் செயல்பட்டு, மறைமுகமாக பிரான்சுடன் உறவு வைத்து கொள்ளுதல்
- ❖ டியூப்ளேயின் பிரெஞ்சு ஆதிக்க கொள்கை மற்றும் வருகை.

**போரின் போக்கு (Course):**

- ❖ கி.பி. 1745ல் பிரெஞ்சு கப்பல்கள், ஆங்கிலேய கடற்படைத்தளபதி பர்னட் என்பவரால் கைப்பற்றப்பட்டது.
- ❖ இதற்கு பதிலடியாக கி.பி. 1746 டியூப்ளே தலைமையில் பிரெஞ்சுக்காரர்கள் மதராஸை கைப்பற்றினர்.
- ❖ தன் ஆணைக்கு கீழ்ப்படியாமல் தன்னை அவமதிப்பு செய்து மதராஸை கைப்பற்றிய டியூப்ளே மீது கோபம் கொண்டு ஆற்காடு நவாபான அன்வாருதீன் தனது மகன் மாபூஸ்கான் தலைமையில் ஒரு படையை அனுப்பினார்.
- ❖ டியூப்ளேவின் படைகளும் அன்வருதீனுடைய படைகளும் அடையாருக்கு அருகிலுள்ள சாந்தோமில் மோதிக்கொண்டன. இதுவே அடையார் போர் அல்லது சாந்தோம் போர் (1746) (Battle of Adayar or St. Thome) என்றழைக்கப்படுகின்றது.
- ❖ ஆற்காடு நவாப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. இப்போரின் மூலம் டியூப்ளேவின் புகழ் ஓங்கியது.

**விளைவுகள்:**

- ❖ கி.பி. 1748 ல் அய்க்ஷ்லா-ஷேப்ல் உடன்படிக்கை மூலம் ஆஸ்திரியாவில் வாரிசுரிமைப்போர் முடிவுக்கு வரவே, இந்தியாவிலும் முதல் கர்நாடகப்போர் முடிவுக்கு வந்தது.
- ❖ மதராஸ் பகுதி மீண்டும் ஆங்கிலேயர் வசம் பிரெஞ்சுக்காரர் களால் ஒப்படைக்கப் பட்டது.
- ❖ அதற்கு பதிலாக ஆங்கிலேயர்கள் வட அமெரிக்காவிலிருந்த லூயிஸ்பர்க்கை பிரான்சிற்கு வழங்கினர். ஆற்காடு நவாபின் ஆதரவு இனி ஆங்கிலேயருக்கு என்பது தெளிவாகியது.

**ii.இரண்டாவது கர்நாடகப் போர் (1748 -54):**

- ❖ பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு வளர்ச்சி பெற்றதைக் கண்ட ஆங்கிலேயர் எச்சரிக்கையும், அச்சமும் கொண்டனர்.

**காரணங்கள்:**

- தக்காண கவர்னரான நிஜாம் உல் முல்க் (ஆசப்ஷா) 1748ல் காலமானார். நிசாமின் இரண்டாவது மகனான நாசிர்ஜங்கிற்கும் பேரன் முசாபர் ஜங்கிற்கும் இடையே வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது.
- கர்நாடகத்தில் தோஸ்த் அலியின் மருமகனான சந்தாசாகிப் அன்வருதீனுக்கு எதிராக ஆற்காடு நவாப் பதவியை அடைய விரும்பினார்.
- சந்தா சாகிப்பும், முசாபர் ஜங்கும் பிரெஞ்சுக்காரர்கள் உதவியை நாடினர். அன்வருதீனும், நாசிர்ஜங்கும் ஆங்கிலேயரின் உதவியை பெற்றனர். ஐதராபாத் மற்றும் ஆற்காடு அரியணையை கைப்பற்றுவதில் ஏற்பட்ட சச்சரவே போருக்கு காரணமாயிற்று.

**போரின் போக்கு:**

- சந்தாசாகிப், முசாபர் ஜங் மற்றும் டியூப்ளேவின் கூட்டுப்படைகள் ஆர்க்காட்டை கைப்பற்ற செல்லும் போது, 1749 ஆகஸ்ட் 3ம் தேதி தெற்கு ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூருக்கு அருகிலுள்ள ஆம்பூர் என்ற இடத்தில் நடைபெற்ற ஆம்பூர் போரில் அன்வருதீன் படைகள் தோற்கடிக்கப்பட்டு அன்வருதீன் கொல்லப்பட்டார்.
- அவருடைய மகன் முகமது அலி திருச்சிக்கு தப்பிச் சென்றார். சந்தா சாகிப் கர்நாடக நவாப்பானார்.
- டியூப்ளேவின் உதவிக்கு கைம்மாறாக வழுதானூர் வில்லியனூர், பாகூர் ஆகிய இடங்களை சந்தாசாகிப் பிரெஞ்சுக்காரர்களுக்கு அளித்தார்.
- இதற்கிடையில் பிரெஞ்சுப் படைகளின் தளபதியான புஸ்ஸி செஞ்சிக்கோட்டையை தன்வசமாக்கி கொண்டார்.
- அதனை மீட்க முயன்ற நாசிர்ஜங் கொல்லப்பட்டார்.
- கைதியாக இருந்த முசாபர்ஜங் விடுதலை செய்யப்பட்டு பிரெஞ்சு ஆதரவில் அரியணையைப் பெற்றார். இவ்வாறு டியூப்ளேவின் ஆதரவாளர்களான முசாபர் ஜங்கும், சந்தா சாகிப்பும் முறையே தக்காண கவர்னராகவும் ஐதராபாத் நிஜாம், ஆற்காடு நவாபாகவும் பதவியேற்றனர்.
- புஸ்ஸியின் தலைமையில் ஹைதராபாத்தை நிஜாமின் கீழ் விட்டு வைத்தார் டியூப்ளே முசாபர்ஜங்கிடமிருந்து வடசர்க்கார், மசூலிப்பட்டிணம், ஒரிசா கடற்கரைப்பகுதிகளை பெற்றார் டியூப்ளே.

- இந்த சமயத்தில் ஆங்கிலேய கம்பெனியில் எழுத்தராகச் சேர்ந்த இராபர்ட் கிளைவ் என்பவர் ராணுவத்தில் சேர்ந்தார். இவர் ஆளுநர் சாண்டர்ஸை அணுகி புதிய போர்த்திட்டம் ஒன்றைக் கொடுத்தார்.
- திருச்சி முற்றுகையைத்தளர்த்தி ஆற்காட்டை முற்றுகையிட வேண்டுமென்ற அத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அன்வருதீனுடைய மகனான முகமது அலியை ஆற்காடு நவாப் ஆக்கும் நோக்கத்தோடு ஒரு பெரும்படையுடன் சென்று இராபர்ட் கிளைவ் ஆற்காட்டை ஆற்காடு போரில் கைப்பற்றி, சந்தாசாகிப்பை தோற்கடித்து கொலை செய்தார்.
- ஆற்காடு போரில் வெற்றி பெற்றதால் **இராபர்ட் கிளைவ் ஆற்காடு வீரர் என்றழைக்கப்படுகிறார்.** பிரெஞ்சு தளபதி ஜே.பி. லா ஸ்ரீரங்கத்தில் கைது செய்யப்பட்டார்.
- இப்போரில் பிரெஞ்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.
- முகமது அலி ஆற்காடு நவாப் ஆனார்.

**விளைவுகள்:**

- கி.பி. 1754ல் பாண்டிச்சேரி உடன்படிக்கையின் படி அல்லது கோதாயூ உடன்படிக்கையின் படி போர் முடிவிற்கு வந்தது.
- கோதாயூ பிரெஞ்சு ஆளுநராக நியமிக்கப்பட்டார் டியூப்ளேயின் பதவி பறிக்கப்பட்டது.

### iii. மூன்றாவது கர்நாடகப்போர் (Third Carnatic War 1758 - 1763):

- கி.பி. 1756ல் ஐரோப்பாவில் ஏழாண்டு போர் ஆங்கிலேயர் களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு மிடையே தொடங்கியது.
- கி.பி. 1757ல் பிரெஞ்சுக்காரர்களின் குடியிருப்பு மற்றும் வாணிபத்தலமான சந்திரநாகூரை (வங்காளம்) கிளைவ் மற்றும் வாட்சன் ஆகியோர் கைப்பற்றினார்.
- இதற்கு பதிலடி கொடுக்க கி.பி. 1758ல் கவுன்டிலாலி (Coun - de - lally) என்பவர் இந்தியாவில் போரை நடத்த சிவில் மற்றும் இராணுவ அதிகாரத்துடன் தாய்நாட்டிலிருந்து பிரெஞ்சுக்காரர்களால் கோதயூ ஆளுநருக்கு உதவி புரிய அனுப்பப்பட்டார்.

**போரின் போக்கு:**

- கி.பி. 1758 மே 2ம் தேதி கவுன்டி லாலி செயின்ட் டேவிட் கோட்டையை கைப்பற்றினார்.

- ஹைதராபாத்தில் பிரெஞ்சு தளபதியாக இருந்த புஸ்ஸியை அழைத்தார்.
- புஸ்ஸி உதவியுடன் மதராஸை கைப்பற்ற முயன்றார் லாலி. புஸ்ஸி ஐதராபாத்தை விட்டு வெளியேறியவுடன் அப்போது நிஜாமாக இருந்த ஜலபத்ஜங் பிரெஞ்சுக்காரர்களிடம் வைத்த நம்பிக்கையை இழந்து ஆங்கிலேயருடன் அமைதி உடன்பாடு செய்து கொண்டார்.
- பிரெஞ்சு கப்பற்படைத்தளபதி, ஆங்கிலக் கப்பற்படைத்தளபதியான போகாக்கிடம் மூன்று முறை தோற்று இந்தியாவை விட்டே ஓடிவிட்டார்.
- கி.பி. 1760 ஜனவரி 22ல் கர்நாடகப்பகுதியின் கோட்டைப்பகுதியான வந்தவாசி என்னுமிடத்தில் நடைபெற்ற வந்தவாசிப் போரில் சர் அயர் கூட் என்ற ஆங்கில தளபதியால் லாலி தோற்கடிக்கப்பட்டார்.
- இதனால் தான் **சர் அயர் கூட் வந்தவாசி வீரர் (Hero of Wandiwash)** என்று அழைக்கப்படுகிறார். புஸ்ஸி கைதியானார்.
- பிரெஞ்சுக்காரர்கள் முழுவதுமாக தோற்கடிக்கப் பட்டனர்.

**விளைவுகள்:**

- கி.பி. 1763 ல் பாரீஸ் உடன்படிக்கையின்படி ஏழாண்டு போர் முடிவிற்கு வந்தது.
- பிரெஞ்சு ஆதிக்க வளர்ச்சி இந்தியாவில் அடியோடு அழிந்தது.

## 2. வங்காளத்தில் ஆங்கிலேய ஆதிக்க வளர்ச்சி:

## (Growth of British Power in Bengal)

- இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்படுவதற்கான அடிக்கல் வங்காளத்தில் இராபர்ட் கிளைவ் என்பவரால் 1757ல் நாட்டப்பட்டது.
- அப்போது தக்காணத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கர்நாடகப் போர்களினால் கலங்கி கொண்டிருந்த ஆங்கிலேயர் களுக்கு வங்காள வெற்றி மகிழ்ச்சி தருவதாக அமைந்தது.
- 1757ல் நடைபெற்ற பிளாசிப்போரிலும், 1764 -ல் நடைபெற்ற பக்சார் போரிலும் வெற்றி பெற்று இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்படுத்தினர் ஆங்கிலேயர்கள்.

**வங்காளத்தின் நிலைமை:**

- தக்காணத்தைப் போலவே வங்காளமும் டில்லியிலிருந்த முகலாயப் பேரரசின் மேலதிகாரத்தை பெயரளவில் ஒத்துக் கொள்ளும் ஒரு சுபேதாரின் கீழ் இருந்தாலும் நடைமுறையில் ஒரு சுதந்திர அரசாகவே இருந்தது.
- கி.பி. 1740ல் வங்காள நவாப்பாக பதவியேற்ற அலிவர்திகான் என்பவர் தான் ஒரு வலிமையான அரசை நிறுவியிருந்தார். மராத்தியர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்.
- ஆங்கிலேயர்களுடன் நட்புறவு கொண்டிருந்தாலும். அவர்களை கோட்டைகளை கட்ட அனுமதிக்கவில்லை.
- அலிவர்திகான் 1756ல் ஏப்ரல் 9ல் இயற்கை எய்தினார். அவருக்குப் பிறகு ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டியை தங்களுக்குக் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கத்தை வங்காளத்தில் நிலை நாட்டினர்.

**3. பிளாசிப்போர்**
**(Battle of Plassey - ஜூன் 23, 1757):**

- 1756ல் அலிவர்திகானின் இறப்பிற்கு பிறகு ஆண்வாரிசு இல்லாததால் அவரது மகளின் மகனான சிராஜ் - உத் - தௌலா அரியணையில் அமர்ந்தார்.
- இவருக்கு இவரது சித்தி மகனான சௌகத் ஜங் என்பவருக்கும் வாரிசுப்போட்டி தொடங்கியது.
- வங்காளத்தில் இருந்த ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், பிரெஞ்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் தங்களது வியாபாரகிடங்குகளைச் சுற்றி புதிய கோட்டைகளை கட்ட ஆரம்பித்தார்கள்.

**பிளாசி மற்றும் பக்சார் போர்களின் விளைவு :**

- ✓ பிளாசிப் போரின் வெற்றி, இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி அமைய அடித்தளமாக அமைந்தது. வங்காள அரசியலில் ஆங்கிலேயர்களை வலிமை மிக்கவர்களாக்கியது.
- ✓ பக்சாரின் வெற்றி, வட இந்தியாவின் பேரரசின் ஆட்சியை வீழ்த்தி ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தை இந்தியாவில் உயர் அதிகாரம் படைத்த நிறுவனமாக உயர்த்தியது.

- பழைய கோட்டைகளில் பீரங்கிகளை அமைத்தனர். இதனால் கோபம் கொண்ட நவாப் சிராஜ் -உத்- தௌலா தன்னுடைய அனுமதி இல்லாமல் புதிய கோட்டைகளை

கட்டக்கூடாது என்றும், கட்டப்பட்ட கோட்டைகளை தகர்த்தெறிய வேண்டுமென்றும் கட்டளையிட்டு கல்கத்தாவில் ஆங்கில கவர்னர் டிரேக் என்பவருக்கு கடிதம் எழுதினார்.

- ❖ இக்கட்டளைக்கு ஆங்கிலேயர் அடிபணிய மறுத்தனர்.
- ❖ பருக்சியரால் 1717ல் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்ட வியாபார பட்டயத்தை மீறி வாணிப வழிகளை தனி வியாபாரத்திற்கு தவறுதலாகப் பயன்படுத்தினர்.

**நிகழ்வுகள்:**

- ❖ 1756 ஜூன் 4 ம் தேதி முர்சிதாபாத்தை அடைந்து காசிம் பஜாரிலிருந்த ஆங்கிலேய பண்டக சாலையை கைப்பற்றினார்.
- ❖ ஜூன் 20ல் கல்கத்தா சென்று வில்லியம் கோட்டையை பிடித்தார். அங்கிருந்த ஆங்கிலேய கவர்னர் டிரேக்கும், ஆலோசனைக் குழுவினரும், முக்கிய ஆங்கிலேயர் பலரும் கோட்டையை விட்டு வெளியேறி கப்பலில் ஏறி தங்களை பாதுகாத்துக் கொண்டனர். ஆனால் ஹோல்வெல் மற்றும் பலரும் சிறைபடுத்தப்பட்டனர்.
- ❖ சிறைப்படுத்தப்பட்ட 146 பேரில், ஒரு சிறிய அறையில் ஒரு நாள் இரவு முழுவதும் சிறைவைக்கப்பட்டிருந்ததால், 123 பேர் மூச்சுத்திணறி இறந்ததாகவும், 23 பேர் மட்டுமே உயிர்பிழைத்ததாகவும் சொல்லப்படுகின்றது.
- ❖ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வே இருட்டறை துயரச் சம்பவம் என்றழைக்கப்படுகின்றது.
- ❖ தப்பித்தவர்களில் ஒருவர் தான் ஹோல்வெல் (இந்த நிகழ்ச்சியே அவர் கூறியதாக வந்தது தான்)
- ❖ கல்கத்தாவை பிடித்த பின் மாணிக்சந்து என்ற படைத் தலைவரிடம் கல்கத்தாவை ஒப்படைத்து விட்டு முர்ஷிதாபாத்துக்கு திரும்பிவிட்டார் சிராஜ் - உத் - தௌலா. இதற்கிடையில் மகுடப் போட்டியாளரான சௌகத்ஜங், தான் வங்காளத்தின் முகலாயப் பிரதிநிதியாக இருப்பதற்கான உத்தரவைப் பெற பகிரங்க முயற்சி செய்தார். எனவே சிராஜ் - உத் - தௌலா, சௌகத்ஜங் மீது படையெடுத்து அவரைக் கொன்றார்.
- ❖ கல்கத்தா வீழ்ச்சிக்கு பிறகு ஆங்கிலேயர்கள் பால்ட்டா என்ற இடத்தில் தஞ்சம் அடைந்திருந்தனர்.

- ❖ அந்த இடத்திலிருந்த நவாபின் முக்கிய விரோதிகளுடன் தொடர்பு கொண்டு சதி செய்ய ஆரம்பித்தனர்.
- ❖ கல்கத்தாவின் அதிகாரிகளான மாணிக்சந்து, அமிசந்து, ஜகத்சந்து ஆகியவர்களை தம் கொள்கைக்கு ஒப்புக் கொள்ள வைத்தார்கள். நவாபும் ஆங்கிலேயர்களுக்கு இழந்த சலுகைகளை திருப்பி அளிக்க சம்மதித்தார்.
- ❖ இதற்கிடையில் ரகசியமாக போருக்கான ஆயத்தங்களை செய்து வந்தனர் ஆங்கிலேயர். அதன்படி மதராஸிலிருந்து ஒரு பெரும்படையுடன் கிளைவும், வாட்சனும் 1756 டிசம்பர் 14ல் பால்ட்டா வந்து சேர்ந்தனர்.
- ❖ பழைய உரிமைகளையும் திரும்ப கொடுத்து, தாங்கள் அடைந்த சலுகைகளையும், துன்பத்திற்கு நஷ்ட ஈடு தரும்படி பால்ட்டாவிலிருந்து வாட்சன், நவாபுக்கு கடிதம் ஒன்றை எழுதினார்.
- ❖ நவாபும் சமாதானம் என்று கடிதம் எழுதினார். கடிதம் கிடைப்பதற்கு முன்பாகவே, கிடைக்கவில்லையென்று கருதி இராபர்ட் கிளைவ் 1757 ஜனவரியில் கல்கத்தா மீது படையெடுத்து கல்கத்தாவையும், ஹூக்ளியையும் கைப்பற்றிக் கொண்டார். எனவே சிராஜ் - உத் - தெளலா இராபர்ட் கிளைவுடன் 1757 ஜனவரி உல் அலி நகர் உடன்படிக்கை (Treaty of Alinagar) ஒன்றை செய்து கொண்டார்.
- ❖ இதற்குப் பிறகு ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டுப் போரினால், இந்தியாவில் கிளைவும், வாட்சனும் பிரெஞ்சுக்காரர்களின் பண்டக சாலைகளை கைப்பற்ற நினைத்து 1757 மார்ச் 17ல் சந்திரநாகூரைப் பிடித்தனர்.
- ❖ தனது ஆதிக்கத்திலுள்ள பிரெஞ்சு மக்களை அழிக்க தான் அனுமதிக்க முடியாது என்ற சிராஜ், ஆங்கிலேயரின் இந்த செயல்பாட்டை எதிர்த்தார். எனவே சிராஜ் - உத் - தெளலாவிற்கு பதிலாக தமக்கு சாதகமாக ஒருவரை நவாபாக பணியிலமர்த்த ஆங்கிலேயர் முயன்றனர்.
- ❖ நவாபின் படைத்தளபதியும் மைத்துனருமான மீர்ஜாபரை நவாப் ஆக்குவதாகக் கூறினர்.
- சிராஜ் உடன் போர் நடத்துவதற்கு முன்பாகவே கிளைவ் மற்றும் வாட்சன் ஆகியோர் பின்வரும் வங்காள நவாபின்

அதிகாரிகளுடன் ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு, போரில் நவாபிற்கு ஆதரவாக செயல்படக்கூடாது என்பதை உறுதி செய்தனர்.

1. மீர்ஜாபர் - மீர்பக்ஷி அல்லது வங்காள ராணுவ தலைமை தளபதி
2. மானிக் சந்த் - கல்கத்தா பொறுப்பு அதிகாரி
3. அமின்சந்த் - சீக்கிய செலவந்த வாணிபர்.
4. ஜகத் சேத்து - வங்கி பொறுப்பு அதிகாரி
5. காதிம் கான் - நவாபின் படைத்தளபதிகளில் ஒருவர்.
6. ராய்துர்லப் - தளபதிகளுள் ஒருவர்

❖ சிராஜ் -உத் - தௌலாவிற்கு எதிராக சதித்திட்டங்களை வகுத்த கிளைவ் ஆங்கிலேயருக்கு நவாப் செய்த அநீதிகளை பற்றி ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு நாகூரிலிருந்து சிராஜை தாக்க சந்திர நாகூரிலிருந்து புறப்பட்டு ஜூன் 22, 1757ல் கங்கை நதிக்கரையிலுள்ள பிளாசி என்ற இடத்தை அடைந்தார்.

❖ 1757 ஜூன் 23 காலையில் பிளாசிப் போர் ஆரம்பமானது. நவாபின் சிறந்த படைத்தளபதிகளான மீர்ஜாபர், யார்லதில்கான், ராய்துர்லப் ஆகியோர் நம்பிக்கை துரோகம் செய்து போரிடாமல் இருந்தனர்.

❖ விசுவாசமிக்க சிறிய படைத்தலைவர்களான மீர்மதன், மோகன்லால் ஆகியோர் கடுமையாகப் போர் புரிந்தனர். நவாபின் நம்பிக்கைக்குரிய மீர்மதன் கொல்லப்பட்டார்.

❖ சதியை அறியாத நவாப், மீர்ஜாபரை அழைத்து ஆலோசனை நடத்தினார்.

❖ மீர்ஜாபரின் ஆலோசனையின் பேரில் படைகளை பின் வாங்கிக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. எல்லா படைதலைவர்களுக்கும் பின் வாங்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

❖ திறமை மிக்க தளபதி மோகன்லாலும் பின் வாங்கினார். போரில் தோல்வியுற்றதனால், சிராஜ் - உத் - தௌலா தன் மனைவி மக்களுடன் மூர்சிதாபாத்தை விட்டு ஓடிவிட்டார்.

❖ ஆனால் சில நாட்களுக்குள் கண்டுபிடிக்கப்பட்டு கைதியாக கொண்டு வரப்பட்ட அவரை மீர்ஜாபரின் மகன் மீரான் கொலை செய்தார்.

**விளைவுகள்:**

- ❖ ஆங்கிலேயர் முதலில் வங்காளத்தையும், பிறகு இந்தியா முழுவதையும் கைப்பற்ற பிளாசிப்போர் வழி வகுத்தது.
- ❖ கிளைவின் உதவியினால் மீர்ஜாபர் வங்காளத்தின் நவாப்பானார்.
- ❖ 24 பர்கானாக்களில் வரி வசூலிக்கும் உரிமை ஆங்கிலேயருக்கு கிடைத்தது.
- ❖ ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு அடிக்கல் நாட்டிய இராபர்ட் கிளைவ் 1758ல் கல்கத்தா(அ) வங்காளம் (அ) வில்லியம் கோட்டையின் முதல் கவர்னராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ❖ 1760 வரை இந்தியாவிலிருந்தார்.
- ❖ வங்காளம், பீகார் மற்றும் ஒரிஸா பகுதிகளில் இலவசமாக வாணிபம் செய்யும் சலுகை ஆங்கிலேயருக்கு கிடைத்தது.

**4. பக்ஸார் போர் (Battle of Baxar - அக்டோபர் 22, 1764):**

- ❖ முறையான உரிமைகள் அல்லது சிறப்புரிமைகள் எதுவுமில்லாமல் கிளைவின் கட்டுப்பாட்டிலிருந்த மீர்ஜாபர் ஆங்கிலேயர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றனர்.

**காரணங்கள்:**

- ❖ ஆங்கிலேயர் மீது மீர்ஜாபருக்கு ஏற்பட்ட வெறுப்பு
  - இந்துக்களின் நலனை கிளைவ் பாதுகாத்ததால் மீர்ஜாபர் ஆங்கிலேயர் மீது வெறுப்பு கொண்டார்.
- ❖ டச்சுக்காரர்களுடன் மீர்ஜாபர் செய்த சதி ஆங்கிலேயர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள சின்சூராவிலிருந்த டச்சுக்காரர்களுடன் தனது மகன் மீரான் மூலம் ரகசிய தொடர்பு வைத்து கொண்டார் மீர்ஜாபர்.

**வங்காளத்தின் ஆளுநர்கள் :**

- ✓ ராபர்ட் ஆலிஸ் (முதல் நிர்வாகம்) 1757 - 60
- ✓ ஹால்வெல் - 1760
- ✓ பன்ஸ்ட் ஹார்ட் 1760 -65
- ✓ இராபர்ட் கிளைவ் 1765 -67
- ✓ வெரில்ஸ்ட் 1767 -69
- ✓ கார்டியர் 1769 - 72
- ✓ வாரன் ஹேஙங்டிங்க்ஸ் 1772 - 74

- ❖ இதையறிந்த கிளைவ் கி.பி. 1759ல் நவம்பர் 25ல் சந்திர நாகூருக்கும் சின்சுராவுக்குமிடையில் பிதேரா என்ற இடத்தில், ஆங்கில தளபதி கானல் போர்ட் என்பவர் மூலம் டச்சுப்படைகளை தோற்கடித்து அவர்களை இந்தியாவை விட்டு

வெளியேற்றினார். மீர்ஜாபரின் மகன் மீரான் இறந்தார்.

- ❖ இதனால் கிளைவிற்கு பிறகு 1760 ஜூலையில் புதிதாக கவர்னரான வான்சிட் டார்ட் மீர்ஜாபரின் மருமகனான மீர்காசிமுடன் ஒரு ரகசிய உடன்படிக்கையை 1760 செப்டம்பர் 27ல் செய்து கொண்டார். அதன்படி மீர்காசிம் வங்காள நவாப் ஆனார்.
- ❖ பதிலுக்கு பர்துவான், மதினாப்பூர், சிட்டங்காங் ஆகிய மாவட்டங்களை ஆங்கிலேயருக்கு வழங்கினார்.
- ❖ 1761 ல் பாட்னாவில் ஆங்கில பண்டக சாலையின் தலைவராக எல்லிஸ் என்பவர் பொறுப்பேற்ற பிறகு மீர்காசிம் உடன் மோதல் தொடங்கியது.
- ❖ நவாபை மதிக்காமல் தனி வியாபாரம் செய்து வந்தனர் ஆங்கிலேயர்.
- ❖ தனி வியாபாரத்திற்கு வரிச்சலுகைகள் கிடையாது என்றார் மீர்காசிம். அத்துடன் தனது தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து மாங்கீருக்கு மாற்றினார்.
- ❖ தனது ராணுவபலத்தை பெருக்கிக் கொண்டார். மேலும் வங்காளத்தை திரும்பப்பெறும் நோக்கில் அயோத்தி நவாபான சுஜா உத் தௌலாவுடனும், முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்துடனும் ராணுவ கூட்டு ஒன்றை செய்து கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக படைவீரர்களை திரட்டினார்.

**போரின் போக்கு (Course):**

- ❖ ஆங்கிலேயருக்கு எதிராக உருவாக்கப்பட்ட இந்த கூட்டுப்படையை மேஜர் ஹெக்டர் மன்றோ என்பவர் தலைமையிலான ஆங்கிலப் படை 1764 அக்டோபர் 22ல் பக்ஸார் என்ற இடத்தில் போரிட்டு தோற்கடித்தது. அயோத்தியையும் ஆங்கிலேயர் பிடித்தனர்.
- ❖ சுஜா - உத் - தௌலா ஓடிவிட்டார். மீர்காசிம் அனைத்தையும் இழந்து வடமேற்கு இந்தியாவுக்கு ஓட்டம் பிடித்தார்.
- ❖ பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டு அமைதியை நாடினார்.

**விளைவுகள்:**

- ❖ அலகாபாத் உடன்படிக்கை மூலம் ஆகஸ்டு 1765 ல் போர் முடிவிற்கு வந்தது.
- ❖ ஆங்கிலேயர்கள் வங்காளம், பீகார், ஒரிஸாவின் திவானி உரிமம் (வருவாய் மற்றும் பொதுநீதி) 1765ல் பெற்றனர்.

- 1765 பிப்ரவரி 20ல் வங்காள ராணுவத்தை கலைத்து துணை சுபேதார் மூலம் வங்காளத்தை நிர்வகிப்பதாக ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்தார்.
- மீர்ஜாபர் மீண்டும் வங்காள நவாப்பானார். மீர்ஜாபருக்கு பிறகு அவரது இரண்டாவது மகன் நிஜாம் - உத் - தௌலா நவாப்பானார்.
- முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் ஆண்டிற்கு 26 லட்சம் ஓய்வூதியம் மற்றும் காரா, அலகாபாத் பகுதிகளின் திவானி உரிமம் பெற்றார்.
- மீண்டும் இராபர்ட் கிளைவ் வங்காள கவர்னரானார். இரட்டை ஆட்சி முறையை 1765ல் அறிமுகம் செய்தார்.
- இறுதியில் 1772ல் வாரன் ஹேஸ்டிங்ஸால் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டது.
- இரட்டை ஆட்சி முறை என்பது வருவாய் வசூலிக்கும் உரிமம் ஆங்கிலேயரிடமும், நிர்வாகம் (நிஜாமத் உரிமம்) நவாப்பிடமும் இருந்த ஆட்சிமுறையாகும்.
- பக்சார் போர் வெற்றி வட இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை உறுதி செய்தது. முகலாயப் பேரரசு சரியத் தொடங்கியது.

## 5. ஆங்கிலேய மைசூர் போர்கள் (Anglo - Mysore Wars):

- விஜயநகரப் பேரரசின் கீழ் ஒரு பகுதியாக இருந்த மைசூர் கி.பி. 1565ல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போருக்குப் பின் உடையார் வம்சத்தின் இந்து ராஜாவின் கீழ் சுதந்திரமடைந்தது.
- அந்த வம்சத்தினர் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை மைசூரை ஆண்டு வந்தனர். அவர்களில் நஞ்ச ராஜ் என்ற அரசரின் கீழ் துணிச்சல் வீரராய் விளங்கிய ஹைதர் அலி என்ற முகமதியர் தன்னுடைய திறமையாலும் தந்திரத்தினாலும் நஞ்சராஜை வென்று கான் பகதூர் என்ற பட்டத்துடன் மைசூர் அரசரானார்.
- கர்நாடகப்பகுதிக்கு அருகிலுள்ள பகுதியே மைசூர் பகுதியாகும்.
- எனவே கர்நாடகப் பகுதியை கைப்பற்றிய ஆங்கிலேயர்களின் செயல்களால் அதிர்ச்சி மற்றும் கோபமடைந்து கர்நாடகத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஆங்கிலேயரை வெளியேற்ற திட்டமிட அதுவே ஆங்கிலேய - மைசூர் போருக்கு காரணமாக அமைந்தது.

### i. முதல் ஆங்கிலேய மைசூர் போர் (First Anglo Mysore - 1767 -69)

**காரணங்கள்:**

- கர்நாடகப் பகுதியிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஆங்கிலேயரை விரட்ட ஹைதர் அலி முயன்றார்.
- ஆங்கிலேயரும் தங்கள் எல்லையை விரிவுபடுத்த முயன்றனர்.
- ஹைதர் அலியின் தென்னிந்திய படையெடுப்பு மற்றும் ஆக்கிரமித்தல் ஆகியவை ஆங்கிலேயரிடம் அச்சத்தை ஏற்படுத்தின.
- ஹைதர் அலி தனது படையில் பிரெஞ்சு வீரர்களை சேர்த்துக்கொண்டு படையை மேலும் நவீனரகமாக வலுப்படுத்தினார்

**போரின் போக்கு:**

- மராத்தியர்களுக்கு பணம் கொடுத்து தந்திரமாக தன் வசப்படுத்திக் கொண்டார் ஹைதர் அலி. 1767ல் நிஜாம் அலி, ஆங்கிலேய படைத்தளபதி ஜோசப்ஸ்மித் என்பவருடன் சேர்ந்து மைசூரை தாக்க, அவர்களை தோற்கடித்து தன் வசப்படுத்தினார் ஹைதர்.
- கேப்டன் நிக்சன் என்பவரை தோற்கடித்து ஈரோட்டை கைப்பற்றினார் ஆனால் ஹைதர் படைகள் ஆற்காடு மாவட்டத்தில் சங்கமா என்ற இடத்திலும், திருவண்ணா மலையிலும் ஆங்கிலேய தளபதி ஜோசப் ஸ்மித் என்பவரால் தோல்வியை தழுவின.
- அதிக இழப்பு ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது.

**விளைவுகள்:**

- கேப்டன் புரூக் என்பவர் மூலம் ஆங்கிலேயர்கள் ஹைதர் அலியுடன் சமாதானமாக கி.பி. 1769ல் மதராஸ் உடன்படிக்கை செய்து கொண்டனர்.
- இவ்வுடன்படிக்கையின்படி இரு சாரரும் அவரவர் கைப்பற்றியிருந்த இடங்களை திரும்ப கொடுக்க உடன்பட்டனர்.
- மேலும் பாதுகாப்பு போரில் ஈடுபடும் போது ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

### ii. இரண்டாம் மைசூர் போர் (1780 - 84):

**காரணங்கள்:**

- 1771ல் மைசூர் மராத்தியர்களால் தாக்கப்பட்டது. சென்னை உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் ஹைதர் அலிக்கு உதவிக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் உதவிக்கு ஆங்கிலேயர்கள் வரவில்லை.

**போரின் போக்கு:**

- 1780ல் கர்நாடகத்தின் மீது படையெடுத்து ஹைதர் அலி ஆற்காட்டை கைப்பற்றினார்.
- பெய்லி என்ற ஆங்கிலேய தளபதியின் படைகளை பொளிலூரில் தோற்கடித்தார். ஆனால் 1781 ஜூலையில் போர்டோ நோவா என்னுமிடத்தில் சர் அயர் கூட் என்ற ஆங்கிலேய தளபதியால் ஹைதர் அலி தோற்கடிக்கப்பட்டார்.
- இப்போரில் ஹைதர் அலிக்கு நிறைய இழப்பு ஏற்பட்டது. அச்சமயத்தில் 1782 டிசம்பரில் முதுகில் ஏற்பட்டிருந்த புற்று நோயினால் ஹைதர் அலி இறந்து போனார்.
- அவருக்குப் பிறகு அவரது மகன் மைசூரின் புலியான திப்பு சுல்தான் மைசூரின் அரசரானார். 1784ல் மங்களூரை திப்பு சுல்தான் கைப்பற்றினார்.

**விளைவுகள்**

- 1784 மங்களூர் உடன்படிக்கையின்படி இருசாராரும் தாங்கள் கைப்பற்றிய இடங்களையும், பிடித்து வைத்திருந்த கைதிகளையும் திரும்பி கொடுக்க ஒப்புக்கொண்டதால் போர் நிறைவு பெற்றது.

**iii. மூன்றாம் மைசூர் போர் (1790 - 92):**

**காரணங்கள்:**

- சுல்தான் என்ற பட்டத்துடன் அரியணைக்கு வந்த திப்பு சுல்தான் மங்களூர் உடன்படிக்கையில் நம்பிக்கை யில்லாமல் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்ட திட்டமிட்டார்.
- ஆங்கிலேயரின் நட்பு நாடான திருவிதாங்கூரை தாக்கினார். ஆங்கிலேயரின் எதிரியான பிரான்ஸ் உடன் நட்பு கொண்டிருந்தார்.
- காரன் வாலீஸ் பிரபுவின் இந்திய வருகை.

**போரின் போக்கு:**

- காரன்வாலிஸ் பிரபு தானே நேரில் தலைமை தாங்கி படையை வழிநடத்தினார்.
- பெங்களூர், கோயம்புத்தூர், ஸ்ரீரங்கப்பட்டிணம் ஆகிய பகுதிகளை கைப்பற்றினார்.
- தனது வலிமையற்ற நிலையை கண்ட திப்புசுல்தான் 1792ல் ஆங்கிலேயருடன் ஸ்ரீரங்கப்பட்டிணம் (அ) சீரங்கப்பட்டிணம் உடன்படிக்கை செய்து கொண்டார்.

**விளைவுகள்:**

- ❖ 1792ல் சீரங்கப்பட்டிணம் உடன்படிக்கை மூலம் போர் முடிவுக்கு வந்தது.
- ❖ திப்பு சுல்தான் தனது ராஜ்யத்தின் பல பகுதிகளான திண்டுக்கல், கோயம்புத்தூர், தர்மபுரி ஆகியவற்றை இழந்தார்.
- ❖ போரின் பேரிழப்பு தொகையை (3 கோடி) திப்பு சுல்தான் கொடுக்கும் வரை திப்புசுல்தான் தனது இரு மைந்தர்களை காரன் வாலீஸ் பிரபுடன் அனுப்ப வேண்டும்.
- ❖ திப்புவின் பதவி பறிக்கப்பட்டு பழைய இந்து வம்சத்திற்கு வழங்கப்பட்டது.

**iv. நான்காம் மைசூர் போர் (1799):**

**காரணங்கள்:**

- ❖ திப்புசுல்தான் இழந்த நிலப்பிரப்புக்களையும், கௌரவத்தையும் மீண்டும் பெற தன்னை ராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலப்படுத்திக் கொள்ள முற்பட்டார்.
- ❖ 1796ல் மைசூரின் அரசர் ஒன்பதாம் சாம்ராஜ் இறப்பிற்கு பிறகு புதிய அரசர் நியமிக்கப்படாததால் அரண்மனையை முற்றுகையிட்டு கைப்பற்றினார்.
- ❖ பிரான்ஸ் ஜேக்கப்பிய கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து சீரங்கப்பட்டிணத்தில் ஒரு ஜேக்கப்பிய கிளையை ஆரம்பித்து பிரெஞ்சுக் கொடியை ஏற்றினார்.
- ❖ ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகப் போரிட மொரிஷியசுக்கு ரிபாட் என்பவரை தூதுவராக அனுப்பினார்.
- ❖ புதிய கவர்னர் ஜெனரலான வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார்.
- ❖ பிரெஞ்சு நெப்போலிய அரசருடன் திப்பு நல்லுறவு கொண்டிருந்தார்.

**போரின் போக்கு:**

- ❖ வெல்லெஸ்லி பிரபு 1799ல் திப்புவிற்கு எதிராக போர் தொடுத்தார்.
- ❖ மார்ச்சில் ஸ்டுவர்டு என்ற ஆங்கிலேய தளபதியாலும், 27 மார்ச்சில் ஜெனரல் ஹாரிஸ் என்பவராலும் முறையே செதாசீர் மற்றும் மாலவல்லி ஆகிய இடங்களில் திப்பு சுல்தானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
- ❖ தனது தலைநகரான சீரங்கப் பட்டிணத்தை காப்பாற்ற நடந்த போரில் திப்பு சுல்தான் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**விளைவுகள்:**

- ❖ புதிய மைசூர் இந்து அரசர் 1799ல் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்.
- ❖ திப்பு சுல்தானின் வாரிசுகள் கைது செய்யப்பட்டு வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.
- ❖ மைசூரின் பெரும்பகுதி ஆங்கிலேயர்களால் இணைத்துக் கொள்ளப்பட்டது.

**ஹைதர் அலி மற்றும் ஆங்கிலேயர் இடையிலான போர்கள் பிரிட்டிஷ் தளபதிகள்**

| | | |
|---|---|---|
| சங்கானா போர் | கார்னல் ஸ்மித் | முடிவில்லை |
| வாணியம்பாடி போர் | கார்னல் ஸ்மித் (1767 - திசம்பர்) | முடிவில்லை |
| முல்பாகல் போர் | கார்னல் ஸ்மித் (1768 - அக்டோபர்) | முடிவில்லை |
| அரியலூர் போர் | கார்னல் ஸ்மித் (1768 - நவம்பர்) | முடிவில்லை |
| போர்ட்டோ நோவா போர் | சர் ஐயர் கூட் (ஜீலை 1781) | ஆங்கிலேயர்வெற்றி |
| பொள்ளிலூர் போர் (காஞ்சிபுரம்) | சர் ஐயர் கூட் (செப் 1781) | ஆங்கிலேயர்வெற்றி |
| சோளிங்கர் போர் | சர் ஐயர் கூட் (அக் 1781) | ஆங்கிலேயர் வெற்றி |

**6. ஆங்கிலேய - மராத்தியப்போர்கள் (Anglo - Maratha Wars):**

- ❖ கி.பி. 1761ல் நடைபெற்ற மூன்றாம் பானிபட்போரில் மராத்தியர்கள் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்களது ஆற்றலும் ஆதிக்கமும் அழியவேயில்லை.
- ❖ கி.பி. 1771ல் முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்தை தங்கள் பாதுகாப்பின் கீழ் கொண்டு வந்தார்கள்.
- ❖ இந்த சூழ்நிலையில் 1772ல் நானா சாகிப்பிற்கு பின் வந்த பேஷ்வா முதலாம் மாதவராவ் இறந்தார். இதனால் மராத்திய தலைவர்களுக்கிடையே பேஷ்வா பதவிக்காக உள்நாட்டு பூசல்கள் ஏற்பட்டன.
- ❖ இந்த பூசல்களில் ஆங்கிலேயர்கள் தலையிட சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் விளைவாக மூன்று ஆங்கில மராத்திய போர்கள் நடைபெற்றன.

இந்தப் போர்களின் முடிவில் மராத்தியர்களின் அதிகாரமனைத்தும் ஒடுக்கப்பட்டது.

### i. முதலாம் ஆங்கில மராத்தியப்போர் (1775 -82):

**காரணங்கள்:**

- கி.பி. 1772ல் முதலாம் மாதவ்ராவின் இறப்பிற்கு பிறகு அவரது சிறுவயது மகன் நாராயணராவ் பேஷ்வா ஆனார்.
- இவருடைய சித்தப்பா ரகுநாதராவ் என்பவர் பேஷ்வா பதவியை அடைய சதிதிட்டம் தீட்டி, 1773ல் நாராயணராவை படுகொலை செய்தார்.
- இதற்கு மூன்றாவது பானிபட் போரில் தப்பிப்பிழைத்த நானாபட்னாவிஸ் மற்றும் மராத்திய சர்தார் தலைவர்களான இந்தூரின் ஹோல்கர்கள், குவாலியரின் சிந்தியாக்கள், நாக்பூரின் போன்ஸ்லேக்கள், பரோடாவின் ஹெய்க்வர்துகள், எதிர்ப்பு தெரிவித்து மராத்திய மாகாணங்களை விட்டு விரட்டினார்.
- வேறுவழியின்றி பேஷ்வா பதவிக்காக ரகுநாதராவ் பம்பாயிலிருந்த ஆங்கிலேயரின் உதவியை நாடினார்.
- கி.பி. 1775 மார்ச் 7 ரகுநாதராவுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே சூரத் உடன்படிக்கை ஏற்பட்டது. இதனை வாரன் ஹேஸ்டிங்ஸ் வரவேற்றார்.
- ஆனால் ஆங்கிலேய கர்னல் கீட்டிங் தலைமையிலான படை சால்செட் மற்றும் பஸீன் பகுதிகளை கைப்பற்றியதை தலைமை ஆலோசனை குழு ஏற்கவில்லை.
- இந்த சிக்கலை தீர்த்து வைப்பதற்காக கி.பி. 1776ல் கானல் அப்டன் என்பவரை கல்கத்தா ஆலோசனைக்குழு அனுப்பியது.
- சூரத் உடன்படிக்கையை ரத்து செய்து விட்டு மராத்திய தலைவரான நானா பட்னாவிஸ் என்பவருடன் 1776 மார்ச் 1 ல் புரந்தர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி நாராயணராவின் மகனான இரண்டாம் மாதவராவ் பேஷ்வாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.
- வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு எதிராக ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் புரந்தர் உடன்படிக்கையை ஆதரித்தனர்.
- ஆனால் கம்பெனியின் நிர்வாக இயக்குனர்களே வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு ஆதரவாக சூரத் உடன்படிக்கையை ஆதரித்தனர்.
- இதற்கிடையில் நானா பட்னாவிஸ், லூபின் என்ற பிரெஞ்சு

அதிகாரியுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தார்.

❖ இதனை பம்பாய் அரசு எதிர்க்கவே போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு:**

❖ ஆங்கிலேயப்படை கர்னல் ஈகர்டன் தலைமையில் புறப்பட்டு, டெலிகான் என்ற இடத்தில் மராத்தியப்படை களுடன் மோதி மராத்தியப் படையால் தோற்கடிக்கப்பட்டது. கி.பி. 1779ல் மகாதஜி சிந்தியாவிற்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே வாட்கன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

❖ வாட்கன் உடன்படிக்கையை வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்க மறுத்து தளபதி கோடர்டு தலைமையில் வங்காளத்திலிருந்து ஒரு வலிமைமிக்க படையை அனுப்பினார்.

❖ அப்படை மத்திய இந்தியாவில் பல வெற்றிகளை பெற்று மராத்தியர்களின் தலைமையிடமான பூனாவை நோக்கி முன்னேறியது. குவாலியர் கைப்பற்றப்பட்டது.

❖ சிந்தியா "சிப்ரி" என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார். எனவே நிலைமையை புரிந்து கொண்ட மகாதஜி சிந்தியா பூனா அரசாங்கத்திற்கும், ஆங்கிலேயருக்குமிடையே உடன் படிக்கை ஏற்பட முயற்சித்தார்.

**விளைவுகள்:**

❖ கி.பி. 1782ல் சால்பை உடன்படிக்கை (Treaty of Salbai) படி முதல் மராத்தியப் போர் முடிவிற்கு வந்தது.

❖ இரண்டாம் மாதவராவ் பேஷ்வாவாக ஆங்கிலேயர்களால் அங்கீகரிக்கப்பட்டார். ரகுநாதராவிற்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

❖ மராத்தியர்களுடன் அடுத்த 20 ஆண்டுகளுக்கு அமைதிக்கு வழி வகுத்தது.

❖ சால்செட், பஸீன் பகுதிகள் ஆங்கிலேயருக்கு கிடைத்தன.

**ii. இரண்டாவது ஆங்கிலேய மராத்தியப் போர் (1803 - 05):**

**காரணங்கள்:**

❖ 1795 - ம் வருடம் பேஷ்வா இரண்டாம் மாதவ்ராவ் தற்கொலை செய்து கொண்டு இறந்ததால் பாஜிராவ் பேஷ்வாவாக 1796ல் பதவி ஏற்றார். அவரது முதலமைச்சராக நானா பட்னாவிஸ் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

❖ மராத்திய தலைவர்களான சிந்தியா, ஹோல்கர், போன்ஸ்லே ஆகியோரிடையே போட்டியை அதிகப்படுத்தி மோதலை

ஏற்படுத்தினார் இரண்டாம் பாஜிராவ்.

- கி.பி. 1798ல் வெல்லெஸ்லி பிரபு அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தை மராத்தியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.
- மராத்திய பேரரசை பாதுகாத்த நானாபட்னாவிஸ் 1800ல் பூனாவில் இறந்தார். இதனால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டு மராத்திய தலைவர்களிடையே பிளவு ஆரம்பித்தது. பூனாவில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த தவுலத்ராவ் சிந்தியாவும், ஜஸ்வந்த்ராவ் ஹோல்கரும் தங்களுக்குள் கடுமையாக போரிட்டனர்.
- இதனால் அதிர்ச்சியடைந்த பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் பசீன் என்ற இடத்திற்கு தப்பியோடி ஆங்கிலேயர்களுடன் 1802ல் துணைப்படைத்திட்ட ஒப்பந்தமான பசீன் உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த உடன்படிக்கையின்படி ஆங்கிலப் படை ஒன்று ஆர்தர் வெல்லெஸ்லி என்பவரின் தலைமையில் சென்று அங்கு பேஷ்வாவை மீண்டும் பதவியில் அமர்த்தியது. இதனால் மற்ற மராத்திய சர்தார்கள் ஆங்கிலேயரை எதிர்க்க போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு:**

- ஆர்தர் வெல்லெஸ்லி அகமதாபாத்தை கைப்பற்றினார். சிந்தியாவின் படைகளை நர்மதை ஆற்றுக்குத் தெற்கே உள்ள அஸ்ஸே என்ற இடத்தில் தோற்கடித்தார்.
- மேலும் போன்ஸ்லேயின் படைகளை ஆர்கான் என்ற இடத்தில் தோற்கடித்து பர்கான்பூர், அஸ்ஸீர்கார் ஆகிய இடங்களை கைப்பற்றினார்.
- இதன் விளைவாக வெல்லெஸ்லி போன்ஸ்லேயுடன் தியோகன் உடன்படிக்கை செய்து கொண்டார். சிந்தியாவுடன் சுர்ஜி - அர்ஜன்கான் என்ற உடன்படிக்கை செய்தார் வெல்லெஸ்லி.
- சிந்தியாவின் பகைவர் என்பதால், ஜஸ்வந்த்ராவ் ஹோல்கர் இப்போரில் மராட்டியரை ஆதரிக்காமல் தனிமை காத்தார். வெல்லெஸ்லி ஒப்பந்தம் செய்யத்தூண்டிய போது பெரும் கோரிக்கைகளை ஹோல்கர் முன் வைத்தார்.
- இதனால் வெல்லெஸ்லி அவர் மீது போர் தொடுத்தார்.

இப்படையெடுப்பு நன்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆங்கிலேய தளபதிகளின் சில தவறுகளால் ஹோல்கரை வெல்லத்தவறினர். 1806ல் ஆங்கிலேயர்களுடன் ஹோல்கர் சமாதானம் செய்து கொண்டு ராஜபுத்திரப்பகுதிகளில் சுதந்திரமாக செயல்படும் உரிமையை பெற்றார்.

**விளைவுகள்:**

- ❖ அனைத்து மராத்திய சர்தார்களும் துணைப்படை திட்டத்தில் கையொப்பமிட சூழ்நிலையை உருவாக்கினர் ஆங்கிலேயர்கள்.
- ❖ மராத்தியர்கள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் வந்தனர். ஆனால் ஹோல்கரிடம் ஆங்கிலேயர் அடைந்த தோல்வி வெல்லெஸ்லி பதவி விலகுவதற்கு காரணமாகிவிட்டது.

**iii. மூன்றாவது ஆங்கிலேய மராத்தியப்போர் (1817 -18):**

**காரணங்கள்:**

- ❖ பிண்டாரி என்ற கொள்ளைக் கூட்டத்திற்கும் மராத்தியர்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. மராத்தியர்கள் பிண்டாரிகளை அவ்வப்போது கூலிப்படை வீரர்களாக பயன்படுத்தி வந்தனர்.
- ❖ எனவே கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் பிரபு பிண்டாரிகளை ஒழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார். இதனால் மராத்தியர்களுடன் மோதல் ஏற்படும் என்பதை உணர்ந்தார்.
- ❖ பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் தன்னுடைய தலைமையின் கீழ் மராட்டியக் கூட்டமைப்பை திரும்பவும் நிலைப்படுத்தி ஆங்கிலேயரின் ஆட்சியை ஒழித்துவிட திட்டமிட்டார்.
- ❖ 1817 ஜூன் 13 பூனாவிலிருந்த ஆங்கிலப் பிரதிநிதி எல்பின்ஸ்டன்,பாஜிராவை பூனா உடன்படிக்கையை கட்டாயமாக ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். இதனால் ஆத்திரமடைந்த பேஷ்வா பூனாவிலிருந்த ஆங்கிலப் பிரதிநிதியின் தங்குமிடத்தை கொளுத்த போர் ஆரம்பமானது.
- ❖ பேஷ்வா, கிர்கே என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார். அதே போல் போன்ஸ்லே தலைவர் அப்பாசாகிப் தாம் 1817 மே 17ல் கையெழுத்திட்ட நாக்பூர் உடன்படிக்கையை ஏற்க மறுத்தார். இவ்வுடன்படிக்கையின் படி நாக்பூர் வணிகக்குழுவின் கட்டுப்பாட்டில் வந்தது. அப்பா சாகிப் 1817 நவம்பரில் பிரிட்டிஷாருடன்

நடைபெற்ற சிதாபல்தி போரில் முறியடிக்கப்பட்டார். பேஷ்வா இச்சமயத்தில் ஹோல்கரின் உதவியை நாடினார். ஆனால் பிரிட்டிஷார் 1817 டிசம்பர் 21ல் பரோடாவில் ஹோல்கரை முறியடித்து துணைப்படை உடன்படிக்கையில் மண்ட சோர் கையெழுத்திட செய்தனர்.

- ❖ பரோடாவின் கெயிக்வார் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, அகமதாபாத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷாருக்கு வழங்கினார்.
- ❖ 1818ல் சிந்தியா பிரிட்டிஷாருடன் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட நேரிட்டது.

**விளைவுகள்:**

- ❖ பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டு, கடைசி இரண்டாம் பாஜிராவ் கான்பூருக்கு அருகிலுள்ள பித்தூர் என்ற இடத்தில் ஆண்டுக்கு 8 லட்ச ரூபாய் ஓய்வூதியத்துடன் ஓய்வெடுக்க அனுமதிக்கப்பட்டார்.
- ❖ அனைத்து மராத்திய பகுதிகளையும் பிரிட்டிஷா இணைத்து பம்பாய் மாகாணத்தை ஏற்படுத்தினர்.
- ❖ சிந்தியா தவிர மற்றவர்கள் தனிப்படை வைத்துக்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

- ✓ பாலாஜி விஸ்வநாத்- 1713 - 20
- ✓ பாஜி ராவ் - I - 1720 -40
- ✓ பாலாஜி பாஜி ராவ் - 1740 -61
- ✓ மாதவ் ராவ் I - 1761 - 1772 (நானா சாகிப்)
- ✓ நரேன் ராவ் - 1772 -74
- ✓ மாதவ் ராவ் II - 1774 -95
- ✓ பாஜி ராவ் II - 1796- 1818 (கடைசி பேஷ்வா பித்தூரில் ஜனவரி 1851 ல் இறந்தார்)

**7. ஆங்கிலேய - சீக்கியப்போர்கள்:**

- ❖ ரஞ்சித்சிங்கின் மறைவிற்குப்பின் சீக்கிய அரசு வலுவிலக்க ஆரம்பித்ததால் நாட்டில் தோன்றிய கலகங்களும், நடைபெற்ற கொலைகளும் சீக்கிய அரசை சீர் குலைத்தன.
- ❖ நாட்டில் ஆட்சி அமைப்பு முறையே இல்லாமல் போய் விட்டது.
- ❖ இப்படி நாட்டுக்குள் எழுந்த குழப்பம், ஆட்சிமுறை இல்லாத நிலை ஆகியவை ஒன்று சேர்ந்து இறுதியில் ஆங்கிலேயர்களுடன் போர் ஏற்படுவதற்கு வழிவகை செய்தன. இரண்டு ஆங்கிலேய - சீக்கியப்போர்கள் நடைபெற்று, இறுதியில் ஆங்கில அரசு வெற்றி பெறவே பஞ்சாப் ஆங்கிலப்

பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

### i. முதல் ஆங்கில - சீக்கியப் போர் (1845 - 46):

- 1843ல் தலீப்சிங் என்ற ஐந்து வயது சிறுவன் அரசராக அறிவிக்கப்பட்டார்.
- அவரது தாய் ஜிண்டான் என்பவர் அவருக்கு பாதுகாவலராக இருந்து ஆட்சி செய்து வந்தார். ஆனால் ஜிண்டானாவினால் ஆட்சியை ஒழுங்குபடுத்த முடியவில்லை.
- கால்சா படையின் தளபதிகளே உண்மையான அதிகாரத்தை வைத்திருந்தனர்.
- கால்சா படையின் தேஜ்சிங் என்பவர் பஞ்சாயத்து பிரதிநிதிகள் அல்லது ஐவர் குழுக்கள் மூலம் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றி சர்வாதிகாரியான கால்சா படையை மாற்றினார்.
- கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ்ச் பிரபு கால்சா படையின் போக்கைக்கண்டு சில பாதுகாப்பு நடவடிக்கைகளான கோட்டைகளை பலப்படுத்துதல், பாலம் கட்டுதல், படகுகள் கட்டுதல் போன்றவைகளை மேற்கொண்டார். இதைக்கண்ட சீக்கியப் படையினர் ஆத்திரம் அடைந்து, நாட்டின் சுதந்திரத்தை காக்க போரிட்டே ஆக வேண்டுமென்று முடிவிற்கு வந்தனர்.
- கால்சா படையின் ஆதிக்கத்தையும் அட்டூழியத்தையும் ஒடுக்க நினைத்த ராணி ஜிண்டான், சீக்கியரின் ஆவேசத்தை ஆங்கிலேயர்களுக் கெதிராக தூண்டிவிட்டாள்.
- ஆங்கிலேயர் பஞ்சாபை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் என்ற வதந்தியை பரப்பி தேஜ்சிங் மற்றும் லால் சிங் போன்றோர் தலைமையில் சீக்கியப்படை 1845 டிசம்பர் 11ல் சட்லஜ் நதியை கடந்தது போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு:**

- 1845 டிசம்பர் 13ல் ஹார்டிஞ்ச் பிரபு போர் பிரகடனம் செய்தார். இருபடைகளுக்கும் கடுமையாக நடைபெற்ற போரில் ஆங்கிலத்தளபதி ஹியுஹஃப் என்பவர் பெரோஸ்பூருக்கு தென் கிழக்கே இருந்த முட்சி என்ற இடத்தில் சீக்கியப்படை தோற்கடித்தார்.
- இந்த வெற்றிக்குப்பின் 1845 டிசம்பர் 31 ல் பெரோஸ்ஷரி என்ற இடத்தில் நடந்த போரிலும், பிறகு அலிவால் போரிலும், சப்ரான் போரிலும் சீக்கியப்படை தோற்கடிக்கப்பட்டது.

- ❖ 1846 பிப்ரவரி 20-ல் லாகூர் கைப்பற்றப்பட்டது. இப்போர் லாகூர் உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது.

**விளைவுகள்:**

- ❖ லாகூர் உடன்படிக்கை 1846 மார்ச் படி சட்லஜ் நதிக்கு இடப்பக்கத்தில் இருக்கும் பிரதேசங்களையும் சட்லஜ் நதிக்கும், பியாஸ் நதிக்கும் இடையிலுள்ள ஜலந்தர் தோ ஆப் என்ற பகுதியையும் சீக்கியர்கள் ஆங்கிலேயரிடம் இழக்க நேரிட்டது.
- ❖ சிறுவனான தலீப்சிங் மகாராஜாவாகவும், ஜிண்டான் ராணியை அரசரின் பாதுகாவலராகவும் லாசிங் என்பவரை முதலமைச்சராகவும் ஆங்கிலேயர் ஒப்பு கொண்டனர்.
- ❖ லாகூர் அரசாங்க உள்நாட்டு விவகாரங்களில் ஆங்கில அரசு தலையிடாது. லாகூரில் ஆங்கில பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஹென்றி லாரன்ஸ் என்பவரிடமே ஆட்சி அதிகாரம் இருந்தது. இதனால் பஞ்சாபின் உண்மை ஆட்சி ஆங்கிலேயருக்கே மாறியது.

**ii. இரண்டாவது ஆங்கில சீக்கியப் போர் (1848 - 49):**

**காரணங்கள்:**

- ❖ சீக்கிய வீரர்கள் தங்கள் தோல்வியும், அவமானமும் தங்கள் தலைவர்களின் துரோகத்தினால் தான் ஏற்பட்டது என திட்டவட்டமாக நம்பினர். பஞ்சாபில் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்பட்டதை வெறுத்தனர். ஆங்கிலேயர்களுக்கு எதிராக கலகம் செய்யத்தக்க சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தனர்.
- ❖ ஆங்கிலேயருக்கு எதிராக சதியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி அரசரின் தாயாரான ஜிண்டான் ராணியை லாகூரிலிருந்து ஆங்கிலேயர் வெளியேற்றினர். இது சீக்கிய மக்களின் அதிருப்தியை அதிகப்படுத்தியது.
- ❖ பெஷாவரை ஆப்கானியர்களுக்கு கொடுப்பதாக கூறி அவர்களையும் சீக்கியர்கள் தங்களுடன் சேர்த்துக் கொள்ள இரண்டாம் ஆங்கிலேய சீக்கிய போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு:**

- ❖ ஹஃப் பிரபுவின் தலைமையில் போரிட்ட ஆங்கிலப்படைகள் சில்லியன் வாலா வெற்றிக்கு பின்னர் 1849 பிப்ரவரி 21-ல் சீனாப் நதிக்கு அருகிலுள்ள குஜராத் என்ற நகரில் சீக்கியப்படைகளையும் ஆப்கானியர்களையும் தோற்கடித்தனர்.
- ❖ ஆப்கானியர்கள் கைபர் கணவாய், காபூல் வரையிலும் சர் வால்டர்

கில்பர்ட் என்ற ஆங்கிலத் தளபதியால் விரட்டியடிக்கப்பட்டனர். டல்ஹௌசி பிரபுவால் பஞ்சாப் ஆங்கில அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

**விளைவுகள்:**

- ❖ தலீப்சிங்கிற்கு ஆண்டிற்கு 5 லட்சம் ஓய்வூதியம் வழங்கி தன் தாய் ஜிண்டான் ராணியுடன் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.
- ❖ சர் ஜான் லாரன்ஸ் பஞ்சாபின் முதல் தலைமை ஆணையராக நியமிக்கப்பட்டார்.
- ❖ பஞ்சாப் ஆங்கிலேய ஆட்சிக்குள் கொண்டு வரப்பட்டதால் வட மேற்கில் ஆங்கிலப் பேரரசின் எல்லை இந்தியாவின் இயற்கை எல்லையாகிய இமயமலைப் பிரதேசத்தை எட்டியது.

**8. ஆங்கிலேய - பர்மியப் போர்கள் (Anglo - Burmesewars):**

- ❖ பர்மாவில் (மியான்மர்) 1752 - 60 களில் ஆலம்பயா என்பவர் ஆட்சியை ஏற்படுத்தினார்.
- ❖ அவருக்குப்பிறகு ஆட்சிக்கு வந்த போதாவ் பயாவும், பாகீதா என்பவரும் எல்லா திசைகளிலும் தங்கள் ஆட்சியை விரிவுபடுத்தினார்கள்.
- ❖ குறிப்பாக போதாவ் பயா சீனப்படையெடுப்பை தடுத்து அவர்களை வெளியேற்றி கி.பி. 1813ல் அரக்கன் மற்றும் மணிப்பூர் பகுதிகளை கைப்பற்றினார். ஆங்கிலேயர்களுக்கும் பர்மியர்களுக்கும் இடையே மூன்று போர்கள் நடைபெற்றன.
- ❖ முதலாவது ஆங்கில பர்மியப் போர் அமர்ஸ்ட் பிரபு காலத்திலும், இரண்டாவது, மூன்றாவது ஆங்கில பர்மியப் போர் டப்ரின் பிரபு காலத்திலும் நடைபெற்றன.
- ❖ இந்தப் போர்களில் ஆங்கிலேயர்கள் பர்மாவை இணைத்துக் கொண்டனர்.

**i. முதலாவது ஆங்கில - பர்மியப் போர் (1824 - 26):**

**காரணங்கள்:**

- ❖ பர்மியர்களுடன் போர் ஏற்படாமல் தடுப்பதற்காக, ஆங்கிலேய அரசு பர்மாவிற்கு அனுப்பிய தூதர்களான கேப்டன் சிம்ஸ், கேப்டன் கானிங், கேப்டன் காக்ஸ் ஆகியோர் பர்மா அரசால் சரியாக நடத்தப்படவில்லை.
- ❖ பர்மாவிலிருந்து தப்பி ஓடியவர்களை ஆங்கில கம்பெனி திரும்ப ஒப்படைக்க மறுத்ததால் இருநாடுகளுக்கிடையே உறவு மோசமாகியது.
- ❖ பர்மிய அரசு ஆங்கிலேயர்களுக்கு உரிமையான சிட்டகாங்கிற்கு அருகிலிருந்த ஷாபுரித்தீவை 1823ல் கைப்பற்றியது.

❖ இதனையறிந்த கவர்னர் பர்மா மீது போர் தொடுத்தார்.

**போரின் போக்கு**

❖ ஆங்கிலேயர்களால் கடல்வழி மற்றும் நில வழிகள் மூலம் பர்மா தாக்கப்பட்டது.

❖ தளபதிகள் கேம்பல், மாரியட் தலைமையில் கப்பல்படை அனுப்பப்பட்டது.

❖ அசாமிலிருந்த பர்மியர்கள் விரட்டப்பட்டனர். ஆனால் பர்மிய தளபதி பந்துலா ஆங்கிலப்படையை தோற்கடித்தார்.

❖ ரங்கூன் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது. பர்மியர்களின் தலைநகரமான ஆவா கைப்பற்றப்பட்டது. யாண்டபூ என்ற இடத்திற்கு முன்னேறியது ஆங்கிலப் படைகள் ஆனால் பர்மியர்கள் **1826ல் யாண்டபூ உடன்படிக்கையை** ஆங்கிலேயர்களுடன் செய்து கொண்டதால் போர் முடிவடைந்தது.

**விளைவுகள்:**

❖ அரகான் டேனாசரிப் பகுதிகள், அஸ்ஸாம் கச்சார் ஆகிய பகுதிகள் ஆங்கிலேயர் வசம் வந்தது.

❖ மணிப்பூரை சுதந்திர நாடாக்க பர்மியர் ஒப்புக் கொண்டனர்.

**ii. இரண்டாவது ஆங்கிலேய பர்மியப் போர் (1852 - 56):**

**காரணங்கள்:**

❖ ஆவாவில் இருந்த பிரிட்டிஷ் தூதுவர்கள் பர்மிய அரசால் இழிவாக நடத்தப்பட்டனர்.

❖ தாராவட்டி என்பவர் பர்மாவின் புதிய அரசராக 1837 ல் பதவியேற்றார்.

❖ 1848ல் கவர்னர் ஜெனரலாக பொறுப்பேற்ற டல்ஹௌசி பிரபு பர்மாவை ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முடிவு செய்தார்.

**போரின் போக்கு:**

❖ 1852ல் ஜெனரல் காட்வின், அட்மிரல் ஆஸ்டின் ஆகியோரின் தலைமையில் ஒரு ஆங்கிலப்படை ரங்கூனை அடைந்து மார்ட்டபன், பஸ்ஸீன், புரோம் மற்றும் பெகு ஆகிய இடங்களை கைப்பற்றியது.

**விளைவுகள்:**

❖ போரின் இறுதியில் ஒரு பிரகடனம் மூலம் பெகு அல்லது கீழ்பர்மாவை ஆங்கிலேய அரசுடன் இணைத்துக் கொண்டார் டல்ஹௌசி. இதனால் ஆங்கிலப்பேரரசு சால்வின் நதிக்கரை வரையிலும் பரவியது.

**iii. மூன்றாவது ஆங்கிலேய பர்மியப்போர் (1885 -86):**

**காரணங்கள்:**

- பர்மிய அரசர் திபா பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனிக்கு வியாபார சலுகைகள் வழங்கினார்.
- பர்மியப் பகுதியில் நிர்வாகம் மற்றும் வாணிபத்தை கட்டுப்படுத்திய ஆங்கிலேய அரசின் அதிகாரிகளை கைது செய்து அவர்களுக்கு அபராதம் விதித்தார் திபா.

**போரின் போக்கு**

- டப்ரின் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் 1885ல் ஆங்கிலதளபதி ஹேரி பிரண்டர் காஸ்ட் பர்மா மீது போர் தொடுக்கப்பட்டது. தீபா சரணடைந்தார்.
- வைசிராய் தலைமையில் பர்மா முழுவதுமாக ஆங்கில - இந்திய பேரரசில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

**விளைவுகள்:**

- 1885 -1935 வரை பர்மா இந்தியாவுடன் ஆங்கிலேய பேரரசால் இணைக்கப்பட்டிருந்தது. 1935ல் இயற்றப்பட்ட இந்திய அரசு சட்டப்படி பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது. பர்மியர்களின் போராட்டத்தினால் ஜனவரி 4, 1948ல் பர்மா பூரண விடுதலை பெற்றது

**9. ஆங்கிலேய ஆப்கான் போர்கள் (Anglo - Afghan Wars):**

**i. முதல் ஆங்கில - ஆப்கானியப் போர் (First Anglo - Afghan):**

**காரணங்கள்:**

- 1838ல் ஆங்கிலேயர் சீக்கியர்கள் பதவியிலிறக்கப்பட்ட அரசர் ஷாசுஜா ஆகியோர் உடன்படிக்கை செய்து கொண்டு ரஞ்சித்சிங் அரசரிடமிருந்து பெஷாவரை வெற்றி கொள்ள ஆங்கிலேயர்களின் உதவியை நாடினார் தோஸ்த் முகம்மது இதற்கு ஆங்கிலேய கவர்னர் ஜெனரல் ஆக்லாண்ட் பிரபு மறுக்கவே பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற்றார் தோஸ்த் முகம்மது.
- இதனையறிந்த ஆக்லாண்ட் பிரபு அலெக்ஸாண்டர் பர்ன்ஸ் என்பவர் தலைமையில் படை ஒன்றை தோஸ்த் முகம்மதுவிற்கு அனுப்பினார். ஆனால் அதை தோஸத் முகம்மது மறுக்கவே மோதல் தொடங்கி போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு:**

- ❖ கி.பி. 1839ல் தோஸ்த் முகம்மதுவிற்கு பதிலாக ஷா சுஜா என்பவரை ஆங்கிலேயர் பதவியில் அமர்த்தினர்.
- ❖ இதனால் ஆப்கானியர்கள் கலகம் செய்து ஆங்கிலேயரை தாக்கவே, வேறு வழியில்லாமல் தோஸ்த் முகம்மதுவை மீண்டும் அரியணையில் அமர்த்தினர்.
- ❖ இறுதியாக 1842ல் காபூல் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது.

**ii. இரண்டாவது ஆங்கில - ஆப்கானியப் போர் (1878 - 80):**

**காரணங்கள்:**

- ❖ 1863ல் தோஸ்த் முகம்மதுவின் இறப்பிற்கு பிறகு ஆப்கானிய அரியணையில் அமர்ந்த ஷெர் அலி, ஸ்டாலிடாப் என்பவர் தலைமையில் வந்த ரஷ்ய நட்புறவை ஏற்றுக் கொண்டார்.
- ❖ ஆனால் சர் லெவிஸ் பெல்லி மற்றும் சர் நெவில்லி சாம்பர்லின் ஆகியோர் தலைமையில் லிட்டன் பிரபு அனுப்பிய ஆங்கிலேய நட்புறவை ஷெர்அலி வெறுக்கவே போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு**

- ❖ லிட்டன் பிரபுவால் தோற்கடிக்கப்பட்டு ஷெர்அலி தப்பிச்செல்லவே, ஷெர் அலியின் மூத்த மகனான யாகூப்கானுடன் ஆங்கிலேயர் **1879ல் காண்டமக் உடன்படிக்கை செய்து கொண்டனர்.**
- ❖ ஆப்கானியர் விவகாரங்களில் தலையிடாக்கொள்கையை பின்பற்றுவதாக ஆங்கிலேயர் உறுதியளித்தனர்.

**iii. மூன்றாவது ஆங்கில ஆப்கானியப் போர் (1919):**

**காரணங்கள்:**

- ❖ 1919ல் ஆப்கானிய அரசர் ஹபிபுல்லா கொல்லப்படவே, அவரது மகன் அமமுல்லா அரியணையில் அமர்ந்தார்.
- ❖ பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட விரும்பிய அவர் பிரிட்டிஷார் மீது போர் தொடுத்தார்.

**போரின் போக்கு**

- ❖ பிரிட்டிஷாரால் அமமுல்லா தோற்கடிக்கப் பட்டாலும், ராவல்பிண்டி உடன்படிக்கையின்படி, ஆப்கானிய அரசில் அமைதி ஏற்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திலிருந்து ஆப்கானியர்கள் விடுதலை பெற்றனர்.

**ஆங்கிலேய - நேபாளப் போர் (1814 -16)**

- இமயமலையின் அடிவாரத்தில் சட்லஜ் நதியை மேற்கு எல்லையாகவும் பூட்டானை கிழக்கு எல்லையாகவும் கொண்டிருந்தது நேபாளம். அங்குள்ள மக்கள் கூர்கா வகுப்பைச் சார்ந்தவர்கள்.
- சிறந்த போர்வீரர்கள் அயோத்தி நவாபிடமிருந்து ஆங்கிலேயருக்கு கிடைத்திருந்த கோரக்பூர், பதிஸ்பூர் பகுதிகளை கூர்க்காக்கள் அதிகமாக சூறையாடினர்.
- 1814ல் புட்வால், சியோராஜ் ஆகிய மாவட்டங்களையும் நேபாளப் படையினர் கைப்பற்றினர். இதனால் 1814ல் நேபாளத்தின் மீது போர் பிரகடனம் செய்தார் ஹேஸ்டிங்ஸ் பிரபு.

**போரின் போக்கு:**

- ஆக்டர்லோனி, ஜாண்சலீவன் ஷட், மார்லே, கில்லஸ்பி முதலிய ஆங்கிலப்படைத்தலர்கள் திறமையாக போர் புரிந்தாலும் பல இடங்களில் தோல்வி ஏற்பட்டன. ஆனால் தளபதி கார்டினல் என்பவரும், நிக்கோரின் என்பவரும் அய்மோரா என்ற இடத்தைப் பிடித்து சட்லஜ் நதியிலிருந்து காளியாறு வரையிலுள்ள பிரதேசத்தைக் கைப்பற்றினர். இனி போர் செய்வது பயனற்றுப் போகும் என்று எண்ணிய நேபாள தளகர்த்தரான அமர்சிங் 1815 நவம்பர் 28ல் சகௌலி என்ற இடத்தில் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டார்.
- ஆனால் நேபாள மக்கள் உடன்படிக்கையை மறுக்கவே போர் மறுபடியும் ஆரம்பமானது. ஆங்கிலத்தளபதி ஆக்டர்லோனி நேபாள தலைநகர் காட்மாண்டுவை நோக்கி படையெடுத்து சென்று, பூர் என்ற இடத்தில் நேபாள படைகளை தோற்கடித்தார்.
- இறுதியில் **1816ல் நேபாள அரசாங்கம் சகௌலி உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது.** இதன்படி சிக்கிம் பகுதியை விட்டு நேபாள மக்கள் வெளியேறினர்.
- நேபாளத்தின் மேற்குப் பகுதியிலிருந்து குமோவோன், கார்வல் மாவட்டங்களும், சிம்லா குன்றுகளும் தெற்கு எல்லைப் பகுதியிலிருந்த தராய் காட்டுப் பகுதியும் ஆங்கிலேயர்களுக்கு கொடுக்கப்பட்டது.

**ஆங்கில - திபெத் போர் (1903 -04)**

- இமயமலையின் வடக்கு பக்கமாக உள்ள நிலப்பரப்பு திபெத்

என்றழைக்கப்படுகிறது. திபெத் நாட்டின் அரசு புத்தத்துறவிகளால் ஆளப்பட்டு வந்தது.

- ❖ இரண்டு லாமாக்கள் (Lama) தலைவர்களாக இருந்தனர். லாசாவைத் தலைநகராக கொண்ட தலாய்லாமா, காஷில்குன்போவை தலைநகராகக் கொண்ட "தாஷிலாமா" 1903 நவம்பர் 6 ம் தேதி திபெத்திய விவகாரத்தில் நிரந்தரமான தலையீடு எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் ஆங்கில அரசு கர்சன் பிரபுவின் போர் நடவடிக்கைகளுக்கு அனுமதி அளித்தது.
- ❖ 1904 மார்ச் மாதம் குரு என்ற இடத்தில் யங்ஹஸ்பண்ட் என்ற ஆங்கிலதளபதி தலைமையில் நடைபெற்ற போரில் 600 திபெத்தியர்கள் கொல்லப்பட்டனர். 1904 ஆகஸ்டு 3 ம் தேதி பிரிட்டிஷ்படை லாசாவை அடைந்தது.
- ❖ ஆனால் தலாய்லாமா தப்பி ஓடிவிட்டார். பேச்சுவார்த்தையின் இறுதியில் 1904ல் அங்கிலேயர்களின் சார்பில் யங் ஹஸ்பண்டும், திபெத்தியர்களின் சார்பில் தலாய் லாமாவும் லாசா உடன்படிக்கையில் கையெழுத்திட போர் முடிவிற்கு வந்தது.

**சிந்துப்பகுதியை இணைத்தல்:**

- ❖ கி.பி. 1843ல் எல்லன் போரோ பிரபுவின் ஆட்சிக்காலத்தில் சிந்துப்பகுதி ஆங்கிலேயர்களால் இணைக்கப்பட்டது.
- ❖ இப்படி கர்நாடகப் போர்கள், மைசூர் போர்கள், மராத்தியப் போர்கள், பிளாசிப் போர், பக்சார் போர், சீக்கியப் போர்கள், பர்மியப் போர்கள், நேபாள போர், திபெத் போர், சிந்தியை கைப்பற்றும் போர் என்று பல்வேறு போர்களை நடத்தி வெற்றி கொண்டு இந்தியாவையும் அதனைச்சுற்றியிருந்த பகுதிகளையும் இணைந்து ஒரு பரந்த ஒன்றிணைந்த பேரரசாக உருவாக்கினர் ஆங்கிலேயர்கள்.

# பிரிட்டிஷாரின் பேரரசு விரிவுக்கொள்கை

| போர் | ஆண்டு | இடம் | உடன்படிக்கை |
|---|---|---|---|
| முதல் கர்நாடகப் போர் | 1746 - 48 | புனித டேவிட் கோட்டை | அய்லா ஷபேல் உடன்படிக்கை |
| இரண்டாம் கர்நாடகப் போர் | 1748 - 54 | புனித தோம் கோட்டை ஆற்காடு (Arcot) | பாண்டிச்சேரி உடன்படிக்கை (Treaty of Pondichery) |
| மூன்றாம் கர்நாடகப் போர் | 1758 -63 | வான்டிவாஷ் | பாரீஸ் உடன்படிக்கை |
| முதல் ஆங்கில மைசூர் போர் | 1767 - 69 | ஆற்காடு | மதராஸ் உடன்படிக்கை |
| இரண்டாம் ஆங்கில மைசூர் போர் | 1780 - 84 | ஆற்காடு, போரிட்டோதோவா | மங்களூர் உடன்படிக்கை |
| மூன்றாம் ஆங்கில மைசூர் போர் | 1790 - 92 | திருவாங்கூர், ஸ்ரீரங்கப்பட்டினம் | ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை |
| நான்காம் ஆங்கில உடன்படிக்கை | 1799 | ஸ்ரீரங்கப்பட்டினம் | திப்பு சுல்தான் கொல்லப்பட்டார். |
| ஆங்கிலோ கூர்க்கா போர் | 1814 - 16 | பூர் காத்மண்டு | சகாலி உடன்படிக்கை |
| முதல் ஆங்கிலோ பர்மியர் போர் | 1826 | யந்தபூ | யாந்தாபூ உடன்படிக்கை |
| முதல் ஆங்கிலோ - சீக்கியர் போர் | 1845 -46 | முட்கி, பெரோஷா, புத்திவால் | லாகூர் உடன்படிக்கை |
| இரண்டாம் ஆங்கிலோ சிக்கிப் போர் | 1848 - 49 | ராம்நகர், சிலியன்வால், மற்றும் குஜராத் | பஞ்சாப் போருடன் இணைக்கப்பட்டது. |

# பிரிட்டிஷாரின் நிர்வாகம்

- 1765 இராபர்ட் கிளைவால் வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த இரட்டை ஆட்சிமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் வாரன் ஹேஸ்டிங்ஸ். ஆட்சிமுறையை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியே நேரடியாக கவனிக்க வேண்டும் என்றார். இந்த மாற்றத்திற்கு கம்பெனி இயக்குநர்களும் அனுமதியளித்தனர்.
- சீர்திருத்தங்கள் செய்வதில் வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆரம்பித்து 1947 ல் இந்தியா விடுதலை பெரும் வரை கவர்னர் ஜெனரல்கள் மற்றும் வைசிராய்கள் இந்திய நிர்வாகத்தில் நிறைய சீர்த்திருத்தங்களை செய்துள்ளனர்.
- அவர்களுடைய சீர்திருத்தங்களே இன்று நம் நாட்டின் நிர்வாக செயல்பாட்டிற்கான அடிப்படைகளை ஏற்படுத்தின.

## 1. குடிமைப்பணிகள் (Civil Services):

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு இந்திய நிர்வாகத்தில் பணிபுரிய தேவையான பணியாளர்களான குடிமைப்பணியாளர்களை நியமித்து ஆட்சி செய்யும் முறையை முதன் முதலில் ஒருங்கிணைத்து ஏற்படுத்தியவர் கவர்னர் ஜெனரல் காரன் வாலீஸ் பிரபு (1786 - 93) ஆவார். இதனால் **இவர் குடிமைப்பணிகளின் தந்தை (Father of Councounted Civil service)** என்றழைக்கப்படுகிறார்.
- காரன் வாலீஸ் பிரபு குடிமைப்பணிகளை ஏற்படுத்துவதற்கு முன்பு 1773ல் மாவட்ட அளவில் நில வருவாயை வசூலிக்க கலெக்டர் என்ற பதவியை ஏற்படுத்தியிருந்தார். அவருக்கு முன்பு கவர்னர் ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு குடிமைப்பணியாளர்களிடையே இருந்த லஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்க பல முயற்சிகள் எடுத்தார்.
- 1800ல் கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு (1798 - 1805) புதிதாக தெரிவு செய்யப்பட்ட குடிமைப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வில்லியம் கோட்டை கல்லூரியை (Fort William College) கல்கத்தாவில் ஏற்படுத்தினார். ஆனால் 1806ல் வில்லியம் கோட்டை கல்லூரிக்கு கம்பெனி

இயக்குநர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே, அதற்கு பதிலாக குடிமைப்பணியாளர்களுக்கு 2 ஆண்டுகள் பயிற்சியளிக்க இங்கிலாந்தில் ஹெய்லிபரி (Haleibury) என்னுமிடத்தில் கிழக்கிந்திய கல்லூரி (East India college) ஏற்படுத்தப்பட்டது.

- ❖ குடிமைப்பணிகள் ஏற்படுத்தப் பட்டதிலிருந்த போட்டித் தேர்வுகள் மூலம் பணியாளர்கள் தேர்வு செய்யப்படவில்லை.
- ❖ மாறாக கம்பெனி தனது விருப்பத்திற்கு இணங்க பணியாளர்களை தெரிவு செய்து வந்தது. அதே போல் குடிமைப் பணியாளர்களாக பணியாற்ற இந்தியர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.
- ❖ இந்தியர்களின் மீது அக்கறை கொண்ட கவர்னர் ஜெனரல்களில் ஒருவரான வில்லியம் பெண்டிங் பிரபு 1833ல் முதன் முதலில் குடிமைப்பணியாளர்களை தேர்வு செய்ய திறந்த போட்டித்தேர்வுகளை இந்தியர்களுக்கும் அனுமதியோடு அறிமுகப்படுத்த முயற்சி செய்தார்.
- ❖ ஆனால் கம்பெனி இயக்குநர்களின் எதிர்ப்பினால் அத்திட்டம் கைவிடப்பட்டது.
- ❖ பட்டய சட்டம் 1853ன் படி கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபுவின் ஆட்சிக்காலத்தில் இந்தியர்களுக்கு அனுமதியோடு திறந்த போட்டித் தேர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ இதற்காக 1854 ல் மெக்காலே பிரபு தலைமையில் இந்திய குடிமைப் பணிகள் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.
- ❖ இது 1858 வரை நடைமுறையில் கொண்டுவரப்படவில்லை. 1858க்கு பிறகு மகாராணி ஆட்சிகாலத்தில் தான் இது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.
- ❖ குடிமைப்பணியாளர்கள் மற்றும் பணியாளர்களை ஒழுங்குபடுத்த இந்திய குடிமைப்பணிகள் சட்டம் 1861ல் கொண்டு வரப்பட்டது.

**அதன் முக்கிய பரிந்துரைகள்:**

- ❖ குடிமைப்பணி தேர்வு ஆங்கில மொழியில் இலண்டனில் நடத்தப்பட வேண்டும்.
- ❖ அதிக பட்ச வயது 23(1859) லிருந்து 22 (1860) ஆகவும் பிறகு 21 (1866) மற்றும் 19 (1878) ஆகவும் குறைக்கப்பட்டன.
- ❖ 1863 இந்திய குடிமைப்பணியில் (Indian Civil Service -ICS) தேர்வான முதல் இந்தியர் **சத்தியேந்திர நாத் தாகூர்** ஆவார். 1878 - 79 ல் லிட்டன் பிரபு புதிதாக குடிமைப்பணிகள் தேர்வுமுறையை

(Statutory CivilService) அறிமுகப்படுத்த முயன்றார்.

- ஆனால் அது தோல்வியை தழுவியது. இந்திய தேசிய காங்கிரஸ் 1885 ல் குடிமைப்பணிகளில் சீர்திருத்தங்களை வேண்டியது. அவையாவன.
- குடிமைப்பணிகள் தேர்விற்கான அதிக பட்ச வயதினை உயர்த்த வேண்டும்.
- குடிமைப்பணிகள் தேர்வு இந்தியாவிலும் பிரிட்டனிலும் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும்.
- குடிமைப்பணிகளுக்காக பரிந்துரை வழங்க அட்சீசன் கமிட்டி 1886ல் வைசிராய் டப்ரின் பிரபுவால் ஏற்படுத்தப்பட்டது.

**அதன் முக்கிய பரிந்துரைகள்:**

- தேர்வு வயது 23 ஆக உயர்த்தப்பட்டது.
- குடிமைப்பணிகள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டது.

**அவையாவன:**

1. பேரரசு இந்திய குடிமைப்பணி (Imperial Indian Civil Service) - லண்டனில் தேர்வு
2. மாகாண குடிமைப்பணி (Provincial Civil Service) இந்தியாவில் தேர்வு
3. கீழ்நிலை குடிமைப்பணி (Sub - Ordinate Civil service) இந்தியாவில் தேர்வு.

- 1919ல் மாண்ட்போர்ட் அறிக்கை குடிமைப்பணிகள் பற்றி பரிந்துரைகள் வழங்கியது. அவையாவன

(I) பொது குடிமைப்பணிகளில் அதிகளவில் இந்தியர்கள் சேர்க்கப்படவேண்டும்.

(II) ஒரே நேரத்தில் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் குடிமைப்பணிகள் தேர்வு நடத்தப்பட வெண்டும்

- 1924 ல் ஏற்படுத்தப்பட்ட லீ (Lee commission) ஆணையத்தின் பரிந்துரைகள்.

(I) பொதுப்பணியாளர் தேர்வாணையம் ஏற்படுத்தப்பட்டது. (Public Service Commission) இந்திய அரசு சட்டம் 1919ன் படி 1926ல் மத்திய பணியாளர் தேர்வாணையம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(II) 15 ஆண்டுகளில் ICS (Indian Civil Service) பணியில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் உள்ள வேறுபாட்டை நீக்கி இருவரும் 50:50 நிலையை அடைய வேண்டும்.

### இந்திய அரசு சட்டம் 1935:

**பரிந்துரைகள்:**

- கூட்டாட்சி பொதுப்பணியாளர் தேர்வாணையம் (Federal Public Service Commission)
- மாகாண பொதுப்பணியாளர் தேர்வாணையம் (Provincial Public Service Commission)
- இரண்டிற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு இணை பொதுப்பணியாளர் தேர்வாணையம் (Joind Public Service Commission) ஆகியவை ஏற்படுத்தப்படவேண்டும்.
- குடிமைப்பணியாளர்கள் அனைவரும் ஆங்கிலேய அரசின் கட்டுப்பாட்டில் ஏஜெண்டுகளாக மட்டுமே செயல்பட்டனர்.
- 1947 ல் இந்தியா விடுதலை அடைந்த பிறகு (ICS - Indian Civil Service) என்பது இந்திய குடிமைப்பணி என்பது (IAS - Indian Administrative Service) என்ற அகில இந்திய பணியாக மாற்றப்பட்டது. **சர்தார் வல்லபாய் படேல் அகில இந்தியப் பணிகளின் தந்தை** என்றழைக்கப்படுகின்றார்.

### 1. காவல் POLICE - (Protection of life in Civil Establishemnnt)

- சட்ட ஒழுங்கை பாதுகாக்க ஒரு முறையான காவல் படையை 1791ல் காரன் வாலீஸ் பிரபு ஏற்படுத்தினார்.
- காவல்துறை ஒழுங்குமுறைச் சட்டம் (The Police Regulations Act) ஒன்றை பிறப்பித்தார். நேர்மையாகவும், விரைவாகவும் பணியாற்றும் படி காவல் துறையினரின் சம்பளத்தை உயர்த்தினார்.
- நாடு முழுவதிலுமிருந்த ஜமீன்தார்களிடம் கொடுக்கப்பட்டிருந்த போலீஸ் நிர்வாகப் பொறுப்பை எடுத்துவிட்டார்.
- பழைய இந்திய முறையான, தானாக்கள் முறையை புதுப்பித்தார்.
- அதாவது ஒவ்வொரு மாவட்டமும் (தானா) என்ற காவல்துறை வட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 20 சதுர மைல் பரப்பளவுடையதாகும். இவற்றின் தலைவர் தரோகா எனப்பட்ட இந்தியராவார். மாவட்ட காவல் துறையின் ஒட்டு மொத்த பொறுப்பு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமே இருந்தது.

பிறகு 1808ல் மேயோ பிரபு ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒரு கண்காணிப்பாளரை நியமித்தார். இவருக்கு உதவியாக கோயெண்டாக்கள் என்றழைக்கப்பட்ட உளவாளிகள் உதவியாக இருந்தனர்.

❖ 1814ல் இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி வங்காள மாகாணம் தவிர மற்ற பிரிட்டிஷ் - இந்திய பகுதிகளில் தரோகாக்கள் போன்ற கீழ்நிலை காவல் பதவிகள் ஒழிக்கப்பட்டன.

❖ 1828ல் கவர்னர் ஜெனரலாக பொறுப்பேற்ற வில்லியம் பெண்டிங் பிரபு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பதவியை ஒழித்து அவருடைய பொறுப்புகளை மாவட்ட கலெக்டரிடமே கொடுத்து கூடுதல் பணிச்சுமையை வழங்கினார்.

❖ பிறகு காலப்போக்கில் மாகாணங்களில் இப்பணிச்சுமை குறைக்கப்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமே வழங்கப்பட்டது.

❖ போலீஸ், ஆணையம் 1860 ன் பரிந்துரைப்படி இந்திய காவல் சட்டம் 1861(Indian Police Act) கொண்டு வரப்பட்டது.

**ஆணையத்தின் முக்கிய பரிந்துரைகள்**

1. கிராமங்களில் சட்ட ஒழுங்கை பாதுகாக்க காவல் நிலைய அமைப்பு (Civil Constabulary)
2. மாவட்ட காவல் - காவல் கண்காணிப்பாளர்
3. சரகம் (Range) - காவல்துறை ஆய்வாளர் துணைதலைவர் (DIG - Deputy Inspector General)
4. மண்டலம் (அ) மாகாணம் (Province) - காவல்துறை ஆய்வாளர் தலைவர் (Inspector General)

❖ பிரிட்டிஷார் இந்தியாவில் அகில இந்திய காவல் படையை ஏற்படுத்தவில்லை இந்திய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவே காவல்துறையை பிரிட்டிஷார் பயன்படுத்தினர்.

❖ 1902ல் ஏற்படுத்தப்பட்ட காவல் ஆணையம், மாகாணங்களில் குற்றவியல் விசாரணைத் துறையும் (CIB - Central Intelligence Bureau) ஏற்படுத்தப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தது.

❖ இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 1947 - ல் இந்திய காவல்பணி அகில இந்திய பணியாக மாற்றப்பட்டது.

- ❖ இதற்கான பயிற்சி தற்போது சர்தாய் வல்லபாய் படேல் தேசிய போலிஸ் அகாடமி Sardar Vallabai Patel National Police Academy (SVPNPA) ஹைதராபாத்தில் வழங்கப்படுகின்றது.

### 3. நீதித்துறை (Judiciary):

- ❖ ஆரம்பத்தில் நீதித்துறை ஜமீன்தார்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஜமீன்தார்கள் தங்கள் விருப்பப்படியும், தங்களுக்குக் கிடைக்கும் லாபத்திற்கு தகுந்த படியும் தீர்ப்பு கூறினர்.
- ❖ லஞ்சமும், பாரபட்சமும் நிறைந்து காணப்பட்டது நீதித்துறை.

**வாரன்ஹேஸ்டிங்ஸின் நீதித்துறை சீர்த்திருத்தங்கள் (1772 - 85):**

- ❖ ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்கள் சுய நல வாதிகளாக காணப்பட்டதால் ஊழல்கள் மலிந்து போயின.
- ❖ எனவே வாரன் ஹேஸ்டிங்ஸ் கீழ்க்கண்ட புதிய நீதி மன்றங்களை ஏற்படுத்தினார்.

### i. திவானி அதலத் - Diwani Adalat or Civil Court:

- ❖ திவானி அதாலத் என்ற மாவட்ட சிவில் நீதிமன்றங்களை அமைத்தார் வாரன் ஹேஸ்டிங்ஸ் இதன் தலைவர் கலெக்டர் தீர்ப்பு கூறும் அதிகாரம் பெற்றிருந்தார்.
- ❖ இந்துக்கள் இந்து சமயச் சட்டப்படியும், முஸ்லீம்கள் அவர்கள் சட்டப்படியும் விசாரித்து தீர்ப்பளிக்கப்பட்டனர்.

### ii. சாதர் திவானி அதலத் (sadar Diwani Adalat):

- ❖ திவானி அதாலத்திலிருந்து வரும் மேல் முறையீடு வழக்குகளை விசாரிப்பதற்கு ஒரு சிவில் மேல் முறையீடு நீதிமன்றம் கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்டது. அது சாதர் திவானி அதாலத் என்றழைக்கப்பட்டது.
- ❖ கல்கத்தாவிலிருந்த உச்ச நீதிமன்றத்தின் தலைவரே சாதர் திவானி அதாலத்தின் தலைவராவர். உச்ச நீதிமன்றத்தின் இரு உறுப்பினர்களும் இதில் பதவி வகித்தனர். இந்திய அதிகாரிகள் அவர்களுக்கு உதவி செய்தனர்.

### iii. பௌஜ்தாரி அதலத் (Fauzdari Adalat - Criminal Court):

- ❖ கம்பெனியில் உயர் பதவி வகித்து வந்த ஒரு இந்திய அலுவலர் தலைமையில் செயலாற்றியது. இதில் கிரிமினல் வழக்குகள் விசாரிக்கப்பட்டன.
- ❖ கலெக்டரின் பொது மேற்பார்வையில் இது செயலாற்றியது. முஸ்லீம்

சட்டங்களின் அடிப்படையில் விசாரணை நடைபெற்றது.

### iv. சாதர் நிஜாமத் அதலட் (Sadar Nizamat Adalat - Chief Criminal Court):

- ❖ பௌஜ்தார் அதாலத் நீதிமன்றத்தில் விதிக்கப்படும் சொத்துக்களை பறிமுதல் செய்யும் தண்டனையும், மரண தண்டனையும் சாதர் நிஜாமத் அதலத்தின் (முர்சிதாபாத்) ஒப்புதலுக்குப் பிறகே நிறைவேற்றப்பட வேண்டும்.
- ❖ இதில் கவர்னர் ஜெனரலும் ஆலோசனைக் குழுவினரும் அமர்த்திய ஓர் இந்திய நீதிபதி செயலாற்றினார் இதுவே கிரிமினல் மேல் வழக்கு நீதிமன்றமாகும்.

### v. உச்ச நீதிமன்றம் (Supreme Court):

- ❖ 1773ல் இயற்றப்பட்ட ஒழுங்குமுறை சட்டத்தின் படி கல்கத்தாவில் ஒரு உச்ச நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தலைமை நீதிபதியும், மூன்று உபநீதிகளும் நியமிக்கப்பட்டனர்.
- ❖ கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளும், ஆங்கில மக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளும் இதில் விசாரிக்கப்பட்டன.
- ❖ இங்கு ஆங்கிலச் சட்டத்தின் படி விசாரணை நடைபெற்றது. முதல் தலைமை நீதிபதியாக **சர் எலிஜா இம்பே** என்பவர் நியமிக்கப்பட்டார்.

### vi. சட்டத்தொகுப்பு:

- ❖ கற்றறிந்த பண்டிதர்களால் இந்து சட்டத்தொகுப்பு ஒன்று வடமொழியில் உருவாக்கப்பட்டது.
- ❖ இது பாரசீக மொழியிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. இதன் ஆங்கில வடிவம் - இந்து சட்டங்களின் தொகுப்பு என்ற பெயரில் ஹால்ஹெட் என்பவரால் உருவாக்கப்பட்டது.

### காரன்வாலீஸின் நீதித்துறை சீர்திருத்தங்கள் (1786 - 93):

- ❖ மாவட்டக் கலெக்டர் நிர்வாக அதிகாரியாகவும், வரிவசூலை கண்காணிக்கின்றவராகவும், மாவட்ட நீதிபதியாகவும் செயல்பட வேண்டியிருந்ததால் சர்வாதிகாரி ஆவதற்கு வாய்ப்பு இருந்தது. மற்றும் நேர்மையான தீர்ப்பு கூறப்பட வழியில்லை. ஒரு வேலையையும் திறமையாக செய்ய முடியாமல் போனதை அனுபவத்தில் அறிந்த காரன்வாலிஸ் பிரபு மாண்டஸ்கியுவின் அதிகார பிரிவினை தத்துவக் கோட்பாட்டைக் கையாண்டார்.
- ❖ இதன்படி கலெக்டர் மாவட்ட நிர்வாகம் மற்றும் வரிவசூலித்தலை

மட்டும் கவனிக்கும் அதிகாரியானார். நீதித்துறைக்கு தனியாக மாவட்ட நீதிபதி பதவி உருவாக்கப்பட்டது.

❖ மாவட்ட பௌஜ்தாரி நீதிமன்றங்கள் ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக கல்கத்தா, டாக்கா, முர்சிதாபாத் மற்றும் பாட்னா ஆகிய இடங்களில் வட்ட நீதிமன்றங்கள் (Circuit Courts) ஏற்படுத்தப்பட்டன.

❖ ஐரோப்பிய நீதிபதிகளை கொண்ட இந்த நீதிமன்றங்கள் தான் அனைத்து சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளுக்கும் மேல்முறையீடு நீதிமன்றங்கள் ஆகும்.

❖ சாதர் நிஜாமத் அதலத் முர்சிதாபாத்திலிருந்து கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டு கவர்னர் ஜெனரல் மற்றும் அவரது ஆலோசனைக்குழு உறுப்பினர்களும் அங்கு நீதிபதிகளாக பணியாற்றினர். அவர்களுக்கு உதவியாக தலைமை காஸியும், இரு முப்தீகள் என்ற அதிகாரிகளும் (Qazi, Mufties) நியமிக்கப்பட்டனர்.

❖ மாவட்ட திவானி அதலத்துக்கள் பெயர் மாற்றப்பட்டு மாவட்ட, மாநகர மற்றும் ஜில்லா நீதிமன்றங்களாக ஒரு மாவட்ட நீதிபதியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்தன.

**காரன் வாலீஸ் சட்டத்தொகுப்பு (The Cornwallis code 1793) :**

❖ காரன்வாலீஸ் சட்டத்தொகுப்பு நாட்டின் நிர்வாகம், நீதி, காவல் துறை, நிதி, வரிகள் ஆகிய பல்வேறு துறைகளை உள்ளடக்கியது. இம்பேயின் சட்டத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு இதனை தயாரித்தவர் ஜார்ஜ் பர்லோ (George Burlow) என்பவராவார்.

❖ இதன்படி வருவாய் துறையிலிருந்து நீதித்துறை அதிகாரம் பிரிக்கப்பட்டது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதும் உறுதி செய்யப்பட்டது. நீதிமன்றங்களுக்கு செலுத்தப்பட்டு வந்த கட்டணத்தொகை ஒழிக்கப்பட்டது.

❖ நீதித்துறையை சீரமைக்கும் பணியில் நீதிபதியும் சிறந்த அறிஞருமான சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரின் சேவைகளை காரன்வாலிஸ் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார்.

❖ உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்கள் முழுவதுமாக சீரமைக்கப்பட்டன.

**வில்லியம் பெண்டிங்கின் நீதித்துறை சீர்திருத்தங்கள்:**

❖ வட்ட நீதிமன்றங்கள் (Circuit Courts) ஒழிக்கப்பட்டு அதன்

செயல்பாடுகள் கலெக்டரிடம் மாற்றப்பட்டன.

- அலகாபாத்தில் சாதர் திவானி அதலத் மற்றும் சாதர் நிஜாமத் அதலத் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் பெர்ஷிய (பாரசீக) மொழியே நீதிமன்றங்களில் அலுவலக மொழியாக பயன்படுத்தப்பட்டு வந்தது. பெண்டிங்கின் முயற்சியினால் பாரசீக மொழி அல்லது வட்டார மொழிகள் (உள்நாட்டு மொழி - Verna Cular) நீதிமன்றங்களில் பயன்பாட்டிற்கு வந்தன. ஆனால் உச்ச நீதிமன்றத்தில் பாரசீக மொழிக்கு பதிலாக ஆங்கில மொழி புகுத்தப்பட்டது.
- 1833ல் மெக்காலே என்பவர் தலைமையில் சட்ட ஆணையம் இந்திய சட்டங்களை உருவாக்க ஏற்படுத்தப்பட்டது. அதன் மூலம் சிவில் சட்டம் (Civil Procedure code - 1859) இந்திய தண்டனைச்சட்டம் (Indian Penal code - 1860) குற்றவியல் சட்டம் (Criminal Procedure code - 1861) ஆகியவை உருவாக்கப்பட்டன.
- 1865ல் உச்ச நீதிமன்றமும் மற்ற சாதர் அதலத்துக்களும் ஒன்றிணைந்து மதராஸ் கல்கத்தா மற்றும் பம்பாய் ஆகிய இடங்களில் உயர் நீதிமன்றங்களாக உருவாகின.
- இந்திய அரசு சட்டம் 1935 ன்படி ஒரு கூட்டாட்சி நீதிமன்றம் டெல்லியில் 1937ல் ஏற்படுத்தப்பட்டது. இதில் 1 தலைமை நீதிபதியும், 6 நீதிபதிகளும் இருந்தனர்.
- இவரது நீதித்துறை சீர்திருத்தங்களுக்கு சர் சார்லஸ் மெட்கால்ஃப், பட்டர் வொர்த், பெய்லே, மெக்கன்சி முதலியோர் பெரிதும் உதவினர்.

**5. நிலவரித்திட்டம்**

**(Land Revenue Settlement):**

- இந்திய அரசர்கள் நிலவரியை அரசாங்கத்தின் அடிப்படை வருமானமாகக் கொண்டிருந்தனர்.
- முகலாய அரசர்களும் தங்கள் பேரரசை சிறிய பகுதிகளாகப் பிரித்து அதிக நிலவரியை வசூலித்து வந்தனர்.
- நாளடைவில் அவர்கள் வரிவசூலிக்கும் திவானி உரிமையை இந்திய ஜமீன்தார்களிடம் ஒப்படைத்து விட்டு பேரரசுக்கு குறிப்பிட்ட தொகையை குத்தகையாகப் பெற்றனர். ஆனால் விவசாயிகள் இதனை எதிர்த்தனர்.

- பிறகு வங்காளத்தின் திவானி உரிமம் ஆங்கிலேயர்கள் வசம் வந்தது.1772ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் (ஐந்தாண்டு நிலவரித்திட்டம் (Quin Quennial Settlement)) ஒன்றை ஏற்படுத்தினார்.
- இதன்படி நிலங்களின் தரம், வருவாய், வரிவீதம் முதலியவற்றை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தீர்மானித்தார். இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட நிலங்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விடப்பட்டன.
- அதிக தொகை கேட்பவருக்கு நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. ஏலம் எடுத்தவர் ஏலத் தொகையை தவறாமல் கட்ட வேண்டும்.
- இந்த திட்டத்தினால் ஜமீன்தார்கள் தங்கள் பழைய உரிமைகளை இழந்தனர். 1777ல் ஐந்தாண்டு காலம் முடிந்ததும் ஆண்டு தோறும் நிலவரி நிர்ணயம் செய்ய பழைய முறையையே மீண்டும் கொண்டு வந்தார் வாரன்ஹேஸ்டிங்ஸ்.
- கம்பெனியின் வருமானம் நிரந்தரமானதாக இல்லாததால் தனது பணியாளர்களுக்கு செலவாகும் தொகையை நிர்ணயித்து காரியங்களை செயல்படுத்த முடியாமல் போய் விட்டது.

## 6. நிரந்தர நிலவரித்திட்டம் (Permanent Revenue Settlement)

- இந்திய வரலாற்றில் நிலவரித் திட்டத்தை மாற்றியமைத்து நிரந்தரமான ஒரு வருமானத்தை அரசுக்கு கொடுத்த பெருமை காரன்வாலிஸ் பிரபுவையே சாரும். 1793 ல் ஏற்படுத்தபட்ட அந்த நிலவரித்திட்டம் நிரந்தர நிலவரித்திட்டம் அல்லது ஜமீன்தாரி நிலவரி முறையாகும். இந்த திட்டத்தை ஏற்படுத்த காரன் வாலிசுக்கு உறுதுணையாகவும், உதவியாகவும் இருந்தவர்கள் சர் ஜான் ஷோர், ஜேம்ஸ்கிராண்ட், ஜோனாதன்டங்கன் (Sir John Shore, James Grant, Jonathan Duncan) ஆகியோர் ஆவர். ஜமீன்தார்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களின் உரிமையாளர்கள் ஆனார்கள். அப்பகுதியிலுள்ள விவசாயிகளிட மிருந்து அவர்களே வரிவசூலித்துக் கொள்ள வேண்டும்.

- விவசாயிகள் நிலங்களின் குத்தகைத்தாரர்கள் ஆனார்கள்.
- ஜமீன்தார்கள் வசூலிக்கும் நிலவரியில் ஆண்டு தோறும் நிரந்தரமாக 89% வருமானத்தை அல்லது (10/11) பங்கு நிரந்தரமாக கம்பெனிக்கு செலுத்த வேண்டும்.
- ஜமீன்தார்கள் மீதமுள்ள 11% வருமானத்தை அல்லது (1/11) பங்கு தங்கள் பயன்பாட்டிற்கு வைத்துக் கொள்ளலாம். ஜமீன்தார்கள், கம்பெனிக்கும் விவசாயிகளுக்குமிடையே இடைத்தரகர்களாக செயல்பட்டனர்.
- இத்திட்டம் 1947 வரை செயல்பாட்டில் இருந்தது.

1) வங்காள மாகாணம் (மேற்கு வங்காளம், வங்காள தேசம், பீகார், ஜார்கண்ட், ஒரிஸா)
2) வட சர்க்கார் பகுதிகள் (பழவேற்காடு ஏரிக்கும் பகுதி, சிலிகா ஏரிப்பகுதிக்கும் இடைப்பட்ட பகுதி)
3) மதராஸ் மாகாணத்தின் வடக்கு மாவட்டங்கள்.

## 7. இரயத்துவாரி முறை (Ryotwari Settlement):

- 1820ல் கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் மதராஸ் மாகாணத்தில் கவர்னர் தாமஸ் மன்றோ மதராஸ் மற்றும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகளில் இரயத்துவாரி நிலவரி முறையை அறிமுகப்படுத்தினார்.
- நிரந்தர நிலவரித்திட்டத்தை எல்லா மாகாணங்களிலும் செயல்படுத்த கம்பெனியின் நிர்வாகக்குழுவினரைக் கேட்டார் ஹேஸ்டிங்ஸ் பிரபு அவர்கள் அனுமதி மறுக்கவே, மதராஸ் பகுதியில் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் படி ரயத்துகள் (அ) நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் இடைத்தரகர்கள் இல்லாமலே நேரடியாக அரசிடம் வரி செலுத்த வேண்டும், நிலவரி நிரந்தரமாக உறுதி செய்யப்பட இத்திட்டம் 20 ஆண்டுகளுக்கு செயல்பாட்டில் இருந்தது.

**இரயத்துவாரி நிலவரிப் பகுதிகள்:**

1. மதராஸ் மாகாணம் (தமிழ்நாடு, கேரளாவின் 3/4 பகுதி, மேல் ஆந்திரபகுதி, கர்நாடகாவின் சிறுபகுதிகள்)
2. பம்பாய் மாகாணம் (குஜராத், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் மற்றும் கர்நாடகத்தின் சிறுபகுதிகள்(குடகுமலை))
3. அஸ்ஸாம் பகுதிகள்

## 8. மகல்வாரி முறை (Mahalwari Settlement):

- 1833ல் கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபு பிரிட்டிஷ் அதிகாரி R.M. பர்ட் உடன் இணைந்து வட மேற்கு பகுதிகளில் அறிமுகப்படுத்திய நிலவரிமுறை மகல்வாரிமுறையாகும். இதன்படி எஸ் டேட்டுகள் மற்றும் தொகுப்பு கிராமங்கள் அரசிடம் நேரடி வரி செலுத்தின. இத்திட்டம் 30 ஆண்டுகளுக்கு செயல்பாட்டில் இருந்தது.

**மகல்வாரி நிலவரிப்பகுதிகள்:**

- பஞ்சாப் (இந்தியா மற்றும் பாகிஸ்தான்)
- வடமேற்குப்பகுதிகள் (ராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் ஹரியானாவின் பாதி பகுதிகள்)
- பரப்பளவின் அடிப்படையில் அதிகமாக பகுதிகளில் இரயத்துவாரி நிலவரிமுறையும், பிறகு ஜமீன்தாரி நிலவரிமுறையும் இறுதியாக மகல்வாரி முறையும் பின்பற்றப்பட்டு வந்தன.

**பிரிட்டிஷ் நில வருவாய் கொள்கை**

| நிலவருவாய் அமைப்புகள் | அறிமுகப்படுத்தியவர்கள் | வருடம் | பகுதிகள் |
|---|---|---|---|
| விவசாயிகள் இயக்கம் | வாரன் ஹேஸ்டிய்ஸ் | 1773 | வங்காளம் |
| நிரந்தர நிலவரி முறை | சர் ஜான் ஷோர் (காரன் வாலிஸ்) (கவர்னர் ஜெனரல் | 1793 | வங்காளம், வாரணாசி, உத்திரபிரதேசம், வடக்கு கர்நாடகம், மற்றும் ஒடிஷா |
| இரயத்துவாரி முறை | சர் தாமஸ் மன்றோ மற்றும் சார்லஸ் ரீட் (கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ்) | 1820 | மதராஸ், குருக், கிழக்கு வங்காளம், மும்பை மற்றும் அஸ்ஸாம் |
| மகல்வாரி முறை | காஸ்ட் மெக்கென்ஸ் மற்றும் (கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங்) | 1833 | பஞ்சாப், மத்திய மகாகாணங்கள் ஆக்ரா மற்றும் டெல்லி |

## 8. இந்திய சுதேச அரசுகள் (சமஸ்தானங்கள் (Princely States)):

- இந்தியாவில் ஏறக்குறைய 552 க்கு குறைவில்லாத சமஸ்தானங்கள் 7, 12, 508 சதுர மைல்கள் பரப்பளவு கொண்டதாக அமைந்திருந்தன.
- எளிதில் புக முடியாத குறைந்த வளமை கொண்ட இந்திய தீபகற்ப பகுதிகளே சமஸ்தானங்கள்(The in accessible and less fertile tracts of Indian Peninsular) என்றழைக்கப்பட்டன.

- ஆரம்பத்தில் வாணிபத்தில் மட்டும் கவனம் செலுத்திய ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி பக்சார் போருக்கு பிறகு வங்காளத்தின் திவானி உரிமையை பெற்று அரசியல் சக்தியாக வளர்ந்தது.
- பல்வேறு வகையான போர்கள் மூலம் இந்தியாவில் சுதேச அரசுகளை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.
- கம்பெனியினர் போர்கள் அல்லாமல் பல்வேறு வகை ராஜ தந்திர திட்டங்களை செயல்படுத்தி இந்திய சுதேச அரசுகளை கைப்பற்றினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

1. வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் (Subsidiary Alliance)
2. டல்ஹௌசியின் வாரிசு இழப்புக் கொள்கை (Doctrine of Lapse)
3. டல்ஹௌசியின் நல்லாட்சி கோட்பாடு (Concept of Good Governance)

## 9. வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் (Subsidiary Alliance):

- வங்கப்புலி (Bengal Tiger) என்று தம்மை அழைத்துக்கொண்ட பேரரசுக் கொள்கையுடைய கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு துணைப்படைத்திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தார்.
- இதன்படி பிரிட்டிஷாருடன் துணைப்படை ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பும் இந்திய அரசர் தனது ஆட்சிப்பகுதியில் பிரிட்டிஷ் படையை வைத்து தலைமை வகிப்பார்.
- அத்தகைய அரசு பாதுகாக்கப்பட்ட அரசு என்றழைக்கப்பட்டது. பாதுகாக்கப்பட்ட அரசை உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதே பிரிட்டிஷாரின் கடமையாகும்.
- மேலும் பாதுகாக்கப்பட்ட அரசை அயல்நாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்து உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதே பிரிட்டிஷாரின் கடமையாகும்.
- மேலும் பாதுகாக்கப்பட்ட அரசு ஆங்கிலேயர் தவிர வேறு எந்த ஐரோப்பிய அரசுகளுடன் உறவுகள் வைத்துக் கொள்ளக்கூடாது.
- **ஹைதராபாத் நிஜாம் 1798 ல் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் அரசராவார்.** பிறகு தஞ்சாவூர் மற்றும் சூரத் (1799), கர்நாடகம் (1801) ல் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டன.
- இவ்வாறு துணைப்படைத்திட்டத்தின் மூலம் வெல்லெஸ்லி பிரபு சுதேச அரசுகளை தம் கட்டுக்குள் கொண்டு வந்தார்.

## 9. டல்ஹௌசியின் வாரிசு இழப்புக் கொள்கை

### (Doctrine of Lapse):

- ❖ இந்து மதச்சட்டப்படி வாரிசு இல்லாதவர்கள் தத்து எடுத்துக்கொள்ளும் முறை வழக்கத்தில் இருந்தது. இந்த சட்டப்படி சொந்த வாரிசு இல்லாமல், வாரிசுகளை தத்து எடுத்துக் கொள்ளும் சுதேச அரசர்கள் கம்பெனியின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று டல்ஹௌசி கட்டாயப்படுத்தினார்.
- ❖ அதற்கு சுதேச அரசு ஆங்கில அரசுடன் இணைக்கப்படும் என்று அறிவித்தார் டல்ஹௌசி. இதுவே வாரிசு இழப்புக் கொள்கையாகும்.
- ❖ இதன்படி முதலில் 1848 ல் சதாரா இணைக்கப்பட்டது. கடைசி அரசர் அப்பா சாஹிபிற்கு வாரிசு இல்லாததால் இணைக்கப்பட்டது. 1849ல் அரசர் நாராயணசிங் இறப்பிற்கு பிறகு சம்பல்பூர் இணைக்கப்பட்டது.
- ❖ 1853ல் கங்காதரராவ் அரசர் இறப்பிற்கு பிறகு ஜான்சி இணைத்துக்கொள்ளப்பட்டது.
- ❖ இவருடைய மனைவியே ராணிலெட்சுமி, இதனால் கோபமடைந்த ராணி லட்சுமி 1857 சிப்பாய் கலகத்தின் போது ஆங்கிலேயருக்கு எதிராக வீரமுடன் போரிட்டு மரணமடைந்தார்.
- ❖ இவரே ஜான்சி ராணி லட்சுமி பாய் ஆவார். 1854 ல் மூன்றாம் ராஜாஜி போன்ஸ்லேயின் இறப்பிற்கு பிறகு நாக்பூர் இணைத்துக்கொள்ளப்பட்டது. இதே போல் வாரிசு இழப்புக் கொள்கைப்படி ஜெய்த்பூர் (1849), உதய்ப்பூர் (1852)ல் இணைத்துக் கொள்ளப்பட்டது.

## 10. டல்ஹௌசியின் நல்லாட்சிக் கோட்பாடு

### (Concept of Good Governance):

- ❖ நல்லாட்சி மக்களுக்கு வழங்கவில்லை என்று குற்றம் சாட்டி அயோத்தி நவாப் வாஜித் அலியை பதவியிலிருந்து நீக்கி 1856ல் அயோத்தியை இணைத்தார் டல்ஹௌசி.
- ❖ இதனால் முகமதியர்களும் முகமதிய அரசர்களும் ஆங்கிலேய அயோத்தி இணைப்பை வெறுத்தனர்.
- ❖ 1857ல் ஏற்பட்ட பெருங்கலகத்திற்கு அயோத்தி இணைப்பு முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

- 1857ல் ஏற்பட்ட பெருங்கலகத்திற்கு பிறகு இங்கிலாந்து மகாராணியின் கட்டுப்பாட்டில் இந்தியா வந்தது. மகாராணி கெய்சர் - ஐ- ஹிந்த் (Kaiser - i - Hindi - Queen Empress of India) பட்டத்தை ஏற்றுக்கொண்டார்.
- 1927ல் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்கும் சமஸ்தானங்களுக்கும் இடையே உள்ள உறவின் இயல்பை அறிய பட்லர் (Butler) கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இந்திய அரசு சட்டம் 1935ன்படி பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சுதேச அரசுகளும் இணைந்த ஒரு அகில இந்திய கூட்டமைப்பு(All India Federation) ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறியது. ஆனால் 1947 வரை இது நடைமுறைக்கு வரவேயில்லை.
- இடைக்கால அரசாங்கத்தின் (1946) உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் மற்றும் அவரது செயலாளர்V.P. மேனன் I.C.S ஆகியோரின் முயற்சியால் 1947ல் இந்தியா சுதந்திரம் பெரும் பொழுது ஜுனாகாத், ஹைதராபாத், ஜம்மு & காஷ்மீர் தவிர மற்ற சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் இணைந்தது. இந்திய யூனியனுடன் முதலில் இணைந்த சமஸ்தானம் புதுக்கோட்டை சமஸ்தானம். சுதேச அரசுகளின் இந்திய இணைப்பில் படேல் முக்கிய பங்காற்றியதால் இரும்பு மனிதர் (Iron Man of Inida) என்றும் இந்தியாவின் பிஸ்மார்க் (Bismark of India) என்றும் அழைக்கப்படுகின்றார்.
- சுதேச அரசுகள் இணைப்பு தொடர்பாக V.P. மேனன் I.C.S அவர்கள் "The Story of Integration of Indian States" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- 1947 சுதந்திரத்திற்குப் பிறகு, ஜுனாகாத்திலிருந்த முஸ்லீம் நவாப் பாகிஸ்தானுடன் இணைய விரும்பினா. ஆனால் அங்கிருந்த இந்து மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினர். மக்கள் ஒட்டெடுப்பு - 20 பிப்ரவரி 1948 ல் நடத்தி ஜுனாகாத் இந்திய யூனியனில் இணைக்கப்பட்டது. பிறகு ஹைதராபாத் சுதேச அரசு **ஆபரேசன் போலோ** (Operation Polo) "சட்ட ஒழுங்கை பாதுகாக்க போலிஸ் மற்றும் இராணுவ தலையீடு" மூலம் நவம்பர் 1949 ல்

இந்திய யூனியனில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

- ❖ இறுதியாக ஜம்மு காஷ்மீரின் அரசர் ஹரி சிங்கிற்கும் இந்திய பிரதமர் நேருவிற்கும் அக்டோபர் 1947ல் ஏற்பு உடன்படிக்கை (Instrument of Accession) கையெழுத்திடப்பட்டு ஜம்மு காஷ்மீர் இந்திய யூனியனில் இணைத்துக் கொள்ளப்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் விதி 370ல் சிறப்பு சலுகை வழங்கப்பட்டது. இதன் மூலம் ஏறக்குறைய 562 (அ) 552 சுதேச அரசுகளின் சுய ஆட்சி முடிவுக்கு வந்தது.

## 11. கல்விமுன்னேற்றம் (Deveopment of Education)

- ❖ ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பல்வேறு பகுதிகளை வென்று தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திய போது இந்திய கல்விமுறையில் தலையிடவில்லை முன்னேற்றம் செய்யவும் விரும்பவில்லை.
- ❖ இந்திய கல்வி முறையானது வெளியுலகத் தொடர்பு இல்லாமல் இருந்தது. கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ், முஸ்லீம் சட்டங்கள் மற்றும் அது சம்பந்தப்பட்ட பாடங்களை படிப்பதற்கு 1781ல் கல்கத்தாவில் “கல்கத்தா மதரசா” என்ற கல்வி நிலையத்தை நிறுவினார்.
- ❖ மேலும் 1791ல் பெனாரசில் இந்து சட்டங்கள் மற்றும் தத்துவத்தை படிப்பதற்காக சமஸ்கிருத கல்லூரி (Sanskrit College) ஜோனாதன் டங்கன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1800ல் கம்பெனியின் குடிமைப்பணியாளர்களுக்கு மொழிகள் மற்றும் இந்திய பழக்க வழக்கங்களில் (Languages and customs of Indians) பயிற்சி அளிக்க வெல்லெஸ்லி பிரபுவால் வில்லியம் கோட்டை கல்லூரி (Fort William college) கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ இந்தியாவில் கல்விமுறை வளர்ந்தால், கல்வி அறிவு பெற்ற இந்தியர்கள் ஆட்சிக்கு கீழ்படிய மறுத்து அதனால் ஆட்சிக்கு கேடு ஏற்படும் என நினைத்தார்கள். ஆனால் கவர்னர் ஜெனரல் மின்டோ பிரபு (1807 -13) கல்லூரிகளை சீர்திருத்த வேண்டுமெனவும், புதிய கல்லூரிகள் ஏற்படுத்த வேண்டுமெனவும் வற்புறுத்தினார். இவருடைய ஆட்சிக் காலத்தில் தான் பட்டய சட்டம் 1813 கொண்டு

வரப்பட்டது. இந்திய கல்வி வளர்ச்சிக்காகவும், இலக்கிய முன்னேற்றத்திற்காகவும், விஞ்ஞான அறிவுப் பெருக்கத்திற்காகவும் ஆண்டு தோறும் ஒரு லட்ச ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று அச்சட்டம் கூறியது. நம் நாட்டு கல்வி வளர்ச்சியில் ஆங்கில அரசாங்கம் நேரடியாக பங்கு கொள்ள ஆரம்பித்தது. இந்த பட்டய சட்டம் 1813லிருந்து தான்.

❖ 1817ல் இராஜாராம் மோகன் ராய் மற்றும் அவரது கல்விபெற்ற வங்காள நண்பர்களால் கல்கத்தா கல்லூரி ஏற்படுத்தப்பட்டது.

**மெக்காலே கல்வித் திட்டம்(1835) (Mecaulay's Minntes):**

❖ இந்தியாவில் ஆங்கில மொழி வழியே விஞ்ஞானம், மருத்துவம் போன்றவற்றை கற்பிப்பதற்கு மெக்காலே பிரபு 1835 தனது குறிப்புகளை வெளியிட்டார்.

❖ இந்த குறிப்புகளை ஏற்றுக்கொண்ட அப்போதைய இந்திய கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் அதற்கேற்றபடி கல்வியமைப்பினை மாற்றியமைக்கும் ஆணைகளை பிறப்பித்தார்.

❖ இதன்படி இந்திய பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் பாட மொழியாக்கப்பட்டது. இந்திய கல்வி வரலாற்றில் மெக்காலேயின் குறிப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன.

❖ வடமேற்கு மாகாணத்தின் லெப்டிணன்ட் கவர்னர் ஜேம்ஸ் தாம்சன் (1843 - 53) கிராம கல்வியை வட்டார மொழிகள் (அ) உள்நாட்டு மொழிகளில் (Vernacular Languages) கற்றுத் தரும் கல்விமுறையை வடமேற்கு மாகாணத்தில் அமல்படுத்தினார்.

**சார்லஸ் உட்ஸ் கல்வித்திட்டம் (Wood's Despatch - 1854):**

❖ டல்ஹௌசி பிரபுவின் ஆட்சிக்காலத்தில் கம்பெனியின் நிர்வாகக் குழுவின் தலைவராக இருந்த சர் சார்லஸ் உட் என்பவர் இந்தியா முழுமைக்கும் கல்வித்திட்டம் ஒன்றை தயாரித்து 1854ல் வெளியிட்டார். இதுவே இந்தியாவில் ஆங்கிலேய கல்விமுறையின் (மக்ன - கார்டா - கல்விப்பட்டயம்) (Magna carta of English education in India) என்றழைக்கப்படுகின்றது.

**<u>கல்வித்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:</u>**

1. இந்திய மக்கள் ஆங்கிலக் கல்வியின் பயன்களை பெறுமாறு செய்வது கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும்.

2. மேல்படிப்புகளுக்கு ஆங்கில வழிக்கல்வியும், பள்ளிகல்விக்கு உள்நாட்டு மொழிக்கல்வியும் வழங்கப்படவேண்டும்.
3. பெண்கல்வி, தொழிற்கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சிக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும்.
4. இந்திய மாகாணங்களில் கல்வித்துறை என்ற தனித்துறை ஏற்படுத்தப்படவேண்டும். இவைகளை மேற்பார்வையிட பொதுக்கல்வி இயக்குநர்கள் (Director of Public Instruction) நியமிக்கப்பட வேண்டும்.
5. கல்கத்தா, பம்பாய் போன்ற முக்கிய நகரங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்கபட்டன.

இந்த திட்டத்தின் விளைவாக 1857ல் மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டன. ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் தொடங்கப்பட்டன. எல்லா மாநிலங்களிலும் கல்வி இலாக்காக்கள் ஆரம்பிக்கப்பட்டு, பொதுக்கல்வி இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

**ஹண்டர் கல்வி ஆணையம் (Hunter Education Commission -1882 -83):**

❖ 1882 பிப்ரவரி மாதம் ரிப்பன் பிரபு,W.W. ஹண்டர் என்பவரின் தலைமையில் 22 உறுப்பினர்களை கொண்ட கல்வி ஆணையம் ஒன்றை அமைத்தார்.

❖ 1854 - ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சார்லஸ் உட் கல்வித்திட்டத்தில் உள்ள நிறை, குறைகளை ஆராய்ந்து அவற்றிற்கு தக்க பரிகாரம் செய்யும் வழிகளை பரிந்துரை செய்ய ஏற்படுத்தப்பட்டது ஹண்டர் ஆணையம்.

**கல்வி கமிட்டி மற்றும் கமிஷன்**

| அரசுப் பிரதிநிதிகள் | குழு / கமிஷன் | ஆண்டு | தலைவர் | குறிக்கோள் |
|---|---|---|---|---|
| ரிப்பன் பிரபு (1880 -1884) | ஹண்டார் குழு | 1882 | வில்லியம் ஹண்டர் | கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு |
| கர்சன் பிரபு (1899 - 1905) | பல்கலைக்கழக கமிஷன் | 1902 | தாமஸ் ரேலைக் | பல்கலைக்கழகங்களின் பழக்க சீர்த்திருத்தங்கள் கொண்டு வருவதற்கு |
| ஜெம்ஸ் போர்டு (1916 - | கல்கத்தா பல்கலைக்கழக | 1917 | மைக்கேல் சேடர் | பல்கலைக்கழகங்களில் படிக்க நிபந்தனைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1921) | கமிஷன் | | | கொண்டு வருவதற்கு |
| ரீடிங் பிரபு (1921 - 1926) | இந்தியன் டிஸ்பேண்ட் மெண்ட்குழு | 1923 | இட்ச்கேப் பிரபு | மத்திய கல்வி துறையை பற்றி கலந்துரையாடல் |
| வேவல் பிரபு (1943 - 1947) | செர்கண்ட் திட்டம் | 1944 | ஜான் செர்கண்ட் | பிரிட்டிஸ் கல்வியைப் போன்று அமைப்பதற்கு |

**முக்கிய பரிந்துரைகள்:**

1. தொடக்கக் கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.
2. தொடக்க கல்வி நிர்வாகத்தை உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்க வேண்டும்.
3. தொழிற்பயிற்சிக்கு உயர்நிலை கல்வியில் வாய்ப்புகள் அமைத்து தரப்பட வேண்டும்.
4. பெண் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.
5. இதன் விளைவாக பஞ்சாப் பல்கலைக்கழகம் (1882) மற்றும் அலாகாபாத் பல்கலைக்கழகம் (1887) ஆகியவை ஏற்படுத்தப்பட்டன.

**இந்திய பல்கலைக்கழக சட்டம் 1904 (Indian Universities Act 1904):**

❖ 1902 ம் ஆண்டு இந்திய பல்கலைக்கழகங்களின் நிலையை அறிய கர்சன் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட ராலே ஆணையத்தின் (Releigh Commission) பரிந்துரையின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது.

❖ இந்திய பல்கலைக்கழக சட்டமாகும். ஆண்டிற்கு 5 லட்ச ரூபாய் வீதம் 5 ஆண்டுகளுக்கு உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி முன்னேற்றத்திற்கு வழங்கியது இச்சட்டத்தின் முக்கிய சிறப்பம்சமாகும்.

❖ பல்கலைக் கழகங்களை கட்டுப்பாட்டில் கொண்டு வர கர்சன் பிரபு பல்வேறு வகை செயல்பாடுகளை இச்சட்டத்தின் மூலம் செய்ததால் மிதவாத தலைவர் கோபால கிருஷ்ண கோகலே இச்சட்டத்தை அடக்குமுறை சட்டம் என்று வர்ணிக்கிறார்.

**சாட்லர் பல்கலைக்கழக ஆணையம் (Saddler University Commission 1917 - 19):**

❖ செம்ஸ்போர்டு பிரபு பதவிக் காலத்தில் 1917 ல் மைக்கேல் சாட்லர் தலைமையில் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் சீரமைப்பு

பற்றி ஆராய ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. இவ்வாணையம் உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி குறித்த எல்லா அம்சங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்கியது.

**முக்கிய பரிந்துரைகள்:**

1. பள்ளிக்கல்வியை 12 ஆண்டுகள் வழங்க வேண்டும்.
2. மத்திய அரசின் ஆதரவில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு அது மற்ற பல்லைக்கழகங்களுக்கு முன் மாதிரியாகவும், அவைகளின் குறைகளை நீக்க அமைக்கப்பட வேண்டும்.
3. பெண்கல்வி, அறிவியல் தொழில் நுட்பக்கல்வி ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். இதன் மூலம் 1916 -1921 க்கு இடைப்பட்ட காலங்களில் மைசூர், பாட்னா, பெனாரஸ், அலிகார், டாக்கா, லக்னோ மற்றும் உஸ்மானியா ஆகிய ஏழு இடங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**ஹார்டாக் கமிட்டி** (1929):

❖ பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகியதால் கல்வித்தரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

❖ 1929ல் கல்வி முன்னேற்றத்தை கண்டறிய ஹார்டாக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

**முக்கிய பரிந்துரைகள்:**

1. தொடக்க கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.
2. சேர்க்கை மற்றும் பள்ளி, கல்லூரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

**வார்தா ஆதார கல்வித்திட்டம் (Wardha Scheme of Basic Education 1937):**

❖ ஹரிஜன் பத்திரிக்கையில் வெளியான காந்தியடிகளின் சிந்தையின் வெளிப்பாடாக 1937 ம் ஆண்டு வார்தாவில் (கல்வி மாநாடு) ஜாஹிர் ஹூசைன் கமிட்டி உருவாக்கிய கல்வித்திட்டமே வார்தா கல்வித்திட்டமாகும்.

**சிறப்பம்சங்கள்:**

1. பாடத்திட்டத்தில் கைவினைப் பொருட்கள் செய்முறை சேர்க்கப்பட வேண்டும்.
2. ஒரு குழந்தையின் முதல் ஏழாண்டு கல்வி தாய்மொழியில் இலவசமாக கட்டாயமாக இந்தியா முழுவதும் வழங்கப்பட வேண்டும்.

**சார்ஜண்ட் கல்வித்திட்டம் (Sergeant Plan of Education - 1944):**

- ❖ 1944 ம் ஆண்டு இந்திய அரசின் கல்வி ஆலோசகரான சர்ஜான் சார்ஜண்ட் என்பவர் தலைமையில் இந்திய கல்வி அமைப்பை மாற்றியமைக்க ஒரு குழு அமைக்கப்பட்டது.

**அதன் முக்கிய பரிந்துந்ரைகள்:**

1. நர்சரி கல்வி (3-6 வயது) இலவச கட்டாய தொடக்கக் கல்வி (6-11 வயது)
2. மேல்நிலைக் கல்வி 11-17 வயது பல்கலைக்கழக கல்வி 17- வயதுக்கு பிறகு இருபது ஆண்டுகளுக்குள் எழுத்தறிவின்மை நீக்கப்படவேண்டும்.
3. தொழில்நுட்பக்கல்வி, வாணிபக்கல்வி, கலைக்கல்வி ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
4. உடல், மனநிலை குறைபாடுடைய குழந்தைகள் கல்வியிலும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.
5. பொது மக்களுக்கு நூல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும்.

**இராதா கிருஷ்ணன் ஆணையம் (Radhakrishnan Commission 1948 -49):**

- ❖ சுதந்திரத்திற்கு பிறகு இந்திய கல்வித்திட்டத்திற்காக குறிப்பாக பல்கலைக்கழக கல்விக்காக 1948ல் இராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு கல்வி ஆணையம் அமைக்கப்பட்டது.

**முக்கிய பரிந்துரைகள்:**

1. பள்ளி கல்வி 12- ஆண்டுகள் வழங்கப்பட வேண்டும்.
2. பல்கலைக்கழக கல்வி தரம் உயர்த்தப்பட வேண்டும்.
3. பல்கலைக்கழக கல்வி பொதுப்பட்டியலில் வைக்கப்பட வேண்டும். இதன்படி 1976 ல் கல்விப் பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.
4. மேல் படிப்புகளுக்கு ஆங்கில வழிக்கல்வி பின்பற்றப்பட வேண்டும்.
5. பல்கலைக்கழக கல்விக்காக University Grants Commission (UGC) ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் 1953 ல் சட்ட அந்தஸ்து (Statutory Status) வழங்கப்பட்டது.

**கோத்தாரி கல்வி ஆணையம் (1964 - 66) (Kothari Education Commission)**

- ❖ தேசிய கல்வித் திட்டத்தை பற்றி பரிந்து செய்ய 1964 ல் D.S கோத்தாரி என்பவரின் தலைமையில் கல்வி ஆணையம் அமைக்கப்பட்டது.

**முக்கிய பரிந்துரைகள்:**

- ❖ 14 வயது வரை இலவச கட்டாய கல்வி.
- ❖ மூன்று மொழித்திட்டம் - தாய்மொழி, ஹந்தி மற்றும் ஆங்கிலம்.

- ❖ தேசிய வருவாயில் கல்விக்கு 6% ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- ❖ விவசாயம் மற்றும் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட கல்வித்துறைகள் முன்னேற்றப்பட வேண்டும்.

**தற்போதைய கல்வி முன்னேற்றங்கள்:**

- ❖ 1986 - புதிய கல்விக் கொள்கை வெளியிடப்பட்டது.
- ❖ 2000 - தேசிய கல்வி கொள்கை வெளியிடப்பட்டது.
- ❖ இந்த கல்விக்குழுக்கள் மற்றும் ஆணையங்களின் பரிந்துரைப்படி சுதந்திர இந்தியாவின் கல்வி வளர்ச்சி சீராக நடைபெற்று வருகின்றது.

## 13. இந்திய பத்திரிக்கைகள் முன்னேற்றம் (Development of Indian Press):

- ❖ ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (James Augustus Hickey) என்பவரால் 1780 ல் ஆரம்பிக்கப்பட்ட தி பெங்கால் கெஜட் (The Bengal Gazette) அல்லது கல்கத்தா ஜெனரல் **அட்வர்டைசர்** (Calcutta General Advertiser)என்பதே இந்தியாவின் முதல் பத்திரிக்கை ஆகும்.
- ❖ பத்திரிக்கைகள் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாக குறைபாடுகள் மற்றும் ஊழல்களை மக்களிடையே பரப்பியதால், பத்திரிக்கைகளை தடை செய்ய பல்வேறு சட்டங்களை கம்பெனியின் கவர்னர் ஜெனரல்கள் இயற்றினர்.

**பத்திரிக்கை தணிக்கைச்சட்டம் (Censorship of Press Act 1799)**

- ❖ பிரெஞ்சு புரட்சியின் தாக்கத்தை தடுக்க வெல்லெஸ்லி பிரபு இயற்றிய பத்திரிக்கை சட்டமாகும். பிறகு ஹேஸ்டிங்ஸ் பிரபுவால் நீக்கப்பட்டது.

**பத்திரிக்கை சட்டம் (1835) அல்லது மெட்காப் சட்டம்:**

- ❖ கவர்னர் ஜெனரல் மெட்காப் (1853 - 36), 1823 ல் ஜான் ஆடம்ஸால் கொண்டு வரப்பட்ட பத்திரிக்கை அவசர சட்டத்தை நீக்கினார். இதனால் பத்திரிக்கைகளின் எண்ணிக்கை பெருகியது.
- ❖ இதனால் மெட்காப் " இந்திய பத்திரிக்கைகளுக்கு விடுதலை அளித்தவர் என்று போற்றப்படுகின்றார்.
- ❖ இச்சட்டத்தின்படி அச்சிட்டாளர் / வெளியீட்டாளர் வெளியிடும் பத்திரிக்கை பற்றி சுருக்கமான உறுதிகளை கம்பெனியிடம் ஒப்படைக்க வேண்டும்.

**பதிவு சட்டம் (Registration Act 1867)**

**பதிவுசட்டம் 1867ன் படி**

i. ஒவ்வொரு பத்திரிக்கை புத்தகம் அதனுடைய அச்சீட்டாளர் மற்றும்

வெளியீட்டாளர் மற்றும் வெளியிடும் இடத்தை குறிப்பிடவேண்டும்.

ii. வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பத்திரிக்கையின் ஒரு நகல் உள்ளாட்சி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**வட்டார மொழிகள் பத்திரிக்கை சட்டம் (அ) உள்நாட்டு மொழிகள் பத்திரிக்கைச்சட்டம் 1878 (Vernacular Press Act 1878)**

❖ 1858க்கு பிறகு ஆங்கில பத்திரிக்கைகள் பரிட்டிஷிக்கு ஆதரவாக, அரசை விமர்சிக்க வில்லை. ஆனால் உள்நாட்டு மொழி பத்திரிக்கைகள் அரசின் குறைபாடுகளை விமர்சித்தன. எனவே வட்டார மொழி பத்திரிக்கைகளை ஒடுக்க 1878 ல் லிட்டன் பிரபு ஒரு பத்திரிக்கை சட்டத்தை கொண்டு வந்தார். அதன்படி

i. மாவட்ட நடுவருக்கு (District Magsi) உள்நாட்டு பத்திரிக்கைகள் சம்பந்தமாக அனைத்து அதிகாரங்களும் (ஒழுங்குப்படுத்துதல் மற்றும் பறிமுதல் செய்தல்) வழங்கப்பட்டது.

ii. மாவட்ட நடுவரின் தீர்ப்பே இறுதியானது. அதனை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யமுடியாது.

iii. இச்சட்டம் வாய்ப்பூட்டு சட்டம் (Gagging Act) என்று வர்ணிக்கப்படுகிறது. இறுதியாக 1882ல் ரிப்பன் பிரபு இச்சட்டத்தை நீக்கினார்.

**பத்திரிக்கைகள் (வன்முறை தூண்டுதல் சட்டம் 1908)(Newspaper (Incitement of Offences Act))**

❖ இந்திய தேசிய காங்கிரசின் தீவிரவாத தலைவர்களின் செயல்களை கட்டுப்படுத்த கொண்டு வரப்பட்ட சட்டமாகும்.

**இந்திய பத்திரிக்கை சட்டம் 1910 (Indian Press Act)**

**இந்திய பத்திரிக்கை சட்டம் 1910ன் படி**

i. பத்திரிக்கை பதிவின் போது உள்ளாட்சி அரசாங்கத்திடம் பிணையத் தொகை (Security Deposit) கட்ட வேண்டும்.

ii. மேலும் ஒவ்வொரு வெளியீட்டின் 2 நகல்களை இலவசமாக உள்ளாட்சி அரசாங்கத்திடம் அச்சிட்டாளர் ஒப்படைக்க வேண்டும்.

**இந்திய பத்திரிக்கைகள் (அவசர அதிகாரங்கள் சட்டம் 1931)**

❖ Indian Press Emergency Powers Act 1931 சட்ட மறுப்பு இயக்கத்தின்

போது பிரச்சாரங்களை தடை செய்ய கொண்டு வரப்பட்ட சட்டமாகும்.

**விடுதலைக்குப் பிறகு பத்திரிக்கை முன்னேற்றம்**

❖ பத்திரிக்கை விசாரணை கமிட்டி (Press Enquiry Committee 1947) இந்தியாவில் பத்திரிக்கை சட்டங்கள் இயற்றுவது பற்றி அடிப்படை உரிமைகளை ஆராய 1947ல் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியாகும்.

**பத்திரிக்கை ஆணையம் (Press Commission 1954):**

❖ நீதிபதி ராஜதயக்ஷா (Rajadhyaksha) தலைமையில் 1954 ல் அமைக்கப்பட்ட பத்திரிக்கை ஆணையம், பத்திரிக்கை பக்க அட்டவணை முறை மற்றும் விளம்பரங்களை ஒழுங்கு படுத்த அகில இந்திய பத்திரிக்கை கவுன்சில் (All India Press Council) ஏற்படுத்தப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தது.

❖ பத்திரிக்கைகளின் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ராஜாராம் மோகன் ராய், பால கங்காதர திலகர், கோகலே, சுப்ரமணிய அய்யர், தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோர் ஆவர்.

❖ பத்திரிக்கைகளின் விடுதலைக்கு பாடுபட்டு 1883ல் சிறை சென்ற முதல் பத்திரிக்கையாளர் சுரேந்திரநாஜ் பானர்ஜி ஆவார்.

❖ தமது பத்திரிக்கைகளான கேசரி மற்றும் மராத்தா (Kesari and Maratta) மூலம் பால கங்காதர திலகர் விடுதலை கருத்துக்களை மக்களிடையே பரப்பினார். பத்திரிக்கைச் சுதந்திற்காக பாடுபட்டு இருமுறை (1897, 1910) சிறை சென்றுள்ளார்.

❖ முதல்முறை 1897ல் கைது செய்யப்பட்ட போதுதான் மக்கள் அவருக்கு லோக்மானியர் என்று பெயர் சூட்டினர். இரண்டாம் முறையாக 1910ல் கைது செய்யப்பட்டு 6 ஆண்டுகள் பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் சிறைவாசம் அனுபவித்தார்.

**தொழில் நுட்ப கல்வி வளர்ச்சி :**

- ✓ 1794 - கிண்டி பொறியியல் கல்லூரி (மதராஸ் பல்கலைக் கழகம்)
- ✓ 1835 - வேளாண் கல்லூரி (பூனே)
- ✓ 1856 - கல்கத்தா பொறியியல் கல்லூரி
- ✓ 1858 - பூனா பொறியியல் கல்லூரி (மும்பை பல்கலைக் கழகம்)

- ❖ பத்திரிக்கைகள் அரசாங்கத்தின் அடக்குமுறைச் சட்டங்களையும் மீறி நாட்டு மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்தன. மக்களிடையே அறிவை வளர்த்தன.
- ❖ அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, நிர்வாகத்தில் தாங்கள் பங்கு பெற வேண்டுமென அழைப்பு விடுத்தன. ஆங்கிலேயரின் கொடுங்கோலாட்சியை கண்டனம் செய்தன.
- ❖ இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றத்திலும் பின்னர் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்திலும் இந்த பத்திரிக்கைகள் சிறப்பாக பணிபுரிந்தன.

**நிர்வாக குழுக்கள் / கமிஷன்ஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| டஃப்ரின் பிரபு (1884 - 1886) | எட்கின்ஷன் கமிஷன் | 1886 | சார்லஸ் எட்கின்ஷன் | அதிக அளவில் இந்தியர்களை குடிமைப் பணியில் ஈடுபடுத்துவதற்காக |
| கர்ஷன் பிரபு (1899 - 1905)) | பிராசர் கமிஷன் | 1902 | பிராசர் | போலீஸ் பணியை விசாரனை செய்வதற்கு |
| ஹார்டிங் பிரபு (1910 - 1916) | சிவிஸ் சேவையில் அரசு கமிஷன் | 1912 | இஸ்லின்டன் பிரபு | இந்தியர்களுக்கு 25 % சதவீதம் உயர் பதவிகள் வழங்க |
| ரீடிங் பிரபு (1921 -1926) | ராயல் (அரசு) கமிஷன் | 1924 | லீ பிரபு | சிவிஸ் சேவையின் குறைபாடுகளை தீர்க்க |

| | | | | |
|---|---|---|---|---|
| ரீடிங் பிரபு (1921 - 1926) | சுந்தரஸ்ட் கமிஷன் | 1926 | ஆண்ட்ரீவ்ஸ் ஸ்கீன் | இந்திய இராணுவத்தில் இந்தியர்களைப் பற்றி சிந்திப்பதற்கு |
| இர்வின் பிரபு (1926 - 1931) | பட்லார் கமிஷன் | 1927 | ஹெர்கோர்ட் பட்லர் | சொந்த மாநிலங்களுடன் இயற்கை உறவை ஆராய்வதற்கு |

**பள்ளி/ கல்லூரி ஆண்டு அமைப்பாளர்கள்**

| பள்ளி/ கல்லூரி | ஆண்டு | அமைப்பாளர்கள் |
|---|---|---|
| கல்கத்தா மதரஸா | 1781 | வாரன் ஹேஸ்டிங்ஸ் |
| பனாரஸ் சமஸ்கிருத கல்லூரி | 1791 | ஜொனதன் டங்கன் |
| கல்கத்தா இந்து கல்லூரி | 1800 | வெல்லெஸ்லி பிரபு |
| கல்கத்தா இந்து கல்லூரி | 1817 | ராஜாராம் மோகன் ராய், டேவிட் ஹரே, எட்வர்டு ஹைடீ |
| Surpara (சுரிபரா பள்ளி) | | ராஜாராம் மோகன்ராய் |
| ஆங்கிலோ - இந்துப்பள்ளி | 1822 | ராஜாராம் மோகன்ராய் |
| வேதாந்தா கல்லூரி | 1825 | ராஜாராம் மோகன்ராய் |
| மீதூரன் பள்ளி | 1849 | ஜான் எலியட் |
| தயானந் ஆங்கிலோ வேதிக் கல்லூரி (லாகூர்) | 1886 | லாலா லஜபதிராய், லாலா ஹென்ஸ் ராஜ் |
| பனாரஸ் ஹிந்து பள்ளி | 1898 | அன்னிபெசன்ட் |
| பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் | 1916 | மதன் மோகன் மாலவியா |
| வார்தா திட்டம் | 1939 | மகாத்மா காந்தி |

## முக்கிய செய்தித்தாள்கள் மற்றும் நாவல்கள் (இந்திய சுதந்திரத்திற்கு முன்)

| செய்தித்தாள்/ நாவல்கள் | தலைவர் | ஆண்டு |
|---|---|---|
| தி பெங்கால் கெஜட் | ஜேம்ஸ் அகஸ்டஸ் | 1780 |
| சம்பத் கமுதி (பெங்காலி) | ராம்மோகன் ராய் | 1822 |
| மீரட் - உள் - அக்பர் | ராம்மோகன் ராய் | 1822 |
| ராஸ்டீ ஹோஃப்டர் | தாதாபாய் நௌரோஜி | 1854 |
| கவிவச்சான் சுதா | ஹரிசந்திரா | 1868 |
| அம்ரிதா பஜார் பட்ரிகா | குமார் கோஸ் மற்றும் மோதிலால் கோஸ் | 1868 |
| ஸ்டேட்ஸ்மென் | ராபர்ட் நைட் | 1875 |
| இந்து | வீர்.ராகவசாரியார் மற்றும் G.S. ஐயர் | 1878 |
| கேசரி | பாலகங்காதர திலகர் | 1881 |
| மராத்தா | பாலகங்காதர திலகர் | 1881 |
| சுதர்க் | கோபால் கிருஷ்ண கோகலே | 1888 |
| நியூ இந்தியா (வார இதழ்) | பிபின் சந்திர பால் | 1902 |
| வந்தே மாதரம் | அரபிந்த கோஷ் | 1905 |
| மும்பை க்ரோனிகல் | பிராஜ் ஷா மேத்தா | 1910 |
| அல் -கிலால் (உருது) | அபுல் ஆசாத் | 1912 |
| காமன் வெல்த் நியூ | அன்னிபெசன்ட் | 1914 |
| இந்தியா (தினசரி) | அன்னிபெசன்ட் | 1914 |
| சுதந்திரம் | மோதிலால் நேரு | 1919 |
| நவ ஜீவன் | காந்தி | 1919 |
| Young Indian | காந்தி | 1919 |
| மூக் நாயக் | அம்பேத்கர் | 1920 |
| ஹிந்துஸ்தான் டைம்ஸ் | கவலம் நாராயண பனிக்கர் | 1925 |
| ஹரிஜன் | மேகான்லால் ஹரிசம்பத் காந்தி | 1933 |
| ஹிந்துஸ்தான் | மதன்மோகன் மாளவியா | 1936 |
| சந்தியா | பீமல் பாபு உபாதயா | 1906 |
| கரன்தீ | மிரஜ்கர், ஜோல்கர், கட்டே | 1927 |
| ப்ரீ ஹிந்துஸ்தான் | தாரக் நாத் தாஸ் | 1927 |

| | | |
|---|---|---|
| தல்வர் | விரேந்தர நாத் சட்டோபத்யாயா | 1927 |
| ஹிந்து பத்ரியம் | திரில் சந்திர கோஸ் | 1927 |
| இந்திய சமுதாயம் | சியாம்ஜி கிருஷ்ணா வர்மா | 1927 |
| சோம் பிரகாஷ் | ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் | 1927 |
| ஜிகன்தர் பட்ரிகா (பெங்காலி) | பூபேந்திரநாத் டட், பரிந்தர் குமார் கோஷ் | 1927 |
| இந்தியன் மிரர் | தபேந்திரநாத் தாகூர் | |
| பஞ்சாபி | லாலாலஜபதி ராய் | |
| விகர் | லூாகிர் கிருஷ்ணால்திரி சிப்லாங்கர் | |
| இந்திய பொருளாதாரம் | மகாதேவ் கோவிந்த் ரானடே | |
| பிரதாப் | கணேஷ் சங்கர் வித்யாத்ரி | |
| காம்ரதி காம்ரேட் | முகமது அலி | |
| அல் பல்கத் | அபுல் கலாம் அசாத் | |

# பிரிட்டிஷாரால் இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதாரத்தாக்கம்

- இந்தியாவை ஆட்சி புரிந்த அந்நியர்களில் ஆங்கிலேயர்கள் தவிர அனைவருமே இந்தியாவில் நிரந்தரமாக தங்கியே ஆட்சி புரிந்தனர்.
- பண்டைக்கால ஆட்சியாளர்கள் இந்திய சமுதாயத்துடன் இரண்டறகலந்து விட்டனர்.
- மத்திய காலத்தில் ஆட்சி புரிந்த துருக்கியர்கள்.
- ஆப்கானியர்கள், முகலாயர்கள் இந்தியாவில் நிரந்தரமாக தங்கி ஆட்சி புரிந்தனர். இவர்கள் இஸ்லாமியர்கள் என்ற விதத்தில் மட்டுமே வேறுபட்டு விளங்கினாலும் இந்திய சமுதாயத்தின் ஒரு அங்கமாகவே விளங்கினர்.
- ஆங்கிலேயர்கள் மட்டுமே இந்தியாவில் நிரந்தரமாக தங்கவில்லை. இங்கிலாந்தின் நலன்களுக்காகவே இந்தியாவை பல வழிகளில் பயன்படுத்தினர்.
- இந்திய மனித வளத்தை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களாகவோ, ஐரோப்பாவில் போர் செய்ய போர் வீரர்களாகவோ மட்டுமே பயன்படுத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய பொருளாதாரத்தை திட்டமிட்டு சுரண்டினர்.
- வணிகர்களாக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் இறுதிவரை வணிகர்களாக விளங்கினர். இதன் விளைவாக இந்திய பொருளாதார நிலை பாதிக்கப்பட்டு இந்தியர்கள் ஏழ்மை நிலையிலேயே இருந்தனர்.
- இந்தியாவில் ஆங்கிலேயர் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இந்திய பரம்பரை பொருளாதாரம் பாழக்கப்பட்டதுடன் நவீன பொருளாதார கட்டுமானம் வளர்ச்சியடையாமல் போய்விட்டது. இதனால் மக்கள் ஏழ்மை நிலையிலேயே நிரந்தரமாக வாழ வேண்டியநிலை ஏற்பட்டது.

**1. பொருளாதார மற்றும் வாணிபக் கொள்கை:**

- R.C. தத்தா என்பவர் பிரிட்டிஷ் காலணியாதிக்க காலத்தில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின்மையை (Under Development) மூன்று நிலைகளாக மதிப்பிட்டுள்ளார்.

**2. முதல் நிலை (அ) ஆரம்பநிலை(1600 - 1757) (Early Phase):**

- ❖ ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி முதல் நிலையின் போது இந்தியாவிலிருந்து வாசனைப்பொருட்களையும், நெசவுப்பொருட்களையும் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்தது. அங்கிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் விலையுயர்ந்த கற்களையும் இந்தியாவிற்கு இறக்குமதி செய்தது.

**3. வியாபாரக் காலநிலை (Mercantile Phase - 1757 - 1813):**

- ❖ ஆங்கிலேயர்கள் இந்திய பொருட்களின் விலையை தாங்களே முடிவு செய்தனர். அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி வாணிபத்தை அவர்களது தனி உரிமையாக்கினர் (Monopoly) மேலும் வங்காளத்தின் வருவாயை இந்தியப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு பயன்படுத்தினர்.

**4. தொழிலக நிலை(Industrial Phase 1813 - 1858):**

- ❖ தொழில்புரட்சி பிரிட்டனின் பொருளாதாரத்தை மாற்றியது. பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் இந்தியாவை சுரண்டியது 1813 பட்டய சட்டத்தின் மூலம் ஒரு வழி இலவச வாணிபம் (One way free trade) அறிமுகப்படுத்தப்பட்டு, பிரிட்டிஷின் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இந்திய சந்தையில் நிரம்பி வழிந்தது.
- ❖ இதனால் இந்தியர்கள் வெளிநாட்டு சந்தைகளையும் இந்திய சந்தைகளையும் இழந்தனர்.

**5. துறை வாரியாக ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள்:**

**i. தொழிற்துறை (Industry):**

**1) பொருளாதார சுரண்டல்**

**(Economic Exploitation of India)**

- ❖ தொழிற்புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்துக்கு அதிக மூலப் பொருள் தேவைப்பட்டது.
- ❖ இந்தியாவில் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த இங்கிலாந்து இந்தியாவிலிருந்து மூலப்பொருட்களைப் பெற்றது மேலும் இங்கிலாந்து உற்பத்தியாளர்களுக்கு இந்தியா ஒரு சிறந்த சந்தையாக (Market) விளங்கியது. இவ்வாறு தொழிற்புரட்சியின் விளைவாக இந்தியாவில் பொருளாதாரச் சுரண்டல் திட்டமிட்டு நடத்தப்பட்டது.

**2) இந்தியத் தொழில்களின் அழிவு (Extinction of Native Industry)**

- ❖ ஆங்கில அரசு தடையில்லா வாணிபக் கொள்கையைப் பின்பற்றியது. இதன்

விளைவாக இங்கிலாந்தில் இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இந்தியாவில் கொண்டு வந்து குவிக்கப்பட்டது. இதனால் இந்தியத் தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது.

- ❖ இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கிலப் பருத்தி துணிகள் மீது இரண்டு சதவீத வரியே விதிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பருத்தி துணிகள் மீது பத்து சதவீத வரி விதிக்கப்பட்டது.
- ❖ இதன் விளைவாக இந்திய துணிகளின் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்தது. இது இந்திய பொருளாதார நிலையை மிகவும் பாதித்தது.

### 3) மூலப் பொருட்களை சப்ளை செய்யும் நாடாக இந்தியா:

- ❖ ஆங்கில தொழிற்துறையின் வளர்ச்சிக்குச் சாதகமாகவே இந்தியாவில் ஆங்கில பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டது.
- ❖ மூலப் பொருட்களை இந்தியாவிலிருந்து அதிக அளவில் ஏற்றுமதி செய்தனர். உதாரணமாக பருத்தி ஏற்றுமதி 1813 -ல் 32 மில்லியன் பவுண்டுகளாக இருந்தது 1894 -ல் அது 83 மில்லியன் பவுண்டுகளாக உயர்ந்தது.

### 4) கிராம சமுதாயத்தின் வீழ்ச்சியும், சுய தேவை கொள்கையின் அழிவும்:

- ❖ ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி சமுதாயமாகவும் தங்கள் சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலையிலும் விளங்கின. ஆங்கிலேயர் பின்பற்றிய நிர்வாக மற்றும் நிதிக் கொள்கையின் விளைவாக கிராமங்களின் நிலைகளில் மாற்றம் ஏற்பட்டது.
- ❖ ரயில்வே, போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு வளர்ச்சியின் விளைவாக கிராமங்கள் பக்கத்து நகரங்களுடன் தொடர்பு கொண்டு தேயிலை, மண்ணெண்ணை, தீப்பெட்டி, சீனி, குடை, மற்றும் வளையல்கள் போன்ற பொருட்களை வாங்கினர்.
- ❖ இது கிராமங்களில் பரம்பரையாக இருந்து வந்த சுயசார்பு நிலையை இல்லாமல் செய்துவிட்டது.

### 5) இந்திய கைவினைப் பொருட்களின் வீழ்ச்சி

### (Decline of Indian Handi Crafts):

- ❖ ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் செய்யப்பட்ட தொழிற்துறை உற்பத்தி பொருட்களுக்கே அதிக பாதுகாப்பு அளிக்கும் விதமாக தங்கள் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொண்டனர். இதன்

விளைவாக இந்திய கைவினைப் பொருட்கள் வீழ்ச்சியடைந்தது. நகரப் பகுதிகளில் இங்கிலாந்து நிறுவிய பெரிய அளவிலான தொழிற்சாலைகளின் விளைவாகவும் இந்திய கைவினைப் பொருட்கள் நசித்துப் போயின. இயந்திரம் மூலம் செய்யப்பட்ட அழகான, உறுதியான பொருட்களுக்கு முன்னால் இந்திய கைவினைப் பொருட்கள் போட்டியிட முடியவில்லை.

❖ இந்திய கைவினைப் பொருட்களுக்கு ஆதரவளித்து வந்த அரசர்களும் வலிமை இழந்துவிட்டதால் கைவினைப் பொருட்கள் வீழ்ச்சியடைந்தது. இதனால் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுவந்த இந்திய தொழிலாளர்கள் வேலை இழந்து நிலை குலைந்தனர் அவர்கள் தொழிலாளர்களாகவும், விவசாயிகளாகவும் மாறினர்.

**6)ரயில்வே செய்தித்தொடர்பு வளர்ச்சியின் விளைவு:**

❖ பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது ரயில்வே மற்றும் செய்தித் தொடர்பில் ஏற்பட்ட வளர்ச்சி ஆங்கிலேயர் நலன்களை பேணிப் பாதுகாத்தன. போரின் போது நிலைமையை சமாளிக்க உதவின. அமைதிக்காலங்களில் இந்திய மனித சக்தியையும், இந்திய வளங்களையும் சுரண்டுவதற்கு இவை உதவின.

**7) செல்வ சுரண்டல் கோட்பாடு**

**(Drain of Wealth Theory):**

❖ இந்தியாவின் மூதறிஞர் தாதாபாய் நௌரோஜி முதன் முதலில் தனது புத்தகமான "ஏழ்மையும் பிரிட்டிஷார் இல்லாத இந்திய ஆட்சியும் (Poverty and Un - British Rule inIndia - 1867) மூலம் பிரிட்டிஷாரின் இந்திய செல்வ சுரண்டலை குறிப்பிட்டார். **இந்தியர்களின் தலாவருமானம் ரூ. 20 என்று குறிப்பிட்டுள்ளார்.**

❖ R.C தத் என்பவர் தனது புத்தகமான "இந்திய பொருளாதார வரலாறு" (Economic History of India) மூலம் பிரிட்டிஷாரால் இந்தியாவிற்கு ஏற்பட்ட பொருளாதார தீங்குகளை குறிப்பிட்டுள்ளார்.

❖ 1757ல் நடைபெற்ற பிளாசிப்போருக்கு பிறகு பொருளாதார சுரண்டலை பிரிட்டிஷார் ஆரம்பித்தனர். 1865 ல் வங்காளத்தின் திவானி (வருவாய் மற்றும் பொது நீதி) உரிமையை பெற்ற பிறகு, வங்காளத்தின் வருவாயை கொண்டு இந்திய பொருட்களை வாங்கி

ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் பெற்றனர். இந்த வருவாயை அவர்கள் கம்பெனியின் முதலீடு (Company's Investment) என்றழைத்தனர்.

### ii. விவசாயம் (Agriculture):

- ❖ இந்தியாவில் பண்டைக்காலத் திலிருந்தே விவசாயம் முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு இந்திய விவசாயிகள் புராதன விவசாயக் கருவிகளை உபயோகித்து பழமையான முறையை பின் பற்றியே விவசாயம் செய்து வந்தனர்.
- ❖ அவர்களது விவசாயம் சுய தேவைகளை பூர்த்தி செய்யும் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.
- ❖ ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி சமுதாயமாகவே விளங்கியது. ஆங்கிலேயர் ஆட்சி இந்திய விவசாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல நல்ல விளைவுகளும், தீய விளைவுகளும் ஏற்பட்டன.

### நல்ல விளைவுகள் : Good Effects:

- ❖ ஆங்கிலேயரின் ஆட்சி விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப்பொருளாதாரத்தில் பல தீய விளைவுகளை ஏற்படுத்தினாலும் பொதுவாக அவர்களது ஆட்சி சில நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது அவைகளைக் காணலாம்.

#### 1) புதிய நிலவருவாய் திட்டம்:

#### (New Land revenue System)

- ❖ ஆங்கிலேய நிர்வாகம் புதிய நிலவருவாய் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ❖ அதன்படி நிலவரி பணமாக வசூலிக்கப்பட்டது. இது பயிரிடுவோர்களுக்கு மிகவும் எளிதாக அமைந்தது. அத்துடன் உணவுத் தானியங்களுக்குப் பதிலாக அதிக அளவில் பணப்பயிர் விவசாயம் செய்யும் நிலை உருவாகியது.

#### 2) வியாபார ரீதியிலான விவசாயம்: Commercialization of Agriculture

- ❖ இங்கிலாந்தில் தொழிற்புரட்சியின் விளைவாக மூலப் பொருட்களுக்கு (Raw materials) அதிக தேவை ஏற்பட்டது. இதனால் இந்தியாவிலிருந்து அதிக விலைக்கு பொருட்களை ஆங்கில வணிகர்கள் வாங்கினார்கள். இதன் மூலம் பணப் பொருளாதாரம் (Money Economy) அறிமுகமானது.

- ❖ எனவே விவசாயிகள் அதிக பணம் சம்பாதிப்பதில் நாட்டம் கொண்டு பருத்தி, சணல், நிலக்கடலை, கரும்பு, தேயிலை போன்ற பணப்பயிர்களையே அதிகம் பயிரிட்டனர்.

**3) விவசாயச் சந்தை முறை அறிமுகம் (Introduction of Agricultural Marketting)**

- ❖ இந்தியாவிலிருந்து அதிக அளவில் மூலப் பொருட்களை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்ய விரும்பிய ஆங்கிலேயர் இந்தியாவில் விவசாய சந்தை முறையை அறிமுகப்படுத்தினர். இதன் மூலம் வியாபாரிகள், தரகர்கள், விற்பனையாளர்கள் ஆகியோர் அதிக நன்மையடைந்தனர்.
- ❖ வியாபாரிகள் விவசாயிகளிடம் பணப்பயிர்களை கொள்முதல் செய்து பெரிய சந்தைகளில் விற்று லாபம் சம்பாதித்தனர்.
- ❖ இதன் மூலம் வட்டிக்கடைகாரர்களின் பிடியிலிருந்து விவசாயிகள் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் தாங்களே தங்கள் உற்பத்தி பொருட்களை நகரங்களிலுள்ள பெரிய சந்தைகளுக்கு எடுத்துச் சென்று நியாயமான விலைக்கு விற்றனர்.

**4) பணவியல் பொருளாதாரம் (Money Economy)**

- ❖ ஆங்கிலேயர்கள் பணவியல் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினர். பல்வேறு பொருட்கள் வாங்குவதற்கு பணமே பயன்படுத்தப்பட்டது.
- ❖ கிராமங்களில் பரம்பரையாக நடைமுறையில் இருந்து வந்த பண்ட மாற்று முறை மறைந்தது. பணமே முக்கியமான மாற்று சாதனமாக (Medium of Exchange) செயல்பட்டது. விவசாயிகள் அதிக பணம் சம்பாதிப்பதில் நாட்டம் கொண்டனர்.
- ❖ விவசாயிகளின் பல துன்பங்கள் இதனால் நீங்கியது.

**5) இந்திய பருத்திக்கான தேவை:**

- ❖ அமெரிக்க உள்நாட்டுப் போரின் விளைவாக இங்கிலாந்துக்கான அமெரிக்க பருத்தி ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்பட்டது.
- ❖ எனவே இந்தியாவிலிருந்து அதிக அளவில் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்திய பருத்திக்கு அதிக விலை கொடுத்தனர்
- ❖ ஆங்கில துணி உற்பத்தியாளர்கள். இதன் விளைவாக இந்திய விவசாயிகள் அதிக அளவில்

பருத்தி பயிரிடும் நிலத்தின் அளவும் அதிகரித்தது.

**6) உற்பத்தி அதிகரிப்பு:**

- ❖ ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய புதிய நிலவருவாய் திட்டத்தால் ஜமீன்தார் என்ற பிரிவும், சிறிய நிலச் சொந்தக்காரர் என்ற பிரிவும் தோன்றியது. ரயத்துவாரி முறைப்படி விவசாயம் செய்த சிறிய விவசாயிகளுக்கு அவர்கள் விவசாயம் செய்து வந்த நிலம் சொந்தமாக்கப்பட்டது.
- ❖ இதனால் தங்கள் நிலங்களில் உற்பத்தியை அதிகரித்தனர்.

**தீய விளைவுகள்: (Adverse Effects)**

- ❖ ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவாக இந்திய விவசாயத்தில் நல்ல விளைவுகளை விட தீய விளைவுகளே அதிகமாக காணப்பட்டது.

**1) இந்திய குடியானவர் சுரண்டப்படுதல்: (Exploitation of Indian Peasants)**

- ❖ ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இந்திய வணிகர்களாலும் இந்திய வியாபாரிகளாலும் ஏழை குடியானவர்கள் கடுமையாக சுரண்டப்பட்டார்கள்.
- ❖ அறுவடையின் போது மிகக்குறைந்த விலைக்கு பயிர் செய்பவர்களிடமிருந்து மூலப் பொருட்களை வாங்கி பின்னர் அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதித்தனர். நகர்புற சந்தைகளுக்கு சென்று நல்ல விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த சுரண்டலிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.
- ❖ இதனால் பல இடங்களில் குடியானவர்களிடம் அதிருப்தி ஏற்பட்டு அதன் விளைவாக கிளர்ச்சிகள் ஏற்பட்டன.

**2) ஆங்கில நிர்வாக முறையின் தீய விளைவுகள்:**

- ❖ ஆங்கிலேயர்கள் முகலாய பேரரசர் ஷா ஆலத்திடமிருந்து 1765 -ல் திவானி உரிமையை பெற்றுக் கொண்டதிலிருந்தே பொருளாதாரச் சுரண்டல் ஆரம்பித்துவிட்டது. அதிக தொகை கொடுப்பவர்களுக்கே நிலம் குத்தகைக்கு விடப்பட்டது.
- ❖ அவர்கள் நிலங்களை பயிரிடுபவர்களிடம் விட்டு, அவர்களிடமிருந்து அதிக அளவு வருவாய் பெற்றனர். ராபர்ட் கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டை ஆட்சியின் விளைவாக சீர்கேடுகள் ஏற்றப்பட்டன.

- ❖ காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்திய நிரந்த நிலவரித் திட்டத்தினால் விவசாயிகளின் குறைகள் களையப்படவில்லை.
- ❖ ஆங்கிலேயரின் புதிய நிலவருவாய் கொள்கையால் நிலப்பிரபுக்கள் என்ற புதிய வர்க்கம் தோன்றியது.
- ❖ இவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளித்தது. விவசாயிகள் மீது அவர்களுக்கிருந்த ஆதிக்கத்தை மேலும் கடினப்படுத்தியது.
- ❖ இதனால் நிலப்பிரபுகள் மேலும் மேலும் செழிப்படைந்த போது பயிர் செய்பவர்கள் மேலும் மேலும் ஏழையாயினர்.
- ❖ அதிக வருவாய் செலுத்தியதுடன் மட்டுமல்லாது தங்கள் நிலப்பிரபுக்களுக்கு ஊதியமில்லாத வேலையும் (bagar) செய்ய வேண்டியதிருந்தது.

**3) கிராமக் கடன் சுமை அதிகரிப்பு:**

- ❖ ஆங்கிலேயர்களின் புதிய சட்ட அமைப்பு முறையின் படி கிராம சமுதாயத்தின் உரிமைகளை அரசு அங்கீகரிக்கவில்லை.
- ❖ மாறாக வட்டிக் கடைக்காரர்களுக்கு நிலப்பிரபுகளுக்குமே பாதுகாப்பு அளிக்கும் விதமாக சட்ட அமைப்பு காணப்பட்டது.
- ❖ இதனால் பயிரிடுபவர்கள் நிலப்பிரபுக்களாலும், பனியாஸ் (Banias) என்ற வியாபாரிகளாலும் பல வகைகளில் கொடுமைப்படுத்தப்பட்டனர்.
- ❖ விவசாயிகளின் நிலங்கள் கொஞ்ச கொஞ்சமாக நிலப்பிரபுக்களிடம் போய் சேர்ந்தன.

**4) நிலங்கள் துண்டு துண்டாக்கப்படுதல்:**

**Fraqmentation of Land:**

- ❖ பயிரிடும் நிலங்கள் மேலும் மேலும் சிறு பகுதிகளாக துண்டாக்கப்பட்டதால்.
- ❖ விவசாயிகளுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டது. தகப்பனுக்குப் பிறகு பிள்ளைகளுக்கு நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டதாலும் மக்கள் தொகை அதிகரிப்பதாலும் மட்டுமல்லாது பொருளாதாரக் காரணங்களுக்காகவும் நிலங்கள் துண்டு துண்டாக்கப்பட்டது.
- ❖ ஆங்கிலேயர்களின் கொள்கை களின் விளைவாக கைவினை மற்றும் குடிசைத் தொழில்கள் நசித்துப் போயின. எனவே நகர்ப்புறப் பகுதியிலுள்ள வேலை இழந்த தொழிலாளர்கள் கிராமங்களுக்கு வந்தனர். இதனால் நிலங்கள் மேலும் துண்டுகளாக்கப்பட்டன. இது விவசாயத் தொழிலில் பெரிய நெருக்கடியை ஏற்படுத்தியது.

வேலை இழந்த தொழிலாளர்கள் கிராமங்களுக்கு வந்தனர்.

- ❖ இதனால் நிலங்கள் மேலும் துண்டுகளாக்கப்பட்டன. இது விவசாயத் தொழிலில் பெரிய நெருக்கடியை ஏற்படுத்தியது.

**5) நீர்ப்பாசன வசதியில்லாததால் ஏற்பட்ட விளைவு: (Lack of Irrigation Facilities)**

- ❖ ஆங்கில அரசு சரியான முறையில் விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி எதுவும் செய்து கொடுக்கவில்லை. மழையை நம்பியே விவசாயம் செய்ய வேண்டியிருந்தது.
- ❖ இதன் விளைவாக பஞ்சங்களும் விவசாயிகளுக்கு நஷ்டமும் ஏற்பட்டு விவசாயிகளின் நிதிநிலை மிகவும் மோசமடைந்தது.

**6) கிராம சமுதாயத்தின் சுயசார்பு தன்மையின் வீழ்ச்சி:**

**(Decline of Self Sufficient Village Communities)**

- ❖ ஆங்கிலேயர் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக கிராம சமுதாயத்தின் சுயாட்சி நிலையும், சுயசார்பு நிலையும் வீழ்ச்சியடைந்தது.

# ஆங்கிலேய கவர்னர்கள், கவர்னர் ஜெனரல்கள், வைசிராய்கள் மற்றும் முக்கிய இந்திய நிகழ்வுகள்

**1. ஆங்கிலேய கவர்னர்கள் - வங்காளம்:**

**i) இராபர்ட் கிளைவ் (1757 - 60, 1765 - 67)**

- ❖ ஆற்காட்டு போர் (1751)
- ❖ பிளாசிப் போர் (1757) பிதேரா போர் (1759)
- ❖ இரட்டை ஆட்சி அறிமுகம்(1765)
- ❖ அலகாபாத் உடன்படிக்கை (1765)

**ii) வான்சித்தார்த் (1760 - 65)( Van Sittart):**

- ❖ பக்சார் போர் (1764)

**iii) வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772 - 73) Warren Hastings:**

- ❖ இரட்டை ஆட்சி ஒழிப்பு (1772)
- ❖ ஐந்தாண்டு கால நிலவரித்திட்டம் (1772)

**2. கவர்னர் ஜெனரல்கள் - வங்காளம்:**

**i) வாரன் ஹேஸ்டிங்ஸ் (1773 - 1785):**

- ❖ ஒழுங்கு முறை சட்டம் (1773)
- ❖ பிட் இந்திய சட்டம் (1784)
- ❖ ரோஹில்லா போர் (1774)
- ❖ முதல் மராத்திய போர் (1775 - 82) சால்பாய் உடன்படிக்கை 1782
- ❖ பேனராஸ் அரசர் ஜெயித் சிங்குடன் மோதல் மற்றும் நந்தகுமார் வழக்கு (1775)
- ❖ ஆசியாட்டிக் சொசைட்டி ஆப் பெங்கால் (1784) ஏற்படுத்தப்படுதல்.

**ii) காரன்வாலீஸ் பிரபு (1786 - 93):**

- ❖ மூன்றாம் மைசூர் போர் (1790 - 92) மற்றும் ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை (1792)
- ❖ காரன் வாலிஸ் சட்டத்தொகுப்பு (1793)
- ❖ ஜமீன்தாரி நிலவரித்திட்டம் (1793)

**iii) சர் ஜான் ஷோர் (1793 - 98):**

- ❖ பட்டயச் சட்டம் 1793 ஹைதராபாத்
- ❖ கார்தா போர் (1795) - நிஜாமிற்கும் மராத்தியர்களுக்கு இடையிலான போர்.

**iv) வெல்லெஸ்லி பிரபு (1798 - 1805):**

- ❖ துணைப்படைத்திட்டம் அறிமுகம் (1798) முதலில் ஹைதராபாத் (1798)
- ❖ நான்காம் மைசூர் போர் (1799)
- ❖ இரண்டாம் மராத்தியப் போர் (1803-05)

- தஞ்சாவூர் (1799), சூரத் (1800) மற்றும் கர்நாடகம் (1801)ஆகியவற்றின் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளல்
- பஸீன் உடன்படிக்கை (1802)

**v) சர் ஜார்ஜ் பார்லோ (1805 - 1807):**

- வேலூர் கலகம் (1806)

**vi) முதலாம் மின்டோ பிரபு (1807 - 13):**

- ரஞ்சித்சிங் அரசருடன் அமிர்தசரஸ் உடன்படிக்கை (1809)

**vii) ஹேஸ்டிங்ஸ் பிரபு (1813 -23):**

- ஆங்கிலேய -நேபாள போர் (1814 - 16) மற்றும் சகௌளி உடன்படிக்கை (1816)
- மூன்றாவது மராத்திய போர் (1817 - 19) பம்பாய் மாகாணம் உருவாக்கம் (1818)
- பிண்டாரிகளை ஒடுக்குதல் (1817 - 18)
- சிந்தியாக்களுடன் உடன்படிக்கை (1817)
- மதராஸில் தாமஸ் மன்றோ (மதராஸ் கவர்னர்) வால் இரயத்துவாரி நிலவரிமுறை அறிமுகம்.

**viii) ஆம்ஹெர்ஸ்ட் பிரபு (1823 - 28):**

- முதல் பர்மிய போர் 1824 -26
- பரத்பூரை கைப்பற்றுதல் (1826)

**ix) வில்லியம் பெண்டிங் பிரபு (1828 - 33)**

- சதி ஒழிப்பு (1829)
- தக்கர்களை அடக்குதல் (1830)
- பட்டய சட்டம் (1833)

**3. கவர்னர் ஜெனரல்கள் இந்தியா:**

**i) வில்லியம் பெண்டிங் பிரபு (1833 - 35):**

- மெக்காலே கல்விதிட்டம் (1835)
- மைசூர் (1831) கூர்க் (1834) மற்றும் மத்திய கச்சார் (1834) ஆகிய பகுதிகள் இணைக்கப்படுதல்.
- அலுவலக மொழியாக ஆங்கிலம் அறிமுகம் (1835)

**ii) மெட்காப் பிரபு (1835 - 36):**

- மெட்காப் பத்திரிக்கைச்சட்டம் (1835)

**iii) ஆக்லாண்ட் பிரபு (1836 -42):**

- முதல் ஆப்கான் போர் (1838 - 42)
- இரஞ்சித் சிங் இறப்பு (1839)

**iv) எல்லன் போரோ பிரபு (1842 - 44):**

- சிந்து இணைப்பு (1843)
- குவாலியருடன் போர் (1843)

**v) முதலாம் ஹார்டிஞ்ச் பிரபு (1844 - 48):**

- முதல் ஆங்கிலேய - சீக்கிய போர் (1845 - 46) மற்றும் லாகூர் உடன்படிக்கை (1846)
- மனித பலி மற்றும் பெண்சிசுக்கொலை ஒழிப்பு.

**vi) டல்ஹௌசிப் பிரபு (1848 - 56):**

- இரண்டாவது ஆங்கிலேய சீக்கிய போர் மற்றும் பஞ்சாப் இணைப்பு (1849)
- வாரிசு இழப்பு கோட்பாடு அறிமுகம் - சதாரா (1848) ஜெய்த்பூர் மற்றும் சாம்பல்பூர், உதய்ப்பூர் (1852), ஜான்ஸி (1853), நாக்பூர் (1854) மற்றும் அயோத்தி (1856) ஆகிய பகுதிகள் இணைப்பு.
- சார்லஸ் உட்கல்வி அறிக்கை (1854)
- ரயில்வே மினிட்ஸ் (1853) - முதல் ரயில்வே பாதை - (மும்பை) - லிருந்து (தானா) வரை - 1853
- தந்தி சேவை அறிமுகம் (1854), அஞ்சல் துறை அறிமுகம் (1854)
- கங்கை கால்வாய் திறப்பு (1854) பொதுத்துறை அறிமுகம் (1854)- (Public Works Department)
- விதவைகள் மறுமணச்சட்டம் (1856)

**vii) கானிங் பிரபு (1856 - 1857)**

- கல்கத்தா, மதராஸ், பம்பாய் பகுதிகளில் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்படல் (1857)
- 1857 பெரும்புரட்சி

**4. இந்தியாவின் வைசிராய்கள் (அரசப்பிரதிநிதி):**

**i) கானிங் பிரபு (1858 -62):**

- ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி ஒழிப்பு (1858)
- இந்திய கவுன்சில் 1861

**ii) முதலாம் எல்ஜின் பிரபு (1862 - 63):**

- வாதாபி இயக்கம்

**iii) ஜான் லாரன்ஸ் பிரபு (1864 - 1869):**

- பூட்டான் போர் (1865)
- கல்கத்தா, பம்பாய் மற்றும் மதராஸ் ஆகிய பகுதிகளில் உயர்நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்படுதல் (1865)

**iv) மேயோ பிரபு (1869 - 72):**

- இந்திய புள்ளியியல் நிறுவனம், விவசாயம் மற்றும் வாணிபத்திற்கு தனித்துறை மற்றும் மாகாண ரயில்வேக்கள் (State Railways) ஏற்படுத்தப்படுதல்.
- கத்தியவாரில் ராஜ்காட் கல்லூரி, ஆஜ்மீரில் மேயோ கல்லூரி ஆகியவை சுதேச அரசர்களின் அரசியல் பயிற்சிக்காக ஏற்படுத்தப்படுதல்.

**v) நார்த் புரூக் பிரபு (1872 - 1876):**

- முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு
- இளவரசர் வேல்ஸ் இந்திய வருகை (1875)
- பஞ்சாபில் குகா (Kuka) இயக்கம்.

**vi) லிட்டன் பிரபு (1876 - 1880):**

1. பஞ்ச ஆணையம் ரிச்சர்ட் ஸ்டேரேட்சி (Richard Strachey) தலைமையில் ஏற்படுத்தப்படுதல்.

- ❖ விக்டோரியா மகாராணி இந்தியாவின் கெய்சர் - ஐ - ஹிந்த் பட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்.
- ❖ சிறப்பு பட்டங்கள் சட்டம் (1878)
- ❖ வட்டார மொழிகள் பத்திரிக்கை சட்டம் (1878)
- ❖ ஆயுதச்சட்டம் (1878)
- ❖ இரண்டாவது ஆப்கானிய போர் (1878 - 80)

**vii) ரிப்பன் பிரபு (1880 - 84):**

- ❖ இந்தியாவில் முழு மக்கட்தொகை கணக்கெடுப்பு
- ❖ வட்டார மொழிகள் பத்திரிக்கைச்சட்டம் நீக்கம் (1881)
- ❖ முதல் தொழிற்சாலை சட்டம் (1881)
- ❖ உள்ளாட்சி சுயாட்சி தீர்மானம் (1882)
- ❖ ஹண்டர் கல்வி ஆணையம் (1882)
- ❖ இல்பர்ட் மசோதா சர்ச்சை (1883 - 84)

**viii) டப்ரின் பிரபு (1884 - 88):**

- ❖ மூன்றாவது பர்மியப் போர் (1885 - 86)
- ❖ இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம் (1885)

**xi) லேன்ஸ்டான் பிரபு (1888 -1894):**

- ❖ தொழிற்சாலை சட்டம் 1891
- ❖ இந்திய கவுன்சில் சட்டம் 1892
- ❖ இந்தியா ஆப்கானிஸ்தான் எல்லையைப் பிரிக்க துரந்த ஆணையம் (1893) ஏற்படுத்தப்படுதல்.

**x) இரண்டாம் எல்ஜின் பிரபு (1894 -99):**

- ❖ சபேக்கர் சகோதரர்களால் பிரிட்டிஷ் அதிகாரிகள் கொல்லப்படுதல் (1897)

**xi) கர்சன் பிரபு (1899 - 1905):**

- ❖ சர் ஆண்ட்ரு பிரேசர் தலைமையில் போலிஸ் ஆணையம் - 1902
- ❖ பல்கலைக்கழக ஆணையம் (1902) மற்றும் இந்திய பல்கலைக்கழக சட்டம் (1904)
- ❖ வாணிபம் மற்றும் தொழிற் சாலைகளுக்கு தனித்துறை
- ❖ கல்கத்தா மாநகராட்சி சட்டம் (1899)
- ❖ தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் சட்டம் (1904)
- ❖ வங்கப்பிரிவினை (1905)
- ❖ திபெத்திற்கு யங்ஹஸ்பண்ட் பயணம் (1904)

**xii) இரண்டாம் மின்டோ பிரபு (1905 - 1910):**

- ❖ முஸ்லீம் லீக்கட்சி (1906)
- ❖ சூரத் பிரபு (1907)

**xiii) இரண்டாம் ஹார்டிஞ்ச் பிரபு**

**(1910 -1916):**

- வங்காள மாகாணம் உருவாக்கம் (1911)
- வங்கப்பிரிவினை நிறுத்தம் (1911)
- பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்படுதல். (1911)
- இந்து மகா சபை (மதன் மோகன் மாளவியா) - 1915
- அரசர் ஐந்தாம் ஜார்ஜ் பதவியேற்பு டெல்லி தர்பார் - 1911

**xiv) செம்ஸ் போர்டு பிரபு (1916 - 21):**

- தன்னாட்சி இயக்கம் (1916)
- லக்னோ உடன்படிக்கை (1916)
- சாம்பரான் சத்யா கிரகம் (1917) கேதா சத்யாகிரகம் (1918), அகமதாபாத் மில் போராட்டம் (1918)
- சபர்மதி ஆஸ்ரமம் (1916)
- ஆகஸ்டு அறிக்கை (1917)
- ரௌலட் சட்டம் (1919), ஜாலியன் வாலாபாக் படுகொலை (1919)
- சாட்லர் கல்வி ஆணையம் (1917)
- கிலாபத் இயக்கம் ஒத்துழையாமை இயக்கம்
- இந்திய பெண்கள் பல்கலைக்கழகம் (பூனா - 1916)
- திலகர் இறப்பு (ஆகஸ்டு 1920)
- **முதல் இந்திய கவர்னர் -S.P. சின்ஹா (பீகார்)**

**xv) ரீடிங் பிரபு (1921 - 26):**

- சௌரி சௌரா நிகழ்வு - பிப்ரவரி 5, 1922
- மாப்பிள்ளா கலகம் - கேரளா (1921)
- ரௌலட் சட்டம் நீக்கம்.
- ககோரி ரயில் கொள்ளை (1925)
- சுயராஜ்ய கட்சி (1923)
- இலண்டன் மற்றும் டெல்லியில் ஒரே நேரத்தில் ICS தேர்வு - 1923.

**xvi) இர்வின் பிரபு 1926 - 31:**

- சைமன் குழு இந்தியா வருகை (1928)
- பட்லர் கமிட்டி (1927)
- லாகூர் காங்கிரஸ் மாநாடு (1929) & பூரண விடுதலை தீர்மானம்.
- சட்ட மறுப்பு இயக்கம் (தண்டியாத்திரை மார்ச் 12, 1930)
- இர்வினின் தீபாவளி அறிக்கை (1929)
- முதல் வட்ட மேசை மாநாடு (1930)
- காந்தி இர்வின் உடன்படிக்கை (1931)

**xvii)வில்லிங்டன் பிரபு (1931 - 36):**

- இரண்டாவது வட்ட மேசை மாநாடு - 1931
- வகுப்புவாரி பிரதிநிதித்துவம் - 1932
- பூனா ஒப்பந்தம் 1932
- மூன்றாவது வட்ட மேசை மாநாடு - 1932

- காந்தி சாகும் வரை உண்ணா விரதம் -எரவாடா சிறை (பூனா - 1932)
- இந்திய அரசுசட்டம் 1935
- பர்மா இந்தியாவிலிருந்து பிரிதல் 1935
- அகில இந்திய கிசான் சபை (1936)
- காங்கிரஸ் சோஷலிச கட்சி (1934) - ஜெயப் பிரகாஷ் நாராயணன் மற்றும் ஆச்சார்யா நரேந்திர தேவ்.

**xviii)லின்லித்கோ பிரபு (1936 -44):**

- முதல் பொது தேர்தல் (1936 -37)
- காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகல்
- இரண்டாவது உலகப்போர்(1939)
- பார்வர்டு பிளாக் கட்சி (1939)
- ஆகஸ்டு சலுகை (1940)
- முஸ்லீம் லீக் கட்சியின் லாகூர் தீர்மானம் -1940
- கிரிப்ஸ் தூதுக்குழு -1942
- வெள்ளையனே வெளியேறு இயக்கம்

**xxi)வேவல் பிரபு (1944 - 1947):**

- C-R.திட்டம் (1944) காந்தி - ஜின்னா பேச்சு வார்த்தை (1944)
- வேவல் திட்டம், சிம்லா மாநாடு (1942)
- இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வருதல் (1945)
- காபினட் தூதுக்குழு (1946)
- நேரடி நடவடிக்கை நாள் (ஆகஸ்டு 16, 1946)
- இடைக்கால அரசாங்கம் (1946)
- அரசியல் நிர்ணய சபை (1946)

**xx) மவுண்ட் பேட்டன் பிரபு (1947 - 48):**

- ஜூன் மூன்றாம் நாள் திட்டம் அல்லது டிகிரி பறவை திட்டம் (ஜூன் 3, 1947)
- ரெட்கிளிப் ஆணையம் (1947)
- இந்திய சுதந்திர சட்டம் (1947)

# சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள்

**(Socio - Religions Reform Movements)**

- இந்தியாவில் 19- ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- ஆங்கில வழி கல்வி மூலம் கல்வி பெற்ற இந்தியர்கள். இந்தியாவில் பாரம்பரியமாக இருந்த வந்த சமூக அமைப்பு, சமயம், கல்வி ஆகியவற்றில் பல மாறுதல்கள் ஏற்பட உதவினர்.சமூக மூடப்பழக்க வழக்கங்களை கைவிடவும், விஞ்ஞான முறையிலான சிந்தனைகளை தூண்டவும், சமூக சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டு சீர்திருத்தவும் சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.
- இவை உறங்கி கிடந்த மக்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தின. தேசிய உணர்வை தூண்டின.

**1. இந்தியாவில் சமூக சமய சீர்திருத்தங்கள் தோன்றுவதற்கான காரணங்கள்:**

**i. அரசியல் ஒற்றுமை**

- ஆங்கில ஆட்சியின் விரிவாக்கம், ஒருங்கிணைப்பு கொள்கையால் இந்தியா அரசியல் ரீதியில் ஒன்றுபடுத்தப்பட்டது.
- இதனால் இந்தியர்களின் பொதுப்பிரச்சனைகள் அனைவராலும் புரிந்து கொள்ளப்பட்டன.
- ஆங்கில ஆட்சியின் தன்மையானது பல இந்திய இளைஞர்களை தங்கள் துன்பத்திற்கும், இழி நிலைகளுக்குமான காரணங்களை அறிய தூண்டியது.

**ii. கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களின் பிரச்சாரத்திற்கு எதிர்ப்பு**

- கிறிஸ்தவ சமய பரப்பாளர்கள் ஏழை, ஒடுக்கப்பட்டவர்கள் மத்தியில் தங்கள் மதத்தை பரப்ப எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர்.
- கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள், இலவச சேவைகள் மற்றும் அரசின் ஆதரவு போன்றவை அவர்கள் நோக்கத்திற்காக பயன்படுத்தப் பட்டது.

- ❖ எனவே இந்துக்களும், இஸ்லாமியர்களும் தங்கள் சமயங்களை காப்பாற்ற எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

**iii) அயல்நாட்டு அறிஞர்களின் பங்களிப்பு**

- ❖ மேற்கத்திய அறிஞர்களான மாக்ஸ்முல்லர், வில்லியம் ஜோன்ஸ் ஆகியோர் இந்தியாவின் பழம்பெருமையை வெளிக்கொணர்ந்தனர்.
- ❖ அவர்கள் பண்டைய இந்தியாவின் புலமை மிக்க நூல்களை ஆழ்ந்து படித்தனர்.
- ❖ இதன் விளைவாக மேற்கத்திய பண்பாட்டை விட இந்திய பண்பாடு உயர்ந்தது என்பதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தனர்.
- ❖ பல இலக்கிய நூல்களை மொழி பெயர்த்தனர்.
- ❖ இதன் மூலம் இந்தியாவின் பாரம்பரியத்தையும், மேன்மையையும் படித்த இளைஞர்கள் அறிந்து கொள்ள உதவினர்.

**iv. ஆங்கில வழிக்கல்வி புகுத்தப்படல்.**

- ❖ 1835ல் ஆங்கில வழிக்கல்வி புகுத்தப்பட்டது ஒரு பெரிய தாக்கத்தை இந்தியாவில் ஏற்படுத்தியது கல்வி.

**v. இந்திய பழமை பழக்க வழக்கங்களில் ஆங்கிலேயரின் தலையீடு**

- ❖ சாதி ஒழிப்பு, விதவைகள் மறுமணம் போன்ற பழக்க வழக்கங்களில் ஆங்கிலேயரின் தலையீடு இந்திய மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தின.

**vi. இந்திய செய்தித்தாள்கள்**

- ❖ ஐரோப்பியர்கள் இந்தியாவில் அச்சுக்கூடங்களை அறிமுகப்படுத்தினர்.
- ❖ இதனால் நாளிதழ்கள், பத்திரிக்கைகள் வெளிவந்தன.
- ❖ பல்வேறு இந்திய மொழிகளில் பல புத்தகங்கள் வெளியிடப்பட்டன.
- ❖ அவற்றில் பெரும்பாலும் இந்திய நாட்டைப்பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றிருந்தன.

**மேற்கத்திய கல்வி**

- ❖ மேற்கத்திய கல்வியால் மேலை கருத்துக்களான மக்களாட்சி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் தேசியம் ஆகியவை இந்தியாவில் பரவின.
- ❖ மேற்கத்திய நாடுகளுக்கு சென்ற இந்தியர்கள் அக்கருத்துக்கள் அங்கு செயல்படும் விதம் பற்றி அறிந்தனர்.
- ❖ தாய்நாடு திரும்பிய அவர்கள், இந்தியர்களிடையே அவை பற்றிய விழிப்புணர்வு இல்லாமல்

இருப்பதைக் கண்டு மனம் வருந்தினர்.

❖ அக்கருத்துக்கள் இந்தியாவில் பரவ தேவையான அடிப்படை செயல்களில் ஈடுபட்டனர்.

**vii. இந்தியாவிலிருந்த மூடப்பழக்க வழக்கங்கள்**

❖ பெண்சிசுக்கொலை, உடன்கட்டை ஏறுதல், விதவைகள் மறுமணத்திற்கு எதிர்ப்பு, அடிமைமுறை பலதாரமணம், சிறுவர் திருமணம், தீண்டாமை, நரபலி, பெண்களின் மோசமான சமுதாய நிலை போன்ற பழக்க வழக்கங்களை சீர்திருத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள் படித்த கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள்.

## 2. சமூக சீர்திருத்தங்கள் (Social Reforms):

❖ ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இந்திய சமுதாயத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சமுதாயம் வளர்ச்சியடைந்தது.

❖ சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்த பல தடைகள் நீக்கப்பட்டன. இந்திய பெண்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## 3. சதி ஒழிப்பு (உடன்கட்டை ஏறுதல் ஒழிப்பு - Abolition of Sati):

❖ கணவன் இறந்த பின் மனைவியும் தாமாகவே கணவன் சிதையில் ஏறி தன்னை எரித்துக் கொள்ள வேண்டுமென்ற கொடிய சதிப் பழக்கம் இந்தியாவில் வங்காளம் மற்றும் இராஜபுத்திர பகுதிகளில் நிலவி வந்தது. இதனை கண்டித்த ராஜாராம் மோகன்ராய் **"சாத்திரங்களின் படியும் எல்லாநாட்டு நீதியின் படியும் சதி என்பது படுகொலையே ஆகும்"** என்றார்.

❖ ராஜாராம் மோகன்ராயின் ஆதரவுடன் கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபு, சதி ஒழிப்புச் சட்டத்தை 1829ல் கொண்டு வந்தார்.

❖ சதி பழக்கம் சட்ட விரோதமாக்கப்பட்டது. சதிக்கு உதவுபவர்கள், தூண்டுபவர்கள் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டது.

❖ 19 ம் நூற்றாண்டில் ஏற்பட்ட முக்கியமான சமூக சீர்திருத்தம் சதியை (உடன்கட்டை ஏறுதல்) ஒழித்ததேயாகும். இது இந்து சமுதாயத்தில் செய்யப்பட்ட மிகப்பெரிய சீர்திருத்தமாகும்.

❖ இவ்வாறு சதி இந்தியாவில் சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது.

வாய்மையே வெல்லும்

**1. பெண்சிசுக்கொலை ஒழிப்பு (Abolition of Female Infanticide):**

- பெண் குழந்தைகளை பொருளாதாரச் சுமைகளாக கருதி கொல்லும் பழக்கம் வங்காளம் மற்றும் இராஜ புத்திரப்பகுதிகளில் நிலவிவந்தது. இந்த கொடிய பழக்கத்தை ஒழிக்க 1795, 1804 மற்றும் 1820 களில் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

**2. அடிமைமுறை ஒழிப்பு (Abolision of Slavery):**

- இந்தியாவில் மக்களின் ஒரு பிரிவினரை அடிமைகளாக நடத்தும் பழக்கம் நீண்டகாலமாகவே நடைபெற்று வந்தது.
- இது 1843 ல் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது. இது தவிர நரபலி கொடுக்கும் பழக்கம் ஒரிசாவில் பல இடங்களில் காணப்பட்டது.
- இது 1847 - 54 ல் ஹார்டிஞ்ச் பிரபுவால் ஒழிக்கப்பட்டது.

**3. பலதார மணம், சிறுவர் திருமணத்திற்கு தடை**

- கேசவ சந்திர சென் என்பவரின் முயற்சியால் 1872 ல் சுதேசிகள் திருமணச்சட்டம் (The Native Marriage Act) கொண்டு வரப்பட்டது.
- அதன்படி பலதார மணம், சிறுவர் திருமணம் சட்ட விரோதமானவை என அறிவிக்கப்பட்டது. மேலும் 1891ல் பார்சி சீர்திருத்தவாதி B.M. மலபாரி என்பவரின் முயற்சியால் வயது ஒப்புதல் சட்டம் (Age of Consent Act) கொண்டு வரப்பட்டது.
- இது 12 வயதிற்கு கீழ் பெண்களின் திருமணத்தை தடை செய்தது. ராய்சாகிப் ஹர்பிலாப் சாரதா (Rai Saheb Harbilas Sarda) என்பவரின் முயற்சியால் 1930 ல் சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது. இது ஆண்களின் திருமண வயது -18 பெண்களின் திருமண வயது 14- என்று நிர்ணயம் செய்தது.
- சுதந்திர இந்தியாவில் குழந்தை திருமண தடை திருத்தச்சட்டம் (Child Marriage Restraint Amendment Act) 1978 ஆண்களின் திருமண வயதை 18 லிருந்து 21 ஆகவும், பெண்களுக்கு 15 லிருந்து 18 ஆகவும் உயர்த்தியுள்ளது.

4. **விதவைகள் மறுமணம் (Widow Remarriage):**

- கல்கத்தா சமஸ்கிருத கல்லூரியின் முதல்வரான பண்டித ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் என்பவரின் முயற்சியால் 1856ல் டல்ஹௌசி பிரபு விதவைகள் மறுமணச்சட்டத்தை (Wodow Remarriage Act) இயற்றி விதவைகள் மறுமணத்தை சட்டப்பூர்வமாக்கினார்.
- பேராசிரியர் D.K கார்வே (D.K. Karve) என்பவர் தானே ஒரு விதவையை திருமணம் செய்து விதவைகளுக்காக தம் வாழ்வை அர்ப்பணித்துள்ளார். 1916ல் இவருடைய முயற்சியால் பம்பாயில் பெண்கள் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது.

5. **பெண்கல்வி மற்றும் முன்னேற்றம் (Education fo Women and Developemtnt)**

- J.E.D பெத்தூனே என்பவரால் 1849ல் கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்ட பெத்தூனே பள்ளி பெண்கல்விக்கான முக்கிய முயற்சியாகும்.
- பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர் வங்காளத்தில் 35 பெண்கள் பள்ளிகளை ஏற்படுத்தினார்.
- இதே போல் மதராஸ் மாகாணத்தில் பந்துலு என்பவர் **விவேகவர்தினி (Viveka Vardini)** என்னும் பத்திரிக்கை ஆரம்பித்து பெண்கல்விக்காக பல பள்ளிகளை தொடங்கினார்.
- நீதிபதி மகாதேவ கோவிந்த ரானடே என்பவர் பம்பாயில் ஷாரதாசாதன் (Sharda Sadan) என்ற விதவைகளுக்கான பள்ளியை ஆரம்பித்தார்.
- பெண் விடுதலையின் மிகப் பெரிய சீர்திருத்தவாதியான D.K. கார்வ் புனேயில் பெண்பள்ளிகளையும் விதவைகளுக்கான மறுவாழ்வு மையங்களையும் ஆரம்பித்தார். 1916 ல் பம்பாயில் முதலாவது இந்திய பெண்கள் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தார்.
- தக்காணத்தை சேர்ந்த கங்காபாய் என்ற பெண்மணி கல்கத்தாவில் தங்கி, பெண் கல்வியை பரப்புவதற்கு 1893ல் மகாகாளி பாதஷாலா என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார். மதராஸ் மாகாணத்தின் பட்டப்படிப்பு பெற்ற முதலாவது இந்து விதவையான சுப்புலட்சுமி விதவைகளுக்காக மறுவாழ்வு மையங்களையும் பெண் பாடசாலைகள், பயிற்சி மையங்களையும் ஆரம்பித்தார்.

❖ பெண்கள் விடுதலைக்காக நீதிபதி ரானடேயின் மனைவி ராமாபாய் என்பவரால் பெண் கல்வியைப் பரப்ப ஆரிய மகிள சமாஜ் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

❖ மேலும் 1910ல் சரளா தேவி என்பவரால் அலகாபாத்தில் பெண்களின் நலனை பாதுகாக்க “பாரத் ஸ்திரி மகாமண்டலம்” (Bharat Stree Mahamandal) என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

**இந்திய பெண்கள் சங்கம் (Women Indian Association - WIA)**

❖ பெண்கல்வியைப் பரப்ப 1915ல் டாரதி ஜினராஜதாசா (Dorothy Jinarajadasa) என்ற ஐரிஷ் பெண்மணியினால் ஆரம்பிக்கப் பட்டது.

❖ பெண்களின் உரிமைகளை பாதுகாக்க ஸ்திரிதர்மா என்ற இதழையும் நடத்தியது.

❖ 1925 ல் பெண்கள் தேசிய கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது.

**அனைத்திந்திய பெண்கள் கூட்டமைப்பு (All India Women’s Conference)**

❖ முதல் மாநாடு மார்கரட்கசின் (Margaret Cousin) என்பவரது முயற்சியால் 1927ல் பூனேயில் கூட்டப்பட்டது.

❖ 1940ல் இதுவே பெண்களின் பிரதான அமைப்பாக இந்தியாவில் விளங்கியது. 1941ல் **ரோஷினி** என்ற இதழையும் ஆரம்பித்தது.

❖ பொது வாழ்வில் சுதந்திரப் போராட்டத்தில் அதிகளவில் பெண்கள் கலந்து கொண்டனர். 1917ல் இந்திய தேசிய காங்கிரசின் முதலாவது பெண் தலைவராக அன்னி பெசன்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖ 1925ல் சரோஜினிநாயுடு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகவும் பிறகு ஒன்றுபட்ட மாகாணத்தின்(United Provinces) கவர்னராகவும் (1947 -49) விளங்கினார்.

**பெண்விடுதலைச் சட்டங்கள்**

- 1829 - சதி ஒழிப்புச் சட்டம்
- 1856 - விதவைகள் மறுமணச் சட்டம்
- 1872 - பலதார மணம், குழந்தைத்திருமணத்தடை
- 1937 - பெண்கள் சொத்துரிமை சட்டம்
- 1955 - இந்து திருமண சட்டம் -
- பலதார மணம் தடை - 1956 - இந்து வாரிசுரிமைச் சட்டம் - பெண்கள் சொத்துரிமை.
- 1961 - வரதட்சணை தடுப்பு சட்டம்.
- 1986 - விபச்சார தடைச் சட்டம்.

## 6. தீண்டாமைக்கு எதிரான போராட்டம்:

- காந்தியடிகள் தீண்டாமைக்கு எதிராக 1932ல் அகில இந்திய ஹரிஜன் சங்கத்தையும், ஹரிஜன் பத்திரிக்கையையும் நடத்தினார்.
- மகாராஷ்டிராவில் ஜோதிபாபூலே என்பவர் சத்ய சோதக் சமாஜம் என்ற அமைப்பை ஏற்படுத்தி தீண்டாமைக்கு எதிராக போராட்டத்தை நடத்தினார். N.R அம்பேத்காரும் தீண்டாமைக்கு எதிராக அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பை (All India Scheduled Castes Federation) ஏற்படுத்தினர்.
- தென்னிந்தியாவில் 1920 களில் ஈ.வெ.ரா பெரியார் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து தீண்டாமைக்கு எதிராக அரும்பாடுபட்டார். இதேபோல் கேரளாவில் ஸ்ரீ நாராயண குரு என்பவரும் ஸ்ரீ நாராயண குரு தர்ம பரிபாலன யோகம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி தீண்டாமைக்கு எதிராக போராட்டங்களை நடத்தினார். இவருடைய கூற்று "மனித குலத்திற்கு ஒரே மதம், ஒரே சாதி மற்றும் ஒரே கடவுள் ஆகும். இவருடைய சீடர் சகாதரன் அய்யப்பனின் கூற்று " மனிதகுலத்திற்கு எந்த மதம், சாதி மற்றும் கடவுள் இல்லை" என்பதாகும்.
- சுதந்திர இந்தியாவில் தீண்டாமையை தண்டைக்குரிய குற்றமாக்க 1955 ல் சட்டம் (The Untouchability offences Act) கொண்டு வரப்பட்டது. 1976 ல் குடிமை உரிமைகள் பாதுகாப்பு சட்டம் (Protection of Civil Rights Act 1955) என பெயர் மாற்றப்பட்டது

## சமய கலாச்சார சீர்திருத்த இயக்கங்கள் (Socio - cultural Reform Movements):

## 7. இராஜாராம் மோகன்ராய் மற்றும் பிரம்ம சமாஜம்:

- இராஜாராம் மோகன்ராய் இந்திய மறுமலர்ச்சியின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

வங்காளத்தில் ராதாநகர் என்ற கிராமத்தில் 1772 ல் மே 22ல் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். பல மொழிகளில் தேர்ச்சி பெற்றார் 1811ல் தனது மூத்த சகோதரனின் மனைவி உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்த காட்சியைக்கண்டு கலங்கினார். அக்கொடிய பழக்கத்தை ஒழிக்க முடிவு செய்தார். 1815ல் ஆத்மிய சபையை அவர்

நிறுவினார். பின்னர் பிரம்ம சபையாக மாறி இந்த சபையை அவர் நிறுவினார். பின்னர் 1828 ல் இந்த சபையே பிரம்ம சமாஜமாக வளர்ச்சி பெற்றது. இந்த அமைப்பின் மூலம் "கடவுள் ஒருவரே" என்று ராம் மோகன்ராய் பிரச்சாரம் செய்தார். உபநிடதங்கள், விவிலியம், குர்ஆன் போன்ற சமய நூல்களின் கருத்துக்களை ஒன்றிணைத்து பல்வேறு சமயத்தினரிடையே ஒற்றுமையேற்படுத்த அவர் முயற்சித்தார். மகரிஷி தேவேந்திரநாத்தாகூர் (இரவீந்திரநாத்தாகூரின் தந்தை) இவர்தான் பிரம்ம சமாஜம் என்று இச்சபைக்கு பெயர் மாற்றம் செய்தார். இந்தியாவின் தலைசிறந்த சமூக அமைப்பாக பிரம்ம சமாஜத்தை ராம் மோகன் உருவாக்கினார். 1817ல் சமயப்பரப்பாளரான டேவிட் ஹேர் என்பவருடன் இணைந்து கல்கத்தாவில் இந்து கல்லூரியை (தற்போதைய கல்கத்தா மாநிலக்கல்லூரி) நிறுவினார். பெண்களுக்கான பள்ளிகளையும் நிறுவினார்.

- 1829ல் வில்லியம் பெண்டிங் பிரபு சதி முறையை ஒழிக்க முன் வந்த போது ராஜாராம் மோகன்ராய் உறுதுணையாய் நின்றார்.
- சதி சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது.
- பெண்சிசுக் கொலை, குழந்தை திருமணத்தை எதிர்த்தார். பெண்கல்வி, விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.
- உருவவழிபாடு சமய விதிகள், சடங்குகள் ஆகியவற்றை கண்டித்தார். பிரம்ம சமாஜம் சாதிமுறை, தீண்டாமை, சதி, உருவ வழிபாடு ஆகியவற்றை கண்டித்தது.
- ராஜாராம்மோகன் அராபிக், பெர்சியன், சமஸ்கிருதம், ஆங்கிலம், வங்காளி போன்ற மொழிகளில் புலமை பெற்றிருந்தார். 1803ல் (Tunfat -ul-mauaj hindin - Gift to monotheists) என்ற நூலை எழுதினார்.
- 1821ல் சம்வாத் கௌமுகி (Samvat Kaumudhi or the moon of intelligence ) என்ற வங்காள மொழிப்பத்திரிக்கையை ஆரம்பித்தார். ஒரு ஆண்டு கழித்து 1822ல் பாரசீக மொழியில் மீரட் - உல் - அக்பர் (Miral - ul - Akbar or the mirror of intelligence) என்ற வார இதழின் ஆசிரியராக திகழ்ந்தார். பல்வேறு சமயங்களை பற்றிய கருத்துக்களை தொகுத்து

ManaZarutul Ad yaw என்ற நூலை எழுதினார்.

- புதிய இந்தியாவை தோற்றுவித்தவர் என்று ரவீந்திரநாத் தாகூரால் புகழப்பட்ட ராஜாராம் மோகன் ராய் இங்கிலாந்தில் பிரிஸ்டல் நகரத்தில் 1833 செப்டம்பர் 27ல் உயிர் நீத்தார்.
- ராஜாராம் மோகன்ராய்க்கு டேவிட் ஹேர், அலெக்சாந்தர் டஃப், தேவேந்திரநாத் தாகூர் P.K. தாகூர், சந்திரசேகர் டெப் மற்றும் தாராசந்த் சக்ரவர்த்தி ஆகியோர் உதவியாய் இருந்தனர்.

**ராம் மோகனுக்கு பிறகு பிரம்ம சமாஜம்:**

- இராஜாராம் மோகன்ராயின் இறப்பிற்கு பிறகு பிரம்ம சமாஜம் தேவேந்திரநாத்தாகூர் காலத்தில் புத்துயிர் பெற்றது.
- 1839 தத்துவபோதினி சபையையும் தத்துவ போதினி பத்ரிகா (Tattuvabodhini Patrika) என்னும் பத்திரிக்கையும் ஆரம்பித்து தனித்து செயல்பட்டு கொண்டிருந்த தேவேந்திரநாத் தாகூர் 1842ல் பிரம்ம சமாஜத்தில் இணைந்தார். பிரம்ம தர்மா என்ற இந்து மதக் கோட்பாடுகள் அடங்கிய நூலை எழுதினார்.
- 1861ல் ஆரம்பிக்கப்பட்ட Indian Mirror என்ற பத்திரிக்கை பிரம்ம சமாஜத்தின் கருத்துக்களை பரப்பியது. **1858ல் கேசவ சந்திர சென்** என்பவர் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்.
- சிறந்த பேச்சாளர். மக்களின் மனதை கவர்ந்திழுக்கும் போதகர். இவர் சமுதாய மற்றும் ஆன்மிக கருத்துக்களை இளைஞர்களிடம் பரப்ப சங்கீத் சபா (Sanget Sabha) என்ற அமைப்பை தொடங்கினார். ஆனால் இவரது முற்போக்கு சிந்தனைகளை பலர் விரும்பவில்லை.
- 14 வயது கூட நிரம்பாத தனது மகளுக்கு சிறுவயது அரசருக்கு திருமணம் செய்து வைத்ததால் பிரம்ம சமாஜத்தில் பிளவு ஏற்பட்டது. முற்போக்கு சிந்தனைகளால் தேவேந்திரநாத் தாகூருக்கும் கேசவ சந்திர சென் மற்றும் அவரது சீடர்கள் இணைந்து இந்திய பிரம்ம சமாஜத்தை ஏற்படுத்தினார்கள்.
- தேவேந்திரநாத் தாகூரின் பிரம்ம சமாஜம் அதி பிரம்ம சமாஜம் என்றழைக்கப்பட்டது.
- கேசவ சந்திர சென் தனது சிறுவயது மகளுக்கு திருமணம் செய்து வைத்ததால் அதிர்ச்சியடைந்த அவரது சீடர்கள் 1878 ல் சதாரன் பிரம்ம சமாஜம் (Sadharan Brahmo Samaj) என்ற

மற்றொரு புதிய அமைப்பை ஏற்படுத்தினார்கள்.

- கேசவ சந்திர சென்னின் ஆன்மிக வழிகாட்டுதலால் மதராஸில் வேத சமாஜமும், மகாராஷ்டிரத்தில் பிரார்த்தனை சமாஜமும் தோன்றியது. மதராஸில் 1864 ல் வேத சமாஜம் ஸ்ரீதரலு நாயுடு என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டது. கேசவ சந்திர சென்னின் முயற்சியால் 1872 -ல் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, பலதாரமணமும் குழந்தை திருமணமும் ஒழிக்கப்பட்டன.

### 8. பிரார்த்தன சமாஜம் (Prarthana Samaj):

- வங்காளத்தில் தோன்றிய பிரம்ம சமாஜத்தைப் போல் மகாராஷ்டிரத்தில் 1867ல் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங் என்பவரால் பிரார்த்தனை சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது. இது பிரம்ம சமாஜத்திலிருந்து உதயமானதாகும்.
- 1870 ல் நீதிபதி எம்.ஜி. ரானடே,R.G பண்டார்க்கர்,N.G சந்தாவர்கர் ஆகியோர் இதில் சேர்ந்து இந்த இயக்கத்திற்கு மேலும் வலிமை சேர்த்தனர்.
- இது பிரம்ம சமாஜத்தை போல் அல்லாது இந்து கடவுள்களையும், உருவ வழிபாட்டையும் ஏற்றுக்கொண்டு சமூக சீர்த்திருத்தங்களில் கவனம் செலுத்தியது. இதன் நோக்கங்கள்
  1. சாதிமுறை எதிர்ப்பு
  2. பெண்கல்வி
  3. விதவைகள் மறுமணம், கலப்புத்திருமணம்
  4. ஆண்,பெண் திருமண வயதை உயர்த்துதல் ஆகியவனவாகும்.

இந்த இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகவும், வழிகாட்டியாகவும் விளங்கிய ஓய்வு பெற்ற நீதிபதியான M.G. ரானடே (மகாதேவ கோவிந்த ரானடே) 1884ல் தக்காண கல்விக்கழகத்தை (Deccan Education Society) ஆரம்பித்தார். "எவ்வாறு கடவுளிடமிருந்து அன்பை பிரிக்க முடியாதோ" அதே போல் மதத்திலிருந்து சமூக சீர்திருத்தத்தை பிரிக்க முடியாது என்று ரானடே கூறினார். இவ்வாறு பிரம்ம சமாஜமும், பிரார்த்தனை சமாஜமும் மேலை நாட்டு பகுத்தறிவு வாதத்தினால் தூண்டப்பட்ட இந்தியர்களின் செயலில் உருவானவைகள் ஆகும்.

### 9. ஆரிய சமாஜம் (Arya Samaj)

- இந்து சமயத்தின் மார்டின் லூதர் என்று அழைக்கப்படும் தயானந்த சரஸ்வதி (1824 -83) 1824 ல் கத்தியவார் பகுதியில் குஜராத்தில்

பிறந்தார். இவரது இயற்பெயர் மூல்சங்கர்.

- ❖ 1875 ல் பம்பாயில் ஆரிய சமாஜத்தை தயானந்த சரஸ்வதி ஏற்படுத்தினார்.
- ❖ பிறகு ஆரிய சமாஜத்தின் தலைமையிடம் லாகூரில் அமைக்கப்பட்டது. இவர் மதுராவிலிருந்த வீராஜ நந்தா என்ற கண்தெரியாத ஆசிரியரிடம் வேதாந்தத்தை கற்றுத்தேர்ந்தார்.
- ❖ சிறந்த அறிஞர், நாட்டுப்பற்று மிக்கவர், சமூக சீர்திருத்தவாதி, மறுமலர்ச்சியாளரான தயானந்த சரஸ்வதி, வேதங்கள் தாம் உண்மையான அறிவுக்கு அடிப்படை என்றார்.
- ❖ வேதகாலத்திற்குத் திரும்புங்கள் (Back to the Vedas) என்பது அவரது முழக்கமாகும். ஆரிய சமாஜம் ஒரு அகில இந்திய இக்கமாகும்.
- ❖ பிற சமயங்களுக்கு மதம் மாறியவர்களை மீண்டும் இந்து அமைப்புக்குள் கொண்டு வரும் நோக்கத்துடன் அவர் "சுத்தி" (Shuddi) இயக்கத்தை தொடங்கினார்.
- ❖ அவரது கருத்துக்களை உள்ளடக்கிய "சத்யார்த்த பிரகாஷ்" என்னும் நூலையும் எழுதினார்.

**ஆரிய சமாஜியத்தின் பணிகள்:**

- ❖ குழந்தைத் திருமணம், பலதார மணம், பர்தா அணியும் முறை, சாதிமுறை, உடன் கட்டை ஏறுதல் ஆகியவற்றை எதிர்த்தது.
- ❖ பெண்கல்வி, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் ஆகியவற்றை வலியுறுத்தியது.
- ❖ கலப்பு திருமணம், சமபந்தி போஜனம், விதவைகள் மறுமணம் ஆகியவற்றை ஊக்கு வித்தது.
- ❖ கல்வி வளர்ச்சிக்காக முதன் முதலில் 1886ல் தயானந்த ஆங்கிலோ வேத பள்ளி (D.A.V - Dayanand Anglo Vedic) லாகூரில் நிறுவப்பட்டது.
- ❖ சுவாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கைகள் வெற்றி பெற காரணமாக இருந்தவர்களான லாலா ஹன்ஸ் ராஜ், பண்டித குருதத்தா, லாலா லஜபதிராய், பாலா கங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 10. ஹென்றி விவியன் டெரோசியா (இளம் வங்காள இயக்கம்)

- ❖ இளம் வங்காள இயக்கத்தை நிறுவியவர் ஹென்றி விவியன்

டெரோசியோ ஆவார். 1809 ல் கல்கத்தாவில் பிறந்த அவர் கல்கத்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தார். 1833ல் காலரா நோய் கண்டு இளம் வயதிலே இறந்தார்.

- ❖ அவரது சீடர்கள் டெரோசியன்கள் என்றும் அவரது இயக்கம் இளம் வங்காள இயக்கம் என்றும் அழைக்கப்பட்டது.
- ❖ பழமையான கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களை இவர் கடுமையாக சாடினார்.
- ❖ உருவ வழிபாடு, ஜாதிமுறை, மூட நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு எதிராக பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தியும், விவாதங்கள் நடத்தியும் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர்.

## 11. இராம கிருஷ்ண இயக்கம் (The RamaKrishna Movement)

- ❖ இராமகிருஷ்ண பரமஹம்சர் (1834 -86), கல்கத்தாவில் தக்சினேஸ்வரிலிருந்த காளி கோவிலின் ஒரு ஏழை மத போதகர் ஆவார்.
- ❖ ஹூக்ளி நதிக்கரையிலுள்ள 1834 ல் கமர்புக்குர் என்ற ஊரில் பிறந்தார். இவருடைய கொள்கைகளே இராம கிருஷ்ண மடம் மற்றும் இயக்கத்திற்கு (Rama Krishna Math & Ramakrishna Mission) அடிப்படையாக அமைந்தது. இராமகிருஷ்ண மடத்தை ஏற்படுத்தியவர் பரமஹம்சர் ஆவார்.
- ❖ வேதங்களையும் பரமஹம்சரின் கொள்கைகளையும் பரப்புவதே அதன் நோக்கமாகும்.
- ❖ ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரின் முக்கிய புகழ்பெற்ற சீடரான நரேந்திரநாத் தத்தா (1862 -1902) 1886ல் துறவறம் பூண்டார்.
- ❖ பிறகு விவேகானந்தர் என்ற பெயரால் அழைக்கப்பட்டர். 1893 செப்டம்பரில் சிகாகோ (அமெரிக்கா)வில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் கலந்து கொண்ட சுவாமி விவேகானந்தர், உரையின் ஆரம்பத்தில் "எனது அன்பான சகோதர சகோதரிகளே" (My dear Brother and Sisters) என்று பரந்த மனப்பான்மையுடன் உலகை குறிப்பிட்டு பேசிய அவர் இந்தியா மற்றும் இந்து சமயத்தின் புகழை உலகறியச் செய்தார். 1897ல் கல்கத்தாவில் ஹவுராவிற்கு அருகிலுள்ள பேலூர் என்ற இடத்தில் இராமகிருஷ்ண

இயக்கத்தை இன்றும் செயல்படும் விவேகானந்தர் தோற்றுவித்தார்.

- இது இன்றும் செயல்படும் ஒரு சமூக சேவை மற்றும் அறக்கொடை அமைப்பாகும். 1897 க்கு பிறகு இராம கிருஷ்ண மடம் மற்றும் இயக்கத்தின் தலைமையிடமாக பேலூர் விளங்கியது.
- 1902 ல் இறுதியாக விவேகானந்தர் இயற்கை எய்தினார். மனிதனுக்கு செய்யும் சேவை இறைவனுக்கு செய்யும் சேவைக்கு ஒப்பாகும் என்று பரமஹம்சர் கூறுவார்.
- அதையே விவேகானந்தரும் நம்பி உறுதி கொண்டு செயலாற்றினார். இது ஒரு அகில இந்திய இயக்கமாகும்.

## 12. தியோசாபிகல் சொசைட்டி (பிரம்ம ஞான சபை)

- 1875 ஆம் அண்டு ரஷ்யாவைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையார் மற்றும் அமெரிக்க கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் என்ற இருவராலும், நியூயார்க்கில் (அமெரிக்கா) பிரம்ம ஞான சபை நிறுவப்பட்டது.
- இன, நிற, சமயப்பாகுபாடுகள் இன்றி உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதும், பண்டைய சமயம் மற்றும் தத்துவங்களையும் ஆய்வு செய்வதும் அவர்களது முக்கிய நோக்கங்களாகும்.
- அவர்கள் இந்தியா வந்து மதராஸில் அடையாறுப் பகுதியில் 1882 ல் தலைமையிடத்தை ஏற்படுத்தினார்கள். ஆல்காட்டின் மறைவிற்குப் பிறகு அன்னி பெசண்ட் (1847 -1933) அம்மையார் இந்தியா வந்து பிரம்ம ஞான சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.
- இவர் மதன் மோகன் மாளவியாவுடன் இணைந்து மத்திய இந்துப் பள்ளியை நிறுவினார். பிறகு 1898 ல் மத்திய இந்து கல்லூரியை (Central Hindu College) பெனாரசில் நிறுவினார்.
- இதுவே 1916ல் பெனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக மாற அடித்தளமாக அமைந்தது. இவரது செய்தித்தாள் நியூ இந்தியா பிரம்ம ஞான கொள்கைகளை பரப்பியது அன்னிபெசண்ட் அம்மையார் பெண் கல்விக்காக அரும்பாடுபட்டார்.
- இவருடைய பதவிக் காலத்தில் பிரம்ம ஞானசபை அபரிவித வளர்ச்சியடைந்தது. இந்திய விடுதலைப் போராட்டத்திலும் தீவிரமாக கலந்து கொண்டார். இது ஒரு அகில இந்திய இயக்கமாகும்.

## 13. அலிகார் இயக்கம் (Aligarh Movement):

- 1817 ஆம் ஆண்டு முகமதிய குடும்பத்தில் டில்லியில் சையது அகமது கான் இந்திய அரசாங்கத்தில் நீதிபதியாக (1878-98) பணியாற்றி ஓய்வு பெற்ற பின் (1876) இன்டிரியல் மத்திய சட்டமன்ற கவுன்சில் 1878 ல் உறுப்பினரானார். 1888ல் நைட்வுட் பட்டத்தை தனது சேவைக்காக பெற்றார்.
- அலிகார் இயக்கத்தை முஸ்லீம்கள் சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக தோற்றுவித்தார். 1866ல் முகமதிய கல்விக் கழகத்தை ஆரம்பித்தார். முஸ்லீம்களுக்கு ஆங்கிலக்கல்வி புகட்டுவதற்காக 1875ல் அலிகாரில் ஆங்கிலோ ஒரியண்டல் கல்லூரி (Anglo Oriental College) ஒன்றை அமைத்தார். இதுவே அலிகார் பல்கலைக்கழகமாக மாறியது. ஆங்கில மொழியிலுள்ள சிறந்த நூல்களை உருது மொழியில் மாற்றம் செய்ய ஒரு விஞ்ஞான கழகம் (Scientific Society) அமைத்தார்.
- சையது அகமது கான் சிப்பாய் கலகத்தின் போது ஆங்கிலேயருக்கு விசுவாசமாக இருந்தார்.
- இவருடைய கருத்துக்களை தனது இதழ் (Tahdhip -ul - Akhlaq) - தாதிப் - உல் - அக்லக் மூலம் பரப்பினார். 1864 ல் காசிப்பூரில் நவீன கல்வியளிக்க பள்ளிஒன்றை நிறுவினார்.

### அலிகார் இயக்கத்தின் நோக்கங்கள்:

- நவீன கல்வியை முகமதியர்களிடம் பரப்புதல்
- பர்தா முறைக்கு எதிர்ப்பு, பலதார மணத்திற்கு எதிர்ப்பு
- பெண்கல்வி விதவைகள் மறுமணம், பெண் விவாகரத்து ஆகியவற்றிற்கு ஆதரவு.
- அடிமை முறை ஒழிப்பு.
- இரு நாடு கொள்கை (Two Nation Theory) அலிகார் கல்லூரியின் முதல் முதல்வரான தியோடர் பெக் என்பவர் Institute Gazette என்ற இதழை ஆரம்பித்து இஸ்லாமிய சமய உணர்வுகளை தூண்டினார்.
- 1893 ல் முகமதிய ஆங்கிலோ ஓரியண்டல் இந்திய பாதுகாப்பு கழகம் (Mahammadam Anglo - Oriental Defence Association of India) ஒன்றை ஆரம்பித்தார்.
- இவ்வாறு அலிகார் இயக்கமே இந்தியாவில் முஸ்லீம் மிதவாதம் வளர முக்கிய காரணமானது

இந்திய காங்கிரசுக்கு எதிராக நடத்து தேசப் பிரிவினைக்கு வித்திட்டது அலிகார் இயக்கமே ஆகும்.

**14. முகமதியர் இலக்கிய கழகம் (Muhammadan Litteracy Society):**

- 1863 ம் ஆண்டு கொல்கத்தாவில் முகமதியர் இலக்கிய கழகம் என்ற அமைப்பை நவாப் அப்துல் லத்தீப் ஆரம்பித்தார்.
- இஸ்லாமியேரிடையே கல்வியைப் பரப்புவதில் முக்கிய பங்காற்றியது. வங்காளத்தில் பல பள்ளிகளை தொடங்கியது

**15. தியோபாண்ட் பிரிவு (The Deoband School):**

- தியோபாண்ட் இயக்கம் முகமதியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி முன்னேற்ற உருவான ஒரு இயக்கமாகும்.
- 1866ல் ஒன்றுபட்ட மாகாணத்திலுள்ள (United Provincess) சகாரன்பூர் மாவட்டத்திலுள்ள தியோபாண்ட் என்னுமிடத்தில் முகமது காசிம் நானோதவி (Mohammad Qasim Nanotavi)(1832 -80) மற்றும் ரஷித் அகமது கங்கோகி (1828 -1905) (Rashid Ahmed Gangohi) ஆகியோரால் தியோபாண்ட் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் முக்கிய குறிக்கோள்கள்.

1. குர் ஆன் மற்றும் ஹாடிஸ் இல் உள்ளவாறு இஸ்லாமிய போதனைகளை முஸ்லீம்களிடையே பரப்புவது.
2. அன்னிய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜிகாத் என்ற உரிமைப் போராட்டத்தை தொடர்வது.

முகமது உல் ஹாசன் என்ற புதிய தியோபாண்ட் இயக்கத்தலைவர் இப்பிரிவின் சமயக்கருத்துக்களில் அரசியல் மற்றும் அறிவார்ந்த சிந்தனைகளை புகுத்தினார். இஸ்லாமின் தாராளமான விளக்கங்கள் இவ்வியக்கத்தினரிடையே ஒரு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**முஸ்லீம் சமூக சமய சீர்த்திருத்த இயக்கங்கள்**

| இயக்கம் | ஆண்டு | இடம் | தலைவர் |
|---|---|---|---|
| டிராய்ஸி இயக்கம் | 1804 | ஃபரித்பூர் வங்கம் | ஹஜி சையத்துல்லா மற்றும் துதிமியான் |
| தயூனி இயக்கம் | 1839 | சசுக்கா | கரமதி அலி ஜனப்பூர் |

| | | | |
|---|---|---|---|
| தியோபண்ட் இயக்கம் | 1867 | தியோபண்ட் | முகமது குசைம் நானாதவி மற்றும் ரஸ்திக் அகமது காங்கோயி |
| அலிகார் இயக்கம் | 1875 | அலிகார் | சர் சையது அகமது கான் |
| அக்மதியா இயக்கம் | 1889 - 90 | பரித்காட் | பிர்ஷா குலாம் அகமது ஆப் குவாதி |
| நட்வட்டல் உலேமா | 1894 - 95 | லக்னோ | மலுனா சிடிலி நுனுமணி |
| அஹ்ரர் இயக்கம் | 1910 | பஞ்சாப் | ரிஷா ஹான் மற்றும் அலி சகோதாரர்கள் |

## 16. சீக்கிய சீர்திருத்த இயக்கம்

❖ சிங் சபை (The Singh Sabha) 1873 ல் அமிர்த சரஸில் ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கங்கள்

1. நவீன மேற்கத்திய கல்விமுறையை சீக்கியர்களிடம் பரப்புதல்.
2. கிறிஸ்தவ மதமாற்று நடவடிக்கை மற்றும் இந்து ஆதிக்க வெறிக்கு பதிலடி கொடுத்தல் மேலும்.

❖ பாபா தயாள் தாஸ் என்பவர் நிரங்காரி இயக்கத்தை (Nirankari Movement) இயக்கத்தை தோற்றுவித்தார். கடவுளை உருவமற்றவராக வழிபட வேண்டும் என்று அவர் கூறினார். பாபா ராம் சிங் என்பவர் நாம்தாரி (Namdhari Movement) இயக்கத்தை நிறுவினர். இவரது சீடர்கள் வெள்ளை உடை அணிந்து, புலால் உண்பதை தவிர்த்தனர்.

❖ 1892ல் அமிர்தசரசில் கால்சா கல்லூரி நிறுவப்படுவதற்கு இந்த சிங் சபாக்கள் உறுதுணையாக இருந்தன. குருமுகி மற்றும் பஞ்சாபி இலக்கியத்தை சிங் சபாக்கள் போற்றி வளர்த்தன. சீக்கிய குருத்வாராக்களிலிருந்து ஊழல்மிக்க மகந்த்களை (பூசாரிகளை) நீக்குவதற்கு 1920ல் அகாலிகள் ஒரு இயக்கத்தை தோற்றுவித்தனர்.

❖ சிரோன்மணி குருத்வாரா பிரபந்த கமிட்டியும், அகாலிதள கட்சியும் குருத்துவாராக்களை சீக்கிய இனப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க நோக்கம் கொண்டன.

❖ 1925 ம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டு அச்சட்டம் குருத்துவாராக்களை நிர்வகிக்கும் பொறுப்பை சிரோன்மணி குருத்துவாரா பிரபந்த கமிட்டியிடம் ஒப்படைத்தது.

**சீக் இயக்கத்தில் தலைவர்கள் :**

- ✓ நிரங்கரி இயக்கம் - பாபு தயால் தாஸ்
- ✓ நம்தரி இயக்கம் - பாபா ராம் சிங்
- ✓ ஸ்ரீமனி குருத்வர் பிரபந்தக் சமிதி - தேசிய வாத சீக்கியர்கள்
- ✓ தி சிங் சபா - தாகூர் சிங் சதவாணி ஹெய்னி ஹொான் சிங்

**பார்சி சீர்திருத்த இயக்கம்:**

- ❖ ரஹ்னுமாய் மஜ்தயாஸ்னன் சபை என்ற பார்சி மதச்சீர்திருத்த கூட்டமைப்பு (Religious Reform Association) 1851ல் நவுரோஜி பர்துஞ்சி, தாதாபாய் நௌரோஜி,S.S. பெங்காலி மற்றும் K.R. காமா என்பவர்களால் பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ பிர்துஞ்சியின் "ஜகத் மித்ரா" (Jagat Mithra) என்ற மாத இதழும், தாதாபாய் நௌரோஜியின் ராஸ்ட் காப்டர் (Rast Goftar) (அ) உண்மை கூறுபவர் (Truth Teller) என்ற பத்திரிக்கையும் நடத்தப்பட்டன.

**17. ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் (Sri VaikundaSwamigal):**

- ❖ 1809 ஆம் ஆண்டு தமிழ்நாடு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சாமித் தோப்பு என்ற ஊரில் ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் பிறந்தார்.
- ❖ அவரது இயற்பெயர் முடிசூடும் பெருமாள் என்றாலும் முத்துக்குட்டி என்றே அனைவரும் அழைத்தனர். ஜாதிமுறை மற்றும் தீண்டாமைக்கு எதிராக அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.
- ❖ அவரது போதனைகள் காலப்போக்கில் அய்யா வழி என்று பெயர் பெற்றது.
- ❖ 19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் அய்யாவழி ஒரு தனிப்பட்ட சமயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவரது மறைவிற்கு பின் இயற்றிய சமய நூல்களான அகிலத்திரட்டு அம்மானை, அருள் நூல் மற்றும் அவரது போதனைகளை அடிப்படையாகக் கொண்டு அய்யா வழி சமயம் பரவியது.
- ❖ பல இடங்களில் "நிழல் தங்கல்" என்ற வழிபாட்டு தலங்கள் கட்டப்பட்டன.

**18. இராமலிங்க அடிகள்:**

- ❖ 1823 அக்டோபர் 5 ல் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள ராமய்யா பிள்ளை, சின்னம்மையார் தம்பதிக்கு கடைசி மகனாகப் பிறந்தார். ஆன்மீக வாழ்வில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர் 1858ல் வடலூருக்கு அருகில் கருங்குழி என்ற இடத்திற்கு சென்று அங்கு தம் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்.

- அவரது தெய்வீக ஆற்றல் பதினோராவது வயதிலே வெளிப்பட்டது.
- சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தோடு தமது கருத்துக்களை பரப்புவதற்காக 1865 ல் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். அவர் திருவருட்பா, மனுமுறை கண்ட வாசகம் மற்றும் ஜீவகாருண்யம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.
- 1840ல் வடலூருக்கு மூன்று மைல் தொலைவிலிருந்த மேட்டுக்குப்பம் என்ற இடத்துக்கு சென்று அங்கு 1872 ல் சத்திய ஞான சபையை கட்டத் தொடங்கினார். கடவுளை ஜோதி (ஒளி) வடிவமாக வழிபடலாம் என்று மக்களுக்கு கூறினார்.

## 19. சுயமரியாதை இயக்கம் (Self - respect Movement):

- ஈ.வெ.ரா பெரியார் ஒரு சிறந்த சமூக சீர்திருத்தவாதியாவார். 1921 கள்ளுக்கடை மறியலின் போது தன் சொந்தப் தோப்பிலே 1000 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.
- கேரளாவில், வைக்கம் என்ற இடத்தில் ஆலயத்துக்கு அருகிலிருந்த சாலையில் தீண்டத்தகாதவர்கள் நடந்து செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை எதிர்த்து 1924ல் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டார்.
- வ.வே.சு ஐயரின் சேரன்மாதேவி குருகுலத்தின் வருணாசிரம நடவடிக்கையை எதிர்த்தனர். 1920 முதல் 1925 வரை பெரியார் காங்கிரசில் இருந்து கொண்டே வகுப்பு வாரி பிரதிநிதித்துவ கொள்கையை காங்கிரஸ் ஏற்க வேண்டுமென வலியுறுத்தினார். 1925ல் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து சடங்குகள் இல்லாத பல திருமணங்களை பெரியாரே முன்னின்று நடத்தி வைத்தார். அத்தகைய திருமணம் சுயமரியாதை திருமணம் என அழைக்கப்பட்டது.
- குடியரசு, புரட்சி, விடுதலை போன்ற தமிழ் ஏடுகளை தொடங்கி அவற்றின் மூலம் தனது கருத்துக்களை பெரியார் பரப்பி வந்தார். பெரியாரின் அரும்பணியை பாராட்டி ஈரோட்டில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் 1938ஆம் ஆண்டு ஈ.வெ.ரா விற்கு "பெரியார்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- 17.06.1970 ஆம்ஆண்டு ஐ.நாவின் யுனெஸ்கோ நிறுவனம் தந்தை பெரியாரை "தெற்கு ஆசியாவின் சாக்ரடிஸ்" என புகழாரம் சூட்டியது.

| வ. எண் | இயக்கங்கள் / தலைவர்கள் | இடம் / ஆண்டு | நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | சத்ய சோதக்சமாஜம் (Satya Shodak Samaj)மற்றும் ஜோதிபா பூலே | மகாராஷ்டிரம் - 1873 | உண்மைத் தேடுவோர் சமூகம் (Truth Seeker's Society) என்றழைக்கப்பட்ட இந்த இயக்கம் மேல் ஜாதி மற்றும் பிராமணர்களுக்கு எதிராக போராடியது.<br>i) சமூக சேவை ii) பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களிடையே கல்வியை பரப்புதல்<br>iii) விதவைகள் மறுமணம் ஆகியவை இதன் நோக்கங்களாகும். |
| 2. | இந்திய சமூக பணியாளர்கள் சங்கம் (The servants of India Society) மற்றும் கோபால கிருஷ்ண கோகலே | மகாராஷ்டிரம் 1905 | இந்திய நாட்டிற்கு சேவை புரிய பணியாளர்களை உருவாக்க வேண்டுமென்பது நோக்கமாகும். கோகலேயின் இறப்பிற்கு பிறகு 1915 ல் ஸ்ரீநிவாச சாஸ்திரி தலைவராக பொறுப்பேற்றார். |
| 3. | பரமஹம்ச மண்டலம் | மகாராஷ்டிரம் 1849 | i) ஒரே கடவுள் கொள்கை<br>ii) விதவைகள் மறுமணம் மற்றும் பெண்கல்விக்கு ஆதரவு |
| 4. | ஈஸ்வர சந்திர வித்யா சாகர் (Ishwar Chandra Vidya Sagar) | கல்கத்தா | 1850ல் சமஸ்கிருத கல்லூரி முதல்வர். கல்கத்தாவில் மெட்ரோ பாலிடன் நிறுவனத்தை நிறுவினார். பெண்கள் கல்விக்காக பல பள்ளிகளை நிறுவினார். இவரது முயற்சியால் 1856 ல் விதவைகள் மறுமணச்சட்டத்தை டல்ஹௌசி பிரபு கொண்டுவந்தார். இவரது கல்வி முயற்சிக்காக வித்யாசாகர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. குழந்தை திருமணம், |

| | | | |
|---|---|---|---|
| | | | பலதார மணத்தை எதிர்த்தார். |
| 5. | பால் சாஸ்திரி ஜம்பேக்கர் (Bal Shstri Jambekar) | பம்பாய் | பிராமண ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க ஒரு இயக்கத்தை நடத்தினார். இந்து மதத்தை சீர்திருத்த முயன்றார். 1832ல் தர்பன் என்ற வாரப்பத்திரிக்கையை ஆரம்பித்தார். |
| 6. | சமூக சேவை லீக் (Socail Service Leasue) மற்றும் நாராயண மல்ஹர் ஜோஷி (N.M Joshi) | பம்பாய் | மக்களின் வாழ்க்கைத்தரம் உயர ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிகள், நூலகங்கள் போன்றவைகள் நடத்தப்பட்டன. 1920 ல் ஜோதி அகில இந்திய வாணிப யூனியன் காங்கிரஸை (All India Trade Union Congress) ஏற்படுத்தினார். |
| 7. | சேவா சதன் (Seva Sadan) மற்றும் B.M மலபாரி (Behramji M. Malabari) | 1885 | சமுதாயத்தால் சுரண்டப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட பெண்களை பாதுகாக்கும் அமைப்பாகும். அனைத்து மக்களுக்கும் உணவளித்தல், பெண்களுக்கு கல்வி, மருத்துவ மற்றும் நல்வாழ்வை ஏற்படுத்தி தருதல் இதன் நோக்கமாகும். |
| 8. | தேவசமாஜம் (Deva Samaj மற்றும் சிவ நாராயணன் அக்னி கோத்ரி)(Shiv Narain Agnihotri) | லாகூர் 1887 | லஞ்சம் பெறுதல், போதைப் பொருட்கள் பயன்படுத்துதல் மற்றும் அசைவ உணவு ஆகியவற்றிற்கு தடை விதித்தல் இதன் செயல்பாடுகளாகும். இந்த அமைப்பின் கருத்துக்கள் தேவ சாஸ்திரம் (Deva Shashtra) என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. |
| 9. | தர்ம சபை (Dharma Sabha) மற்றும் ராதாகண்ட் டெப் (Radhakant Deb) | 1830 | சதி என்னும் உடன்கட்டைப் பழக்கத்தை ஆதரித்த குறுகிய நோக்கமுடைய எதிர்சாரி (Conservative) இயக்கமாகும். ஆனால் மேற்கத்திய கல்விமுறையை (பெண்களுக்கும்) ஆதரித்து வழங்கியது. |

| | | | |
|---|---|---|---|
| 10. | பாரத் தர்ம மஹா மண்டலம் (Bharat Dharma Mahamandala) மற்றும் குறுகிய மனப்பான்மையுள்ள கல்விகற்ற இந்துக்கள் (பண்டித மதன் மோகன் மாளவியா) | வாரனாசி 1902 | ஆரிய சமாஜம், பிரம்ம ஞான சபை, இராமகிருஷ்ண இயக்கத்திற்கு எதிராக தோன்றிய இயக்கமாகும். இந்துத்தத்துவத்தை காப்பதே முக்கிய நோக்கமாகும். |
| 11. | ராதா சுவாமி இயக்கம் (Radhaswami Movement) மற்றும் துளசிராம் (அ) சிவ தயாள் சாகிப் (Tulsi Ram (or) Shiv Dayal Saheb) | ஆக்ரா 1861 | i) அனைத்து மதங்களும் உண்மை என்பதை ஏற்றுக்கொண்டது.<br>ii) ஒரே கடவுள் கொள்கை ஆகியவை இதன் நோக்கங்களாகும். |
| 12. | ஸ்ரீ நாராயணகுரு தர்ம பரிபாலன இயக்கம் (Sri Narayana Guru Dharma Paripalana Movement (SNDP)) | கேரளா 1902 | பிரமாணர்களுக்கும் மேல் ஜாதிக்கும் எதிரான தாழ்த்தப்பட்டவர்களின் இயக்கமாகும்.<br>நோக்கங்கள்:<br>i)அரசுப்பள்ளிகளில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு அனுமதி<br>ii) அரசியல் பிரதிநிதித்துவம்<br>iii) சாலைகள் மற்றும் கோவில்களில் அனுமதி ஆகியவனவாகும். |
| 13. | அராவிப்புரம் இயக்கம் (Aravippuram Movement)மற்றும் ஸ்ரீ நாராயண குரு | கேரளா 1888 | அராவிப்புரத்தில் பிராமணர்களின் கடவுளாக கருதப்பட்ட சிவனின் சிலையை ஸ்ரீ நாராயணகுரு அமைத்து, கடவுள் அனைவருக்கும் பொதுவானவர் என்றார். |
| 14. | கோவில் நுழைவு இயக்கம் (Temple Entry | கேரளா 1924 | 1924ல் K.P. கேசவன் தலைமையில் வைக்கம் சத்தியாகிரகம் நடத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | Movement) மற்றும் ஸ்ரீ நாராயண குரு, | | அதாவது கோவில்கள் மற்றும் சாலைகளில் செல்ல தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அனுமதி வேண்டி நடத்தப்பட்டது. ஸ்ரீ நாராயண குரு,N. குமாரன் ஆசன்,T.K மாதவன் ஆகியோர் கோவில் நுழைவு இயக்கத்தில் கலந்து கொண்டு நடத்தினர். |
| 15. | வொக்கலிகர்சங்கம் (Vokkaliga Sanga) | மைசூர் 1905 | பிராமணர்க்கு எதிரான போராட்டம் |
| 16. | நீதிக்கட்சி இயக்கம் (Justice movement) C.N. முதலியார்,T.N. நாயர் P. தியாகராஜ செட்டியார் | மதராஸ் 1887 | i)1917ல் மதராஸ் மாகாண கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது.<br>ii) பிராமணர் அல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பும், சட்டமன்ற உறுப்பினர் இட ஒதுக்கீடு வேண்டியும் உருவாக்கப்பட்டது. |
| 17. | இந்திய சமூக மாநாடு (Indian Social Conference) மற்றும் M.G. ரானடே, ரகுநாத ராவ் | மதராஸ் 1887 | i) இந்திய தேசிய காங்கிரசின் சமூக சீர்திருத்த அமைப்பு (Social reform Cell) என்றழைக்கப்பட்டது.<br>ii) குழந்தை திருமணம், பலதார மணத்திற்கு எதிரான உறுதி போராட்ம்.<br>iii)கலப்பு திருமணத்திற்கு ஆதரவு |
| 18. | வாகாபி இயக்கம் (Wahabi / Walliullah Movement) மற்றும் சையது அகமது ரேபரேல்வி, ஷா வாலியுல்லா ஷா அப்துல் ஆசிஸ் | 18 ம் நூற்றாண்டு | i) முகமதிய சீர்த்திருத்த இயக்கம்<br>ii) இந்தியாவை முகமதிய நிலமாக மாற்றவேண்டும் என்பது இதன் நோக்கம்.<br>iii) முதலில் சீக்கியர்களுக்கு எதிராகவும், பிறகு 1849ல் பிரிட்டிஷார் பஞ்சாபை இணைத்ததால் பிரிட்டிஷாருக்கு எதிராகவும் நடத்தப்பட்டது. |
| 19. | தித்து மிர் இயக்கம் (Titi Mir's Movement) மற்றும் மிர் நிதார் அலி (Mir,Nithar | வங்காளம் 1820 | இந்து நிலச்சுவான்தார்களுக்கும், பிரிட்டிஷ் அவுரி (Indigo) பயிரிட்டாளர்களுக்கும் எதிராக முஸ்லீம் |

| | | | |
|---|---|---|---|
| | Ali)(தித்து மிர்) | | விவசாயிகளை ஒன்றிணைத்து ஆரம்பிக்கப்பட்டது. |
| 20. | பரைசி இயக்கம் (Faraizi Movement) மற்றும் ஹஜி ஷரியத் அல்லா (Haji Shariat Allah) | கிழக்கு வங்காளம் 1820 | இந்து நிலச்சுவான்தார்களுக்கு எதிராக முகமதியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. முகமதியரிகளிடம் நிலவிய புதிய ஐரோப்பிய வழக்கமுறைகளை ஒழிப்பது இதன் நோக்கமாகும். 1840 களில் ஷரியத் அல்லாவின் மகன் துது மியான் (Dudu Mian) காலத்தில் இது புரட்சிகர பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்தது. |
| 21. | அகமதியா இயக்கம் (Ahmadiya Movement) மற்றும் மிர்சா குலாம் அகமது (Mirza Ghulam Ahmed) | வங்காளம் 1889 | இது ஒரு முஸ்லீம் சீர்திருத்த இயக்கமாகும்.<br>**நோக்கங்கள்:**<br>i) உலகளாவிய மனித தன்மை (University religion All humanity)<br>ii) ஜிகாத் - புனிதப் போரை எதிர்த்தல். |
| 22. | கோபால்ஹரி தேஷ்முக் - லோகாகித்தவாதி (Gopal Hari Deshmukh Lohahitawadi) | பம்பாய் | அனைத்து மக்களின் சமூக, மத சமத்துவத்திற்காக ஏற்படுத்தினார்.<br>**இவரது கூற்று:** "மதங்கள் சமூக சீர்த்திருத்தத்தை வழங்கவில்லையென்றால் மதங்களை மாற்றுங்கள்" என்பதாகும். |

**20. சமூக, சமய கலாச்சார சீர்த்திருத்த இயக்கங்களால் இந்திய சமுதாயத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் விளைவுகள்:**

- ❖ சீர்த்திருத்த இயக்கங்கள் சமூகத்திலும், சமுதாயத்திலும் பல மாறுதல்களைக் கொண்டு வந்தன.
- ❖ ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் ஏற்பட்ட பெரும்மாற்றங்கள் நாளடைவில் அனைத்துப்பிரிவு மக்களிடையே பரவின.
- ❖ சீர்த்திருத்த இயக்கங்கள் இந்து, முஸ்லீம் சமயங்களை உறுதியுடையதாக ஆக்கியதுடன்

அவர்களிடையே நிலவிய சமூகக் கொடுமைகளை நீக்க முயற்சித்தன.

- ❖ கற்ற இந்தியர்கள் பகுத்தறிவுடன் சிந்திக்க தலைப்பட்டனர்.
- ❖ சீர்த்திருத்த இயக்கங்கள் கடந்தகால புகழினை மீண்டும் புதுப்பிக்க உதவின.
- ❖ மேலும் இந்தியாவை நவீனப்படுத்தவும் உதவின.
- ❖ வட்டார மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கும் இவை இட்டுச் சென்றன.
- ❖ சாதிமுறைக்கட்டுப்பாடு தளரத் தொடங்கியது.
- ❖ பெண் விடுதலையில் குறிப்பிடத்தக்க சாதனை ஏற்பட்டது.
- ❖ பாவச் செயலாக கருதப்பட்ட அயல்நாட்டு பயணத்தை மக்கள் ஏற்றனர்.
- ❖ பல துறைகளில் இந்தியா முன்னேற உறுதுணையாக விளங்கிய ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் அடங்கிய நடுத்தர மக்கள் தோன்ற இவ்வியக்கங்கள் காரணமாக அமைந்தன.
- ❖ சீர்த்திருத்த இயக்கங்கள் ஒற்றுமை உணர்வை உருவாக்கி இந்திய தேசியம் வளரவும், இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தேவையான தலைவர்களை உருவாக்கவும் காரணமாக இருந்தன.

**ஜாதி இயக்கங்கள் மற்றும் அமைப்பு**

| இயக்கம் | ஆண்டு | இடம் | தலைவர் |
|---|---|---|---|
| சத்ய சோதக் சமாஜ் | 1893 | மஹாராஸ்டிரா | ஜோதி பாபுலே |
| அரவிப்புரம் இயக்கம் | 1888 | அரவிப்புரம் கேரளா | ஸ்ரீ நாராயண குரூ |
| ஸ்ரீ நாராயண பரிபலன யோக இயக்கம் | 1902 - 03 | கேரளா | ஸ்ரீ நாராயண குரு டாக்டர் பல்பு மற்றும் குமரன் அசன் |
| தாழ்ந்த வகுப்பு பணி சமுதாயம் | 1906 | மும்பை | V.R. சிந்தி |
| பகுஜன் சமாஜ் | 1910 | சாரதா, மஹாராஸ்டிரா | முகுன்தராவே படேல் |
| நீதிக்கட்சி இயக்கம் | 1915 16 | மதராஸ், தமிழ்நாடு | C.N. முதலியார், T.M. நாயர் மற்றும் P. தியாகராய செட்டி, |

| | | | |
|---|---|---|---|
| | | | B.R. அம்பேத்கர் |
| தாழ்ந்த வர்க்க நல நிறுவனம் | 1924 | மும்பை | B.R. அம்பேத்கர் |
| சுயமரியாதை இயக்கம் | 1925 | மதராஸ் தமிழ்நாடு | E.V. ராமசாமி நாயர், பெரியார் |
| ஹரிஜன் சேவாக் சங்கம் | 1932 | பூனே | மகாத்மா காந்தி |
| திராவிட முன்னேற்ற கழகம் | 1944 | | கான்ஜீவரம் நடராஜன் அண்ணாதுரை மற்றும் ராமசாமி நாயக்கர் |

**சமூக சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் அமைப்புகள்**

| இயக்கம் / அமைப்பு | ஆண்டு | இடம் | தலைவர் (நிறுவனர்) |
|---|---|---|---|
| சுவாமி நாராயணன் சம்ரதே | 1800 | குஜராத் | சுவாமி சாஜ்ந்த் |
| ஆத்மிய சபா | 1815 -28 | கல்கத்தா | ராஜராம் மோகன்ராய் |
| வாலாடி இயக்கம் | 1820 | ரோஹில்கண்ட் | ஷா வலியுல்லா |
| பிரம்ம சமாஜ் | 1828 | கல்கத்தா | ராஜராம் மோகன் ராய், சந்திரா சென், தேபேந்திர நாத் தாகூர் |
| இளைய பெங்கல் | 1826 - 32 | கல்கத்தா | ரவிக் கிருஷ்ணா மாலிக் தெரகண்ட் சக்ரபாரதி |
| தர்ம சபா | 1830 | கல்கத்தா | ராதா கண்ட தேவா |
| நம்தாரி இயக்கம் | 1841 - 71 | பைனி (லூதியானா) மாவட்டம் (பஞ்சாப்) | பாய் பாலா சிங் மற்றும் ராம் சிங் |
| ரஹ்னுமாய் மத்யாசனம் சபா | 1851 | மும்பை | SS.பெங்காளி, நௌரோலி, பன்டோஜி, JB நச்சா மற்றும் |
| ராதா சமாய் சத்யாசாகிப் | 1861 | ஆக்ரா | துல்சி ராம் (சிவ தயால் சாகிப்) |
| பிராத்தன சமாஜ் | 1867 | மும்பை | டாக்டர். ஆத்மராம் பாண்டுரங் |
| இந்திய சீர்திருத்த சங்கம் | 1870 | கல்கத்தா | கேசப் சந்திர சென் |
| ஆரிய சமாஜ் | 1875 | நியூயார்க் | மடனே ஷெலனா பலவாஷ்கி, ஹோலேனெல் ஹென்றி |
| டெக்கான் கல்வி சமுதாயம் | 1884 | பூனே | மகாதேவ் கோவிந்த ரானடே, கோபால் கணேஷ், |

| | | | |
|---|---|---|---|
| | | | அகர்கர் மற்றும் வாமன் ஷிவ்ராம் |
| சேவசதான் | 1885 | மும்பை | பெக்ராம்ஜி M. மலபாரி |
| ராமகிருஷ்ணா மிஷன் | 1894 | பெலூர் | சுவாமி விவேகானந்தா |
| இந்திய தேசிய சமூக மாநாடு | 1887 | மும்பை | மகாதேவ் கோவிந்த ரானடே, ரகநாத் ராவ் |
| தேவ சமாஜ் | 1887 | லாகூர் | சிவ நாராயண அக்னி கோத்ரி |
| மெட்ராஸ் ஹிந்து சங்கம் | 1892 | மெட்ராஸ் | வீரேசலிங்கம் பந்தலு |
| இந்திய தொழிலாளர்கள் சங்கம் | 1905 | மும்பை | கோபால கிருஷ்ண கோகலே |
| பாரத் தர்மா மஹாமன்டல் | 1902 | வாரணாசி | மதன்மோகன், மாளவியா, மற்றும் பண்டிட் தீன் தயால் சர்மா |
| பூனா சேவ சதான் | 1909 | பூனே | G.K. தேவதார் மற்றும் ரம்பி ரானடே (மகதேவ் கோவிந்த் ரானடேவின் மனைவி) |
| நிஷ்காம கர்மமத் | 1910 | பூனே | தொண்டு கேசவ் கர்வ் |
| பாரத் ஸ்ட்ரீ மண்டல் | 1910 | அலகாபாத் | சாரளா தேவி சௌதாணி |
| சமூக சேவை லீக் | 1911 | மும்பை | நாராயணன் மல்கர் ஜோஸ்சி |
| சேவ சமிதி | 1914 | அலகாபாத் | பண்டித் ஹரிதயானத் குன்ஸ்ரு |
| இந்திய பெண்கள் சங்கம் | 1917 | மெட்ராஸ் | அன்னிபெசன்ட் |
| குந்தாய் இயக்கம் | 1929 | NWEP | கான் அப்துல் காபர்கான் |

## நவீன இந்தியாவின் சமூகச் சட்டங்கள்

| வருடம் | சமூக சீர்திருத்தங்கள் |
|---|---|
| 1795 | பெண்கள் ஒழுங்குமுறையால் சித்தரவதை செய்யப்படுவதை ஒழித்தல் |
| 1802 | வெல்லெஸ்லி பிரபுவின் ஒழுங்குமுறையை ஒழித்தல் |
| 1829 | சதியை ஒழித்தல் (வில்லியம் பெண்டிங்) |
| 1831 - 37 | வில்லியம் பெண்டிங் மற்றும் வில்லியம் சீலமனின் இயக்கத்தின் மூலம் தக்கர்களை ஒழித்தல். |
| 1832 | எலென்பாரோவின் அடிமைத்தனத்தை ஒழித்தல் |
| 1856 | ஈஸ்வர் சந்திர வித்யாவின் முயற்சிகளால் ஹிந்து விதவையின் மறுமலர்ச்சியின் மூலம் விதவை மறுமணம் ஒப்புதல் |

| | |
|---|---|
| 1872 | குழந்தை திருமணத்தை தடை செய்தல், பலதார மணம் மற்றும் திருமண உறவின் ஒப்புதல் மற்றும் சொந்த திருமணச் சட்டத்தின் மூலம் விதலை மறுமணம் செய்தல். |
| 1811 | கழகத்தின் ஒழிப்பு, பெங்கல் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. |

## பெண்கள் இயக்கங்கள்

| சமூக இயக்கங்கள் / அமைப்புகள் | வருடம் | இடம் | தலைவர் | குறிக்கோள் |
|---|---|---|---|---|
| **சமூக சேவை லீக்** | 1911 | மும்பை | நாராயணன் மல்கர் ஜோஸி | மக்களுக்கு நல்ல வாழ்க்கை மற்றும் வேலை கிடைப்பது |
| **இந்திய தேசிய சமூக மாநாடு** | 1887 | மும்பை | எம்.ஜி. ரானடே ரகுநாத் ராவ் | இந்திய தேசிய காங்கிரஸின் சமூக சீர்திருத்த செல் உறுதியான இயக்கத்துடன் இணைந்திருந்தது. |
| **சத்நபி செக்ட்** | | பிலல்பூர் | குருஹாசி தாஸ் | மனிதனின் சமத்துவம் ஒரு உண்மையான நம்பிக்கை |
| **தேவ சமாஜ்** | 1887 | லாகூர் | சிவ நாராயணன் அக்னி கோத்ரி | குருவின் மேலாதிக்கம், சிறந்த சமூக நடத்தை |
| **சங்கத் சபா** | 1859 | கல்கத்தா | கேசவ் சந்திர சென் | இன்றைய நாளின் சமூக மற்றும் ஆன்மீக பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க வேண்டும் |
| **பிரம்ம சமாஜ்** | 1866 | கல்கத்தா | | இந்தியாவின் சமூக மற்றும் ஒழுக்க சீர்திருத்தங்கள் |
| **இந்திய சீர்திருத்த சங்கம்** | 1870 | கல்கத்தா | | குழந்தை திருமணத்திற்கு எதிரான பொது கருத்தை உருவாக்கவும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெண்களின் சமூக நிலையை மேம்படுத்தவும் போராட வேண்டும். |
| **டெக்கான் கல்வி சமுதாயம்** | 1884 | புனே | எம்.ஜி. ரானடே, G.G. அகர்கர் V.G. சிப்போந்தர் | சமூக சீர்திருத்தம் மற்றும் கல்வி விரிவாக்கம் |
| **மெட்ராஸ் ஹிந்து சங்கம்** | 1892 | சென்னை | வீரேசலிங்கம் பந்தலு | சமூக தூய்மை இயக்கம் மற்றும் தேவதாசி அமைப்புகளுக்கு எதிர்ப்பு |

# விடுதலை பெற்றதிலிருந்து இந்தியா

- 1947 - ம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்த பிறகு இந்தியத் தலைவர்கள் ஆற்ற வேண்டியிருந்த அவசரப் பணிகள் இரண்டு.
- இந்தியாவுக்கென ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது.
- இந்திய ஒன்றியத்தின் சுதேச அரசுகளை ஒருங்கிணைப்பது.

## 1. இந்தியாவின் அரசியல் அமைப்பு:

- 1946- ம் ஆண்டு டிசம்பர் 9-ல் அரசியலமைப்புக் குழு தனது பணியினைத் தொடங்கியது.
- அரசியலமைப்புக் குழுவின் தலைவராக டாக்டர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார் அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- 1949 நவம்பர் 26 - ம் நாள் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அது முதல் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.
- ஜனாதிபதி நாட்டின் அரசியலமைப்புத் தலைவராகவும், பிரதம அமைச்சர் நிர்வாகத் தலைவராகவும் செயல்படுகின்றனர்.

## 2. சுதேச அரசுகளை ஒருங்கிணைத்தல்:

- விடுதலையின் போது இந்தியாவில் 11 பிரிட்டிஷ் மாகாணங்களும் ஏறத்தாழ 552 சுதேச அரசுகளும் இருந்தன.
- பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிய பிறகு இந்திய அரசுகள் சுதந்திரமாக இருக்கலாம் என்று நினைத்தன.
- சர்தார் வல்லபாய் பட்டேல் 1947 ஆகஸ்ட் 15- ம் தேதிக்கு முன்பே இந்திய சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்தில் இணையும்படி செய்தார்.
- ஜூனாகத், ஜம்மு - காஷ்மீர், ஹைதராபாத் ஆகிய மூன்று சுதேச அரசுகள் மட்டும் சேர மறுத்தன.
- ஜூனாகத் மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தி இணைக்கப்பட்டது.
- ஜம்மு - காஷ்மீர் 1947 அக்டோபர் 26-ம் நாள் ராஜா ஹரிசிங் இணைப்புறுதி பத்திரத்தில் கையெழுத்திட்டதிற்கு இணங்க

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாயிற்று.

- ஐதராபாத் ஆட்சியாளர் நிஜாம் இந்திய ஒன்றியத்துடன் இணைய மறுத்தமையால் 1948 ல் இந்திய துரப்புக்களை அனுப்பி இணைக்கப்பட்டது.

### 3. மொழிவாரி மாநிலங்கள் சீரமைக்கப்படுதல்:

- 1948 -ல் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்வதற்காக எஸ்.கே.தார் தலைமையிலான முதலாவது மொழிவாரி ஆணையம் அரசியலமைப்புக் குழுவால் ஏற்படுத்தப்பட்டது. இக்குழு சாத்தியக் கூறுகள் இல்லை என கூறியது.
- காங்கிரஸ் கட்சி, ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீதாராமையா ஆகியோர் அடங்கிய ஜே.வி.பி குழுவை அமைத்தது. இந்தக் குழுவும் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுவதை ஆதரிக்கவில்லை.
- மொழிவாரி மாநிலங்கள் அமைக்கக் கோரி நடைபெற்ற போராட்டங்களைத் தொடர்ந்து 1953 -ம் அண்டு ஆந்திரா தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது. அதே சமயம் சென்னை மாநிலமும் (தமிழ்நாடு)தமிழ் பேசம் மாநிலமாக ஏற்கப்பட்டது.
- இத்தருணத்தில், திருத்தனியை சென்னை மாநிலத்துடன் தக்க வைப்பதற்காக மா.பொ. சிவஞானம் தலைமையேற்று நடத்திய இயக்கம் தமிழக வரலாற்றில் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.
- 1953-ல் பிரதமர் ஜவஹர்லால் நேரு நீதிபதி பசல் அலி தலைமையிலான மாநிலங்கள் சீரமைப்பு குழுவை நியமித்தார்.
- இக்குழுவில் பண்டிட் ஹிருதயநாத் குன்ஸ்ரு, சர்தார், கே.எம்.பணிக்கர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.
- 1955-ல் இக்குழு தனது அறிக்கையை அளித்தது. அதன் அடிப்படையில் 1956 -ல் நாடாளுமன்றம் மாநிலங்கள் சீரமைப்பு சட்டத்தை நிறைவேற்றியது.
- 16 மாநிலங்களில் 6 யூனியன் பிரதேசங்களும் இச்சட்டத்தில் இடம் பெற்றன.

### 4. இந்திய அரசியல் (1947 - 2000):

- இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் "நவீன இந்தியாவின் சிற்பி" என்று கருதப்படுகிறார்.

- 1964 -ல் நேரு மறைவுக்குப் பிறகு இந்தியாவின் பிரதமராக லால்பகதூர் சாஸ்திரி பதவிக்கு வந்தார்.
- 1965-ம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மூண்டது. 1996 ஜனவரியில் செய்து கொண்ட "தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் படி" முடிவுக்கு கொண்டு வந்தார்.
- 1966-ல் பிரதமராக பொறுப்பேற்ற இந்திராகாந்தி 1975-ல் நாடு முழுவதும் அவசரநிலை பிரகடனம் கொண்டுவந்தார்.
- இவரது ஆட்சியில் 1983 ல் பஞ்சாப், அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குள் நீல நட்சத்திர (operation Blue Star) நடவடிக்கையை இந்திய இராணுவத்தைக் கொண்டு எடுத்தார்.
- இச்செயல் காரணமாக துருதிஷ்டவசமாக அவரது பாதுகாவலர்களால் இந்திராகாந்தி 1984-ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1977 -1980 வரை நடைபெற்ற ஜனதா கட்சியின் ஆட்சியின் போது இந்தியாவின் பிரதமராக மொரார்ஜி தேசாய் பதவியேற்றார்.
- விடுதலைக்குப் பிறகு பதவி வகித்த முதலாவது காங்கிரஸ் அல்லாத அரசு இதுவேயாகும்.
- 1984-ல் இந்திரா காந்தியின் படுகொலைக்கும் பிறகு அவரது புதல்வர் ராஜீவ்காந்தி பிரதமரானார்.
- ராஜீவ்காந்தி புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.
- இலங்கைக்கு அமைதிப் படையை அனுப்பி வைத்தார்.
- 1991 மே 21-ம் நாள் ஸ்ரீ பெரும் புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்க வந்த அவர் இலங்கை தமிழ் தீவிரவாதிகளால் மனித வெடிகுண்டுக்கு பலியானார்.
- 1989 முதல் 1990 வரை வி.பி.சிங் பிரதமராக இருந்தார். ஜனதாதளம் என்ற காங்கிரஸ் எதிர்ப்புக் கூட்டணி அரசுக்கு அவர் தலைமை வகித்தார்.
- இவர் தனது ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்டோர்க்கு இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் மண்டல்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்த முடிவு செய்தார்.
- 1990ல் காங்கிரஸ் ஆதரவுடன் சந்திர சேகர் பிரதமராக பதவியேற்றார்.
- 1991 -ஜூன் மாதத்தில் பி.வி.நரசிம்மராவ் பிரதமராக பதவியேற்றார்.

- ❖ புதிய பொருளாதார கொள்கையை அவர் தீவிரமாக செயல்படுத்த முடிவு செய்தார்.
- ❖ நிதி அமைச்சராக இருந்த மன்மோகன்சிங் தலைமையில் இந்தியா தாராளமயம், தனியார்மயம், உலகமயம் ஆகிய பாதைகளில் நடைபோடத் துவங்கியது.
- ❖ 1999 -ல் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக பதவியேற்றார். இவரது ஆட்சியில் இரண்டு முக்கிய நிகழ்வுகள்.

1. பாகிஸ்தானுடன் கார்கில் போர் - வெற்றி
2. பொக்ரானில் அணு ஆயுத சோதனை நிகழ்த்தியது.

## 5. பொருளாதார வளர்ச்சி:

- ❖ ஜவஹர்லால் நேரு சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் இணைந்த அவர் கொள்கை "ஜனநாயக சமத்துவம்" என்றே அழைக்கப்பட்டது.
- ❖ 1950 மார்ச் 15-ம் நாள் தேசிய திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டது. பிரதமர் நேருவே இதன் தலைவராக பொறுப்பேற்றார்.

## 6. ஐந்தாண்டுத் திட்டங்களும் முன்னுரிமைகளும்:

**ஐந்தாண்டுத் திட்டங்கள் முன்னுரிமைகள்**

- ❖ 1-வதுஐந்தாண்டு திட்டம் 1951 - 1956 விவசாயம், நீர்பாசனம் மற்றும் மின்சாரத்திட்டம்
- ❖ 2-வது ஐந்தாண்டு திட்டம் 1951 - 1961 தொழில்
- ❖ 3-வது ஐந்தாண்டு திட்டம் 1961 - 1966 அடிப்படைத் தொழில்கள்
- ❖ 4-வது ஐந்தாண்டு திட்டம் 1966 - 1974 பங்கீட்டு நிதியுடன் வளர்ச்சி
- ❖ 5-வது ஐந்தாண்டு திட்டம் 1974 - 1979 வறுமை ஒழிப்பு மற்றும் சுயசார்பு
- ❖ 6-வது ஐந்தாண்டு திட்டம் 1980 - 1985 வறுமை ஒழிப்பு
- ❖ 7-வது ஐந்தாண்டு திட்டம் 1985 - 1990 வேலை வாய்ப்பை உருவாக்குதல்
- ❖ 8-வது ஐந்தாண்டு திட்டம் 1992 - 1997, 2000-ல் முழு வேலை வாய்ப்பை சாதிக்கும் வேலையை உருவாக்குதல்.
- ❖ 9-வது ஐந்தாண்டு திட்டம் 1997 - 2002 சமூக நீதியுடன் வளர்ச்சி மற்றும் சமத்துவம்
- ❖ 10-வது ஐந்தாண்டு திட்டம் 2002 - 2007 வறுமை ஒழிப்பு மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைத்தல்

- 11-வது ஐந்தாண்டு திட்டம் 2007 - 12 உள்ளார்ந்த வளர்ச்சி (வறுமை ஒழிப்பு வேலை வாய்ப்பு, ஆண் - பெண் சமத்துவம்)
- 12 - வது ஐந்தாண்டு திட்டம் 2012 - 17 வேகமான, உள்ளார்ந்த, நிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சி (Very Fast, Inclusive growth and sustainable development)

## 7. ஆண்டுத் திட்டங்கள்:

- 1966 - 1969, 1978 - 1979, 1979 - 1980 ஆகிய ஆண்டுகளில் ஆண்டுத் திட்டங்கள் மட்டுமே செயல்படுத்தப்பட்டன.

## 8. பசுமைப் புரட்சி:

- 1960 - ம் ஆண்டுகளின் மத்தியில் உணவுப் பஞ்சம் தோன்றியது.
- சீனா (1962), பாகிஸ்தான் (1965) இந்தியாவுடன் போர் நடந்தது.
- 1965 -66ம் ஆண்டுகளில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சி உணவு உற்பத்தியை பாதித்தது.
- இத்தகைய பின்னணியில்தான் உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவதற்காக இந்தியாவில் பசுமைப் புரட்சி தொடங்கப்பட்டது.
- அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி உணவுத்துறை அமைச்சர் சி.சுப்பிரமணியம், சாஸ்திரிக்குப்பின் 1966 -ல் பிரதமரான இந்திரா காந்தி வேளாண் உற்பத்தியை பெருக்க பெரும் முயற்சி எடுத்தார்.
- 1968 ல் இந்திய விவசாயிகள் கோதுமை உற்பத்தியில் வியத்தகு அளவை எட்டியபோது, அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் காட் என்பவர் "பசுமைப் புரட்சி" என்ற சொல்லை முதன் முதலாக பயன்படுத்தினார்.
- 1980-ம் ஆண்டு இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தது.
  - பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகத்தின் ஒரு பகுதி மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களில் பசுமைப்புரட்சியின் தாக்கம் நன்கு வெளிப்பட்டது.
- அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுக் கழகத்தின் தலைவராக நேருவே பொறுப்பு வகித்தார்.
- மாசஞ்செட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தை முன்மாதிரியாக கொண்டு 1952 -ல் முதல் இந்திய தொழில் நுட்ப நிறுவனம் கோரக்பூரில் அமைக்கப்பட்டது.

- 1948 - ஆகஸ்டில் அணுசக்தி ஆணையம் ஹோமி ஜே.பாபா என்பவர் தலைமையில் நிறுவப்பட்டது.
- 1954 ல் அணுசக்தி துறை ஏற்படுத்தப்பட்டது.
- 1956 -ல் இந்தியாவில் முதலாவது அணுசக்தி நிலையம் பம்பாய்க்கு அருகிலுள்ள டிராம்பேயில் அமைக்கப்பட்டது.
- தமிழ்நாட்டில் கல்பாக்கத்திலுள்ள இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம், சென்னையிலுள்ள உயர் தொழில்நுட்ப மையம் என்பனவாகும்.

## 9. விண்வெளி ஆய்வு:

- 1962 -ல் விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்திய தேசியக் குழுமம் அமைக்கப்பட்டது.
- தும்பாவில் ராக்கெட் ஏவுதளம் ஒன்று உருவாக்கப்பட்டது.
- நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக முதல் தலைமை இந்திய விண்வெளி ஓடத்தை (இன்சாட் - I) இந்திய 1982-ம் ஆண்டு ஏவியது.
- நாட்டின் தெலைதொடர்பு மற்றும் வானியல் கோள் ஆய்வுக்கான தேவைகளை இன்சாட் - IA மற்றும் இன்சாட் -IB ஆகிய விண்வெளி ஓடங்கள் நிறைவேற்றி வருகின்றன.
- இஸ்ரோ மையங்களிலேயே மிகப் பெரியதான திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் விண்வெளி ஏவு தொழில்நுட்பத்தைப் பற்றி முதன்மை ஆய்வை மேற்கொள்கிறது.
- இந்திய விண்வெளி திட்டத்தின் பகுதியான விண்வெளி ஓடத் தொழில்நுட்பத்தை பெங்களூரிலுள்ள இஸ்ரோ மையம் பெற்றுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்கு கடற்கரையிலுள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ராகெட் ஏவுதளம் இஸ்ரோவின் முக்கிய ஏவுதளமாக விளங்குகிறது.
- தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மகேந்திரகிரி என்ற இடத்தில் ராக்கெட் என்ஜின் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- நவீன ரஷ்யா தொழில்நுட்பத்தின்படி கிரையோஜெனிக் என்ஜின் தயாரிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

## 10. இந்தியாவின் அயலுறவுக் கொள்கை:

- இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைத்தவர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார்.
- கெடுபிடிப் போர் காலத்தில் அணிசேரா இயக்கத்தை வடிவமைத்தவர் நேரு.
- பஞ்சசீலக் கொள்கை இவரால் உருவாக்கப்பட்டது.
- இந்தோ - சீனா, சூயஸ் கால்வாய், காஸ்கோ போன்ற இடங்களில் செயல்பட்ட ஐ.நா. பாதுகாப்பு படைக்கு இந்தியா தனது துருப்புக்களை அனுப்பி வைத்தது.
- இந்தியா பாகிஸ்தானுடன் 1965, 1971, 2000 ஆகிய மூன்று முறை போரில் ஈடுபட்டது.
- இந்திய கிழக்கு பாகிஸ்தானின் விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தது. பங்காளதேஷ் விடுதலை அமைப்பான முத்திவாகினியுடன் இந்தியப் படைகள் இணைந்து போராடியதால் 1971 டிசம்பரில் பங்காள தேஷ் விடுதலை பெற்றது.
- 1971 -ல் பங்களா தேஷ் விடுதலை பெற்றதிலிருந்து இந்தியா அதனுடன் நட்புறவைப் பேணி வருகிறது.

## 11. 21-ஆம் நூற்றாண்டில் இந்தியா:

- இந்தியா 20-வது நூற்றாண்டு காலத்தில் குறிப்பாக அந்த நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் சமூகப் - பொருளாதாரக் களங்களில் மிகவும் குறிப்பாக விவசாயம் மற்றும் அரசியல் களங்களில் பல மேம்பாடுகளை கண்டுள்ளது.
- 21-வது நூற்றாண்டில் இந்தியாவின் சாதனைகளை பல்வேறு நிலைகள் மூலம் விளக்கலாம்.

### சமூக மேம்பாடு

- பொதுவாகவே, பல்வேறு தன்மைகளில் பல்வேறு ஜாதிகள், மதங்கள், மொழிகள், கலாச்சாரங்கள் மற்றும் இனங்கள் நிலவுகின்ற ஒரு பன்முகச்சமூகமாக இந்தியா உள்ளது. உலகின் மக்கட் தொகை ரீதியாக சீனாவிற்கு அடுத்து இரண்டாவது பெரிய நாடாக இந்தியா இருக்கிறது. 1872 ல் முதலாவது அகில இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிக்கப்பட்டது. 1887 லிருந்து ஒவ்வொரு பத்து வருடத்திற்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு வருகின்றது. 1920 ல் வரை இந்தியாவின் மக்கள் தொகை மெதுவாக வளர்ந்தது.

- 1911 லிருந்து 1920 வரையிலான பத்து ஆண்டுகளிலும் மற்றும் 1921 லிலும் பரவும் நோய்கள் நிலவியதற்கிணங்க மக்கள் தொகை சரிவு இருந்தது. சுதந்திரத்திற்கு பிறகு மக்கள் தொகை வளர்ச்சி மிக அதிக அளவு இருந்திருக்கிறது. 2001 -ன் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கிணங்க இந்தியாவின் மக்கள்தொகை 102.7 கோடியாக இருந்தது.
- ஆனால் 2011 ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 120 கோடியாக உயர்ந்துள்ளது. மக்கள் தொகைக் கொள்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் டாக்டர்.எம்.எஸ். சுவாமிநாதன் என்பவரை தலைவராக கொண்ட ஒரு நிபுணர் குழுவை இந்திய அரசாங்கம் நியமித்தது.
- அக்குழு 1994 -ஆம் ஆண்டு மே 21-ஆம் நாள் பரிந்துரைகளை சமாப்பித்தது. இதன் அடிப்படையில் தேசிய மக்கள் தொகை 2000 கொள்கையை (National Population Policy) இந்திய அரசாங்கம் அறிவித்தது. இதன் விளைவாக பிரதம மந்திரியை, பிரதம மந்திரியை தலைவராகவும், மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், அரசுசாரா நிறுவனங்கள், மக்கட் தொகை நிபுணர்கள் மற்றும் பொதுச் சுகாதார பணியாளர்கள் போன்றோரை உறுப்பினர்களாகவும் பெற்றுள்ள மக்கள் தொகை மீதான ஒரு தேசிய ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**வறுமை ஒழிப்பு:**

- வறுமை என்பது ஒரு நீண்ட சுகாதாரமான மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்வை நடத்துவதற்கும், நியாயமான வாழ்க்கை தரம், சுதந்திரம், மாண்பு, சுயமரியாதை மற்றும் மற்றவரை மதித்தல் போன்றவற்றை அனுபவிப்பதற்கும் உரிய வாய்ப்புகளை மறுத்தல் ஆகும்.
- வறுமையை ஒழிப்பதற்காக இந்திய அரசாங்கம் பல்வேறு வறுமை ஒழிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- **அவையாவன:**

| வ. எண் | திட்டம் | அறிமுக வருடம் |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) | 1978 |
| 2. | சுயவேலை வாய்ப்பிற்கான கிராமப்புற இளைஞர்களின் பயிற்சி(TRYSEM) | 1979 |

| | | |
|---|---|---|
| 3. | தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டம் | 1980 |
| 4. | கிராமப்புறங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாடு (DWCRA) | 1982 |
| 5. | கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்திரவாதத்திட்டம் (RLEGP) | 1983 |
| 6. | இந்திரா ஆவாஸ் யோஜனா (IAY) | 1985 |
| 7. | ஜவஹர் ரோஜ்கார் யோஜனா (JRY) | 1989 |
| 8. | பிரதம மந்திரியின் ரோஜ்கர் யோஜனா (PMRY) | 1993 |
| 9. | மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS) | 1996 |
| 10. | கங்கா கல்யாண் யோஜனா (GKY) | 1997 |

**பொருளாதார வளர்ச்சி:**

❖ இந்திய பொருளாதாரம் பொதுத்துறைகளையும், தனியார் துறைகளையும் உள்ளடக்கிய கலப்பு பொருளாதாரமாகும். விவசாயம் பொருளாதார மேம்பாட்டின் முதுகெலும்பாக உள்ளது. கச்சா பொருட்களுடனான அதிக எண்ணிக்கையுள்ள தொழில்களை விவசாயம் ஏற்படுத்துகிறது. இந்தியாவில் 64% உழைப்பு சக்திக்கு அது நேரடி வாழ்வளிக்கிறது. என்பது இந்திய விவசாயத்தின் இயல்பான தன்மையாகும். முதலாம் ஐந்தாண்டு திட்டத்தின் விளைவாக விவசாயத்தில் பசுமைப்புரட்சி சாதிக்கப்பட்டது. ஜூலை 2000ல் இந்திய அரசாங்கம் அதன் புதிய விவசாயக் கொள்கையை (National Agricultural Policy) அறிவித்தது.

**தேசிய வருமானம்:**

❖ ஒரு நாட்டின் உண்மையான வருமானம் என்பது அந்த நாட்டில் உற்பத்தியான மொத்த பொருள்கள் மற்றும் பணிகளை குறிக்கும். தேசிய வருமானம் என்பது ஒரு வருடத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து இறுதியான பொருட்கள் மற்றும் பணிகளின் பணமதிப்பாக உள்ளது. இந்தியாவில் ஒரு அடிப்படை வருடத்துடன் நிலையான விலைகளில் தேசிய வருமானம் கணக்கிடப்படுகிறது.

❖ தற்போதைய அடிப்படை வருடம் 2004-05 ஆகும்.

**தொழில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்:**

- ❖ தொழில்களின் மேம்பாட்டில் செயல்படுவதற்கு ஒரு சிறந்த பங்கை அரசு பெற்றிருந்தது என்ற கருத்து ஜவஹர்லால் நேருவை தலைவராக கொண்ட தேசிய திட்டக் குழுவின் (1938) அறிக்கையில் காணப்பட்டது.
- ❖ இது தொழில் கொள்கையின் (1945) அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. சுதந்திர இந்தியாவில் தொழில் நிகழ்வுகளை அமைத்ததில் சில பிரதான துவக்கங்கள் பின்வருகின்றன.

1) தொழில் கொள்கை தீர்மானம் 1948
2) தொழில்கள் மேம்பாடு மற்றும் தீர்மானச்சட்டம்.
3) தொழில் கொள்கைத் தீர்மானம் 1956
4) தொழில் கொள்கை அறிக்கை 1977
5) தொழில் கொள்கை அறிக்கை 1980 மற்றும்
6) புதிய தொழில் கொள்கை 1991

- ❖ இந்தியா அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அறிவியல் ஆய்வு, தொழில்நுட்ப மையங்களை நிறுவுதல், கருவிகளை நவீனப்படுத்துதல், ஹைட்ரஜன் மற்றும் நைட்ரஜன் குண்டுகளை தயாரித்தல், விண்வெளி ஆய்வு மற்றும் மேம்பாடு, இன்னும் இது போன்ற பலவற்றின் மூலமாக மேம்பாடு அடைந்துள்ளது.

**திட்டமிடல்:**

- ❖ அரசியல் முறைமை, அரசியல் மற்றும் ஆளுமையின் சிறப்புகள் தொடர்பாக பிரிட்டனின் உதாரணத்தை இநதியா பின்பற்றியது. இருப்பினும், இது வரையிலான பொருளாதார மற்றும் விவசாய மேம்பாடு தொடர்பாக, முன்னுரிமைத் திட்டமிடல் மற்றும் முறையான அமுலாக்கத்தை வலியுறுத்திய சோவியத் மாதிரியை இந்தியா பின்பற்றுகிறது.
- ❖ திட்டமிட்ட மேம்பாட்டின் ரஷ்ய முறையின் ஆதரவாளராக சமதர்மவாதியான பண்டித ஜவஹர்லால் நேரு இருந்தார். அவரின் முயற்சியினால் இந்தியாவில் திட்டமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ இதுவரை பனிரெண்டு ஐந்தாண்டு திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.
- ❖ 1966 லிருந்து 1969 வரையிலும் மற்றும் 1990 லிருந்து 1992 வரையிலும் திட்ட விடுமுறை இருந்தது. திட்டங்களின்

சோதனையான அனுபவத்திற்கு பின்னர், மூன்று வருடங்களாக திட்ட விடுமுறை அறிவிக்கப்பட்டது.

- அந்த காலத்தில் வருடாந்திர திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல் படுத்தப்பட்டன. பசுமைப்புரட்சி, பண வாட்டத்தைக் குறைத்தல் மற்றும் வங்கிகளை தேசியமயமாக்குதல் போன்றவைகள் அந்த காலகட்டத்தில் பிரதான வளர்ச்சிப் படிகளாக இருந்தன.

## III. அரசியல் மாற்றம்:

- இந்தியாவின் அரசியல் மாற்றத்தை குறிப்பாக அரசியலமைப்பு மாற்றங்களின் மூலம் காணலாம்.

### 1. அரசியலமைப்பின் பெரிதாக்கம்:

- ஆரம்ப அரசியலமைப்பு - 1 முகவுரை, 22 பகுதிகள் 395 விதிகள், 8 அட்டவணைகள்
- தற்போதைய அரசியலமைப்பு - 1 முகவுரை, 24 பகுதிகள், 450 விதிகள், 12 அட்டவணைகள்.
- மேலும் விதி 368 க் கிணங்க 110 முறைகளுக்கு மேல் திருத்தப்பட்டுள்ளது. உலகின் மிகவும் விளக்கமான பெரிய அரசியலமைப்பு இந்திய அரசியலமைப்பே ஆகும்.

### 2. முகவுரையில் மாற்றங்கள்:

- 1976 - ஆம் ஆண்டின் நாற்பத்து இரண்டாவது (42) அரசியலமைப்பு சட்டத்திருத்தப்படி சமதர்மம் மற்றும் மதச்சார்பின்மை, இந்தியாவின் ஒருமைப்பாடு ஆகியவை முகவுரையில் சேர்க்கப்பட்டுள்ளது.

### 3. அடிப்படைக் கடமைகள்:

- 42-வது சட்டத்திருத்தத்தினால் ஒரு புதிய பகுதி IV - அ வில் அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சி: 1992 ன் 73 வது மற்றும் 74 வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் படி முறையே பகுதி IX ல் பஞ்சாயத்துக்களும் பகுதி IX - அவில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளும் 11, 12 வது அட்டவணைகளாக சேர்க்கப் பட்டுள்ளன.

### 5. கூட்டுறவு கூட்டாட்சி:

- இந்தியா பல மாநிலங்களை பெற்றிருப்பதாலும் மற்றும் மாநிலங்களுக்கிடையே மட்டுமில்லாமல் மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கிடையே பல பிரச்சனைகள் நடைபெறுவதால், 1990 ல் சர்க்காரியா ஆணையத்தின் பரிந்துரைகளின் படி மாநிலங்களுக்கிடையேயான

கவுன்சிலை (Inter State Council) அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது.

**6. தேர்தல் சீர்த்திருத்தங்கள்:**

- இந்தியாவில் தேர்தல் சீர்த்திருத்தங்களுக்காக பரிந்துரைகள் வழங்க டார்குன்டே குழு (1974) மற்றும் தினேஷ் கோஸ்வாமி (1990) ஆகிய முக்கிய குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- கட்சி மாறா தடைச்சட்டம் (1985), 18 வயதடைந்த அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்கிய 61 வது அரசியலமைப்பு திருத்தம் (1988) போன்றவைகள் இந்தியாவில் முக்கிய தேர்தல் சீர்த்திருத்தங்களாகும்.

**7. நிர்வாகச் சீர்த்திருத்தங்கள்:**

- இந்தியாவில் நிர்வாகத்தை சீர்த்திருத்த, பல்வேறு சீர்த்திருத்த முயற்சிகள் மற்றும் மேம்பாட்டிற்காக பல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. அய்யங்கார் குழு (1949)
2. கோர்வாலா குழு (1951)
3. அப்லிபி அறிக்கை (1953 & 1956)
4. முதல் நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையம் (1966 - 70) (Administrative Reforms Commission) - I -மொரார்ஜி தேசாய் தலைமையில் 5 உறுப்பினர் ஆணையம்.
5. இரண்டாவது நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையம் (ARC -II) (2005) - வீரப்பமொய்லி தலைமையில் ஏற்படுத்தப்பட்டது.

**தொழிலாளர் மற்றும் தொழில் சங்க அமைப்புகள்**

| அமைப்பு | ஆண்டு | தலைவர் |
|---|---|---|
| மும்பை ஆலை மற்றும் ஆலை கைகள் | 1880 | N.M. லோக்நந்தா |
| உழைப்பாளர்கள் | 1870 | சசிபாத பனார்ஜி |
| பிரிண்டர்களின் சங்கம் | 1905 | |
| இரயில்வே தொழிலாளர் சங்கம் | 1906 | |
| கம்கர் ஹித்வர்தக் சபா | 1909 | SK போலே |
| சமூக சேவை லீக் | 1911 | |
| மெட்ராஸ் தொழிலாளர்கள் சங்கம் | 1918 | G.R. நாயுடு |
| அலகாபாத் இரயில்வே தொழிலாளர்கள் | 1897 | |

| | | |
|---|---|---|
| அலகாபாத் நெசவு தொழிலாளர் சங்கம் | 1920 | B.M.K. காந்தி |
| அனைத்து இந்திய தொழிற்சங்க மாநாடு | 1920 | NM ஜோஸ்சி |
| மும்பை நெசவு தொழிலாளர் சங்கம் | 1920 | |
| அனைத்து இந்திய தொழிற்சங்க கூட்டமைப்பு | 1929 | NM ஜோஸ்சி |
| தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பு | | |
| வகுப்பு வாத இந்தியா | 1920 | எம்.என்.ராய் |
| சிசான் கட்சி | 1923 / மதராஸ் | சிங்காரவேலு |
| சுயராஜ்ஜிய கட்சி பின்னர் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் கட்சியாக மாற்றப்பட்டது | | குவாசி நஸ்ரூல் |
| தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி | 1927 / மும்பை | SS மிர்ளாக்கர், KN ஜோக்கர் மற்றும் SV கேட் |
| பீஹார் சோசலிச கட்சி | 1931 | ஜே.பி. நாராயணன் |
| காங்கிரஸ் சோசலிச கட்சி | 1934 | நரேந்திர தேவ், ஜே.பி. நாராயணன் மற்றும் மினோ மஸ்சானி |
| முன்னோக்கு தொகுதி | 1939 | SC போஸ் |
| காங்கிரஸ் தொழிலாளர் கட்சி | 1926 / மும்பை | |
| இந்தியாவின் பொல்டிவிக் கட்சி | 1939 | N.D. மஜ்ஜீம்தார் |
| தீவிர ஜனநாயகக் கட்சி | 1940 | எம்.என்.ராய் |



# வேற்றுமையில் ஒற்றுமை

▶ பரந்த நமது பாரத தேசம் நிலவியல் அமைப்பு, இனம், மொழி, இலக்கியம், சமயம், சமுதாய அமைப்பு, பொருளாதாரம், வாழ்கைச் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களால் வேறுபட்ட கூறுகளைக் கொண்டிருந்தாலும் "இந்தியா" என்ற ஒருமைப்பாட்டு உணர்வு மக்களிடம் நீண்டகாலமாகவே நிலவி வருகின்றது.

▶ இதனையே வேற்றுமையில் ஒற்றுமை என்கிறோம். இந்த "வேற்றுமையில் ஒற்றுமை" என்னும் உயரிய கோட்பாடே இந்திய பாரம்பரியத்தின் தனிச் சிறப்பு எனலாம்.

## வேற்றுமைக் கூறுகள்

நிலவியல் வேற்றுமைகள்

நமது நாடு பரந்த நாடு. இத்தகைய பரந்த நாட்டில் ஒரே சீரான இயற்கை அமைப்பைக் காண முடியாது. பல்வேறு வகைப்பட்ட தட்பவெப்ப நிலைகளையும், புவியியல் அமைப்புகளையும் காண்கிறோம். ஒரு புறம் செழிப்பான சிந்து கங்கைச் சமவெளியையும் அதே நேரத்தில் மறுபுறம் ராஜபுதன, சிந்து பாலைவனங்களையும் காண்கிறோம். செழிப்பான பள்ளத்தாக்குப் பகுதிகளும் மேடான பீடபூமிகளும் உள்ளன. ஆண்டு முழுதும் மழை பெறுகின்ற மேகாலயா மாநில சிரபுஞ்சியும், மழையே காணாத வறண்ட தென்னிந்தியப் பகுதிகளும் உள்ளன. கடுங்குளிரும், கோடையும் மாறி மாறி நிலவி வருவதைக் காண்கிறோம். இத்தகைய நிலவியல் வேறுபாடுகள் நம் நாட்டில் நிலவுகின்றன.

இன வேறுபாடு

பழம் பெரும் நாடாகிய நமது நாட்டில் பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆரம்பத்திலிருந்தே இந்தியாவில் மக்கள் தொகை மிகுந்து காணப்பட்டதாகவே அறிகிறோம். நமது நாட்டில் கிரேக்க, சாக்கிய, ஹூன, குஷான, அராபிய, துருக்கிய ஆப்கானிய இனமக்களைக் காண்கிறோம். இன்றைய சூழலில் இன்னும்

பழங்குடியினரையும், நாகரிகத்தில் மூழ்கிய நகரவாசிகளையும், காண்கிறோம். கேரள மலபார் வாழின மக்கள் தீர்க்கமான முகப்பொலிவுடனும், காஷ்மீர் மக்கள் நல்ல நிறத்தையும் அழகையும் பெற்றவர்களாய் இருப்பதைக் காண்கிறோம். அஸ்ஸாமியர்கள் இத்தகைய கூறுகள் தேவைப்படும் விதத்தில் இருப்பதையும் காண்கிறோம். எனவே டாக்டர் ஸ்மித் இந்தியாவை "இன அருங்காட்சியகம்" என்கிறார்.

மொழி வேறுபாடு

நமது நாடு இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளைப் போல ஒரே மொழியைப் பேசும் நாடு அன்று. நம் நாட்டில் ஏறத்தாழ 845 மொழிகள் நிலவி வருகின்றன. இவற்றுள் சில மொழிகள் குறிப்பிடத்தக்கவை. சமஸ்கிருதம், தமிழ், ஹிந்தி, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவை சிலவாகும்.

மொழிகளைப் போலவே எழுத்து வடிவங்களிலும் இத்தகைய வேறுபட்ட அமைப்புகள் உள்ளன. ஒரே சீரான எழுத்து முறை இல்லை. பண்டைய பாலி, தேவநாகரி, கிரந்தம் ஆகிய மொழிகளின் எழுத்துமுறை இன்றைய மொழிகளின் எழுத்துமுறைகளினின்று முற்றிலும் மாறுபட்டு உள்ளன.

சமய வேறுபாடு

இந்தியாவில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே சமயத்தைப் பின்பற்றுவதில்லை. உலகின் தலை சிறந்த சமயங்களான இந்து சமயம், சமண சமயம், பௌத்த சமயம், இசுலாமிய சமயம், கிறித்தவ சமயம், பார்சி சமயம், ஆகியவை இந்தியாவில் பின்பற்றப்பட்டு வருவதைக் காண்கிறோம். மேலும் இம்மதங்களில் பல உட்பிரிவுகள் இருப்பதையும், அவற்றையும் மக்கள் பின்பற்றி வருவதையும் பார்க்கிறோம்.

சமுதாய அமைப்பில் வேற்றுமைகள்

மக்களிடம் காணப்படும் உணவு, உடை, அணிகலன்கள், பழக்க வழக்கங்களும் மாறுபட்டு இருப்பதைக் காண்கிறோம். வாழும் முறையில் வேறுபாடுகள் உள்ளன. வட இந்திய மக்களின் வாழ்க்கை முறை தென்னக மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்டு இருப்பதைக் காண்கிறோம். ஆடை அணிகலன்களை அணியும் முறை, உணவுப் பொருள்களை உண்ணும் முறை ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. மக்களின் மரபு முறைகளும் சமுதாய அமைப்புகளில் வேறுபாடுகள் இருப்பதைக் காண்கிறோம்.

பொருளாதார வேற்றுமை

எந்த ஒரு நாட்டிலும் ஒரே சீரான பொருளாதார வாழ்க்கை நிலையைக் காண இயலாது . நமது நாடும் அதற்கு விலக்கன்று. இங்கும் ஒரு சாரார் உண்ணும் உணவுக்கு ஏங்கியும், ஒரு சாரார் உண்ணும் உணவை வீணடித்தும் வாழும் நிலை உள்ளது. மாட மாளிகைகளில் வாழ்பவர் ஒருபுறமிருக்க, ஓலைக் குடிசைகளிலும் ஒண்ட முடியாமல் தவிக்கும் மக்கள் மறுபுறம் எனப் பொருளாதார வேற்றுமையைக் கண்கூடாகக் காணலாம்.

## ஒற்றுமைக் கூறுகள்

நிலவியல் அமைப்பில் ஒற்றுமை

நிலவியல் கூறுகளில் எத்தகைய வேற்றுமைகள் காணப்படினும் புராண காலந்தொட்டே நம்நாடு "பாரத நாடு" என்னும் பெயரினைக் கொண்டுள்ளது. நிலவியல் அடிப்படையில் விந்திய சாத்பூரா மலைத் தொடர்கள் நம் நாட்டை வட இந்தியா என்றும் தென்னிந்தியா என்றும் பிரிப்பது போன்று காணப்படினும் நம் இந்திய நாடு "பாரத

கண்டம்” என்றே வழங்கப்படுகிறது. இந்த ஒரே பெயரே ஒற்றுமை உணர்வுக்கு முக்கியச் சான்று ஆகும் . இக்கருத்தின் அடிப்படையில் தான் தாய் நாடாகிய பாரத நாட்டை தாயாக உருவகம் செய்து “பாரத மாதா” என அனைவரும் கொண்டாடி வருகிறோம்.

உடலமைப்பில் ஒற்றுமை

ஆரியர்கள், சாக்கியர்கள், ஹூ னர்கள் என பல்வேறு இனத்தவர்கள் இந்தியாவில் குடியேறினர். நாளடைவில் இந்தியர்களுடன் முழுமையாகக் கலந்து தங்கள் தனித்தன்மையை இழந்தனர். இசுலாமியர்களும், கிறித்தவர்களும் இங்கே வந்து தங்கி வாழ்ந்தனர். இந்தியாவிலே வாழ்ந்து, இங்குள்ள உணவுப் பொருள்களை உண்டு, ஒரேவிதமான தட்பவெப்ப நிலைகளில் வாழ்ந்து அன்றாட கடமைகளை நிறைவேற்றி அயல்நாட்டவரும் நாளடைவில் இந்தயராயினர். ஆகவே இங்கு வாழும் மக்கள் அனைவரும் இந்தியப் பண்பாட்டுத் தாக்கத்தால் ஒரே ஆளுமைப் பண்பையும் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய பல்வேறு நிலைகளில் வேற்றுமைகள் ஒவ்வொன்றும் ஒற்றுமையை நிலைநாட்டும் அம்சங்களாக செயல்படுகின்றன.

மொழி ஒற்றுமை

அசோகருடைய காலத்தில் புத்தமதக் கருத்துகள் மக்களுக்கு எளிதில் விளங்கும்“பாலி” மொழியில் பரப்பப்பட்டதாக அறிகிறோம். சமஸ்கிருத மொழி, ஹிந்தி , மராத்தி, குஜராத்தி, வங்காளி மொழிகள் இந்திய ஒற்றுமைக்கு உரம் சேர்த்தன. தக்காணத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு என்னும் திராவிட மொழிகள் பலவாயினும் அவற்றிற்கிடையே கருத்தொற்றுமை நிலவியது என்பது ஏற்புடையதாகும்.

சமய ஒற்றுமை

இந்தியாவில் உள்ள சமயங்கள் பலவற்றில் பெரும்பாலானவை ஒரு கடவுள் கோட்பாடு, ஆன்மாவின் அழிவற்ற தன்மை, அவதாரக் கோட்பாடு, வீடுபேறு என்று பல கருத்துகளில் ஒத்த தன்மையுடையனவாக உள்ளன. சமயச் சடங்குகளிலும், பழக்க வழக்கங்களிலும் அடிப்படையான தன்மைகள் ஒன்றாகவே உள்ளன. வட இந்தியர்கள் தெற்கே இராமேஸ்வரம் வரை புனிதப் பயணங்களை மேற்கொள்கின்றனர். இந்தியா முழுமைக்கும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களும் வீரகாவியங்களாக திகழ்வதுடன் கவிதை வடிவில் பக்திப் பெருக்குடன் பாடப்படுகின்றன. நம் நாட்டில் காணப்படும் அனைத்து சமயங்களின் மையக் கோட்பாடு பக்தி, அஹிம்சை, வீடு பேறு. இதை அடைவதற்குரிய ஆன்மிக நெறிகளும் அறக்கோட்பாடுகளும் இந்தியர் அனைவருக்கும் ஏற்புடையனவாக உள்ளமையால் மதநல்லிணக்கம் நம்மிடையே ஒளிர்வதைக் காண்கிறோம்.

பண்பாட்டு ஒற்றுமை

பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் ஒருங்கே கூடி வாழ்ந்து உயரிய பண்பாட்டை உலகறியச் செய்துள்ளனர். இந்தியப் பண்பாட்டை பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பலவற்றில் ஒரே சீரான பண்பாட்டுக் கூறுகள், சிந்தனைகள் இருப்பதைக் காண்கிறோம். ஒரே சீரான இலக்கியக் கருத்துகள்,தத்துவ நெறிகள் மரபுகள், வாழ்க்கை முறைகள் நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காண்கிறோம். சமுதாய வாழ்வின் பண்பாட்டு அடித்தளமாக உள்ள சமயச் சடங்குகள், சமுதாய வாழ்க்கை முறை, விழாக்கள், வாழ்வியல் நெறிகள் ஆகியவை ஒரே

தன்மையுடன் இருப்பதைக் காண்கிறோம். தீபாவளி, தசரா, பொங்கல், கிருஷ்ண ஜெயந்தி, சரஸ்வதி பூஜை, விநாயகர் சதுர்த்தி, இரம்ஜான், கிறிஸ்துமஸ், மகாவீர் ஜெயந்தி மற்றும் புத்த பூர்ணிமா போன்ற பண்டிகைகள் நம் பண்பாட்டு ஒற்றுமையை உலகறிச் செய்கின்றன.

அரசியல் ஒற்றுமை

இந்திய வரலாற்றில் "சக்ரவர்த்தி" என்னும் சீரிய சொல் மிகத் தெளிவாக இந்தியா ஒரே அரசர் ஆண்ட நிலையை விளக்குகிறது. எனவே அரசியலும் நாடு முழுமைக்கும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேலும் நம் நாட்டை ஆண்ட மன்னர்கள் முறையே இராஜாதி ராஜன், அதிராஜன், ஏக்ராட், சாம்ராட், விராட், சர்வபௌமா போன்ற பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புமாக ஆண்டதை வரலாற்றால் அறியப்படுகிறது. இந்தியா முழுமையையும் வெற்றி கொண்டு ஆண்டமையை இப்பட்டங்கள் தெளிவு படுத்துகின்றன. மேலும் அரசர்கள் இராஜசூயம், அசுவமேதம், வாஜபேயம் என்ற வேள்விகளைச் செய்ததாக அறிகிறோம். அரசியல் ஒற்றுமை நிலவினால் மட்டுமே இத்தகைய வேள்விகளை செய்ய இயலும். எனவே வேதகாலந் தொட்டே அரசியல் ஒற்றுமை இந்தியாவில் நிலவியது.

இடைப்பட்ட காலத்தில் ஆண்ட மொகலாய்ப் பேரரசர்களான அக்பர், ஔரங்கசீப் போன்றோர் இந்தியா முழுமைக்கும் ஒரே மத்திய நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினார். நாடு முழுமைக்கும் ஒரே சீரான சட்டங்கள், பொது நாணயங்கள், அலுவலக மொழியாக பாரசீக மொழி, நீண்ட நெடுஞ்சாலைகள் என உருவாக்கி ஒற்றுமையை நிலைநாட்டினார். ஆங்கிலேயர் நாடு முழுமைக்கும் பொதுவான இரயில் பாதைகள், தபால் தந்தி இலாகா என ஒற்றுமை உணர்வை வளர்க்கும் விதத்தில் ஆண்டனர். சுதந்திரத்திற்கு பின் சுதேச சமஸ்தானங்கள் இந்தியக் குடியரசுடன் இணைந்து இந்தியக் குடியரசு நாடாக இன்று உலகில் திகழ்கிறது.

பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கத் துணைபுரிந்த காரணிகள்

நம் பாரத நாட்டின் சீரிய கோட்பாடாகிய "வேற்றுமையில் ஒற்றுமை" எவ்வாறு மிளிர்கிறது என அறிந்தோம். இனி ஒற்றுமையை வளர்க்கின்ற காரணிகளைக் காண்போம்.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

ஆங்கிலேயர் காலத்தில் கொண்டுவரப்பட்ட இருப்புப் பாதைகள், தபால் மற்றும் தந்தி முறை, தொலைபேசி, வானொலி, வான ஊர்தி, பேருந்துகள், சாலைகள் போன்றவை பயண நேரத்தை குறைத்ததுடன் பாதுகாப்பான பயணத்திற்கு உதவியது, செய்தித் தொடர்பை அளித்தது, பண்பாட்டு ஒற்றுமைக்கு வித்திட்டது. இன்று வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்பத்தின் காரணமான தொலைக்காட்சி, கணினி, மின்னணு அஞ்சல் முறை (Email) தொலை நகலி (Fax) இவற்றின் பயன்பாடுகளை அறிந்து மேலும் ஒருவருடன் ஒருவர் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்கின்றோம்.

**தேசிய ஒருமைப்பாடு**

▶ புவியியல் அமைப்பு, அதனையொட்டிய மக்களின் வாழ்க்கைமுறை, பலதரப்பட்ட பழக்கங்கள் சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, உடைகள் போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றனர் . இருப்பினும் , இந்தியாவின் பாரம்பரியத்தினால் ஒன்றுபடுகின்றனர். மனிதாபிமானம்,சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, அனைத்து

மதத்தையும் சகித்துக் கொள்ளும் தன்மை போன்றவை இந்தியர்கள் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழ வழி செய்கின்றன.

▶ இந்தியர்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன. இது தவிர தேசியச் சின்னங்கள், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதம் போன்றவையும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, பிரிந்தால் வீழ்ச்சி என்ற உணர்வு இந்திய ஒருமைப் பாட்டிற்கு வழிவகுக்கிறது. இத்தகைய இந்திய ஒற்றுமை சிந்துசமவெளி காலத்திலிருந்து இன்றுவரை இந்திய கலாச்சாரத்தால் நிலை நாட்டப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்

# இந்தியாவின் கலை, நடனம், நாடகம் மற்றும் இசைத்துறை வளர்ச்சிக்கான அமைப்புகள்

- கலை வளர்ச்சிக்காக தேசிய கலை அகாடமி (National Academi of Arts)அல்லது லலித் கலா அகாடமி (Lalit Kala Akademi) புதுதில்லியில் 5 ஆகஸ்டு 1954 ல் இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது.
- இதன் பகுதி மையங்கள் - ராஷ்ட்ரிய லலித் கலா கேந்திராக்கள் (Rashtriya Lalit Kala Kendras) லக்னோ, கொல்கத்தா, சென்னை, கார்ஹி (புதுதில்லி), சிம்லா, புவனேஷ்வர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
- நடனம், நாடகம் மற்றும் இசைத்துறை வளர்ச்சிக்காக சங்கீத நாடக் அகாடமி (Sangeeth Natak Academi) 31 மே 1952 ல் புதுதில்லியில் ஏற்படுத்தப்பட்டது.
- இந்திய மொழிகளில் இலக்கியங்களை முன்னேற்ற சாகித்திய அகாடமி (Sahitya Akademi) 1954 ல் புதுதில்லியில் ஏற்படுத்தப்பட்டது.

| வ. எண் | அமைப்பு | ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| 1. | தேசிய நாடக பள்ளி (National School of Drama) | 1959 | புதுதில்லி |
| 2. | இந்திராகாந்தி தேசிய கலைகள் மையம் 1985 (Indira Gandhi National centre for the Arts) | 1985 | புதுதில்லி |
| 3. | கலாச்சார ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையம் (Centre for Cultural resoures and Training) | 1979 | புதுதில்லி |
| 4. | இந்திய தொல்லியல் சர்வே நிறுவனம் (Archaeological Survey of India) | 1861 | புதுதில்லி |

| | | | |
|---|---|---|---|
| 5. | தேசிய மியூசியம்(National Museum) | 1949 | புதுதில்லி |
| 6. | தேசிய நவீன கலைகள் தொகுப்பியம் (National Gallery of Modern Art) | 1954 | புதுதில்லி |
| 7. | தேசிய மியூசிய நிறுவனம் - கலை வரலாறு, பாதுகாப்பு மற்றும் மியூசியாலஜி (National Institute of History of Art, Conservation and Museology) | 1989 | புதுதில்லி |
| 8. | தேசிய கலாச்சார பொருட்கள் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி கூடம் (National Research Laboratory for Conservation of Cultural Property) | 1976 | லக்னோ |
| 9. | ராமகிருஷ்ணா கலாச்சார திட்ட நிறுவனம் (Ramakrishna Mission Institure of Culture) | 1936 | கொல்கத்தா |
| 10. | இந்திய ஆந்த்ரோ பாலஜிக்கல் சர்வே மையம் (Anthropological Survey of India) | 1953 | கொல்கத்தா |
| 11. | தேசிய அர்சிவ்கள் அமைப்பு (National Archives of India) | 1891 | புதுதில்லி |
| 12. | தேசிய நூலகம் (National Library) | 1948 | கொல்கத்தா |
| 13. | மத்திய செயலக நூலகம் (Central Secretariat Library) | 1891 | கொல்கத்தா (தற்போது புதுதில்லி 1969 லிருந்து) |

# பல்வேறு ஆளுமைத்தன்மை - கலை, அறிவியல், இலக்கியம் மற்றும் தத்துவம்

## 1) அன்னை தெரசா

**(16 ஆகஸ்டு 1910 - 5 செப்டம்பர் 1997)**

- அல்பேனிய நாட்டைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க சகோதரி ஆவார். ஆனால் வாழ்வின் பெரும்பாதியை இந்தியாவிலே கழித்தார்.
- ஏற்படுத்திய அமைப்புகள்

1) சாரிட்டி மிஷனரிகள்
(Charity Missionaries)
2) மத ஒருங்கிணைப்பு அமைப்பு
(Religions Congregation)

- எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோயாளிகள்,T.B தொழு நோயாளிகளுக்காக கல்கத்தாவில் மருத்துவ மையங்களை நடத்தினார்.
- 1979 ல் அமைதிக்காக நோபல் பரிசு பெற்றார்.
- 1962 ல் பத்ம ஸ்ரீ விருது (தாமரைத் திரு) பெறுதல்.
- 1980 - பாரத ரத்னா விருது பெறுதல்.
- 1962 - ராமன் மகசேசே விருது பெறுதல்.
- செப்டம்பர் 1997 ல் இறப்பு

## 2) பண்டிட் ரவி சங்கர்

**(7 ஏப்ரல் 1920 -11 டிசம்பர் 2012)**

- இயற்பெயர் - ரபின் ரோ சங்கர் சௌத்திரி
- பிறப்பு - 7 ஏப்ரல் 1920, வாரனாசி.
- இந்துஸ்தானி இசைக்கலைஞர் சிதார் இசைகளுக்கு வல்லுநர்.
- அகில இந்திய ரேடியோவின் இசை இயக்குநராக 1949 முதல் 1956 வரை புதுதில்லியில் பணியாற்றினார்.
- 1999ல் பாரத ரத்னா விருது பெற்றார்.
- **1961 ல் வெளிநாட்டு படங்களுக்கு இசையமைத்த முதல் இந்தியர் இவராவார்.**
- சங்கீத நாடக் அகாடமி விருது (1962)
- பத்ம பூஷண் விருது (1967)
- சங்கீத நாடக் அகாடமி உதவிதொகை (1975)
- பத்ம விபூஷண் விருது (1981)

## 3) M.S சுப்புலட்சுமி

**(செப்டம்பர் 16, 1916 - டிசம்பர் 11, 2004)**

- இயற்பெயர் - மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி

- கர்நாட்டிக் இசை கலைஞர்
- இந்திய இசையின் ராணி எனஇந்திய கிலாஸிக்கல் அழைக்கப்படுகின்றார்.
- பாரத ரத்னா (1998) மற்றும் ராமன் மகசேசே (1974) விருது பெற்ற முதல் இந்திய இசைக்கலைஞர்

**மற்ற விருதுகள்:**

- பத்ம பூஷண் - 1954
- சங்கீத் நாடக் அகாடமி விருது - 1956
- சங்கீத் கலாநிதி -1968
- பத்ம விபூஷண் - 1975
- காளிதாஸ் சம்மன் - 1988

**4) ருக்மணி தேவி அருண்டேல் (19 பிப்ரவரி 1904 - 24 பிப்ரவரி 1986)**

- பிறப்பு - மதுரை
- இந்தியன் தியோசாபிஸ்ட், நடன நாட்டியமங்கை, இந்திய கிளாசிக்கல் நடனம் - பரத நாட்டியத்தின் நடன அமைப்பாளர், விலங்குகளின் உரிமைகள் பாதுகாவலர்.
- பரத நாட்டியத்திற்கு புதிய வகை நடனமுறையை அறிமுகப்படுத்தியவர் (பழைய நடன முறை - சாதிர் முறை)
- 1936 ல் அடையாரில் நடனம் மற்றும் இசைக்காக கலாஷேத்திரா (KalaShetra) அமைப்பை ஏற்படுத்தியவர்.
- இவரது முயற்சினால் விலங்குகள் துன்புறுத்தல் தடை சட்டம் 1960ல் கொண்டு வரப்பட்டது. மேலும் விலங்குகள் நல வாரியம் 1962 ல் இவர் தலைமையில் நிறுவப்பட்டது.

**விருதுகள்:**

- பத்ம பூஷண் - 1956
- சங்கீத் நாடக் அகாடமி விருது - 1957
- ராணி விக்டோரியாவின் வெள்ளி பதக்கம்

**4) து. கிருஷ்ணமூர்த்தி (12 மே 1895 - 17 பிப்ரவரி 1986)**

- பிறப்பு - மதராஸ் இயற்பெயர் - ஜித்து கிருஷ்ணமூர்த்தி
- பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் தத்துவ அறிஞர் தியோசாபிஸ்ட்.
- நூல்கள்

1. The First and Last Feedom
2. The only Revolution.
3. Krishnamurtis Notebook.

- 17 பிப்ரவரி 1986 கலிபோர்னியாவில் இயற்கை எய்தினார்.



# திராவிட இயக்கங்கள்

## முன் வரலாறு

- 1854-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட நிலை ஆணை அரசாங்கப் பதவிகள் ஒருசில செல்வாக்குமிக்க குடும்பங்களின் ஏகபோக உரிமையாக இருக்கக் கூடாது என்று கூறியது.
- 1871-ம் ஆண்டு வெளியிடப்பட்ட மக்கள் கணக்கீட்டு மேற்பார்வையாளர் கோர்னிங் பரிந்துரை படி ஒவ்வொரு பிரச்சனையையும் பிராமணக் கண்ணாடி மூலம் பார்ப்பது நல்லதல்ல எனவும் இந்து முஸ்லீம் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசாங்க பதவிகளில் வரம்பு விதிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.
- அயோத்திதாசப் பண்டிதர் என்பவரால் திராவிடர் முன்னேற்றித்திற்காக 1876-ம் ஆண்டு அத்விதாநந்தா சபை என்ற அமைப்பும் திராவிட பாண்டியன் என்ற இதழும் வெளியிடப்பட்டது. மேலும் இவரால் 1891-ல் திராவிட மகாஜன சபை தோற்றுவிக்கப்பட்டது.
- இரட்டைமலை சீனிவாசன் என்பவரால் 1891-ல் பறையர் மகாஜன சபை தோற்றுவிக்கப்பட்டு 1892-ம் ஆண்டு ஆதிதிராவிட மகாஜன சபை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1908-ம் ஆண்டு நீதிபதி சங்கரன் நாயர் என்பவர் வர்ண -ஜாதி முறை அகற்றப்படாத வரை அரசியல் முன்னேற்றம் சாத்தியமில்லை என்று கூறினார்.
- 1909-ம் ஆண்டு சி.சுப்ரமணியம், எம்.புருஷோத்தமன் என்ற இரு வழக்கறிஞர்களால் ‘சென்னை பிராமணரல்லாதார் சங்கம்’ துவக்கப்பட்டது. இதன் நோக்கம் பிராமணரல்லாதோரிடையே கல்வியை பரப்புவதாகும்.
- 1912-ல் சரவணப்பிள்ளை, வீராசாமி, துரைசாமி என்பவர்களால் சென்னை கூட்டமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. இதன் செயலாளராக இருந்த சி.நடேச முதலியார் சென்னையில் கல்வி பயில தங்கியிருந்த பிராமணரல்லாத மாணவர்களுக்காக திராவிட விடுதி ஒன்றை நடத்தினார். இந்த அமைப்பே பின்னர் சென்னை திராவிடர் சங்கம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- 1912-ம் ஆண்டு அரசாங்க பணிகளுக்காக அமைக்கப்பட்ட ராயல் கமிஷனுக்கு பி.தியாகராய செட்டி என்பவரால் சாதிவாரியான விகிதாச்சார பிரதிநிதித்துவம் பற்றி வலியுறுத்தி கோரிக்கை அனுப்பப்பட்டது.
- 1916-ம் ஆண்டு தொடங்கப்பட்ட தன்னாட்சி கழகத்தில் பிராமணர் செல்வாக்கு மேலும் உயர்ந்தது. அதே ஆண்டு நடைபெற்ற இம்பீரியல் சட்ட மன்றத்துக்கான தேர்தலில் பிராமணரல்லாத வேட்பாளர்கள் அனைவரும் தோற்கடிக்கப்பட்டது வேதனைக் குரிய தானது. இவர்கள் காங்கிரஸை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## தோற்றம்

பிராமணல்லாதவர்கள் முன்னேற்றத்திற்காக சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில் 1916 நவம்பர் 20-ல் தென்னிந்திய நல உரிமையாளர் சங்கம் வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் இட ஒதுக்கீடு என்ற முக்கிய நோக்கங்கள் அடிப்படையில் தொடங்கப்பட்டது. டி.எம். நாயர், பனகல் அரசர், தியாகராய செட்டியார், நடேச முதலியார் ஆகியோர் முக்கிய பிரமுகர்கள் ஆவர்.

1916 டிசம்பர் மாதம் பி.தியாகராய செட்டி என்பவரால் வரலாற்று சிறப்புமிக்க பிராமணரல்லாதோர் பிரகடனம் வெளியிடப்பட்டது. இப்பிரகடனத்தில் மொத்த மக்கள் தொகையில் வெறும் 37% மட்டுமே உள்ள பிராமணர்கள் அரசாங்க பதவிகளில் அதிக இடங்களிலும், முக்கிய பதவிகளிலும் உள்ளனர் என்று கூறப்பட்டது. இதுவே பின்னர் "பிராமணரல்லாதாரின் மாக்னா கார்டா" என்றழைக்கப்பட்டது.

*டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் இந்த பிரகடனத்தை செட்டியாரின் பிரகடனம் என்று குறை கூறியது. இந்து, நியூஏஜ், இந்து நேசன் போன்ற பத்திரிக்கைகளில் நீதிக்கட்சி பெரிய அளவில் விமர்சிக்கப்பட்டது.*

## நீதிக்கட்சி

தென்னிந்திய நல உரிமை சங்கம் தனது கொள்கைகளை மக்களிடையே பரப்ப மூன்று பத்திரிகைகளை நடத்தி வந்தது.

ஜஸ்டிஸ் – ஆங்கிலம் – டி.எம்.நாயர், எம்.எஸ். பூர்ணலிங்கம்

ஆந்திர பிரகாசா – தெலுங்கு – பார்த்தசாரதி நாயுடு

திராவிடன் – தமிழ் – பக்தவத்சலம் பிள்ளை

இதன் ஆங்கில இதழான ஜஸ்டிஸ் என்ற பெயரிலேயே ஜஸ்டிஸ் பார்ட்டி என்றழைக்கப்பட்டது. இதுவே தமிழில் நீதிக்கட்சி என அழைக்கப்பட்டது.

நீதிக்கட்சியின் முதல் பிராமணல்லாதார் மாவட்ட மாநாடு 1917 ஆகஸ்டு 19-ம் நாள் கோயம்பத்தூர் ஒப்பணக்கார வீதியில் நடைபெற்றது. முதல் மாநில மாநாடு 1917 டிசம்பர் 28,29 சென்னை வெல்லிங்டன் திரை அரங்கில் நடைபெற்றது.

1917-டிசம்பர் 14ல் மாண்டேகுவை சந்தித்து பிராமணர் உள்ளிட்ட அனைத்து வகுப்பினர்க்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் கோரப்பட்டது.

### நீதிக்கட்சியின் ஆட்சி அமைப்பு

நீதிக் கட்சியின் நிர்வாகிகள் 1917 அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி வெளியிட்ட கொள்கை அறிக்கையே அரசியல் சட்ட வரைவாகக் கருதப்பட்டது.

நீதிக்கட்சிக்கு ஒரு தலைவரும், நான்கு துணைத் தலைவர்களும், ஒரு பொதுச் செயலரும், ஒரு பொருளாளரும் இருந்தனர். 25 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு கொள்கை முடிவுகளை செயல்படுத்தியது.

1920 தேர்தலுக்குப் பிறகு கட்சிக் கொரடா என்ற புதிய கட்சிப்பதவி உருவாக்கப்பட்டது.

நீதிக்கட்சியின் முதல் தலைவராக சர். தியாகராய செட்டியும், முதல் பொதுச் செயலாளராக ஆற்காடு ராமசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### சட்டமன்ற தேர்தல் 1920

1919- மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டது. தொகுதிகள் வகுப்புவாரி, தொகுதிகள் சிறப்பு தொகுதிகள் ஒதுக்கப்பட்ட தொகுதிகள் என பிரிக்கப்பட்டிருந்தன. சென்னை சட்ட மன்றத்தில் 127 உறுப்பினர்கள் இருந்தனர். இந்துக்களில் 98பேர் 61 தொகுதிகள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரட்டை ஆட்சி முறையை எதிர்த்து காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடவில்லை. பலமிக்க எதிர்க்கட்சி இன்மையால் நீதிக்கட்சி 63 இடங்களில் வெற்றி பெற்றது.

அக்காலகட்டத்தில் சொத்து மதிப்பு உடையவர்கள் மட்டுமே வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். மொத்த மக்கள் தொகை 40 மில்லினில் 12, 48, 156 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். சராசரியாக 24.97% வாக்கு பதிவாயிற்று.

### முதல் அமைச்சரவை (1920-23)

- பி.தியாகராய செட்டி பதவியேற்க மறுத்தமையால் ஆளுநர் வெல்லிடன் அழைப்பின் பேரில் ஏ.சுப்பராயலு நாயுடுவின் தலைமையில் 1920 டிசம்பர் 7-ம் நாள் அமைச்சரவை அமைக்கப்பட்டது. இவர் உடல்நிலை காரணமாக பதவி விலகியதால் 1921 ஜூலை 11 பனகல் அரசர் பொறுப் பேற்றார்.
- 1921-ல் தேர்தலில் போட்டியிட பெண் களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.
- 1920-ல் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் பள்ளிகளில் இலவச உணவு வழங்கப்பட்டது. பின்னர் இதுவே இலவச மதிய உணவுத் திட்டமாக விரிவடைந்தது.
- பறையர், பஞ்சமர் என்ற சொற்கள் நீக்கப்பட்டு அவர்கள் ஆதி திராவிடர் என்றழைக்கப்பட்டனர்.
- 1922 டிசம்பர் 18ல் இந்து அறநிலைய சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது.
- தாழ்த்தப்பட்டோர் நலன் பாதுகாப்பிற்காக ஐ.சி.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார்.
- முதல் அமைச்சரவையில் தமிழர் ஒருவர் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது அமைச்சரவை (1923-26)

- முதல் அமைச்சரவை 1923 செப் 11 - முடிந்து 1923 அக். 31-ல் தேர்தல் நடத்தப்பட்டது. சுயராஜ்ஜியக் கட்சி போட்டியிட்டதால் 44 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.
- தனிப்பெரும்பான்மை அமையாததால் நியமன உறுப்பினர் ஆதரவுடன் 1923 நவம்பர் 19ல் பனகல் அரசர் தலைமையில் இரண்டாம் அமைச்சரவை பதவி ஏற்றது.
- 1924-ல் பணியாளர் நியமன வாரியம் அமைக்கப்பட்டது. இதுவே பின்னர் மாநில பணியாளர்கள் தேர்வாணைய மாக உருமாற்றம் அடைந்தது.
- 1925-ன் தெலுங்கு மொழியின் வளர்ச்சிக்காக ஆந்திர பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- 1922-ல் கொண்டுவரப்பட்ட இந்து அறநிலைய மசோதா 1925ல் நிறை வேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டது. இதன்படி கோயில்களின்மூலம்வரும்வருமானம் பொதுப்பணிக்கு பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

## மூன்றாம் அமைச்சரவை

- 1926-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எஸ்.சத்யமூர்த்தி தலைமை யில் களமிறங்கிய சுயராஜ்ஜியக் கட்சி 41 இடங்களிலும், நீதிக்கட்சி 21-இடங்களிலும் வெற்றி பெற்றனர்.
- தனிப் பெரும்பான்மை இருந்தும் சுயராஜ்ஜியக் கட்சி ஆட்சி அமைக்க மறுத்து விட்டதாலும், நீதிக்கட்சிக்கு பெரும்பான்மை இல்லாததாலும், சுயேட்சையாக போட்டியிட்ட “கருப்பு குதிரை” சுப்பராயன் என்பவர் நீதிக்கட்சி மற்றும் மற்ற சுயேட்சைகள் ஆதரவுடன் ஆட்சி அமைத்தனர்.
- இவரது அமைச்சரவையில்தான் முதன் முதலாக ஒரு பெண் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவரது பெயர். Dr. முத்துலட்சுமி ரெட்டி. இவரது முயற்சி மூலம் பெண் விடுதலை சட்டங்கள் இயற்றப்பட்டன. 1930-ல் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
- 1929-ல் தமிழ்கல்வி வளர்ச்சிக்காக அண்ணாமலை பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
- மகத்தான சாதனையாக முத்தையா முதலியார் என்பவரால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அறிவியல் பூர்வமான முறையில் வகுக்கப்பட்டது. இது கோட்டா முறை எனப்பட்டது.

## நான்காவது அமைச்சரவை (1930 - 34)

- 1930-ம் ஆண்டு வாக்கில் மக்களிடையே செல்வாக்கு இன்மை யால் பிராமணர்களும், கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதே ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக் கட்சி 35 இடங்களில் வெற்றி பெற்றது.
- பெரும்பான்மை இல்லாததால் நியமன உறுப்பினர் ஆதரவோடு முனுசாமி நாயுடு தலைமையில் 1930 அக்.17ல் ஆட்சி அமைத்தது.

- உட்கட்சி பூசல் காரணமாக 1932 நவம்பர் 5-ம் தேதி பொப்பிலி அரசர் முதலமைச்சராக பொறுப்பேற்றார்.
- இக்காலக்கட்டத்தில் ஜமின்தாரர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மக்கள் ஏமாற்றப் பட்டனர். எனவே மக்களிடையே கட்சியின் செல்வாக்கு சரியத் தொடங்கியது.

## ஐந்தாவது அமைச்சரவை (1934-37)

1934-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தாலும் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற சுய ராஜ்ஜியக் கட்சி ஆட்சி அமைக்காததால் நீதிக்கட்சி பொப்பிலி அரசர் தலைமையில் ஆட்சி அமைத்தது.

பெரியாரின் ஈரோடு திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டதால் பெரியாரின் ஆதரவு கிடைத்தது.

## திராவிடர் கழகம்

1935 இந்திய அரசுச்சட்டத்தின் படி நடைபெற்ற 1937-ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று, ராஜாஜி தலைமையில் ஆட்சி அமைத்தது.

1938 டிசம்பர் 29-ம் ஆண்டு பெரியார் பெல்லாரி சிறையில் இருந்தபோது நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தல் பாதையில் இருந்து நீதிக்கட்சியை விலக்கிய பெரியார் சமூக சீர்த்திருத்த போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

இதனையடுத்து 1944 ஆகஸ்டு 27-ம் தேதி சேலத்தில் நடந்த மாநாட்டில் நீதிக்கட்சி திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதன் சின்னமான தராசு மாற்றப்பட்டு கறுப்பு பிண்ணனியில் சிகப்பு வட்டம் பொறித்த கொடி அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் பின்னர் நீதிக்கட்சி பி.ராமச்சந்திர ரெட்டி தலைமையிலும் (1944-45) பி.டி.ராஜன் தலைமையில் (45-47) பெயரளவுக்கு செயல் பட்டு மறைந்தது.

> *"பிரதிநிதித்துவம் இன்றேல் வரியில்லை" - சி.நடேச முதலியார் (சமரச சத்தர்)*
> *"வீட்டுக்குள் நுழைந்த திருடன் போன்று ஆரியர்கள் திராவிடர்கள் சொத்தை சூறையாடி விட்டனர்". டி.எம். நாயர்*

## நீதிக்கட்சி வீழ்ச்சிக்கான காரணங்கள்

- வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற ஒற்றைக் குறிக்கோள் கட்சியாக செயல் பட்டது.
- ஆங்கிலேயருக்கு முழு ஆதரவு அளித்தது.
- உயர் வகுப்பாரின் உயர்வுக்கு முன்னுரிமை. குறிப்பாக சிறுபான்மை யினர், ஆதிதிராவிடர் ஏமாற்றப் பட்டனர்.
- அதிகார ஆசையின் காரணமாக எழுந்த கட்சி பூசல் மற்றும் மோதல் போக்குகள்.
- நீதிக்கட்சி தலைவர்களின் ஆடம்பர வாழ்க்கை முறை
- ஆட்சியாளர்களின் யதேச்சதிகாரப் போக்கு மற்றும் காங்கிரஸ் அசுர வளர்ச்சி.

> *ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கூட நீதிக்கட்சி எதிர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

## சென்னை மகாஜன சங்கம்

- நீதிக்கட்சியின்நிலைப்பாட்டைஅறிந்து, அதற்கு போட்டியாக பிராமணரல்லாத காங்கிரஸ்காரர்களால் 1917 செப். 20ல் துவக்கப்பட்டது.
- பி.கேசவ பிள்ளை தலைவராகவும், ஈ,வெ.ராமசாமி நாயக்கர் துணை தலைவராகவும், திரு. வி. கல்யாண சுந்தரனார், பி.வரதராஜீலு நாயுடு போன்றோர் முக்கிய உறுப்பினராகவும் இருந்தனர்.
- இந்தியன் பேட்டரியாட் என்ற ஆங்கில இதழும் தேச பக்தன் என்ற தமிழ் இதழும் வெளியிடப்பட்டது.
- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் நலனுக்காக பாடுபடுவதோடு ஆங்கில ஆட்சியையும் எதிர்ப்பதை கொள்கையாகக் கொண்டது.

## சுயமரியாதை இயக்கம்

- தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சீர்த் திருத்த வாதியான பெரியார் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் 1925-ம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.
- சுயமரியாதை இயக்கம், பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் சுயமரியாதையை வலியுறுத்தியதுடன், அவர்களைச் சமுதாயத்தின மேல் மட்டத்திற்கு உயர்த்தவும் பாடுபட்டது.
- மதம், ஜாதி, அரசியலில் மற்றும் சமுதாயத்தில் பிராமணர்களின் ஆதிக்கத்தை இவ்வியக்கம் கடுமையாக எதிர்த்தது.
- மூட நம்பிக்கைகளையும், பழமை வாதத்தையும் ஒழிக்கப் பாடுபட்டது.
- பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத் திருமணம் மற்றும் குழந்தைத் திருமணமுறை ஒழிப்பு ஆகியவற்றுக்காகப் போராடியது.
- சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு 1929-ம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று **செங்கல்பட்டில்** நடைபெற்றது. இந்த மாநாட்டில் வகுக்கப்பட்ட கொள்கைகள் திராவிட இன வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மாநாட்டில்தான் ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு மற்றும் பெண்ணுரிமைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
- ம.சிங்காரவேலரின் ஆலோசனைப்படி 1932 டிசம்பரில் "சுயமரியாதை சமதர்ம திட்டம்" ஒன்றைப் பெரியார் உருவாக்கினார்.
- அரசியலில் பிராமணர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கவும், தன்மான இயக்கக் கொள்கைகளைச் சட்டமாக்கவும், பொருளாதாரப் பொது உடைமையை ஏற்படுத்தவும் சுய மரியாதைச் சமதர்மத் திட்டத்தை அவர் செயல்படுத்தினார்.
- இவ்வியக்கம், ஓர் அங்கீகாரம் பெற்ற அமைப்பாகச் செயல்பட விரும்பியதால் 1952, செப்டம்பர் 29-ல் **பெரியார் சுயமரியாதைப் பிரச்சார இயக்கம்** என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டது.

- சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் வெளிவந்த புரட்சி என்ற இதழுக்கு முதன் முதலில் **எஸ்.ஆர். கண்ணம்மாள்** என்பவர் பதிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவரே **தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராவார்.**
- பெரியார், **'குடியரசு'** இதழை 1925, மே 2-ம் நாளன்று தொடங்கினார். அவ்விதழை அச்சடிக்கும் அச்சகத்திற்கு **"உண்மை விளக்க அச்சகம்"** என்று பெயரிட்டார். முதல் இதழைத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் வெளியிட்டார்.
- ஈரோட்டில் 1930-ல் நடைபெற்ற இவ்வியக்கத்தின் மாநாட்டில் **"மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதிப் பெயர்களைச் சேர்க்கக் கூடாது"** என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
- இந்திய சமூகத்தில் சாதி மதப் பிரிவு களைக் குறிக்கும் குறிப்புகளை நீக்க வேண்டுமென்ற கோரிக்கை, 1932-ல் வெளியிடப்பட்ட **சுயமரியாதை வேலைத் திட்டத்தின்** மூலம் முன் வைக்கப்பட்டது.
- இவ்வியக்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட திருமண முறை, **"சுயமரியாதைத் திருமணம்"** எனப்படுகிறது. இம்முறையில் வழக்கமாகப் பின்பற்றப் பட்டு வரும் நடைமுறைகளான பிராமண புரோகிதர் சமஸ்கிருத மந்திரம் ஓதி திருமணம் செய்வித்தல், தாலி கட்டுதல் போன்ற சடங்குகள் இன்றி திருமணம் எளிமையாக நடத்தப்படுவதற்கான நடைமுறைகள் இடம்பெற்றிருந்தன.
- பேரறிஞர் அண்ணா முதல்வரானதும், சுயமரியாதைத் திருமணங்களுக்கு சட்டப்படி அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு திருமண சட்டத்தில் 7(அ) என்ற புதிய பிரிவை இணைத்து இந்து திருமணச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம், 1968, ஜனவரி 20 முதல் நடைமுறைக்கு வந்தது.



# தமிழ்நாட்டில் சமய, சமூக சீர்திருத்த இயக்கங்கள்

19-ம் நூற்றாண்டின் இறுதியில் படித்த செல்வாக்கு பெற்ற சிலர் இந்து மதத்தை மீட்க முற்பட்டனர். ஆனால் இந்துக்கள் சார்பாக ஒரு முறையான இயக்கத்தைத் துவங்க சமுதாய தலைவர்கள் தயங்கினர்.

- ▶ கசலு லட்சுமணராசு செட்டி என்பவர் 1844- அக்டோபர் மாதம் நேடில் இண்டர்பிரட்டர் என்ற பத்திரிக்கையை விலைக்கு வாங்கி அதற்கு கிரசெண்ட் என்று பெயரிட்டு இந்து சமயத்தின் பெருமைகளை பற்றி எழுதினார்.

## இந்து முன்னேற்ற மேம்பாட்டு சங்கம், 1852

- ▶ 1852-நவம்பர் மாதம் சீனிவாச பிள்ளை என்பர் இவ்வமைப்பை உருவாக்கினார்.
- ▶ நோக்கங்கள் :
  1. பெண் கல்வி
  2. விதவை மறுமணம்
  3. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாடு
- ▶ 1853-ம் ஆண்டு வெங்கடராயலு என்பவர் உதயசூரியன் என்ற பெயரில் பத்திரிக்கை துவங்கி இந்து மக்களின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

## பிரம்ம சமாஜம்

- ▶ 1828 ஆகஸ்டு 20-ம் நாள் ராஜாராம் மோகன்ராய் என்பவரால் துவக்கப் பட்டது. 1860-களில் தமிழ்நாட்டில் பிரசவித்து பிரம்ம சமாஜத்தைப் பற்றி நேரடி அனுபவம் பெற்ற பித்தராசு என்பவரால் சென்னையில் பிரச்சாரம் செய்யப்பட்டது.
- ▶ 1864-ல் சென்னை வந்த கேசவ் சந்திரசென் பல இடங்களுக்கு பயணம் செய்து சொற்பொழிவாற்றினார். உருவ வழிபாட்டை உதறித் தள்ள வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாடு சமாதான இந்துக்களுக்கு பிடிக்காததால் தமிழ் நாட்டில் பிரம்ம சமாஜம் வேரூன்ற முடியாமல் போயிற்று.

## வேத சமாஜம் - 1864

- ▶ பிரம்ம சமாஜியத்தின் புரட்சிகரமான கொள்கைகளுக்கு உடன்பாடு இல்லாத சீர்த்திருத்தவாத இந்துக்கள்

சென்னையில் வேத சமாஜம் என்ற புதிய அமைப்பை 1864-ல் தோற்று வித்தனர்.

- ஸ்ரீதரலு நாயுடுவே இதற்கும் பொறுப்பேற்று கொள்கைகளை பரப்பினார். நாயுடு பிரம்ம தீபிகை, டம்பாச்சாரி விலாசம் என்ற நாடகம் மூலம் கருத்துக்களை பரப்பினார்.
- தென்னிந்தியாவிலேயே முதல் சடங்குகள் இல்லாத திருமணம் 1871-ல் நடத்தி வைக்கப்பட்டது.
- துரைசாமி ஐயங்கார் என்பவர் ஸ்ரீதரலு நாயுடுவின் வலக்கரமாக செயல் பட்டவர். வேத சமாஜயத்தின் ஒரே தமிழ்நாட்டு பிராமணர் இவர்தான்.

## பிரம்மஞான சபை

- 1875 நவம்பர் 17-ம் நாள். எச்.பி. பிளாவட்ஸ்கி என்ற ரஷ்ய அம்மை யாரும், பர்னல் எச்.எல். ஆல்காட் என்ற அமெரிக்கரும் நியூயார்க் நகரில் பிரம்ம ஞான சபை என்ற அமைப்பை துவக்கினார்.
- தியோசொபிஸ்ட் என்ற பத்திரிக்கை 1879-ல் துவங்கப்பட்டது. 1881-அக்டோபரில் தூத்துக்குடிக்கும், திருநெல் வேலிக்கும் வருகை தந்து பிரச்சாரம் செய்தனர்.
- 1882-டிசம்பர் மாதம் பிரம்ம ஞான சபையின் ஆண்டுக் கூட்டத்தை நடத்தினார். சர்வதேச தலைமை யகத்தை பம்பாயிலிருந்து சென்னை அடையாறுக்கு மாற்றினார்.
- நோக்கங்கள் :
  1. உலக சகோதரத்துவத்தின் மையமாக செயல்படல்
  2. உலக சமயங்கள், தத்துவங்கள், அறிவியல்கள் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்வது.
  3. மனிதரிடையே மறைந்து கிடக்கும் இயற்கை நியதிகள் கண்டறிதல்.
- ஆஸ்காட் இறந்தபின்(1907) அன்னி பெசண்ட் அம்மையார் பிரம்மஞான சபையின் தலைவரானார்.
- செயல்பாடு :
  1. சமஸ்கிருதப் பள்ளிகள் மற்றும் பிரம்மஞானப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.
  2. அடையாரில் ஒரு நூலகம் நிறுவப்பட்டது.

# சமுதாய சீர்திருத்த இயக்கங்கள்

## மேலாடைப் போராட்டம் (1822-1858)

- தமிழ்நாட்டின் பாரம்பரிய பெருமை மிக்க நாடார்கள் கள் இறக்கும் தொழிலில், நாயக்கர்களும் இவர்களை தாழ்ந்த சாதியினராகக் கருதினர்.
- பல்வேறு இன்னல்களுக்குட்பட்ட இவர்களில் சிலர் கிறிஸ்துவ மதத்திற்கு மாறினர். சிலர் திருவிதாங்கூர் பகுதிக்கு குடிபெயர்ந்தனர்.
- திருவிதாங்கூர் பகுதியில் குடியேறிய நாடார்கள் நம்பூதிரிகள் மற்றும் நாயர்களால் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

- ஆண்கள் மேல் ஆடை அணியவும், பெண்கள் மார்பகத்தை மறைக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது. காலில் விழவும், கைக்கட்டி நிற்கவும் கட்டாயப் படுத்திப்பட்டனர்.
- இதனால் கொதித்தெழுந்த இவர்கள் மேலாடைக் கட்டுப்பாட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததால் மேலாடைப் போராட்டம் என்று அழைக்கப்பட்டது.
- இந்த போராட்டத்திற்கு முன்னரே மதுரையில் குமாரா வீர மார்த்தாண்ட நாடார் தலைமையில் மதுரை நாயக்கர்களுக்கு எதிராக நடைபெற்ற போராட்டம் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டது.

### போராட்டத்தின் போக்கு

- முதற்கட்டமாக 1820-ம் ஆண்டு கொத்தடிமை சேவை செய்ய மறுப்பு தெரிவித்தனர்.
- இரண்டாம் கட்டமாக 1828-ம் ஆண்டு வேதமாணிக்கம் போன்றோர் தலைமை யில் நாயகர்ளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்.

### விளைவு

- 1829-ல் திருவிதாங்கூர் அரசாங்கம் கிறித்துவ நாடார் பெண்கள் மட்டும் ஒரு வித மேலாடை அணிய அனுமதித்தது.
- பின்னர் 1859- ஜூலை 26-ம் தேதி திருவிதாங்கூர் மகாராஜா ஆடை கட்டுப்பாட்டை நீக்க உத்தரவு பிறப்பித்தார்.
- கொத்தடிமை முறை கைவிடப்பட்டது. உழைப்புக்கேற்ற ஊதியம் பெறும் நிலை உருவாயிற்று.


## ஆலயப் பிரவேச போராட்டம்

### திருவதாங்கூர்

- கோயில் கட்டுவதற்கும் கோயில் வேலைகளைச் செய்வதற்கும் அமர்த்தப் பட்ட நாடார்கள் கோயிலுக்குள் நுழைய தடை செய்யப் பட்டனர்.
- நாகர்கோயிலுக்கு அருகே உள்ள குமரக்கோயிலில் இந்த பாரம்பரிய வழக்கமான தீமிக்க அனுமதி மறுக்கப் பட்டது.
- இதனையடுத்து வெள்ளையன் நாடார் என்பவர் தலைமையில் 12,000 நாடார் பக்தர்கள் தடையை மீறி கோயிலுக்குள் நுழைத்தனர்.

### தமிழ்நாடு

- திருவிதாங்கூர் போராட்டம் தமிழ் நாட்டிலும் எதிரொலித்தது. 1870-ம் ஆண்டு நாடார்கள் திருச்செந்தூர் கோயிலுக்குள் நுழைய முயன்றனர்.
- 1874-ல் மூக்க நாடார் தலைமையில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் நுழைத்தனர்.
- 1879-ல் ஊர்வலமாகச் சென்று கமுதி சுந்தரேஸ்வரர் கோயிலுக்குள் நுழைந்து இறைவனுக்கு மாலை அணிவித்தனர்.
- இப்போராட்டங்கள் அனைத்தும் சட்ட சிக்கல்களைத் தோற்றுவித்தன. வழக்குகள் போடப்பட்டன. இறுதித்தீர்ப்பு நாடார்களுக்கு எதிராகவே அமைந்தது.



# மாநிலங்கள் மறுசீரமைப்பு

- இந்திய தேசிய காங்கிரஸ் **மொழி வழி மாநில அமைப்பு முடிவை 1908-லேயே ஏற்றுக் கொண்டது.** அக்கருத்தின் அடிப்படையில் தான் 1911-ல் பீகார் வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டது.
- 1920-ம் ஆண்டில் நாக்பூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் இந்திய மாகாணங்கள் பிராந்திய மொழிகளின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.
- அரசியலமைப்புச் சட்ட மன்றத் தலைவர் ராஜேந்திரபிரசாத், 1948-ம் ஆண்டு ஓய்வு பெற்ற அலகாபாத் உயர்நீதிமன்ற **நீதிபதி எஸ்.கே. தார்** தலைமையில் **மாகாணங்கள் மறுசீரமைப்புக் கமிஷனை** நியமித்தார்.
- 1948-ம் ஆண்டு முடிவதற்கு முன்பே **தார் கமிஷன்** அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. உடனடியாக மொழிவழி மாகாணங்கள் மறுசீரமைக்கப்படுவது விரும்பத்தக்கவல்லது என்று அக்கமிஷன் கருதியது.
- மேலும் மொழிவழி மாகாண மறுசீரமைப்பால் ஏற்படக்கூடிய பொருளாதார நிர்வாகச் செலவுகளைத் தாங்கக் கூடிய நிலையில் நாடு இல்லை என்று அக்கமிஷன் கருதியது.
- மொழிவாரி மாநிலங்களை அமைப்பது பற்றிப் பரிசீலிக்க காங்கிரஸ் கட்சியும் 1948-ம் ஆண்டு டிசம்பரில் ஒரு கமிட்டியை அமைத்தது, அக்கமிட்டியில், 1. ஜவஹர்லால் நேரு 2. வல்லபாய் பட்டேல் 3. பட்டாபி சீத்தாராமய்யா ஆகியோர் இடம் பெற்றனர். இவர்களது பெயர்களில் முதல் எழுத்துக்களைக் கொண்டு இக்குழு **ஜே.வி.கமிட்டி** என்று அழைக்கப்பட்டது.
- சென்னை ராஜதானியிலிருந்து தெலுங்கர்கள் 1917-லிருந்தே தனி ஆந்திர மாகாணக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர்.

- சென்னை அரசாங்கம் ஆந்திர மாநிலம் அமைவற்கான நடவடிக்கைகளை எடுக்க ஒரு **பிரிவினைக்** கமிட்டியை நியமித்தது. சென்னை மாகாண முதலமைச்சர் **குமாரசாமி ராஜா** அக்கமிட்டியின் தலைவராக இருந்தார்.
- தனி ஆந்திர மாநிலக் கோரிக்கைக்கு ஆதரவாகப் **பொட்டி ஸ்ரீராமலு** சென்னையில் 1952 அக்டோபர் 19-ம் நாள் சாகும் வரை உண்ணாவிரதத்தை துவக்கினார்.
- 1952 டிசம்பர் 15-ம் தேதி இரவு தென்னக காந்தியவாதி பொட்டி ஸ்ரீராமலு தனி ஆந்திர மாநிலத்துக்காக உயிர்த் தியாகம் செய்தார்.
- அதன்பின் தனி ஆந்திர மாநிலம் அமைவதை அனுமதிப்பதாக 1953 டிசம்பர் 19-ம் நாள் மத்திய அரசாங்கம் அறித்தது.
- 1953 **அக்டோபர்** முதல் தேதி பிரதமர் நேரு ஆந்திர மாநிலத்தை மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே துவக்கி வைத்தார்.
- **சி.எம். திரிவேதி** புதிய ஆந்திர மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படார். **டி.பிரகாசம்** முதலமைச்சராகவும், சஞ்சீவ ரெட்டி துணை முதலமைச்சராகவும் பதவிப் பொறுப்பேற்றார்.

## எல்லைப் பிரச்சினை

- சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட பிரச்சனைகள் பல, அவற்றுள் மிகவும் முக்கியமானது எல்லைப் பிரச்சினை ஆகும்.
- இரு மாநிலங்களுக்கிடையேயான எல்லையை வரையறுப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஆந்திரத் தலைவர்கள் சென்னை நகரின் ஒரு பகுதியைப் கேட்டபோது **தமிழரசுக் கட்சித்** தலைவரான **மா.பொ. சிவஞானம்** திருப்பதி சென்னை மாகாணத்தோடு இருக்க வேண்டும் என்று கோரினார்.
- பின்னர் ஆந்திரர்கள் திருப்பதிக்குத் தெற்கே உள்ள மற்றொரு கோயில் நகரமான திருத்தணியையும் ஆந்திரா வுடன் சேரக்க வேண்டும் என்று கேட்ட போது மா.பொ.சிவஞானம் அக்கோரிக்கையைக் கடுமையான எதிர்த்தார். போராட்டத்தில் ஈடுபட்டார்.
- இந்த எல்லைச் சிக்கலைத் தீர்க்கும் பொருட்டு நேரு அரசாங்கம் **எச்.வி. படாஸ்கர் கமிட்டியை** (H.V. Pataskar) அமைத்தது.
- அக்கமிட்டி எல்லைக் கிராம மக்கள் பேசிய மொழியை அளவுகோலைக் கொண்டு எல்லையைத் தீர்மானித்தது. அதன்படி திருப்பதி ஆந்திராவுக்கும் திருத்தணி சென்னை மாகாணத்துக்கும்

கொடுக்கப்பட்டது திருத்தணி தமிழ் நாட்டின் பகுதி ஆயிற்று.

## தெற்கெல்லைப் போராட்டம்

- மார்சல் **நேசமணியின்** தலைமையில் தெற்கில் எல்லைப் போராட்டம் விறு விறுப்படைந்தது.
- 1953-ல் **பசல் அலி** மாநில மறுசீரமைப்புக் கமிஷன் அமைக்கப் பட்ட பின்னரும் போராட்டம் தொடர்ந்தது.
- காமராஜரின் பாளையங்கோட்டை சமரச முயற்சி பலனளிக்கவில்லை. 1954 ஆகஸ்டு 11-ம் தேதி மறியல் போராட்டம் துவக்கப்பட்டது.
- மாநிலங்கள் மறுசீரமைப்புக் கமிஷன் பரிந்துரையின்படி தமிழ்நாட்டின் தெற்கெல்லையில் அகஸ்தீஸ்வரம், தோவாளை, திருவிதாங்கூரிலிருந்து பிரித்துக் **குமரி மாவட்டமாக்கித்** தமிழகத்துடன் இணைக்கப்பட்டது.
- திருவிதாங்கூர் கொச்சியின் பகுதியாயிற்று.



# சுதந்திரத்திற்கு பின் தமிழக அரசியல் கட்சிகளின் ஆட்சி

## சுதந்திரத்திற்கு முன்

### இராஜாஜி

- 1937-ல் நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள 214 இடங்களில் 159 இடங்களை வென்ற காங்கிரஸ், நீதிக்கட்சியிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1937 ஜூலை 14-ம் நாள் இராஜாஜி முதல்வராக (பிரீமியர்) பதவியேற்றார்.
- 1937-ல் விற்பனை வரி அறிமுகப் படுத்தப்பட்டது.
- உலகப்போரில் இந்தியாவை உட்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து 1939-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் இராஜாஜி தலைமையிலான அமைச்சரவை பதவி விலகியது.
- இரண்டாம் உலகப் போரால் ஏற்பட்ட நெருக்கடி நிலையினால் 1939 நவம்பர் முதல் 1946 ஏப்ரல் வரை சென்னை மாகாணத்தில் கவர்னர் ஆட்சி நடைபெற்றது.

### டி.பிரகாசம்

- 1946 ஏப்ரலில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.
- 1946 ஏப்ரல் 30-ம் நாள் டி.பிரகாசம் முதலமைச்சரானார். நம்பிக்கை யில்லாத தீர்மானம் நிறைவேற்றப் பட்டதையடுத்து 1947 மார்ச் 23-ம்நாள் டி.பிரகாசம் தலைமையிலான அமைச்சரவை பதவியிழந்தது.

## சுதந்திரத்திற்கு பின்

### ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்

- 1947 மார்ச் 23 அன்றே காங்கிரஸ் கட்சியின் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பிரீமியராக (முதலமைச்சர்) பதவியேற்றார். அன்று முதல் 6, 1949 வரை இவரே முதல்வராகத் தொடர்ந்தார்.
- இந்தியா சுதந்திரம் அடைந்தபோது புனித ஜார்ஜ் கோட்டையில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைமையில் சுதந்திரத் திருநாள் கொண்டாடப்பட்டது.

இவரே சுதந்திரத் திருநாளைக் கொண்டாடிய முதலாவது தமிழக முதல்வராவார்.

- இவரது ஆட்சியில் 1949-ல் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது.
- 1949 ஏப்ரல் 6 முதல் 1950 ஜனவரி 26வரை பி.எஸ். குமாரசாமி ராஜா தலைமையிலான காங்கிரஸ் அரசு அதிகாரத்திலிருந்தது.

**இராஜாஜி**

- தமிழகத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படியான முதல் பொதுத்தேர்தல் 1952 மார்ச்-ல் நடைபெற்றது.
- மாணிக்க வேலரின் **பொதுநலக்கட்சி** (Commonweal Party) மற்றும் **உழைப்பாளர் கட்சியைச்** சேர்ந்த ராமசாமி படையாச்சி ஆகியோரது ஆதரவுடன் 1952 ஏப்ரல் 12-ல் இராஜாஜி முதலமைச்சரானார்.
- 1953 அக்டோபர் ஒன்றாம் தேதி ஆந்திர மாநிலம் உதயமானது.
- **ஆந்திர கேசரி** என்று அழைக்கப்பட்ட **டி.பிரகாசம்** ஆந்திர மாநிலத்தின் முதல் முதலமைச்சராகப் பணியாற்றினார்.
- 1953-ம் ஆண்டு இராஜாஜி கொண்டு வந்த **குலக்கல்வித் திட்டம்** பெரும் எதிர்ப்பை சந்தித்தது. இதையடுத்து 1954 ஏப்ரல் 13-ல் இராஜாஜி தமது பதவியை ராஜினாமா செய்தார்.

**காமராஜர்**

- இராஜாஜிக்கு பிறகு 1954 ஏப்ரல் 13 முதல் 1963 அக்டோபர் 2-ம் நாள் வரை காமராஜர் தமிழக முதல்வராக அரும்பணியாற்றினார்.
- 1956-ல் காமராஜர் **தமிழ்** மொழியை **ஆட்சி மொழியாக்கினார்.**
- 1958-ல் தொழிலாளர் **கூலி நிர்ணயச் சட்டம்** இயற்றப்பட்டது.
- 1955-ல் எட்டயபுரத்தில் **இலவச மதிய உணவுத் திட்டத்தை** துவக்கினார் காமராஜர்.
- 1955-ல் **விவசாய வருமான வரிச் சட்டம்** இயற்றப்பட்டது.
- 1956-ல் இயற்றப்பட்ட சென்னை குத்தகை சாகுபடியாளர்கள் (நியாய மான குத்தகை செலுத்துதல்) சட்டம், நியாயமான குத்தகையை நிர்ணயம் செய்தது.
- 1958-ல் **தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம்** இயற்றப்பட்டது.
- 1961-ல் சென்னை **நில சீர்திருத்தச் சட்டம்** இயற்றப்பட்டது. இது நில உச்ச வரம்பை 30 ஏக்கராக நிர்ணயித்தது.
- 1961 பிப்ரவரி 24-ல் சட்டப்பேரவையில் அரசாங்க நிர்வாக கடிதப் போக்குவரத்தில் மெட்ராஸ் ஸ்டேட் என்பதை இனி **தமிழ்நாடு** என்று எழுதப்படும்என அரசு அறிவித்தது.
- 1963-ல் காமராஜர் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்துவற்காக **“காமராஜர்**

**திட்டம்" (K-Plan or Kamaraj Plan)** கொண்டு வந்தார்.

- அத்திட்டப்படி காமராஜர் தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சிப் பணிக்கு திரும்பினார்.

## பக்தவத்சலம்

- காமராஜருக்குப் பிறகு தமிழக முதலமைச்சராக பதவியேற்றவர் எம்.பக்தவச்சலம் ஆவார். இவர் 1963 அக்டோபர் 2 முதல் 1967 மார்ச் 6 வரை முதல்வராக பதவி வகித்தார்.
- இவரே காங்கிரஸ் கட்சியின் கடைசி தமிழக முதலமைச்சராவார்.
- இவரது ஆட்சிக் காலத்தில் **இந்தி எதிர்ப்புப் போராட்டம்** தமிழகம் முழுவதும் பரவியது.

## இந்தி எதிர்ப்புப் போராட்டம்

### சுதந்திரத்திற்கு முன்பு இந்தி எதிர்ப்பு

- பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்தியாவில், ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் நோக்கத்துடன் காங்கிரஸ் இயக்கம் இந்தி மொழியை அறிமுகப்படுத்தியது.
- 1918 மற்றும் 1922-ம் ஆண்டுகளில் **சென்னை** மாகாணத்தில் இந்தியைப் பரப்புவதற்காக 40 மையங்கள் தொடங்கப்பட்டன. அதற்கு நீதிக் கட்சியின் ஆதரவும் கிடைத்தது.
- சென்னை மாகாண மக்களின் மேல் பிராமணர்களின் பண்பாட்டு ஆதிக்கமே, மீண்டும் இந்தி வடிவில் வருகிறது என்று **பெரியார்** கூறினார். இதனால் தமிழ் மக்களின் முன்னேற்றம் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சியும் குன்றும் என்று கூறினார்.
- 1930-ல் **நன்னிலத்தில்** நடைபெற்ற சுயமரியாதை நாட்டில் **இந்தி எதிர்ப்பு தீர்மானம்** நிறைவேற்றப்பட்டது.
- 1936-ல் **பொப்பிலி ராஜா** தலைமையிலான நீதிக்கட்சி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியை இரண்டாவது மொழியாக பயிற்றுவிக்க ஆணை பிறப்பித்தது.
- முதல் முறையாக இந்தி எதிர்ப்பு போராட்டம் 1937-ம் ஆண்டு நடத்தப் பட்டது.
- இராஜாஜி தமிழக முதல்வராக பதவிக்கு வந்த ஒரு மாத காலத்திலேயே 1937 ஆகஸ்ட் 11 அன்று பள்ளிகளில் **இந்தி கட்டாய பாடமாக்கப்படும்** என்பதை அறிவித்தார்.
- இராஜாஜியின் இந்த அறிவிப்பை எதிர்த்து முதன் முதலாக மறைமலை அடிகள், பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் ஆகியோர் திருச்சியில் **முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டை** நடத்தினர்.
- சென்னையில் நீதிக்கட்சியைச் சேர்ந்த ஏ.டி. பன்னீர் செல்வம் மற்றும் ஈ.வெ.ரா பெரியார் தலைமையில் போராட்டங்கள் நடைபெற்றன,

- இந்த எதிர்ப்புகளுக்கிடையே இந்தியை கட்டாய பாடமாக்கும் அரசாணையை இராஜாஜி 1938 ஏப்ரல் 21 அன்று வெளியிட்டார்.
- இராஜாஜி மற்றும் இந்திக்கு எதிராக மாநில அளிவில் எதிர்ப்பு கிளம்பியது. 1938 டிசம்பர் 3 இந்தி எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்பட்டது.
- 1939-ல் இந்தி எதிர்ப்பு பேரணியில் பங்கேற்றதால் கைது செய்யப்பட்ட தாளமுத்து மற்றும் நடராஜன் ஆகியோர் காவலில் இருக்கும்போதே இறந்தனர். பின்னர் இவர்கள் மொழிப்போர் தியாகிகள் என்று அழைக்கப்பட்டனர்.
- இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசு 1939-ம் ஆண்டு பதவி விலகியது. அதைத் தொடர்ந்து சென்னை மாகாண ஆளுநர் எர்ஸ்கின் பிரபு 1940 பிப்ரவரியில் இந்தக் கட்டாய இந்திக் கல்வியை விலக்கி அதை விருப்பப் பாடமாக்கினார்.

**சுதந்திரத்திற்கு பிறகு இந்தி எதிர்ப்பு**

- சுதந்திரத்திற்கு பிறகு ஓ.பி.ராமசாமி ரெட்டியார் தலைமையிலான அரசு சென்னை மாகாணத்தில் மீண்டும் இந்தியை கட்டாயப் பாடமாக்கியது. இதனால் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவங்கியது.
- 1948 நவம்பர் 2-ல் அண்ணாவைத் தளபதியாகக் கொண்டு திராவிடர் கழகம் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை தொடங்கியது.
- 1950 மே 2-ல் அப்போதைய கல்வி அமைச்சர் மாதவராவ் ஒன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை இரண்டாம் மொழியாக ஆங்கிலமும்/ மூன்றாம் மொழியாக இந்தியும்கட்டாய பாடம் என்ற உத்தரவை பிறப்பித்தார்.
- 1950 மே 10-ம் நாள் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது.
- பின்னர் 1950, ஜூலை 18-ல் அரசு தனது கட்டாய இந்தி திணிப்பை அகற்றியது.
- 1952 முதல் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து மொழிப் போராட்டத்தை துவங்கின. முதற்கட்டமாக பெயர் பலகை யிலுள்ள இந்தி எழுத்துக்களை தார்பூசி அழிக்கும் போராட்டம் ஆரம்பமானது.
- 1963-ம் ஆண்டு ஏப்ரல் 13அன்று இந்திய ஆட்சி மொழிச் சட்டத்தை அப்போதைய உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி தாக்கல் செய்தார்.
- இச்சட்டத்தின்படி 1965 ஜனவரி 26-ம் நாள் இந்தியாவில் இந்தி ஆட்சி மொழி யாகும். இந்தி மொழிக்கு துணை மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப் படும் என்று அறிவிக்கப் பட்டது.
- இச்சட்டம் இந்தி பேசாத மக்களுக்கு இழைத்த அநீதி என்று கருதி இதை எதிர்த்து போராட்டம் நடைபெற்றது.
- 1967 மார்ச் 6-ல் அண்ணாதுரை தமிழக முதல்வரானார்.

- 1968 ஜனவரி 23 -ல் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளே தமிழகத்தின் ஆட்சி மொழியாக இருக்கும் என்று இரு மொழி கொள்கை திட்டத்தை அறிமுகம் செய்தவுடன் நீண்ட கால மாக நடைபெற்று வந்த இந்தி எதிர்ப்பு போராட்டம் முடிவடைந்துது.

## தி.மு.க. ஆட்சியல் தமிழகம்

- 1944-ம் ஆண்டு தந்தை பெரியாரால் திராவிடர் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.
- பெரியாருக்கும் அண்ணாதுரைக்கும் இடையே தோன்றிய கருத்து வேறுபாடு காரணமாக, அண்ணாதுரை திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 1949-ம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தை உருவாக்கினார்.
- தி.மு.க. என்றழைக்கப்படும் திராவிட முன்னேற்றக் கழகம் **1952**-ம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் பங்கேற்கவில்லை.
- தி.மு.க. **1967** தேர்தலில் **137** இடங்களை வென்று முதன் முறையாக ஆட்சியைப் பிடித்தது.
- **1967** பிப்ரவரி **6**-ம் நாள் அக்கட்சியின் பொதுச் செயலாளர் அண்ணா தமிழ் நாட்டின் முதலமைச்சரானார்.
- இவரது ஆட்சியில் **1969**-ம் ஆண்டு ஜனவரி **14** அன்று சென்னை மாநிலம் **“தமிழ்நாடு”** என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- **1968** ஜனவரி **23**-ல் தமிழக அரசின் மொழிக் கொள்கையாக “தமிழ், ஆங்கிலம்“ என்ற இருமொழி திட்டத்தை அறிவித்தார் அண்ணா.
- **1968** ஜனவரி **3**-ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.
- அண்ணா அறிமுகப்படுத்திய **சுய மரியாதைத் திருமண பாதுகாப்புச் சட்டம் 1968,** ஜனவரி **20** முதல் நடைமுறைக்கு வந்தது.
- **1969**-ல் அண்ணா இறந்ததும் நாவலர் நெடுஞ்செழியன் தற்காலிக முதல்வராகப் பணியாற்றினார்.
- **1969** பிப்ரவரி **10**-ல் **கலைஞர் மு.கருணாநிதி** தமிழக முதல்வராகப் பதவியேற்றார். **1971** ஜனவரி **31**அன்று ஆட்சி கலைக்கப்படும் வரை அவர் அப்பதவியில் தொடர்ந்தார்.
- **1972** அக்டோபர் 14-ல் கட்சிப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து வெளியேறி அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தை உருவாக்கினார். இது தி.மு.கவில் ஏற்பட்ட மிகப்பெரிய பிளவாகக் கருதப்பட்டது.
- கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் தமிழ் வளர்ச்சிக்காக தனியாக அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டது.
- தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய **“நீராடுங் கடலுடுத்த”** என்ற பாடல் அறிவிக்கப்பட்டது.

- "ஸ்டேட் எக்ஸ்பிரஸ்" என்ற பெயரில் இயக்கப்பட்ட பேருந்துகளுக்கு **"தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம்"** என பெயர் மாற்றம் செய்யப் பட்டது.
- 1969 ஜுன் 13-ல் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டம் இயற்றப்பட்டது.
- **1970-ல் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்** தொடங்கப்பட்டது.
- 1970-ல் **உலக தமிழாராய்ச்சி நிறுவனம்** நிறுவப்பட்டது.
- 1971-ல் கண்ணொளி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.
- 1973-ல் இலவச சைச்சிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் துவக்கம்.
- 1974-ல் **ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டம்** துவக்கம்
- 1974-ல் அகர முதலியை பல தொகுதிகளாக வெளியிடுவதற்கான "அகர முதலி திட்ட இயக்கத்தை" நிறுவினார் கருணாநிதி.
- 1975-ல் அனாதை சிறுவர் மற்றும் மகளிர் மறுவாழ்வுத் திட்டம் செயல் படுத்தப்பட்டது.
- 1969 அக்டோபர் 2 அன்று மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் பற்றி ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி **டாக்டர் பி.வி. ராஜமன்னார்** தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- 1974 ஏப்ரல் 20-ல் **"மாநில சுயாட்சி"** கோரும் தீர்மானம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.
- **1976** முதல் **1989** வரை அ.தி.மு.க. ஆளுங்கட்சியாகவும், தி.மு.க. எதிர்க் கட்சியாகவும் இருந்தது.
- 1989-ல் டாகடர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் துவங்கப் பட்டது.
- மக்கள் நலன்களுக்கான குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகியவை உருவாக்கப் பட்டன.
- **1989** டிசம்பர் **29-ல் பெண்களுக்கு சொத்துரிமை** வழங்கும் சட்டம் இயற்றப்பட்டது.
- **1993** அக்டோபர் **11**-ல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வை. கோபாலசாமி (வைகோ) கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இதனால் தி.மு.க.வில் இரண்டாவது முறையாக பிளவு ஏற்பட்டது.
- **1996**-ல் மெட்ராஸ் என்பது **சென்னை** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- **1999**-ல் தமிழகத்தில் முதல் **உழவர் சந்தை** மதுரையில் துவக்கப்பட்டது.
- **2006** ஜுன் **3**-ம் தேதி "2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை" துவங்கினார் கருணாநிதி.
- **2006**-ல் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜுலை **15 "கல்வி**

**வளர்ச்சி நாளாக"** அறிவிக்கப்பட்டது.

- **2006** நவம்பர் **11**-ல் "வேலையில்லா இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்" துவக்கம்.
- 2006 ஜனவரி 15 அன்று இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது.
- தமிழகத்தில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கைகான நுழைவுத் தேர்வை ரத்து செய்வதற்காக 2006 ஜூலை 7-ல் அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் அனந்த் கிருஷ்ணன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- இக்குழுவின் பரிந்துரைப்படி தமிழகத்தில் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது.
- 2007 ஜனவரி 1 முதல் தமிழ்நாட்டில் மதிப்பு கூட்டு வரி (VAT) அமலுக்கு வந்தது.
- 2008 செப்டம்பரில் இலவச அவசர கால மருத்துவ ஊர்தி திட்டம் "108" ஆரம்பிக்கப்பட்டது.
- பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பு முறைப் படுத்துதல்) சட்டம் 2009-ம் ஆண்டு இயற்றப்பட்டது.
- 2010 மார்ச் 13-ல் புதிய சட்டமன்ற வளாகம் திறக்கப்பட்டது.
- 2010-ம் ஆண்டு "தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக்கல்வி முறை சட்டம்" இயற்றப்பட்டது.
- 2010-ஜூன் 23 முதல் 27 வரை கோவை மாநகரில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற்றது.

### அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம்

**எம்.ஜி.ராமச்சந்திரன்**

- 1962-ல் மேலவை உறுப்பினர்.
- 1967-ல் பரங்கிமலைத் தொகுதியில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பின ரானார்.
- 1972 அக்டோபர் 13-ல் தி.மு.க. விலிருந்து வெளியேற்றம்
- 1977 முதல் 1987 வரை தமிழக முதல் வராக ஆட்சி புரிந்தார்.
- **புரட்சித் தலைவர்** என்றும் **மக்கள் தலைவர்** என்றும் போற்றப்படும் எம்.ஜி.ஆர். (மருதூர் கோபாலமேனன் ராமச்சந்திரன்) 1972-ம் ஆண்டு அக்டோபர் 18-ம் நாள் "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற கட்சியைத் தோற்றுவித்தார்.
- பின்னர் அக்கட்சியின் பெயரை "அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என மாற்றம் செய்தார்.
- **1973**-ல் இக்கட்சி முதன் முதலாக **திண்டுக்கல்** பாராளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

- 1974-ல் நடைபெற்ற பாண்டிச்சேரி சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைந்தது.
- 1977-ல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. 131 இடங்களைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்தது.
- **1977** ஜுன் **30**-ல் **எம்.ஜி.ஆர்.** தமிழக முதல்வராகப் பதவியேற்றார். அது முதல் **1987** வரை தமிழக முதல் வராக ஆட்சிப்புரிந்தார்.
- **1978**-ல் தமிழகத்தில் **"10+2+3"** எனும் கல்விமுறை அமலுக்கு வந்தது. சென்னையில் **"அண்ணா பல்கலைக் கழகம்"** துவங்கப்பட்டது.
- **1980**-இல் பரம்பரையாக இருந்த கிராம ஊழிய முறை ஒழிக்கப்பட்டது. கர்ணம், கிராம முன்சீப் போன்ற பதவிகளும் ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக **"கிராம நிர்வாக அதிகாரிகள்"** நியமிக்கப் பட்டனர்.
- **1980**-ல் நடைபெற்ற **7**வது சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வரானானர் எம்.ஜி.ஆர்.
- **1981**-ல் மதுரையில் **"ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு"** நடை பெற்றது.
- **1981** செப்டம்பர் 15-ல் "தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம்" உருவாக்கப்பட்டது.
- **1982**-ல் கோவையில் பாரதியார் பல் கலைக்கழகமும், கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும் தொடங்கப்பட்டது.
- **1982**-ல் எம்.ஜி.ஆர் **"இலவச சத்துணவு திட்டத்தை"** துவக்கினார்.
- **1983**-கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்காக ஆந்திர அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார் எம்.ஜி.ஆர்.
- **1983**-ல் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவு திறக்கப் பட்டது.
- **1983**-ல் சிறு விவசாயிகளுக்கு **இலவச மின்சாரம் வழங்கும் திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது.
- **1984**-ல் எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் மருத்துவமனையில்சிகிச்சைப்பெற்றுக் கொண்டிருக்கும் போது தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் அவர் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று மீண்டும் தமிழக முதல்ரானார்.
- **1987** டிசம்பர் **24**-ம் தேதி எம்.ஜி.ஆர். உயிர் நீத்தார். இவருக்குப் பிறகு இவரது மனைவி **ஜானகி அம்மையார்** 1988 ஜனவரி **7** முதல் **30** வரை தமிழக முதல்வராக பதவி வகித்தார். இவரே தமிழகத்தின் முதலாவது பெண் முதலமைச்சராவார்.
- அ.இ.அ.தி.மு.கவில் **1988**-ல் பிளவு ஏற்பட்டு மீண்டும் **1989**-ல் ஒன்றாக இணைந்தது.

## டாக்டர் ஜெ.ஜெயலலிதா ஆட்சியில் தமிழகம்

- 1991 ஜூன் மாதத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் அ.தி.முக. வெற்றி பெற்றது.
- **1991** ஜுன் 24 அன்று **செல்வி. ஜெ. ஜெயலலிதா** தமிழக முதல்வராக பதவியேற்றார்.
- இவரே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட **தமிழகத்தின் முதலாவது பெண் முதலமைச்சராவார்**. பதவியேற்ற அன்று முதன் முதலாக தமிழகத்தில் மதுக்கடைகளை மூடுவதற்கான உத்தரவில் கையெழுத்திட்டார்.
- **1992**-ல் **அனைத்து மகளிர் காவல் நிலையம்** தொடக்கம்.
- **1992**-ல் பெண் குழந்தைகளை பாது காப்பதற்கான **தொட்டில் குழந்தை திட்டம்** துவங்கப்பட்டது.
- **1994**-ல் **மண்டல் கமிஷன்** பரிந்துரைகள் அமலுக்கு வந்தன.
- **1995**-ல் **எட்டாவது உலகத் தமிழ் மாநாடு** தஞ்சையில் நடைபெற்றது.
- 1996 சட்டமன்ற தேர்தலில் தோல்வி யடைந்தது.
- மே, 2001-ல் நடைபெற்ற 12-வது சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று, மே 15 அன்று ஜெயலலிதா இரண்டாவது முறையாக தமிழக முதலமைச்சராக பதவியேற்றார்.
- டான்சி நில வழக்கில் ஜெயலலிதாவுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டதால் அவர் முதல்வராக பதவியேற்றது செல்லாது என உச்ச நீதிமன்றம் செப்டம்பர் 21, 2001 இல் தீர்ப்பளித்தது.
- இதனால் ஜெயலலிதா பதவி விலக ஓ. பன்னீர் செல்வம் தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- இதற்கிடையில் டான்சி வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற டிசம்பர் 4, 2001-ல் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து தீர்ப்பளித்தது.
- அதன் பிறகு ஜெயலலிதா 2002 பிப்ரவரி21-ல்ஆண்டிப்பட்டிதொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- 2002, மார்ச் 2-ல் ஜெயலலிதா மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- 2002, மார்ச் 23-ல் கோயில்களின் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டது. 2002-ல் "அனைவருக்கும் கல்வித் திட்டம்" தொடங்கப்பட்டது. ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் ஒற்றை சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
- தமிழகத்தின் லாட்டரி சீட்டுகள் தடை செய்யப்பட்டன.

- பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் புகையிலைப் பொருட்களின் விற்பனை தடை செய்யப்பட்டது.
- 2004 அக்டோபர் 18-ல் கூடுதல் டி.ஜி.பி. விஜயகுமார் தலைமையிலான அதிரடிப்படையினர் "பட்டுப்பூச்சிக் கூடு ஆபரேஷன்"திட்டப்படிசந்தனக்கடத்தல் வீரப்பனைச் சுட்டுக் கொன்றனர்.
- 2006 சட்டமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. தோல்வியடைந்தது.
- 2011-ல் நடைபெற்ற 14வது சட்டமன்ற தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. பெரும் வெற்றி பெற்றது. ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜெயலலிதா 2011, மே 15 அன்று நான்காவது முறையாக தமிழக முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்.
- முதல்வராக பதவியேற்றதும் 6 இலவச திட்டங்களுக்கு கையொப்பமிட்டார்.
- இலவச அரிசி வழங்கும் திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், இலவச மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம், இலவச கால் நடைகள் வழங்கும் திட்டம், மாணவர் களுக்கு இலவச மடிகணினி வழங்கும் திட்டம், முதியோர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் தற்போது செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழக அரசியல் கட்சிகள்

| கட்சிப் பெயர் | உருவாக்கப்பட்ட ஆண்டு | தோற்றுவித்தவர்கள் |
|---|---|---|
| நீதிக்கட்சி | 1916 | டி.எம்.நாயர், தியாகராஜ செட்டியார் |
| திராவிடர் கழகம் | 1944 | தந்தை பெரியார் |
| தமிழரசுக் கழகம் | 1946 | ம.பொ. சிவஞானம் |
| திராவிட முன்னேற்றக்கழகம் | 1949 | சி.என். அண்ணாதுரை |
| தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி | 1951 | எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி |
| காமன்வீல் கட்சி (Common weal Party) | 1951 | எம்.ஏ. மாணிக்கவேலு நாயக்கர் |

| | | |
|---|---|---|
| சுதந்திரக் கட்சி | 1959 | இராஜாஜி மற்றும் என்.ஜி.ரங்கா |
| தமிழ் தேசியக்கட்சி | 1961 | ஈ.வெ.கே. சம்பத் |
| அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் | 1972 | எம்.ஜி.ராமச்சந்திரன் |
| விடுதலை சிறுத்தைகள் | 1972 | - |
| பாட்டாளி மக்கள் கட்சி | 1990 | டாக்டர். ராமதாஸ் |
| மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் | 1994 | வை.கோபால்சாமி (வைகோ) |



# சுதந்திரத்திற்கு பின் தமிழக ஆட்சியாளர்களின் பட்டியல்

### தமிழக ஆளுநர்கள் பட்டியல்

| ஆளுநர்களின் பெயர் | பதவிக்காலம் |
|---|---|
| திரு.வெலிங்கடன் பிரபு | 1919-1924 |
| திரு. கோஷன் பிரபு | 1924-1929 |
| திரு. சர். பிரடெரிக் ஸ்டான்லி | 1929-1934 |
| திரு.எர்ஸ்கீன் பிரபு | 1934-1940 |
| திரு. ஆர்தர் ஆஸ்வால்ட் | 1940-1943 |
| திரு.சர் ஆர்ச்சிபால்டு எட்வர்ட் நை | 1946-1948 |
| திரு. கிருஷ்ண குமார சிங்ஜி பவசிங்ஜி | 1948-1952 |
| திரு. ஸ்ரீபிரகாசா | 1952-1956 |
| திரு.ஏ.ஜெ.ஜான் | 1956-1957 |
| திரு.விஷ்னுராம் மோத்தி | 1958-1964 |
| திரு.ஜே.வி.பகதூர் | 1964-1966 |
| திரு.சர்தார் உஜ்ஜல்சிங் | 1966-1971 |
| திரு.கே. கே.ஷா | 1971-1976 |
| திரு. மோகன்லால் சுகாதியா | 1976-1977 |
| திரு.பிரபுதாஸ் பட்வாரி | 1977-1980 |
| திரு. சாதிக் அலி | 1980-1982 |
| திரு. சுந்தர்லால் குரானா | 1982-1988 |
| திரு. பி.சி.அலெக்சாண்டர் | 1988-1990 |
| திரு.சுர்ஜித்சிங் பர்னாலா | 1990-1991 |
| திரு. பீஷ்ம நாராயண் சிங் | 1991-1993 |
| திரு.எம். சென்னா ரெட்டி | 1993-1996 |
| திரு. கிருஷ்ணகாந்த் (கூ.பொ) | 1996-1997 |
| செல்வி. பாத்திமா பீவி | 1997-2001 |
| திரு.சி.ராங்கராஜன் | 2001-2002 |
| திரு. ராம மோகன் ராவ் | 2002-2004 |
| திரு. சுர்ஜித்சிங் பர்னலா | 2004-2011 |
| திரு.கொனியேட்டி ரோசையா | 2016-2017 வரை |
| திரு.வித்யசாகர் ராவ் (கூ.பொ) | 2016-2017 |
| திரு.பன்வாரிலால் புரோகித் | 06.10.2017 முதல் தற்போது வரை |

## தமிழக முதலமைச்சர் பட்டியல்

| முதலமைச்சர் | பதவிக்காலம் |
|---|---|
| 1. திரு.அ.சுப்புராயலு ரெட்டியார் | 17 டிசம்பர் 1920 -11 ஜுலை 1921 |
| 2. திரு.பனகல் ராஜா | 19 நவம்பர் 1921 - 3 டிசம்பர் 1926 |
| 3. திரு.பி. சுப்புராயன் | 4 டிசம்பர் 1926-27 அக்டோபர் 1930-4 நவம்பர் 1932 |
| 4.திரு. பி. முனுசாமி நாயுடு | 27 அக்டோபர் 1930 - 4 நவம்பர் 1932 |
| 5. திரு.பொப்பிலி ராஜா (ராம கிருஷ்ண ரங்காராவ்) | 5 நவம்பர் 1932 - 4 ஏப்ரல் 1936 |
| 6. திரு. பி.டி. ராஜன் | ஏப்ரல் 1936 ஆகஸ்ட் 1936 |
| 7. திரு. பொப்பிலி ராஜா | ஆகஸ்ட் 1936 - ஏப்ரல் 1937 |
| 8. திரு.கே. வெங்கட ரெட்டி நாயுடு | ஏப்ரல் 1937 - 14 ஜுலை 1937 |
| 9. திரு. இராஜாஜி கவர்னர் ஆட்சி | 1937 - 1939 1939 - 1946 |
| 10. திரு.டி.பிரகாசம் | 1946 - 1947 |
| 11. திரு. ஓ.பி. ராமசாமி ரெட்டியார் | 1947 - 1949 |
| 12. திரு. பி.எஸ். கும ாரசாமி ராஜா | 1949-1952 |
| 13. திரு.சி. இராஜாஜி | 1952-1954 |
| 14. திரு. கு. காமராஜர் | 1954-1957 |
| 15. திரு. கு. காமராஜ் | 1957 - 1962 |
| 16. திரு. கு. காமராஜ் | 1962 - 1963 |
| 17. திரு.எம். பக்தவத்சலம் | 1963-1967 |
| 18. திரு. சி.என் அண்ணாதுரை | 1967-1969 |
| 19. திரு. இரா. நெடுஞ் செழியன் (தற்காலிகம்) | 1969 (பிப்ரவரி 3-10) |
| 20. திரு. மு. கருணாநிதி கவர்னர் ஆட்சி | 1969-1971 ஜனவரி 31,1976 பிப்ரவரி 17,1977 |
| 21. திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் கவர்னர் ஆட்சி | 1977-1980 |
| 22. திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் | 1980-1984 |
| 23. திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் | 1985-1987 |
| 24. திரு.இரா. நெடுஞ்செழியன் (தற்காலிகம்) | டிசம்பர் 24, 1987 - ஜனவரி 7, 1988 |
| 25. திருமதி. ஜானகி இராமச்சந்திரன் கவர்னர் ஆட்சி | 1988 (ஜனவரி 7-30) ஜனவரி30, |
| 26. திரு.மு.கருணாநிதி கவர்னர் ஆட்சி | 1989-1991 ஜனவரி 30,1991 - ஜுன் 24, 1991 |
| 27. செல்வி. ஜெ.ஜெயலலிதா | 1991-1996 |

| | |
|---|---|
| 28. திரு.மு.கருணாநிதி | 1996-1996 |
| 29. செல்வி. ஜெ.ஜெயலலிதா | 2001-2001 |
| 30. திரு.ஓ.பன்னீர் செல்வம் | 2001 - 2002 |
| 31. செல்வி. ஜெ.ஜெயலலிதா | 2002-2006 |
| 32. திரு.மு.கருணாநிதி | 2006-2011 |
| 33.செல்வி. ஜெ.ஜெயலலிதா | 2011 -2014 |
| 34.திரு.ஓ.பன்னீர்செல் வம் | 2014-2015 |
| 35.செல்வி ஜெ.ஜெயலலிதா | 2015-2016 |
| 36.திரு.ஓ.பன்னீர்செல் வம் | 2016-2017 |
| 37.திரு.எடப்பாடி பழனிச்சாமி | 2017 முதல் தற்போது வரை |

- தமிழ்நாட்டின் முதலமைச்சர் – திரு.சுப்புராயலு ரெட்டியார்.
- இந்தியா சுதந்திரம் அடைந்தபோது தமிழக முதல்வராக இருந்தவர் – திரு.ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்
- சுதந்திர இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் முடிந்த பிறகு தமிழக முதல் வரானவர் – திரு. இராஜாஜி
- தமிழ்நாட்டின் முதல் பெண் முதலமைச்சர் – திருமதி ஜானகி ராமச்சந்திரன்
- தமிழகத்தில் மிக நீண்டகாலம் (தொடர்ந்து) முதல்வராக இருந்தவர் – எம்.ஜி.ராமச்சந்திரன் – ஜுன் 30,1977 முதல் டிசம்பர் 24, 1987 வரை. (10 ஆண்டுகள் 5 மாதங்கள் 25 நாட்கள்) திருமதி. ஜானகி
- மிகக்குறுகிய காலம் முதல்வராக இருந்தவர். (24 நாட்கள்)
- தமிழகத்தில் மிக அதிக முறை முதல்வர் பதவி வகித்தவர் – திரு. மு. கருணாநிதி. 5 முறை, 10 பிப்ரவரி 1969–4 ஜனவரி 1971 – 31 ஜனவரி 1976–27 ஜனவரி 1989 – 30 ஜனவரி 1991–13 மே 1996 – 13 மே 2001–13 மே 2006 – 13 மே 2011

## சுதந்திரத்திற்கு பின் தமிழக சட்டசபை

| ஆண்டு | சட்டமன்றம் | வெற்ற பெற்ற கட்சி / கூட்டணி | முதலமைச்சர் | சுபாநாயகர் |
|---|---|---|---|---|
| 1952 | முதலாவது சட்டமன்றம் | இந்திய தேசிய காங்கிரஸ் | சி.ராஜகோபாலச்சாரி கே.காமராஜர் | ஜே. சிவசண்முகம் பிள்ளை |
| 1957 | 2–ஆவது | இ.தே.கா. | கே.காமராஜர் | என்.கோபாலமேனன் யு.கிருஷ்ணராவ் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1962 | 3-ஆவது | இ.தே.கா. | கே.காமராஜர்<br>எம்.பக்தவச்சலம் | எஸ். செல்லபாண்டியன் |
| 1967 | 4-ஆவது | தி.மு.க | சி.என். அண்ணாதுரை<br>மு.கருணாநிதி | சி.பி. ஆதித்தனார்<br>கே.ஏ. மதியழகன் |
| 1971 | 5-ஆவது | தி.மு.க | மு.கருணாநிதி | பி.சீனிவாசன் புலவர் கே.கோவிந்தன் |
| 1977 | 6-ஆவது | அ.இ.அ.தி.மு.க. | எம்.ஜி.ராமச்சந்திரன் | முனு ஆதி |
| 1980 | 7-ஆவது | அ.இ.அ.தி.மு.க. | எம்.ஜி.ராமச்சந்திரன் | முனு ஆதி<br>கே. ராஜாராம் |
| 1984 | 8-ஆவது | அ.இ.அ.தி.மு.க. | எம்.ஜி.ராமச்சந்திரன்<br>ஜானகி ராமச்சந்திரன் | கே. ராஜாராம்<br>பி.எச். பாண்டியன் |
| 1989 | 9-ஆவது | தி.மு.க. | மு.கருணாநிதி | மு. தமிழ்க் குடிமகன் |
| 1991 | 10-ஆவது | அ.இ.அ.தி.மு.க. | ஜெ.ஜெயலலிதா | ரா. முத்தையா |
| 1996 | 11-ஆவது | தி.மு.க. | மு.கருணாநிதி | பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் |
| 2001 | 12-ஆவது | அ.இ.அ.தி.மு.க. | ஓ. பன்னீர் செல்வம்<br>ஜெ.ஜெயலலிதா | கே.காளிமுத்து |
| 2006 | 13-ஆவது | தி.மு.க. | மு.கருணாநிதி | இரா. ஆவுடையப்பன் |
| 2011 | 14-ஆவது | அ.இ.அ.தி.மு.க. | ஜெ.ஜெயலலிதா | பி. தனபால் |
| 2015 | 15-ஆவது | அ.இ.அ.தி.மு.க. | ஜெ.ஜெயலலிதா<br>ஓ. பன்னீர் செல்வம்<br>எடப்பாடி. பழனிச்சாமி | பி. தனபால் |

## சட்டப்பேரவை தலைவர் மற்றும் துணைத் தலைவர்

| பெயர் | தொடக்கம் | முடிவு | கட்சி | துணைத் தலைவர் |
|---|---|---|---|---|
| ஜெ. சிவசண்முகம் பிள்ளை | 6, மே 1952 | 16 ஆகஸ்ட் 1955 | காங்கிரஸ் | பக்தவத்சலு நாயுடு |
| என்.கோபால மேனன் | 2, செப்டம்பர் 1955 | 1 நவம்பர் 1956 | காங்கிரஸ் | பக்தவத்சலு நாயுடு |
| யு. கிருஷ்ணா ராவ் | 30 ஏப்ரல் 1957 | 3 ஆகஸ்ட் 1961 | காங்கிரஸ் | பக்தவத்சலு நாயுடு |

| | | | | |
|---|---|---|---|---|
| எஸ். செல்ல பாண்டியன் | 31 மார்ச் 1962 | 14 மார்ச் 1967 | காங்கிரஸ் | கே. பார்த்தசாதி |
| சி.பா. ஆதித்தியன் | 17 ம ார்ச்1967 | 12 ஆகஸ்ட் 1969 | தி.மு.க. | புலவர் கோவிந்தன் |
| புலவர் கே. கோவிந்தன் | 22 பிப்ரவரி 1969 | 14 மார்ச் 1971 | தி.மு.க. | ஜி.ஆர். எட்டமன்டு |
| பெ.சீனிவாசன் (தற்காலிக தலைவர்) | 2 டிசம்பர் 1972 | 3 ஆகஸ்ட் 1973 | தி.மு.க. | |
| புலவர் கே. கோவிந்தன் | 3 ஆகஸ்ட் 1973 | 3 ஜூலை 1977 | தி.மு.க. | என். கணபதி |
| முனு ஆதி | 6 ஜூலை 1977 | 18 ஜூன் 1980 | அ.தி.மு.க. | சு.திருநாவுக்கரசர் |
| கே.ராஜாராம் | 21 ஜூன் 1980 | 24 பிப்ரவரி 1985 | அ.தி.மு.க. | பால் ஹெக்டர் பாண்டியன் |
| பி.ஹெச். பாண்டியன் | 27 பிப்ரவரி 1985 | 5 பிப்ரவரி 1989 | அ.தி.மு.க. | வி.பி. பாலசுப்ர மணியன் |
| மு.தமிழ்க்குடிமகன் | 8 பிப்ரவரி 1989 | 30 ஜூன் 1991 | தி.மு.க. | வி.பி. துரைசாமி |
| பி.டிஆர். பழனிவேல் ராஜன் | 23 மே 1996 | 21 மே 2001 | தி.மு.க. | பரிதி இளம் வழுதி |
| கா. காளிமுத்து | 24 மே 2001 | 1 பிப்ரவரி 2006 | அ.தி.மு.க. | எ. அருணாச்சலம் |
| இரா. ஆவுடையப்பன் | 19 மே 2006 | 15 மே 2011 | தி.மு.க. | வி.பி. துரைசாமி |
| டி.ஜெயக்குமார் | 27 மே 2011 | 29 செப் 2012 | அ.தி.மு.க. | தனபால் |
| பி.தனபால் | 10 அக் 2012 | - | அ.தி.மு.க. | பொள்ளாச்சி ஜெயராமன் |

## தமிழக சட்டப்பேரவை நடைபெற்ற இடங்கள்

| காலம் | இடம் |
|---|---|
| 1921 – 1937 வரை | கவுன்சில் சேம்பர்ஸ், புனித ஜார்ஜ் கோட்டை |
| ஜூலை 14, 1937 – டிசம்பர் 21, 1938 | சென்னை பல்கலைக் கழக செனட் இல்லம், சேப்பாக்கம் |
| ஜனவரி 27, 1938 – அக்டோபர் 26, 1939 | இராஜாஜி மன்றம் (Banqueting Hall) ஓமந்தூரார் அரசினர் தோட்டம் |
| மே 24, 1946 – மார்ச் 27, 1952 | கவுன்சில் சேம்பர்ஸ், புனித ஜார்ஜ் கோட்டை |
| மே 3, 1952 – டிசம்பர் 27, 1956 | கலைவானர் அரங்கம், ஓமந்தூரார் அரசினா; தோட்டம் |
| ஏப்ரல் 29, 1957 – மார்ச் 30, 1959 | சட்டமன்ற வளாகம் புனித ஜார்ஜ் கோட்டை |
| ஏப்ரல் 20–30, 1959 | அரன்மூர் மாளிகை, உதகமண்டலம் |
| ஆகஸ்ட் 31, 1959 – ஜனவரி 11, 2010 | சட்டமன்ற வளாகம் புனித ஜார்ஜ் கோட்டை |
| மார்ச் 16. 2010 – மே 15, 2011 | புதிய சட்டமன்ற வளாகம், ஓமந்தூரர் அரசினர் தோட்டம் |
| மே 16, 2011 முதல் | சட்டமன்ற வளாகம் புனித ஜார்ஜ் கோட்டை |

### தமிழக அரசு இடஒதுக்கீடு

69% இட ஒதுக்கீடு வழங்கியுள்ள மாநிலம் – தமிழ்நாடு

- பட்டியல் வகுப்பினர் (SC) - 18%
- பழங்குடியினர் (ST) - 1%
- மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 20%
- இஸ்லாமியர் - 3.5%
- பிற்படுத்தப்பட்டோர் - 27.5%

69 %

### சுதந்திரத்திற்கு பின் தமிழக சட்டசபை

**தமிழக சட்ட மேலவை**

- சட்டமேலவை **"விதான் பரிஷத்"** எனப்படுகிறது.
- சட்ட மேலவை ஓர் நிரந்தர அமைப்பு ஆகும். இதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் **6** ஆண்டுகள் ஆகும்.
- ஒவ்வொரு இரண்டு ஆண்டு முடிவில், இதன் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்கள் பதவி விலகுவர். இதன் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.
- **1937** முதல் **1950** வரை இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் **54** ஆகவும், அதிக பட்சம் **56** ஆகவும் இருந்தது.
- **1937**–ம் ஆண்டு ஜூலை **14**–ம் நாள், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டசபை மண்டபத்தில் சட்ட

மேலவை கூடியது. இந்த மேலவையில் மொத்தம் **55** உறுப்பினர்கள் இருந்தனர்.

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மேலவை **1952**-ம் ஆண்டு ஏப்ரல் **21**-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது. இதன் தலைவர் டாக்டர் **பி.வி. செரியன்** ஆவார்.
- இவருக்குப் பின் எம்.ஏ.மாணிக்க வேலுவும், அவரையடுத்து சி.பி. சிற்றரசுவும் மேலவைத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- 1978-ம் ஆண்டு ஏப்ரல் 26-ந் தேதி ம.பொ.சிவஞானம் மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1986-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் நாள் மேலவை கலைக்கப்படும் வரை தொடர்ந்து ஒன்பது ஆண்டுகாலம் மேலவைத் தலைவராக விளங்கினார்.

## மேலவை தேர்தல்

- மேலவை உறுப்பினர்களுக்கான தேர்தலை, இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும், மேலவை உறுப்பினர்கள் கீழ்க்கண்ட 5 வகைகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
  1. பட்டதாரி மூலம் 1/12 பகுதி உறுப்பினர்களும்,
  2. ஆசிரியர்கள் மூலம் 1/12 பகுதி உறுப்பினர்களும்,
  3. உள்ளாட்சி அமைப்பு மூலம் 1/3 பகுதி உறுப்பினர்களும்,
  4. மாநில சட்டமன்ற மூலம் 1/3 பகுதி உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
  5. 1/6 பகுதி உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு, சமூக சேவை போன்ற துறைகளில் தலைசிறந்தவர்கள் அமைச்சரவையின் பரிந்துரைப்படி மேலவை உறுப்பினராக ஆளுநரால் நியமிக்கப்படுவர்.

- 1947-ம் ஆண்டு சென்னை விலங்குகள் மற்றும் பறவைகளை பலியிடத் தடை செய்யும் சட்டத்துக்கான முன்வடிவு மேலவையில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதுவே சட்டமன்றத்தில் முதன்முதலாக நிறைவேற்றப்பட்ட மேலவையின் சட்ட முன்வடிவாகும்.

## மேலவை கலைப்பு

- எம்.ஜி.ஆர். ஆட்சியில் **1986**-ம் ஆண்டு மே மாதம் **14**-ம் நாள் சட்ட மேலவையை கலைப்பதற்கான தீர்மானம், தமிழ்நாடு சட்டப்பேரவை யில் நிறைவேற்றப் பட்டது.
- இத்தீர்மானம் குறித்த சட்ட முன்வடிவு மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, **1986** செப்டம்பர் **1**-ல் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு இந்திய அரசுச் சட்டம் எண் 40 ஆக வெளியிடப்பட்டது.
- இச்சட்டம் **1986**-ம் ஆண்டு நவம்பர் **1** முதல் அமலுக்கு வந்ததால், அன்றைய தினமே மேலவை கலைக்கப்பட்டது.

## மீண்டும் மேலவை

- **1989**-ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் மீண்டும் மேலவையை ஏற்படுத்துவதற்கான தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. **1991**-ல் அ.தி.மு.க. ஆட்சியின் போது அத்தீர்மானம் நீக்கப்பட்டது.
- **1996**-ல் தி.மு.க. அரசு மீண்டும் மேலவை அமைப்பதற்கான மசோதாவை சட்டப் பேரவையில் நிறைவேற்றியது. இது மத்திய அரசின் பார்வைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கிடையே ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் இம்முயற்சியும் தோல்வியடைந்தது.
- தி.மு.க. ஆட்சியில் **2010** ஏப்ரல் **12**-ல் மீண்டும் மேலவை அமைப்பதற்கான தீர்மானம் சட்டசபையில் நிறை வேற்றப்பட்டது.
- **2010,** மே **16**-ல் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் தமிழக மேலவை மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தார். பின்னர் செப்டம்பர் **30, 2010** அன்று மேலவைத் தொகுதிகளின் பட்டியல் குடியரசுத் தலைவரால் வெளியிடப்பட்டது.
- இதன்படி தமிழக மேலவை அமைக்கும் பணியின் சிறப்பு ஆணையராக ஏ.எம்.பி. ஜமாலுதீன் என்பவரை தமிழக அரசு நியமித்தது. ஆனால் **2011**-ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் மேலவை உருவாக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

## தமிழகத்தின் மேலவை கலைக்கப்பட்ட போது

மேலவைத் தலைவர் – ம.பொ. சிவஞானம்
தமிழக முதல்வர் – எம்.ஜி.ராமச்சந்திரன்
தமிழக ஆளுநர் – சுந்தர் லால் பகுகுணா
இந்திய ஜனாதிபதி – ஜெயில் சிங்
இந்திய பிரதமர் – ராஜீவ் காந்தி

- **2011**-ம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, பீகார், உத்திரப் பிரதேசம் மற்றும் ஜம்மு-காஷ்மீர் ஆகிய **6** மாநிலங்களில் சட்ட மேலவை செயல் படுகிறது.
- ஆந்திரா மாநிலத்தில் சட்ட மேலவையானது ஏப்ரல் **2007** -ல் மீண்டும் அமைக்கப்பட்டது.

### மேலவைத் தலைவர்கள்

| தலைவர் | பதவிக்காலம் | கட்சி |
|---|---|---|
| பி.ராஜகோபாலச்சாரி | 1920-1925 | கட்சி சார்பற்றவர் |
| எல்.டி. சுவாமிக்கண்ணு பிள்ளை | 1925-1925 | நீதிக்கட்சி |
| எம். ரத்தினச்சாமி | | |
| சி.வி. எஸ் நரசிம்ம ராஜு | 1925-1926 | நீதிக்கட்சி |
| பி.ராமச்சந்திர ரெட்டி | 1926-1930 | சுயராஜ்ஜியக்கட்சி |

| | | |
|---|---|---|
| டாக். யு. இராமா ராவ் | | |
| ஆர்.பி. ராமகிருஷ்ண ராஜு | 1930-1937 | |
| பி.வி செரியன் | | காங்கிரஸ் |
| எம்.ஏ. மாணிக்கவேலு | 1937-1946 | |
| சி.பி. சிற்றரசு | | காங்கிரஸ் |
| ம.பொ. சிவஞானம் | 1946-1952 | காங்கிரஸ் |
| | 1952-1964 | காங்கிரஸ் |
| | | தி.மு.க |
| | 1964-1970 | தமிழரசுக் கழகம் |
| | 1970-1976 | |
| | 1976-1986 | |

## மேலவைத் துணைத் தலைவர்

| தலைவர்கள் | பதவிக்காலம் |
|---|---|
| கே.கே.கேசவப்பிள்ளை | 1921-1926 |
| டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி | 1926-1930 |
| எச்.எம்.ஜெகந்நாதம் ராஜு | 1930-1935 |
| கே.வெங்கடசாமி நாயுடு | 1937-1952 |
| ஏ.எம். அல்லா பிச்சை | 1952-1959 |
| வி.கே. பழனிச்சாமிக் கவுண்டர் | 1959-1968 |
| ஜி.கிருஷ்ணமூர்த்தி | 1969-1972 |
| ம.பொ.சிவஞானம் | 1972-1976 |
| ஜி.சுவாமிநாதன் | 1976-1980 |
| புலவர் புதுமைப்பித்தன் | 1980-1983 |
| ஜி.சுவாமிநாதன் | 1984-1986 |

# இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு

## இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள்:

### 1. தாதாபாய் நௌரோஜி (1823 -1917)

- தாதாபாய் நௌரோஜி பம்பாயில் 1825 செப்டம்பர் 4 - ந் தேதி ஓர் எளிய பார்சி புரோகிதர் குடும்பத்தில் பிறந்தார்.
- **கணிதப் பேராசிரியராக உயர்ந்தார். பேராசிரியர் பதவி பெற்ற முதல் இந்தியர் தாதாபாய் நௌரோஜி ஆவார்.**
- இந்தியாவிலேயே முதன் முதலாக பெண் பள்ளி ஒன்றை நிறுவினார். எனவே இவரை "பெண் கல்வியின் தந்தை" என அழைக்கப்படுகிறார்.
- "உண்மை விளம்பி" என்ற மாதமிருமுறை இதழைத் தொடங்கினார்.
- 1852 ஆகஸ்ட் 26-ல் "பம்பாய் சங்கம்" ஒன்றை அமைத்து அதில் தனது முதல் சொற்பொழிவாற்றினார்.
- இதன் மூலம் 1853 -ம் வருட பட்டயச் சட்டத்தின் மூலம் பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. 1858 -ல் இங்கிலாந்துக்கு சென்று சொந்தமாக ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கினார்.
- பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் தாதாபாய் நௌரோஜி ஆவார்.
- இவர் 1886, 1893, 1906 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவரது மிதவாதக் கோட்பாடு காங்கிரஸ் கட்சியை வலுவுடையதாக வளர்த்தது.
- 1906 -ல் காங்கிரஸ் தலைவராக பதவி ஏற்றபோது ஆற்றிய உரையில் **"இந்தியர்கள் கேட்பது சலுகைகள் அல்ல தன்னாட்சியே"** என்று கூறினார். இவ்வாறு முதன் முதலில் இந்தியாவுக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்று கூறியவர் இவரே.
- இவர் சிறந்த பொருளியல் அறிஞர் ஆவார்.

- 1867 -ல் Two Wants and Means of India என்ற நூலையும் 1875 ல் On the Commerce of India என்ற நூல்களையும் வெளியிட்டார். "Poverty and UnBritish rule in India"என்ற நூல் தொகுப்பை வெளியிட்டார்.
- 1904 ல் ஆம்ஸ்டர் டாம் நகரில் நடந்த அகில உலக சோசலிசக் காங்கிரஸ் மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக தாதாபாய் கலந்து கொண்டார்.

## 2. சுரேந்திரநாத் பானர்ஜி (1848 -1925)

- இந்தியாவின் முதல் ஐ.சி.எஸ் அதிகாரி.
- 1848 -ம் வருடம் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்த சுரேந்திரநாத் சிறந்த கல்வியாளராகத்திகழ்ந்தார்.
- 1876 -ல் ஜூலை 26-ல் கல்கத்தாவில் "இந்திய சங்கம்" ஒன்றை நிறுவினார்.
- அரசுக்கு எதிராக பொதுமக்களின் கருத்துக்களை திரட்டுவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.
- வைசிராய் லிட்டன்பிரபு இந்திய ஆட்சிப் பணி தேர்வுக்கு இருந்த அதிக பட்ச வயதான 21 ஐ 19 ஆகக் குறைந்தார்.
- இதை எதிர்ந்து நாடு முழுவதும் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. "இந்திய சங்கம்"
- பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் கொண்ட "இந்திய தேசிய மாநாடு" 1833 -ல் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது.
- இதற்கிடையில் 1885 -ல் இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பு ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்டது.
- இந்திய தேசியக் காங்கிரசைப் பற்றி அறிந்து கொண்ட பானர்ஜி, ஒரே நோக்கமுடைய இருவேறு அமைப்புகள் இயங்கி வருவது விரும்பத்தக்கதல்ல என்பதை உணர்ந்து சிறிதும் காலம் தாழ்த்தாமல் இந்திய தேசிய காங்கிரசுடன் இந்திய தேசிய மாநாட்டை இணைத்துவிட்டார்.
- இந்திய தேசிய காங்கிரஸின் 1898, 1902-ம் வருட கூட்டங்களில் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமை தாங்கினார்.
- 1892 -ம் ஆண்டு இம்பீரியல் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1918 -ல் காங்கிரசை விட்டு விலகினார். "தேசிய லிபரல் கூட்டமைப்பு" ஒன்றை அமைத்தார். இரட்டை ஆட்சியின் படி வங்காளத்தில் மந்திரி பதவி ஏற்றார்.

### 3. கோபால கிருஷ்ண கோகலே:

- 1865 -ல் மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறந்தார்.
- நீதிபதி ரானடேயின் கருத்துக்களைப் பின்பற்றிய கோகலே அவரை தனது ஆன்மீக, அரசியல் குருவாகக் கருதினார். ரானடே உருவாக்கிய தக்காணக் கல்வி சங்கத்தில் சேர்ந்தார்.
- 1905 -ம் ஆண்டு கோகலே கடைசியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைமைப் பொறுப்பேற்றார். விடுதலை இயக்கத்தில் இவரது கருத்துக்கள் மிதவாதக் கருத்துக்களாகும்.
- 1905 -ம் ஆண்டு வங்காளப் பிரிவினையை கோகலே கண்டித்தார்.
- 1905 -ல் காசியில் நடைபெற்ற மாநாட்டில் வங்காள பிரிவினை எதிர்ப்பியக்கத்தை ஆதரித்ததுடன் "பேரரசுக்கு உட்பட்ட தன்னாட்சியே இந்திய தேசியக் காங்கிரசின் குறிக்கோள்" என்று பேசினார்.
- இவர் 1906 -ல் காங்கிரசால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு தனது பேச்சாற்றலால் உண்மை நிலையை எடுத்துரைத்தார்.
- 1905 ல் இந்திய தொண்டர் சங்கத்தைத் துவக்கினார். மக்களுக்குச் சேவை செய்யும் தேச பக்தர்களை உருவாக்குவதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதில் ஸ்ரீனிவாச சாஸ்திரி, ே.ஆ. ஜோஷி, பண்டிட் இருதயநாத் குன்ஸ்ரு போன்றோர் உறுப்பினர்களாக இருந்தார். 1912ம் வருடம் தென் ஆப்பிரிக்கா சென்று அங்கு நிறவேற்றுமையை எதிர்த்துப் போராடி வந்த காந்திக்கு உதவி புரிந்தார். அப்போது தான் " இந்தியாவிற்கு வந்து இந்திய மக்களுக்கு சேவை புரியுமாறு" காந்தியிடம் கேட்டுக் கொண்டார்.
- காந்தி இந்தியா வர கோகலேயே மூலக்காரணம் ஆவார். காந்தி கோகலேயை தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.
- கோகலே 1915 பிப்ரவரி 15-ம் தேதி மரணமடைந்தார்.

### 4. பால கங்காதர திலகர் (1856 - 1920):

- **"இந்திய தேசிய எழுச்சியின் தந்தை"** என்று போற்றப்படும் லோகமானிய பாலகங்காதர திலகர் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய பெருந்தலைவர்களுள் ஒருவர்.
- மகாராஷ்டிர மாநிலத்தில் 1856 ஜூலை 23-ம் நாள் பிறந்தார்.
- தனது நண்பர்களுடன் சேர்ந்து **"நியூ இங்கிலீஸ் ஸ்கூல்"** என்ற

ஆங்கிலப் பள்ளியை 1880 -ல் புனாவில் தொடங்கினார்.

- இப்பள்ளி வளர்ச்சியடைந்த **"பர்குசன் கல்லூரி"** என்ற மாறியது.
- 1870 -ல் **"பூனாசர்வஜெனிக்" "சபா"** என்ற தொண்டு நிறுவனத்தையும் ஆரம்பித்தார்.
- மராட்டிய மொழியில் **"கேசரி"** என்ற பத்திரிக்கையும் ஆங்கிலத்தில் **"மராட்டா"** என்ற பத்திரிக்கையும் 1881 -ல் ஆரம்பித்தார்.
- நம் வேதங்களில் இல்லாதது எதுவும் இல்லை. ஒரு உண்மையான தேச பக்தனின் கடமை, நம் பழைமையான காத்து அதன் மூலம் புதுயுகத்திற்கு வழி செய்வதே என்றார். ரிக் வேதங்களைப் படித்து அதிலிருந்து "ஓரியன்" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- பகவத்கீதை கருத்துக்களைப் பரப்பினார். கீதையின் உட்பொருளான "கர்ம யோகாவைக்" கடைப்பிடிக்க தூண்டினார். "கீத ரகசிய" ஆரிய வேதங்களில் பிறப்பிடம் ஆர்க்டிக் போன்ற நூல்களை எழுதினார்.
- துர்கா பூஜா, ராம், லீலா, கணபதி விழா, சிவாஜி விழா போன்ற விழாக்களை நடத்தினார்.
- திலகர் 1897 -ல் பம்பாய் சட்ட மன்ற உறுப்பினார் ஆனார்.
- பிளேக் நோய் பரவிய காலத்தில் திலகர் நிவாரணப் பணிகளை முழுமூச்சுடன் செய்தார். அப்போது பிளேக் நோய் தடுப்பு ஆணையராக நியமிக்கப்பட்டிருந்து ராண்ட் என்பவர் மக்களின் கஷ்டங்களைப் பற்றி கண்டு கொள்ளாமல் ராணியின் வைரை விழாவைக் கொண்டாட 1897 ஜூன் 22-ல் லிருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். இதனால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டு ராண்ட்டும் அவரது போலிஸ் அதிகாரி அயர்ஸ்ட் என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கொலையைத் தூண்டிவிட்டது திலகரே என்று கருதிய அரசு அவருக்கு 18 மாத கால கடுங்காவல் தண்டனை விதித்தது.
- அரசியலில் திலகர் தீவிரவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்தார். 1905-ம் வருட வங்கப் பிரிவினை எதிர்ப்பியகத்தை திலகர் பம்பாயில் நடத்தினார்.
- 1907-ல் திலகர் நாடு முழுவதிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். "தன்னாட்சியைப் பெறுவதற்காக - நாட்டை விடுவிப்பதற்காக எத்தகையை போராட்டத்திற்கும் தியாகத்திற்கும் மக்கள் தயாராக

இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

- **"சுயராஜ்யம் நமது பிறப்புரிமை"** அதை நாம் அடைந்தே தீருவோம்.
- 1916-ல் தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பித்தார்.

## 5. லாலா லஜபதிராய் (1865 -1928):

- "பஞ்சாபின் சிங்கம்" என்று அழைக்கப்படுவர்.
- இவர் 1865 -ல் பஞ்சாபிலுள்ள லூதியானா மாவட்டத்தில் பிறந்தார்.
- 1905 ல் வங்காளப் பிரிவினையை எதிர்த்துப் போராடினார்.
- காங்கிரஸில் தீவிரவாதக் கருத்துக்களைக் கொண்ட தலைவர்களில் ஒருவரானார் லஜபதிராய்.
- லாலா லஜபதிராய் முதலாளித்துவத்தையும், பொருளாதாரச் சுரண்டலையும் எதிர்த்தார். 1902 - ல் இந்தியா தொழிலாளர் சங்க அமைப்பின் முதல் தலைவரானார். 1907 ல் சர்தார் அஜித் சிங் என்பவருடன் சேர்ந்து ஆங்கிலேயரின் "குடியேற்ற மசோதா" விற்கு எதிராகப் பெரும் போராட்டத்தை நடத்தினார்.
- அரசியலில் லஜபதிராய் "சுயராஜியம்" சுதேசி இயக்கம், தேசியக் கல்வி, அன்னியப் பொருட்களுக்கு எதிர்ப்பு ஆகிய கொள்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தார்.
- இங்கிலாந்தில் இருந்த போது லஜபதிராய் "Young India" 'England's debt to India என்ற இரண்டு புத்தகங்களை எழுதினார். 1919-ல் இந்தியா திரும்பியபோது, ஜாலியன் வாலாபாக்கில் நடைபெற்றிருந்த படுகொலையைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தார். பஞ்சாபின் அரசியல் நிலைப்பற்றி ஆராய 1920 -ல் கல்கத்தாவில் காங்கிரஸ் மகாசபை லஜபதிராயின் தலைமையில் தான் கூடியது.
- அப்போது நிறைவேற்றப்பட்ட "ஒத்துழையாமை தீர்மானம்" லஜபதிராய்க்கு உடன்பாடானது அல்ல என்றாலும் பொதுநலன் கருதி ஏற்றுக் கொண்டார். அப்போராட்டத்தில் ஈடுபட்ட லஜபதிராய் 1922 டிசம்பர் 3-ல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையான பின்பு, சுயராஜ்யக் கட்சியில் சிறிது காலமும் மதன்மோகன் மாளவியா ஆரம்பித்த "தேசிய கட்சி"யில் சிலகாலமும் சேவை செய்தார்.
- லஜபதிராய் தனது கருத்துக்களை மக்களுக்கு தெரிவிப்பதற்காக "பஞ்சாபி" "வந்தே மாதரம்" "The

People" ஆகிய மூன்று பத்திரிகைகளை ஆரம்பித்தார்.

❖ 1928 அக்டோபர் 30-ம் தேதி சைமன் கமிஷனுக்கு எதிராக லாகூரில் ஒரு பெரிய எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தினார். அப்போது ஆங்கில போலீஸ் அதிகாரி சான்டர்ஸ் மேற்கொண்ட தடியடி பிரயோகத்தில் 1928 நவம்பர் 17-ல் லாலா லஜபதிராய் மரணம் அடைந்தார்.

### 6. அன்னிபெசன்ட் (1847 - 1933):

❖ 1847 -ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி இங்கிலாந்திலுள்ள லண்டன் மாநகரத்தில் பிறந்தார். இயற்பெயர் ஆனிவுட் என்பதாகும்.

❖ பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய "ரகசியக் கோட்பாடு" என்ற புத்தகத்தைப் படித்ததும் பல காலமாய் தான் அறிய விரும்பிய உண்மைகள் அவர் மனதில் பளிச்சென பிரகாசித்தன. பிளாவட்ஸ்கி அம்மையாரைச் சந்தித்தபின் அவரது சீடரானார். 1833 -ல் இந்தியாவுக்கு வந்த அன்னிபெசன்ட் இந்தியாவையே தன்னுடைய நாடாகக் கருதி வந்தார். இந்திய சமுதாய முன்னேற்றத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் தனது சக்தி முழுவதையும் செலவு செய்தார்.

❖ பிரம்மஞான சங்கத்தை தோற்றுவித்த கர்னல் ஆல்காட் 1907 ல் இறந்த பின் அதன் தலைவராக அன்னிபெசன்ட் நியமிக்கப்பட்டார். இச்சங்கத்தின் கொள்கைகளை நடைமுறையில் செயல்படுத்துவதில் வெற்றி கண்டார். பிரம்ம ஞானம் என்பது இறைவனை அறிதல் என்று பொருள்படும். இந்த தத்துவத்தை எல்லா மதங்களின் போதனைகள் மூலம் பிரசாரம் செய்தார்

❖ 1914 ல் **"காமன் வீல்"** என்ற வார இதழையும் சில மாதங்களுக்குப் பிறகு **"நியு இந்தியா"** என்ற தினசரியையும் வெளியிட்டார்.

❖ திலகரின் தலைமையில் செயல்பட்ட தீவிரவாத காங்கிரசையும், கோகலே தலைமையில் செயல்பட்ட மிதவாத காங்கிரசையும் ஒன்றாக இணைந்த பெருமை இவருக்கு உண்டு. 1915 செப்டம்பர் 25-ல் தன்னாட்சியை அடைவதற்காக "ஹோம்ரூல் இயக்கத்தை" ஆரம்பித்தார். "பிரிட்டிஷ் பேரரசில் இணைந்த தன்னாட்சியை சட்டப்பூர்வமான வழிகளில் பெறுவதும் அடைய மக்கள் கருத்தை உருவாக்கித் திரட்டுவதுமே இதன் குறிக்கோலாக அமைந்தன.

- ❖ இந்தியாவிற்கு வந்த பின்பு சமஸ்கிருதம் படித்து பகவத் கீதையே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- ❖ இவரது முயற்சியால் பல பள்ளிக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- ❖ 1918 -ல் பெசன்ட் அம்மையார் இந்திய சாரண சங்கத்தை ஏற்படுத்தினார். குழந்தைகள் முன்னேற்றத்திற்காக "லோட்டஸ் சர்கிள்" "ரவுண்ட் டேபிள்" என்ற குழந்தைகள் நிறுவனங்களை உண்டாக்கினார்.
- ❖ **1917-ல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முதல் பெண் தலைவராக அன்னிபெசன்ட்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**7. வ.உ.சிதம்பரனார்(1872 - 1936):**

- ❖ "கப்பலோட்டிய தமிழன்" என்று புகழப்படுபவர்.
- ❖ தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒட்டபிடாரம் என்ற சிற்றூரில் 1872 செப்டம்பர் 5-ம் தேதி பிறந்தார்.
- ❖ 1895 -ல் திருச்சியில் வழக்கறிஞர் பட்டம், பெற்றுத் தூத்துக்குடியில் வழக்கறிஞராக தொழில் நடத்தி வந்தார்.
- ❖ தமிழ்நாட்டில் திலகரின் கருத்துக்களைப் பரப்பினார். எனவே **"தென்னாட்டு திலகர்"** என்று வ.உ.சி போற்றப்பட்டார்.
- ❖ 1906 -ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் "ஆங்கிலப் பொருட்களைப் புறக்கணித்து இந்தியப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும்" என்ற தீர்மானத்தை திலகர் இயற்றினார். இதற்கு சுதேசி இயக்கம் என்ற பெயர்.
- ❖ தமிழ்நாட்டில் இந்த இயக்கத்தை தீவிரப்படுத்தியவர் வ.உ.சி ஆவார்.
- ❖ இவர் சுதேசிப் பொருட்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காக தூத்துக்குடியில் "தரும் சங்க நெசவு சாலையும், சுதேசிய பண்டக சாலையையும்" நிறுவினார்.
- ❖ தூத்துக்குடியில் கடல் வாணிகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்தினர்.
- ❖ நண்பர்களின் உதவியாலும், பொது மக்களின் ஆதரவுடனும் 1906-ல் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை நிறுவினார்.
- ❖ பம்பாய்க்குச் சென்று **"காலியா"** என்ற புதிய கப்பல் வாங்கினார். பிரான்சுக்குச் சென்று **"லாவோ"** என்ற மற்றொரு கப்பலை வாங்கினார். இந்த இரண்டு கப்பல்களிலும் தூத்துக்குடி வணிகர்கள் சரக்குகளை ஏற்றினர்.

- இவருடன் சுப்பரமணிய சிவா என்பரும், நாட்டுப்பற்ற மக்களுக்கு ஊட்டினார்கள்.
- வ.உ.சி ஒரு சிறந்த இலக்கிய வாதி ஆங்கில எழுத்தாளரான ஜேம்ஸ் ஆலனின் நூல்களை " மனம் போல் வாழ்" "அகமே அறம்" மற்றும் "வலிமைக்கு மார்க்கம்" என்று தமிழில் மொழி பெயர்த்தார். மனிதன் கடைபிடிக்க வேண்டிய நன்மைகள், நீக்க வேண்டிய தீமைகள் குறித்து நூறு வெண்பாக்களாக "மெய்யறிவு என்ற நூலில் எழுதியுள்ளார். விதவை மணம், பெண் உரிமை பற்றி அதில் குறிப்பிட்டுள்ளார்.
- தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரை மிக எளிதாக இருந்ததால் வையாபுரி பிள்ளையுடன் இணைந்து வெளியிட்டார்.
- நன்னிலை நூலுக்கு உரை எழுதினார். சைவ சித்தாந்தத்தை ஆழிந்து படித்து "சிவஞான போதம்" என்ற உரையை எழுதியுள்ளார்.
- 1908 - மார்ச் 12- ம் தேதி பிபின் சந்திர பாலர் விடுதலையை கொண்டாட அரசாங்கத்தின் ஆணையையும் மீறி பொதுக்கூட்டத்தில் பேசிய வ.உ.சி.யும் சுப்பிரமணிய சிவாவும் கைது செய்யப்பட்டனர்.
- வ.உ.சிக்கும், சிவாவிற்கும் நீதிபதி எ.எச். வாலஸ் 40 வருடம் சிறைத் தண்டனை விதித்தார். அதன் பின் வைசிராய் மின்டோவின் பரிந்துரைப்படி ஆறு ஆண்டுகளாக அது குறைக்கப்பட்டது.
- வ.உ.சி முதலில் கோயம்புத்தூர் சிறையிலும் பின்னர் கண்ணனூரிலும் வைக்கப்பட்டார். சிறையில் எண்ணை ஆட்டும் செக்கில் மாடுகளுக்குப் பதில் சிதம்பரனாரை இழுக்க வைத்தனர். இதனால் மிகவும் நலிந்து போனார்.
- சுப்பிரமணிய சிவா கம்பளி மயிர் வெட்டியதால் தொழுநோய் பிடித்துக் கொண்டது. ஜார்ஜ் மன்னர் அரியணையேறியதால் அதையொட்டி சிறைத்தண்டனை குறைக்கப்பட்டு 1911 டிசம்பரில் வ.உ.சியும் சிவாவும் விடுதலையடைந்தனர்.
- சிறையிலிருந்து விடுதலையானபின் வறுமையாலும், பிணியாலும் அல்லல்பட்டார். வ.உ.சி தான் சாகும் போது கூட மற்றவர்களை தேசபக்தி பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே 1936 நவம்பர் 18-ல் இறந்தார்.

**8. மகாத்மா காந்தி (1869 - 1948):**

- "இந்திய தேசியத் தந்தை" உண்மை, நேர்மை, அகிம்சை சத்தியம் ஆகியவற்றை ஆயுதங்களாகக் கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்து அறப்போர் புரிந்தவர்.
- குஜராத் மாநிலத்தில் போர் பந்தர் என்னுமிடத்தில் 1869 அக்டோபர் 2-ம் தேதி காந்திபிறந்தார். இவரது இயற்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தந்தையார் பெயர் காபா காந்தி, தாயார் பெயர் புத்திலிபாய், இவருக்கும் கஸ்தூரிப்பாய் அம்மையாருக்கும் 13-ம் வயதில் திருமணம் நடந்தது.
- 1888 ல் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று திரும்பினார்.
- 1892 -ல் தென்னாப்பிரிக்கா சென்றார். "நேட்டால் இந்திய காங்கிரஸ்" என்ற அமைப்பை நிறுவி ஆங்கிலேயரின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக போராடினார். சுமார் 21 ஆண்டுகள் இடைவிடாமல் போராடியதின் விளைவாக இந்தியர்களுக்கு எதிரான பல சட்டங்கள் நீக்கப்பட்டன. இந்திய மக்களின் இழிநிலையையும், துன்பத்தையும் போக்கினார்.
- தென் ஆப்பிரிக்காவில்தான் முதன் முதலாக சத்தியாகிரகம் என்ற புதியமுறை இயக்கத்தைக் கையாண்டார்.
- இந்தியாவின் விடுதலைக்காகப் போராட காந்தி தீர்மானித்து 1915 ஜனவரி மாதம் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பினார்.
- 1915 மே 15ல் அகமதாபாத்தில் சபர்மதி ஆற்றின் அருகே ஆசிரமம் ஒன்றை நிறுவினார்.
- 1917-ல் காந்தி **"பீஹார் மாநிலத்திலுள்ள சம்பரான்** என்ற இடத்திலுள்ள அவுரி பயிரிடும் தோட்டத் தொழிலாளர்களின் துன்பங்களைப் போக்க சத்தியாகிரகம் நடத்தினார். அது பெரும் வெற்றிபெற்றது.
- 1919ல் ஆங்கிலேயர் கொண்டு வந்த ரௌலட் சட்டங்களை எதிர்த்தார். 1991 ஏப்ரல் 6-ம் தேதி நாடு முழுவதும் ஹர்த்தால் அனுசரிக்கப்பட்டது.
- ஆங்கிலே அரசுடன் ஒத்துழைக்காமலிருக்க 1920 செப்டம்பர் மாதம் சட்ட மறுப்பு இயக்கத்தைத் துவங்கினார்.
- 1932 ல் தாழ்த்தப்பட்ட மக்களை இந்து சமூகத்திலிருந்து பிரித்தது. தேர்தலில் தனித் தொகுதியாக்க

அரசாங்கம் முயன்றது. இதை எதிர்த்து காந்தி பூனா நகரில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்.

- 1927 ல் சைமன் குழு புறக்கணிப்பு, 1930ல் உப்பு சத்தியாகிகரம் ஆகிய இயக்கங்களை நடத்தினார். 1930ல் லண்டனில் ஆரம்பித்த வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.
- 1942 ஆக்ஸ்ட் 8-ம் தேதி "வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கத்தை ஆரம்பித்தார் காந்தி. இதனால் காந்தி உட்பட, எல்லா தலைவர்களையும் பிடித்து சிறையிலடைத்தது அரசு. இவருடைய மனைவி கஸ்தூரிபாய் 1944 - பிப்ரவரி 22-ல் சிறையிலேயே காலமானார். 1945 -ல் காந்தி விடுதலை செய்யப்பட்டார்.
- 1948 ஜனவரி 30ல் காந்திஜி பிரார்த்தனை, கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்த போது **நாதூரம் கோட்சே** என்பவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

### 9. ராஜாஜி (1878 - 1972):

- இந்தியா சுதந்திரமடைந்தபின் தலைமை ஆளுநராகப் பதவிஏற்றார். முதல் தலைமை ஆளுநராகவும், கடைசித் தலைமை ஆளுநராகவும் இருந்த இந்தியர் ராஜாஜி ஆவார்.
- ராஜாஜி என்று மக்களால் அழைக்கப்பட்ட ராஜகோபாலாச்சாரியர் தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில் ஒசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளி என்ற கிராமத்தில் 1878 டிசம்பர் 8-ம் தேதி பிறந்தார்.
- 1900 முதல் சேலத்தில் வழக்கறிஞர் தொழிலை ஆரம்பித்து நடத்தி வந்தார்.
- தனது அரசியல் வாழ்க்கை 1916ல் தன்னாட்சி இயக்கத்தில் பங்கு கொண்டதின் மூலம் ஆரம்பித்தார்.
- இந்திய தேசியக் காங்கிரசில் சேர்ந்து 1919ல் ரௌலட் சட்டத்தை எதிர்த்துத் துவங்கிய சத்தியாகிரக இயக்கத்தில் முக்கியப் பங்காற்றினார்.
- 1920 ஜூலையில் நடைபெற்ற கிலாபத் இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற இந்து - முஸ்லீம் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். 1920ல் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாக இறங்கிய ராஜாஜி தனது வழக்கறிஞர் தொழிலை உதறித் தள்ளி முழுநேர அரசியல் தொண்டில் ஈடுபட்டார்.

- ❖ காந்திஜி சிறையில் இருந்த காலத்தில் "யங் இந்தியா" பத்திரிக்கையில் ஆசிரியராக பணிபுரிந்தவர்.

### 10. அரவிந்த் கோஷ் (1872 - 1950):

- ❖ காங்கிரசை "ஒரு மத்திய தர வகுப்பாரின் கருவி" எனக் கூறினார்.
- ❖ பாண்டிச்சேரியில் "அரவிந்தர் ஆசிரமத்தினை" தொடங்கினார்.
- ❖ இவருடைய நூல்கள்:Life Divine, Essays on Gita
- ❖ விடுதலைக்குப் பிறகு பாண்டிச்சேரியில் தங்கி ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

### 11. பிபின் சந்திரபால் (1858 - 1932):

- ❖ தற்போதைய பங்களாதேஷ் நாட்டின் சியால்கட் மாவட்டத்தின் பொயில் கிராமத்தில் பிறந்தவர்.
- ❖ பிரம்மசமாஜத்துடன் தொடர்பு வைத்து கொண்டவர்.
- ❖ மிதவாதியாக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் பின் தீவிரவாதியாக மாறினார்.
- ❖ இவர் பரிதாசக் என்ற வாரஇதழையும், 1901ல் நியூ இந்திய என்ற ஆங்கில பத்திரிக்கையும் தொடங்கினார்.
- ❖ Bande Mataram என்ற ஆங்கில தினசரியை தொடங்கினார்.
- ❖ 1912ல் ஹிந்து ரிவ்யூ என்ற ஆங்கில மாதப் பத்திரிக்கையை தொடங்கினார்.
- ❖ சுதேசி இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

## சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு

### 1. வ.வே.சு. ஐயர்:

- ❖ பாரிஸ்டர் படிப்புக்காக இலண்டன் சென்ற வ.வே.சு ஐயர் பயங்கரவாதியானார்.
- ❖ 1908 ல் இவர்களோடு "இந்தியா விடுதி" யில் தங்கியிருந்த மதன்லால் திங்கரா என்ற இந்திய பயங்கரவாதி கர்ஸான் வாலி என்ற பிரிட்டிஷ் அதிகாரியைச் சுட்டு கொன்றதையடுத்து, இந்தியா விடுதி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தீவிர கண்காணிப்புக்குள்ளாகியது.
- ❖ ஐயர் ரஷ்யாவுக்கு சென்று வெடிகுண்டு தயாரிக்கும் முறையைக் கற்றுக்கொண்டு புதுவைக்கு வந்தார். (1910)

### 2. வாஞ்சிநாதன்:

- ❖ செங்கோட்டை இரகுபதி ஐயரின் மகனான வாஞ்சிநாதன் திருவிதாங்கூரிலுள்ள புனலூரில் அரசாங்கக் காட்டிலாகாலில் பணிபுரிந்து வந்தார்.

- அரசாங்க அடக்குமுறைக்குக் காரணமான நெல்லை மாவட்டக் கலெக்டர் ராபர்ட் வில்லியம் ஆஷை என்ற அதிகாரியைக் கொல்லத் திட்டமிட்டார்.
- வ.வே.சு ஐயரிடம் துப்பாக்கி சுட பயிற்சி பெற்றார்.
- 1911 ஜூன் 17ம் தேதி கொடைக்கானலுக்குச் செல்வதற்காக நெல்லையிலிருந்து புகை வண்டியில் தன் மனைவியுடன் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த ஆஷை மணியாட்சி புகைவண்டி நிலையத்தில் "பிரௌனிங்" கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

### 3. நீலகண்ட பிரமச்சாரி:

- நீலகண்ட பிரமச்சாரி ஆஷ் கொலை வழக்கில் குற்றவாளியாகக் கருதப்பட்டு ஏழாண்டு கால சிறைத் தண்டனை பெற்றார்.
- இவர் புதுவையில் தஞ்சம் புகுந்திருந்தபோது 1910 ஏப்ரல் 10-ம் தேதி "பாரத மாத சங்கம்" என்ற அமைப்பை ஏற்படுத்தினார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அந்நிய அதிகாரிகளைக் கொன்று இந்தியாவுக்கு சுயராஜ்யம் பெறுவதே அதன் நோக்கமாகும்.
- புதுவையில் "சூரியோதயம்" என்ற பத்திரிக்கையை நடத்தி வந்தார்.
- வாஞ்சிநாதன் ஆஷை சுட்டுக் கொல்வதற்கு முன்பு புதுவை வந்த நீலகண்ட பிரம்மச்சாரியை சந்தித்தார்.
- நீலகண்ட பிரமச்சாரி மீது சாட்டப்பட்ட ஆஷ் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி இவருக்கு ஏழாண்டு கால சிறைதண்டனை வழங்கப்பட்டது.
- வ.வே.சு. ஐயர் சேரன்மாதேவியின் "பரத்துவாஜ ஆசிரமம்" ஒன்றை நிறுவியதைப் போன்று நீலகண்ட பிரம்மச்சாரியும் கர்நாடகத்திலுள்ள நந்திமலையில் ஆசிரமம் ஒன்றை அமைத்து அமைதியாக வாழ்ந்து தனது 88 வது வயதில் உயிர் நீத்தார்.

### 4. டாக்டர் சண்பகராமன்:

- நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த டாக்டர் சண்பகராமன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார்.
- "புரோ இந்தியா" என்ற பெயரில் பத்திரிக்கை நடத்தினார்.

### 5. சுப்பிரமணிய சிவா:

- வ.உ.சியும் சிவாவும் தமிழ்நாட்டு சுதேசியக்கத்தின் இரட்டையர்களாகத் திகழ்ந்தார்கள்.
- "சுதந்திரானந்தர்" என்ற புனைப்பெயரை சூட்டிக் கொண்டவர் சிவா.

- "பாரதி ஆசிரமம்" என்ற பெயரால் தேச பக்தர்களின் பாசறை ஒன்றை நிறுவினார்.
- சிவாவுக்கு இணையாக இன்னொரு தேசபக்தரைச் சொல்ல முடியாது என்ற புகழாரம் சூட்டியுள்ளார் மா.பொ.சி.

**6. சுயாட்சி இயக்கம்:**

- அன்னிபெசண்ட், சி.பி. ராமசாமி அய்யர். ஜி.எஸ் சுருண்டேல், பி.பி. வாடியா, எஸ். சுப்பிரமணிய அய்யர், என். சுப்புராவ், பி. பட்டாபி சித்தாராமைய்ய, எ. ரெங்கநாத முதலியார், மாஜேரி ராமய்யர் ஆகியோர் சுயாட்சி இயக்கத்தின் பிரதான தலைவர்களாவர்.
- சென்னை சட்டமன்ற உறுப்பினராக தஞ்சை வி.கே. ராமனாசாரி. தமிழ்நாட்டில் சுயாட்சி இயக்கத் தலைவரானர். 1917 மே 19-ல் கடலூரில் வி.பி. மாதவராவ் தலைமையில் மாநில சுயாட்சி மாநாடு நடைபெற்றது.
- சுயாட்சி இயக்கத்தின் குறிக்கோளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதற்கென பி.எஸ். குமாரசாமி ராஜா "மீனாட்சி சகாய விவேகரி விதயால" யத்தை ஏற்படுத்தினார்.

**7. புலித்தேவர்:**

- நெல்கட்டும் செவல் என்ற பகுதியை ஆட்சி செய்த புலித்தேவர் தமிழகத்தில் ஆங்கிலேயரை எதிர்த்த முதல் விடுதலை வீரராவார்.
- திருநெல்வேலி பகுதியில் தமிழ் பேசும் மறவர் குலத்தைச் சேர்ந்தவர் மேலைப் பாளையக்காரர்களில் புகழ் பெற்றவர்.
- 1755 -ம் ஆண்டு ஆங்கிலேய தளபதி அலெக்சாண்டர் ஹெரான் மற்றும் ஆற்காடு நவாப்பின் தளபதி மாபூல்கான் சேர்ந்து புலித்தேவரை எதிர்த்தனர். ஆனால் புலித்தேவர் இவர்களை தோற்கடித்தனர்.
- 1959 -ம் ஆண்டு நடைபெற்ற அந்த நல்லூல் போரில் யூசுப்கான் என்பவரிடம் புலித்தேவர் தோல்வியுற்றார். இருப்பினும் 1764 ல் நெல்கட்டும் செவலை மீண்டும் கைப்பற்றினார்.
- 1767 -ல் தளபதி கேம்பெல் பிரபுவால் புலித்தேவர் தோற்கடிக்கப்பட்டார்.

**8. வீரபாண்டிய கட்டபொம்மன் (1761 - 1799):**

- 1790 ல் பாஞ்சாலங்குறிச்சியின் பாளைக்காரர் பதவிக்கு வந்த 47 வது கட்டபொம்மன் இவராவர்.
- கீழைப் பாளையங்காரர்களில் புகழ்பெற்ற வீரபாண்டிய தெலுங்கு மொழி பேசும் நாயக்கர் குலத்தவர்.

- 1798 - ம் ஆண்டு வரை ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்தி வந்த கட்டபொம்மன், அவ்வாண்டு ஏற்பட்ட வளர்ச்சியினால் வரி செலுத்த முடியவில்லை.
- 1798 -ல் மாவட்ட ஆட்சியாளர் ஜாக்சனால் இவர் அலைகழிக்கப்பட்டார். இவரது அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளை ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். இந்த இராமநாதபுர நிகழ்ச்சிக்கு ஜாக்சனே காரணம் எனக்கூறி சென்னை ஆளுநர் எட்வர்ட் கிளைவ் ஜாக்சனை பதவிநீக்கம் செய்தார்.
- 1799 ல் கலெக்டர் லூஷிங்டன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் கட்டபொம்மன் வரமறுத்தார். அவரை அடக்க மேஜர் ஜான் பானர்மேன் நியமிக்கப்பட்டார்.
- பானர்மேன் கோட்டையை முற்றுகையிடுவதை அறிந்த கட்டபொம்மன் அங்கிருந்து தப்பித்துச் சென்று களப்பூர் காட்டில் மறைந்து கொண்டார்.
- புதுக்கோட்டை அரசர் விஜயரகுநாத தொண்டைமானும், எட்டயபுரம் எட்டப்பனும் கட்டபொம்மனை இருக்கும் இடமறிந்து ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுத்தனர்.
- அக்டோபர் 17, 1799-ல் கயத்தாறு (தூத்துக்குடி மாவட்டம்) என்னுமிடத்தில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
- நவம்பர் 16, 1801-ல் பாஞ்சாலக்குறிச்சியில் கட்டபொம்மனின் சகோதரர்கள் ஊமத்துரை, செவத்தையா தூக்கிலிடப்பட்டனர்.

### 9. மருது சகோதரர்கள்:

- சிவகங்கை பகுதியை ஆண்டவர்கள் மருது சகோதரர்கள் (வெள்ளை மருது, சின்ன மருது) மருது பாண்டியர்கள் சிவகங்கைச் சிங்கம் என அழைக்கப்படுகின்றனர்.
- 1800 - 01 ல் மருது சகோதரர்களின் தலைமையில் தென்னிந்தியக் கலகம் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெடித்தது. இப்புரட்சி இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான முதல் புரட்சி எனக் கூறலாம்.
- அக்னியூ, இன்ஸ், பிளாக்கான் ஆகிய மூவரையும் மருது சகோதரர்களை அடக்க எட்வர்ட் கிளைவ் அனுப்பினார். இவர்களால்

மருது சகோதரர்களை அடக்க முடியாமல் தினறினர்.

- தஞ்சை, புதுக்கோட்டை, எட்டயபுர துரோகிகளின் உதவியால் காளையர் கோவிலை ஆங்கிலேயர் வீழ்த்தினர். சோழபுரத்தில் மருது பாண்டியர்கள் பிடிபட்டனர்.
- அக்டோபர் 24, 1801 ல் திருப்பத்தூரில் (சிவகங்கை மாவட்டம்) மருது சகோதரர்களை தூக்கிலிட்டனர்.
- தமிழகத்தில் தேசிய உணர்வு என்ற விதையை முதன் முதலில் விதித்தவர்கள் மருது சகோதரர்களே.

### 10. ஆச்சார்யா நரேந்திர தேவ் (1889 - 1956):

- வழக்கறிஞர், தேசிய வாதி, சமூக வாதியான நரேந்திர தேவ், வழக்கறிஞர் தொழிலை கைவிட்டு விட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்.
- 1934 ல் பாட்னா சோஷியலிஸ்ட் மாநாட்டின் (Patna's Socialist Conference) தலைவராகவும், 1937 ல் ஒன்றுபட்ட மாகாணத்தின் (UP) சட்டமன்ற உறுப்பினராக ஆனார்.
- 1925ல் காசி வித்யாபீத் (Kashi Vidya Peeth) கல்லூரியின் முதல் வராகவும் பிறகு லக்னோ மற்றும் பனாரஸ் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தராகவும் ஆனார். 1948 ல் இவர் சோஷியலிஸ்ட் (Socialist Party)கட்சியை ஏற்படுத்தினார்.

### 11. அருணா ஆசப் அலி(1909 - 1996):

- அருணா ஆசப் அலியின் புணைப்பெயர் அருணா கங்குலி ஆகும்.
- இவரது கணவர் ஆசப் அலி ஆவார்.
- இந்த பெண்மனியே அமெரிக்காவின் முதல் இந்தியா தூதர் ஆவார்.
- சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டதற்காகவும் தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டதற்காகவும் கைது செய்யப்பட்டு சிறை சென்றார்.
- 1942 ல் குவாலியர் டேங்க் பகுதியில் இந்தியாவின் மூவர்ண கொடியை உயர்த்தினார். இவரே டெல்லியின் முதல் மேயர் ஆவார். (1958). 1964 ல் அகிலஉலக லெனின் பரிசை (International Lenin Prize) பெற்றார்.
- எதாந்தா மற்றும் நாராயணன் மற்றும் AV பாலிகாவுடன் இணைந்து லிங்க் மற்றும் பேட்ரோல் (Link and Patrol) ஆகிய பத்திரிக்கைகளை ஆரம்பித்தார்.

**12. பகத்சிங் (1907 - 1931):**

- ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசு இராணுவத்தின் (Hindustan Socialist Republican Army) உறுப்பினரானார். இவர் பஞ்சாபில் மிலிட்டன்ட் நௌஜவான் பாரத் சபையை (Militant Naujawan Bharat Sabha) ஆரம்பித்தார். 1928 ல் பிரிட்டிஷ் அதிகாரி சாண்டர்ஸை கொலை செய்தார். லாகூர் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் இவர் பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தினார்.
- மார்ச் 23, 1931 ல் இவர் தூக்கிலிடப்பட்டார்.

**13. பக்கிம் சந்திர சட்டோர்பதே (1833 - 1894):**

- வந்தே மாதரம் பாடலை தொகுத்தவர் ஆவார்.
- இவரது முதல் நாவல் துர்கேஸ்நந்தினி 1864 ல் வெளியிடப்பட்டது. இவரது இதழ் பங்கதர்சன் ஆகும்.

**14. பீமாராவ் அம்பேத்கார் (1891 - 1956):**

- ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் பெருந்தலைவராவார்.
- மூன்று வட்ட மேசை மாநாடுகளிலும் கலந்து கொண்டார் மற்றும் 1932 ல் காந்தியுடன் பூனா ஒப்பந்தம் செய்து கொண்டார்.
- மக்கள் கல்வி சமூகம் (Peolple Education Society) என்ற கல்வி குழுமத்தை ஏற்படுத்தினார்.
- 1924 ல் தாழ்த்தப்பட்ட (or) ஒடுக்கப்பட்டவர்கள் வகுப்புகள் நிறுவனத்தையும் (Depressed Classes Institute) மற்றும் 1927 ல் சமாஜ் சமத்தா சங்கத்தையும் (Samaj Samata Sangh) ஏற்படுத்தினார்.
- 1924 முதல் 1946 வரை கவர்னர் ஜெனரல் நிர்வாக குழுவின் உறுப்பினராக இருந்தார்.
- இந்திய தொழிலாளர் கட்சியையும், அட்டவணை வகுப்பினர் கூட்டமைப்பையும் (Scheduled castes Federation) ஏற்படுத்தினார்.
- அரசியல் நிர்ணயசபையின் வரைவுக்குழுவின் தலைவரானார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் சட்டஅமைச்சரான இவர் இந்து விதி மசோதா (Hindu code Bill) அறிமுகப்படுத்தினார்.
- 1956 ல் ரிபப்ளிக் கட்சியை (Republic Party) ஏற்படுத்திய இவர் வாழ்நாளில் இறுதியில் புத்தமதத்திற்கு மாறினர்.

**15. இராஜேந்திர பிரசாத் (1884 - 1962):**

❖ சுதேசி இயக்கம் (பீகாரி மாணவர் மாநாட்டை Bihari Students Conference)ஏற்படுத்துதல். சாம்பரான் சத்யாகிரகம், ஒத்துழையாமை வெளியேறு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் கலந்து கொண்டார்.

❖ பாட்னாவில் தேசிய கல்லூரியை ஏற்படுத்தினார்.

❖ இடைக்கால அரசாங்கத்தில் (1946) உணவு மற்றும் விவசாயத்துறை அமைச்சராக இருந்தார்.

❖ அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்தார். 1962 ல் பாரத் ரத்னா விருது பெற்றார். தேஸ் - ஹிந்தி வாரப்பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்தார். இந்திய ரிபப்ளிக்கின் (Indian Republic) முதல் தலைவராவார்.

**16. ஜவஹர்லால் நேரு (1889 - 1964):**

❖ 1928 ல் இந்திய தேசிய காங்கிரசின் பொதுச் செயலாளராகவம், 1929 ல் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். லாகூர் காங்கிரஸ் மாநாட்டின் (1929) போது பூரண விடுதலை தீர்மானத்தை கொண்டு வந்தார்.

❖ சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம அமைச்சரான இவர் 1964 வரை பிரதமராக இருந்தார். இவர் நவீன இந்தியாவின் சிற்பி என்றழைக்கப்படுகின்றார்.

❖ பஞ்சசீலக் கொள்கையையும், அணி சேரா மாநாடுகள் இயக்கத்தையும் ஏற்படுத்தினார்.

**புத்தகங்கள்:**

➢ டிஸ்கவரி ஆப் இந்தியா (The Discovery of India)

➢ கிளிம்ஸஸ் ஆப் வேர்ல்ட் (Glimpses of word History)

➢ பஞ்ச் ஆப் இந்தியா (The Unity of India)

➢ இன்டிபென்டன்ஸ் அண்ட் ஆஃப்டர் (Independence and After)

➢ இந்தியா அண்ட் வேர்ல்ட்(India and World)

➢ இவரது சுயசரிதை (Auto - biography (சுயசரிதை)) ஆகும்

**1. குதிராம் போஸ் (1899 - 1908):**

❖ மதினாப்பூரை சேர்ந்த பயங்கரவாதி சுதேசி இயக்கத்தில் கலந்து கொண்டார். பிறகு வங்காள புரட்சிகர கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார் பீகார் - முசாபர்பூர் நீதிபதி கிங்ஸ்போர்டு ரயில் பயணத்தின் போது

வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதால் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

**2. கான் அப்துல் காஃபர் கான் (1890 - 1998):**

❖ எல்லை காந்தி, பாத்ஷா கான் (அ) சர்ஹாதி காந்தி, பாக்கர் - இ - ஆப்கான் என்றழைக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஆவார்.

❖ இவர் வன்முறையில்லா செஞ்சட்டை இயக்கம் அல்லது குதாய் கித்மத்கர்கள் என்ற இயக்கத்தை சட்ட மறுப்பு இயக்கத்தின் போது ஆரம்பித்தார்.

❖ ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்றவற்றில் கலந்து கொண்டார்.

❖ பக்தூன் (Pakhtoon) என்ற பத்திரிக்கையின் ஆசிரியராகவும், பிறகு "தாஸ் ரோசா" (Das Roze) என்ற பத்திரிக்கையையும் வெளியிட்டார்.

❖ 1987 ல் பாரத்ரத்னா விருது பெற்றார்.

**3. லாலா ஹர்தயாள் (1884 0 1939):**

❖ டெல்லியின் பயங்கரவாதி இந்திய விடுதலைக்காக வெளிநாடுகளின் உதவியை நாடினார்.

❖ 1913ல் சான் பிரான்சிஸ்கோவில் (USA) ஏற்படுத்தப்பட்ட காதர் கட்சியின் (Ghadr Party) முதல் தலைவராவார். இவர் ஜெர்மனியில் இந்திய விடுதலை கமிட்டியை ஏற்படுத்தினார்.

**இவரது புத்தகங்கள்:**

➢ வெல்த் ஆப் நேஷன்ஸ் (Wealth of Nations) ஹிண்ட்ஸ் பார் செல்ப் கல்ச்சர் (Hints for Self Culture)

**4. மௌலானா அபுல்கலாம் ஆசாத் (1890 - 1958):**

❖ கிலாபத் கமிட்டியின் தலைவரான இவர், 1923 - டெல்லி காங்கிரஸ் சிறப்பு மாநாட்டின் தலைவர் ஆவார். நீண்ட காலம் பதவியிலிருந்த இளம் வயது காங்கிரஸ் மாநாட்டின் தலைவராவார்.

❖ நாகியத் -உல்- உலெமா(1924) ன் தலைவர். தேசிய முஸ்லீம் மாநாட்டின் தலைவராவார். மற்றும் 1945 ல் நடைபெற்ற சிம்லா மாநாட்டிற்கும் தலைமைப்பொறுப்பு வகித்தார். 1946 ல் வந்த காபினெட் தூதுக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியவராவார். சுதந்திர இந்தியாவின் முதல் கல்வியமைச்சர். UGC,AICTE மற்றும் IIT காரக்பூர் ஆகியவை

உருவாக இவர் ஒரு முக்கிய பங்கு வகித்தார்.

- ❖ இவரது நூல் - இந்தியா வின்ஸ் ப்ரீடம் (India Wins Freedom)

**5. மேடம் பிக்காஜி காமா (1861 - 1936):**

- ❖ பம்பாயின் சுதந்திர போராட்ட பெண்மனி.
- ❖ ப்ரீ இந்திய சொசைட்டி மற்றும் வந்தே மாதரம் (Free India Soceity) பத்திரிக்கையையும் ஏற்படுத்தினார்.

**6. மதன் மோகன் மாளவியா (1861 - 1946):**

- ❖ வழக்கறிஞர் மற்றும் மிதவாத தலைவராவார். பலமுறை சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவரது முயற்சியால் ஒரு நினைவகம் (Memorial) ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளது.
- ❖ 1926 ல் தேசிய கட்சியை (Nationalist party) ஏற்படுத்தினார். பிறகு பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரானார்.
- ❖ ஹிந்துஸ்தான், அபுயுதயா மற்றும் இந்தியயூனியன் (Hindustan, Abyudaya and India Union) போன்ற பத்திரிக்கைகளுக்கு ஆசிரியராக திகழ்ந்தர்.

**7. முகம்மது அலி ஜின்னா (1876 - 1948):**

- ❖ கோபால கிருஷ்ண கோகலேயின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டார். 1906 ல் முஸ்லீம்களின் தனித்தொகுதிகளுக்கு எதிராக ஒப்பந்தம் செய்தார்.
- ❖ பிறகு 1913 ல் முஸ்லீம் லீக்கில் இணைந்தார். 1916 லக்னோ உடன்படிக்கைக்கு முக்கிய காரணமாக இருந்தார். 1917 அன்னிபெசண்டின் தன்னாட்சி இயக்கத்தில் இணைந்தார். காந்தியின் வருகைக்கு பிறகு காங்கிரசுடன் கருத்து வேறுபாடு கொண்டார். ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்தார். 1929ல் 14 அம்ச கோரிக்கைகளை வெளியிட்டார். 1940 லாகூர் முஸ்லீம் லீக் மாநாட்டில் பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கையை வெளியிட்டார். பிறகு சுதந்திர பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரல் ஆனார்.

**8. ரவீந்திரநாத் தாகூர் (1861 - 1941):**

- ❖ விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் கவி (poet) ஆவார். இவரது மூத்த சகோதரர் சத்தியேந்திரநாத் தாகூரே இந்தியாவின் முதல் இந்திய ICS அதிகாரி ஆவார். டிசம்பர் 22, 1901ல் போல்ப்பூர் அருகே

சாந்திநிகேதன் கல்வி நிறுவனத்தை ஏற்படுத்தினார். கீதாஞ்சலியை எழுதியதற்காக 1913 ல் நோபல் பரிசு பெற்றார். வங்கப்பிரிவினைக்கு (1905) எதிராக ரக்ஷபந்தன் திருவிழாவை தொடங்கி வைத்தார். விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினால். 1915ல் பிரிட்டிஷாரிடமிருந்து பெற்ற நைட்வுட் பட்டத்தை ஜாலியன் வாலாபாக் படுகொலையினால் துறந்தார். இவரது முதல் கவிதை (அ) பாடல் அம்ரித பஜார் பத்திரிக்கா என்ற பத்திரிக்கையில் வெளிவந்தது. இவர் பானபுல்(Banaphul) என்ற கதையையும், பானுசின்ஹர் பாடாவளி (Bhanusinter Padavali) என்ற கவிதைத் தொகுப்பையும் எழுதினார். இவரது இரண்டுபாடல்தொகுப்புகள் இருநாட்டின் தேசிய கீதங்களாக உள்ளன.

1. ஜன கண மண - இந்தியா
2. அமர் சோனர் பங்ளா - வங்காளதேசம்

## 9. சுபாஷ் சந்திர போஸ் (1897 - 1945):

- 1920 ல் ICS அதிகாரியான போஸ் காந்தியின் ஒத்துழையாமை இயக்க போராட்ட அழைப்பை ஏற்று பணியை துறந்து விடுலை போராட்டத்தில் கலந்து கொண்டார்.
- ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து இந்திய சுதந்திர லீக்கை (Independence for India League) ஏற்படுத்தினார். 1938 (ஹரிபுரா) காங்கிரஸ் மாநாட்டிற்கும், 1939 (திரிபுரி) காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைவராக இருந்த போஸ் காந்தியுடன் ஏற்பட்ட கருத்து மோதலால் காங்கிரஸிலிருந்து விலகி 1939ல் பார்வர்டு பிளாக் கட்சி மற்றும் கிசான் சபையை தோற்றுவித்தார்.
- வீட்டுசிறையிலிருந்த போஸ் தப்பிச் சென்று 1941 ல் பெர்லினை அடைந்து ஹிட்லரை சந்தித்து உதவி கேட்டார். பிறகு 1943ல் சிங்கப்பூரில் இந்திய தேசிய ராணுவத்தின் (Azad Hind Fauz) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அங்கு சுதேச இந்திய அரசாங்கத்தை (Provincial Indian Govt) ஏற்படுத்தினார். காந்தியை தேசப்பிதா என்று அழைத்தார். 1945 விமான விபத்தில் இறந்தார். என நம்பப்படுகிறது. இவரது கூற்றுகள் (அ) ஸ்லோகன்கள்

1. டெல்லி சாலோ (Dilli Chalo)
2. ஜெய் ஹிந்த் (Jai Hind)

தி இந்தியா ஸ்ட்ரகுல் (The India Struggle) என்பது இவரது சுயசரிதை நூலாகும்.

**10. சரோஜினி நாயுடு (1879 - 1949):**

- ❖ உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த நைட்டிங்கேலான (கவிக்குயில்) சரோஜினி நாயுடு போபால கிருஷ்ண கோகலேயின் ஆதரவினால் விடுதலைப் போராட்டத்தில் நுழைந்த பெண் வீரர் ஆவார்.
- ❖ காந்தி உடன் தண்டியாத்திரையில் கலந்து கொண்டர். 1925 ஆம் ஆண்டு கான்பூர் காங்கிரஸ் மாநாட்டின் தலைவரானார். உத்திரப்பிரதேசத்தின் முதல் பெண்கவர்னர்.

**இவரது கவிதை தொகுப்புகள்:**

- தி கோல்டன் திரஸோல்ட் (The Golden
- Threshold)
- தி பீதர் ஆப் த டான்(The Feather of the Dawn) -1 912
- தி புரோக்கன் விங்க் (The Broken Wing - 1917)

**11. வல்லபாய் படேல் (1875 - 1950):**

- ❖ இரும்பு மனிதர், பிஸ்மார்க் - சர்தார் படேல் குஜராத்தில் பிறந்த விடுதலைப் போராட்ட வீரர் ஆவார்.
- ❖ இவரது தந்தை ஜவேர்பாய் படேல், 1857 புரட்சியில் ஜான்ஸிராணியின் ராணுவத்தில் போரிட்ட வீரராவார்.
- ❖ 1928 ல் பர்தோலி சத்யாகிரகத்தை நடத்தியதால் பர்தோலி சத்யாகிரகத்தை நடத்தியதால் பர்தோலி பெண்களால் சர்தார் என்றழைக்கப்பட்டார்.
- ❖ சட்டமறுப்பு இயக்கத்தில் கைது செய்யப்பட்ட முதல் தேசிய தலைவராவார். காந்தியின் தனி நபர் சத்யாகிரகம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்ட இவர் சுதந்திர இந்தியாவின் முதல் துணைப்பிரதமராவார்.

**தலைவர்களும் அறியப்படும் பெயர்களும்**

**தலைவர்கள், அறியப்படும் பெயர்கள்**

- பாலகங்காதர திலகர்- லோக் மான்யர், மகாராஷ்ரா சாக்ரடீஸ் அமைதியற்றவர்களின் தந்தை
- கான் அப்துல் காபர்கான் - எல்லைக்காந்தி (அ) பாட்சாகான்
- பிபின் சந்திரபால் - தேஷ் நாயக்
- சி.எப். ஆண்ட்ரூஸ் - தீனபந்து
- தாதாபாய் நௌரோஜி - இந்தியாவின் முதுபெரும் மனிதர்
- இராஜேந்திர பிரசாத் - தேச ரத்தினம்

- ஜெயபிரகாஷ் நாராயணன் - லோக் நாயக், ஜே.பி.
- லாலா லஜபதிராய் - பஞ்சாப் சிங்கம், பஞ்சாப் கேசா், ஹோ்-இ-பஞ்சாப்
- எம்.கே.காந்தி - மகாத்மா, பாபுஜி, தேசப்பிதா
- எஸ்.சி.போஸ் - நேதாஜி
- ரவீந்திரநாத் தாகூா் - கவிகுரு, குருதேவ்
- நேரு - சாச்சா, ரோஜாவின் ராஜா, பண்டிட் ஜி
- வல்லபாய் படேல் - இந்தியாவின் பிஸ்மார்க், இரும்பு மனிதா்
- சரோஜினி நாயுடு - கவிக்குயில், இந்தியாவின் நைட்டிங்கேல்
- லால் பகதூா் சாஸ்திாி - சமாதானத்தின் மனிதா்
- சி.ஆா்.தாஸ் - தேசபந்து
- இராஜாஜி - தற்கால இந்தியாவின் பீஷ்ம பிதாமஹா், சி.ஆா்
- அரவிந்த் கோஷ் - அரசியல் ஞானி
- வினோபாஜி - பூமிதானத் தந்தை
- அன்னை தெரசா - இழிப்பிறப்பாளா்களின் துணைவி
- டி. பிரகாசம் - ஆந்திர கேசாி
- லால் பகதூா் சாஸ்திாி - சமாதானத்தின் மனிதா்

**கால வரிசைப்பட்டியல்**

**17 - ம் நூற்றாண்டு கம்பெணியின் வா்த்தக விாிவாக்கம்**

- 1600 - ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி துவக்கப்பட்டது.
- 1609 - முதலாம் ஜேம்ஸ் மன்னாின் பட்டயம் கம்பெனியை பலப்படுத்தியது.
- 1612 - கம்பெனி வா்த்தகமுறை நவீனமயமாக்கப்பட்டது.
- 1613 - சூரத்தில் வா்த்தகக் கிடங்கு கட்டப்பட்டது.
- 1616 - 1618 - சா் தாமஸ் மன்றோ ஜஹாங்கீாிடமிருந்து முக்கிய வாணிப உாிமைகளை பெறல்
- 1635 - 1658 - கிராம்பெல் கம்பெனியின் வா்த்தக உாிமையை விாிவுபடுத்தல்.
- 1640 - புனித செயின்ட் ஜாா்ஜ் கோட்டை கட்டப்பட்டது.
- 1661 - பம்பாய் போா்த்துக்கீசியாிடமிருந்து சீதனமாகப் பெறப்பட்டது.
- 1668 - பம்பாய் கம்பெனிக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டது.
- 1670 - சென்னை மக்கள் தொகை 40,000.
- 1678 - 1681 - சென்னை கோட்டை பலப்படுத்தப்பட்டது.

- 1685 - 1688 - சென்னை கர்நாடகத்தின் தலைமையகமாயிற்று.
- 1687 - பம்பாய் வர்த்தகத்தலைமையகமாதல்
- 1688 - சென்னை மாநகராட்சி துவக்கப்படல்
- 1689 - கம்பெனி படை ஒன்றை வைத்துக் கொள்ளும் உரிமை பெற்றது.
- 1693 - சர்ஜோஷியா சைல்டு கம்பெனிக்கு புதிய பட்டயத்தை வாங்கி கொடுத்து பாதுகாப்பு அளித்தல்.
- 1696 - வங்காள பண்டகசாலை "வில்லியம் கோட்டை" என்று பெயரிடப்படல்.

**18- ம் நூற்றாண்டு கம்பெனி ஆதிக்கம்**

- 1709 - "கொடால்பின் தீர்வு" - லண்டனில் போட்டிக் கம்பெனியால் ஏற்பட்ட பிரச்சனை தீர்க்கப்பட்டது.
- 1710 - கம்பெனியின் ஏகபோக உரிமை நீக்கப்பட்டது.
- 1710, 32 - ஆர்காடு நவாபி முறை அறிமுகப்படுத்தப்படல்
- 1717 - பரூக்ஷயரிடமிருந்து மேலும் வர்த்தகச் சலுகைகள் பெறல்
- 1726 - கல்கத்தா நிதி நிர்வாகம் சீரமைக்கப்படல்
- 1730 - மதராஸ் மக்கள் தொகை 300,000
- 1730 - வாணிப ஏகபோக உரிமை மேலும் நீடிப்பு
- 1746 - 1748 - முதல் கர்நாடகப் போர்
- 1749 - 1754 - இரண்டாம் கர்நாடகப் போர்
- 1757 - பிளாசிப் போர்
- 1757 - 1767 - ராபர்ட் கிளைவின் "இரட்டை ஆட்சி"
- 1758 - 1763 - மூன்றாம் பானிபட் போர்
- 1764 - பக்சார் போர்
- 1765 - 1772 - அலகாபாத் உடன்படிக்கை வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
- 1967 - 69 - முதல் மைசூர் போர்
- 1772 - 1785 - வாரன் ஹேஸ்டிங்ஸ்
- 1775 - 1782 - ஆங்கில - மராட்டிய போர்
- 1780 - 1784 - இரண்டாம் மைசூர் போர்
- 1781 - வருவாய் வாரியம் துவக்கப்படல்
- 1786 - 1793 - காரன் வாலிஸ் சீர்திருத்தம்.
- 1787 - கர்நாடக ஒப்பந்தம்
- 1790 - 1792 - மூன்றாம் மைசூர் போர்

- 1790 - 1800 - காரன் வாலிசின் பத்தாண்டு நிலவரித் திட்டம்
- 1793 - 1798 - வெல்லெஸ்லியின் சீர்திருத்தம் - பட்டயச் சட்டம்
- 1799 - நான்காம் மைசூர் போர் - தென்னிந்தியாவில் ஆங்கிலோர் ஆதிக்கம்.

**19 - ம் நூற்றாண்டு கம்பெனி ஆதிக்கம் - ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு**

- 1800 - 1801 - தென்னிந்தியக் கிளர்ச்சி
- 1806 - வேலூர்க் கிளர்ச்சி
- 1808 - திருவாங்கூர் கிளர்ச்சி
- 1809 - கோப்பால் ஜமீன்தார் கிளர்ச்சி
- 1828 - பிரம்ம சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1829 - காசி மக்கள் கிளர்ச்சி
- 1831 - பில்லர்கள் கலகம்
- 1844 - சூரத் மக்கள் எதிர்ப்பு
- 1855 - சாந்தல் கிளர்ச்சி
- 1857 - பெருங்கிளர்ச்சி
- 1861 - பிராத்தனா சமாஜம் நிறுவப்பட்டது.
- 1875 - பிரம்மஞான சபை ஆரிய சமாஜம் நிறுவப்பட்டது.
- 1885 - இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.
- 1887 - ஸ்ரீ ராம கிருஷ்ண மடமும், மிஷனும் ஆரம்பிக்கப் பட்டது.
- 1892 - இந்திய மன்றங்கள் சட்டம் அதிகாரிகள் காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்ள கூடாது என்ற தலைமை நீக்கியது.

**20-ம் நூற்றாண்டு - விடுதலை போராட்டம்**

- 1905 - வங்காள பிரிவினை - சுதேசி இயக்கம்
- 1906 - முஸ்லீம் லீக் துவக்கப்பட்டது.
- 1907 - சூரத் காங்கிரஸ் பிளவு
- 1909 - மார்லி - மின்டோ சீர்திருத்தம்
- 1911 - டெல்லி தர்பார்
- 1914 - 1918 - முதல் உலகப்போர் - சுயாட்சி இயக்கம்
- 1916 - லக்னோ காங்கிரஸ் - பிரிந்தோர் கூடினர்
- 1917 - மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனம்
- 1919 - ரௌலட் சத்தியாகிரகம் - மான்ட்போர்டு சீர்திருத்தம் - இரட்டை ஆட்சி
- 1920 - 1922 - கிலாபத் - ஒத்துழையாமை இயக்கம்
- 1921 - வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்பு

- 1923 - 1926 - சுயராஜ்ஜியக் கட்சி இயக்கம்
- 1927 - 1929 - சைமன் குழு.
- 1928 - நேரு அறிக்கை
- 1929 - பூரண சுயராஜ்யத் தீர்மானம்
- 1930 - 1931 - சட்டமறுப்பு இயக்கம் - உப்பு சத்தியாகிரகம்
- 1931 - முதல் வட்ட மேஜை மாநாடு காந்திஜி இர்வின் ஒப்பந்தம்
- 1932 - இரண்டாவது வட்ட மேஜை மாநாடு- வகுப்புத்தீர்வு- பூனா உடன்பாடு, மூன்றாவது வட்டமேஜை மாநாடு
- 1935 - 1937 - இந்திய அரசியல் சட்டம் - மாநில சுயாட்சி
- 1940 - ஆகஸ்டு அறிவிப்பு (சலுகை)
- 1942 - 1945 - தனிநபர் சத்தியாகிரகம் -கிரிப்ஸ் தூதுக்குழுவின் பரிந்துரைகள் - வெள்ளையனேவெளியேறு இயக்கம் - ராஜாஜியின் திட்டம் - சுபாஷ் போதம் இந்திய தேசிய இராணுவமும்.
- 1945 - வேவல் திட்டம் - சிம்லா மாநாடு - அமைச்சரவைத் தூதுக்குழு திட்டம்
- 1946 - நேரடி நடவடிக்கை நாள் - இடைக்கால அரசாங்கம்
- 1947 -மௌண்ட் பெட்டன் திட்டம் - பிரிவினை விடுதலை

| தலைவர்கள் | படைப்புகள் / செய்திதாள்கள் |
|---|---|
| அரவிந்த கோஷ் | ✓ கர்மயோகி<br>✓ பவானி மந்திர்<br>✓ நியூ லேம்ப் பார் ஒல்டு ( New lamp for old) |
| B.C. சாட்டர்ஜி | ✓ ஆனந்த் நாத்<br>✓ துர்கேஷ் நந்தினி |
| BR. அம்பேத்கர் | ✓ மூக் நாயக்<br>✓ பகிஸ்கிரிட் பாரத் |
| தாதபாய் நௌரோஜி | ✓ ராஸ்ட் கோடர்<br>✓ வைஸ் அப் இந்தியா (Poverty unbritish Rule ) பிரிட்டிஷ் ஆட்சியில் வறுமைகள் |
| தயானந்த சரஸ்வதி | ✓ வேத பாஸ்ஷ்யா பூபிக்கா<br>✓ சத்யாதப் பிரகாஷ் |

| | |
|---|---|
| கோபால கிருஷ்ண கோகலே | ✓ தேசியம்<br>✓ சுதர்க் |
| ஜவஹர்லால் நேரு | ✓ சோவியத் ஆசியா<br>✓ இந்தியாவின் கண்டுபிடிப்பு<br>✓ இந்தியாவை கவிழ்த்து விட்டது<br>✓ தேசிய அரக்கன் |
| மகாத்மா காந்தி | ✓ நவஜீனா<br>✓ இளம் இந்தியா மற்றும் ஹரிஜென்<br>✓ இந்தியக் கருத்து |
| மதன்மோகன் மாளவியா | ✓ ஹிந்துஸ்தான்<br>✓ தலைவர் |
| இரவீந்தரநாத் தாகூர் | ✓ ரஷ்யாமிடருந்து கடிதங்கள்<br>✓ கோரா |
| ராஜாராம் மோகன் ராய் | ✓ சம்பத் கமுதி<br>✓ மீரத் உல் அக்பர்<br>✓ பர்ஹா பட்டா |
| விவேகானந்தா | ✓ பிரபூதா பாரத் உப்போதனா<br>✓ பிரசயா ஆயர் பஸ்சயா |
| அன்னிபெசன்ட் | ✓ நியூ இந்தியா காமன்வெல்த் |
| B.R. திலகர் | ✓ கேசரி மற்றும் மராதா |
| B.K. நந்தா | ✓ கோகலேஷன் சுயமரிதை |
| B. உபத்யாயி | ✓ சந்தியா |
| பால சாஸ்திரி சம்பேத்கர் | ✓ தர்பன் |
| பரின்ந்தர் குமார் கோஷ் மற்றும் புபேந்திரா தத்தா | ✓ எங்கௌண்டர் |
| பிபின் சந்திரபால் | ✓ பரிதர்ஷக் |
| கர்சன் | ✓ கிழக்கின் தத்துவங்கள் |
| தயால் சங் மஜித்த | ✓ ட்ரிப்யூன் |
| தீன்பந்து மித்ரா | ✓ நீல்தர்பன் |
| தேவேந்திரநாத் தாகூர் | ✓ இந்திய கண்ணாடி (மிரர்) |
| EV. ராமசாமி நாயக்கர் | ✓ குடியரசு |
| GS ஐயர் | ✓ சுதேசமித்ரன் |
| GS ஐயர், வீரராகவச்சாரி மற்றும் சுபா ராவ் பண்டிட் | ✓ தி ஹிந்து |
| குலாம் ஹிசைன் | ✓ இன்குலாப் |

| | |
|---|---|
| ஹரிஷ் சந்திர முகர்ஜி | ✓ இந்து |
| ஹண்டர்ஸ் | ✓ இந்தியன் முசல்மன்ஸ் |
| ஜஸ்வர் சந்திர வித்யாசாகர் | ✓ சோம் பிரகாஷ் |
| ஜோதி பாடி லே | ✓ குலாம் கிரி |
| K.K.முத்ரா | ✓ சன்ஜீவனி |
| KM பனிக்கர் | ✓ தி ஹிந்துஸ்தான் டைம்ஸ் |
| M.A அசாத் | ✓ இந்தியா சுதந்திரம் பெற்றது |
| MG ரானடே | ✓ இந்திய பொருளாதாரத்தின் கட்டுரைகள் |
| M.N.ராய் | ✓ இந்திய மாற்றம் |
| மேடம் பிகாஜி காமா | ✓ வந்தே மாதரம் |
| மவுலனா முகமது அலி | ✓ கோம்ரெட் |
| PC ராய் | ✓ இந்திய வேதியியலின் வரலாறு |
| RP தத் | ✓ இந்தியா டுடே |
| ராபாட் நைட் | ✓ இந்தியா ஸ்டேட்ஸ்மென் |
| ராபர்ட் நைட் மற்றும் தாமஸ் நெட் | ✓ மும்பை டைம்ஸ் |
| SC போஸ் | ✓ இந்திய போராட்டங்கள் |
| SN பானர்ஜி | ✓ பெங்காளி |
| சச்சின் தரநாத் சன்யால் | ✓ பந்தி ஜீவன் |
| சியாம்ஜி கிருஷ்ணவர்மா (லண்டன்) | ✓ இந்திய சமுதாயம் |
| சசிகுமார் கோஷ் மற்றும் மோதிலால் கோஷ் | ✓ அம்ரித் பஜார் பட்ரிகா |
| தாரக் நத் தாஸ் | ✓ இலவச ஹிந்துஸ்தான் |